# பகுதி II

# பகுதி II

## இலங்கை மத்திய வங்கியின் கணக்குகளும் தொழிற்பாடுகளும்


| | பக்கம் |
|---|---|
| இலங்கை மத்திய வங்கியை நவீனமயமாக்கல் | (I) |
| கணக்குகளும் நிதியும் | (V) |
| வங்கி மேற்பார்வை | (XXV) |
| நாணய வெளியீடு | (XXXIV) |
| உள்நாட்டுத் தொழிற்பாடுகள் | (XXXVI) |
| ஊழியர் சேமநிதியம் | (XLI) |
| செலாவணிக் கட்டுப்பாடு | (XLIV) |
| தகவல் | (LI) |
| நூலகமும் தகவல் நிலையமும் | (LIII) |
| தகவல் தொழில்நுட்பம் | (LIII) |
| பன்னாட்டுத் தொழிற்பாடுகள் | (LVIII) |
| சட்டம் | (LXII) |
| முகாமைக் கணக்காய்வு | (LXII) |
| முகாமை அபிவிருத்தி நிலையம் | (LXIII) |
| கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு | (LXIII) |
| பணிமனை | (LXXI) |
| பொதுப்படுகடன் | (LXXI) |
| பிரதேச அபிவிருத்தி | (LXXXI) |
| ஆராய்ச்சி நடவடிக்கைகள் | (XCIV) |
| செயலகம் | (XCVIII) |
| பாதுகாப்புப் பணிகள் | (XCVIII) |
| புள்ளி விபரங்களும் கள அளவீடுகளும் | (XCVIII) |
| வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வை | (CIV) |
| வங்கித்தொழில் ஆய்வு நிலையம் | (CVI) |
| பயிற்சி | (CVIII) |
| நலன்புரி | (CX) |
| மனிதவள அபிவிருத்தி | (CXI) |

*சிறப்புக்குறிப்பு* II-1

# இலங்கை மத்திய வங்கியை நவீன மயமாக்கல்

## நவீனமயமாக்கல் நிகழ்ச்சித்திட்டம்

இலங்கை மத்திய வங்கியை நவீனமயமாக்கும் செயற்றிட்டம் 2003 ஆம் ஆண்டில் அதன் நான்காவது ஆண்டைப் பூர்த்தி செய்கின்றது. கடந்த மூன்று வருட காலத்தின் போது இச்செயற்றிட்டத்தினால் அடையப்பட்ட முன்னேற்றங்கள் பற்றி வங்கியின் முன்னைய ஆண்டறிக்கைகளில் எடுத்துரைக்கப் பட்டுள்ளது. (பார்க்க பகுதி II (பக்கம் 2) -2000, பகுதி II (சிறப்புக் குறிப்பு II-1) -2001, பகுதி II (சிறப்புக் குறிப்பு II-1) - 2002. நவீன மயமாக்கல் செயற்றிட்டம், மத்திய வங்கித் தொழிலின் நவீன போக்குகளுக்கு ஏற்பவும் மத்திய வங்கியினால் எதிர்கொள்ளப்படும் புதிய அறைகூவல்களை வெற்றிகரமாக எதிர்கொள்ளும் வகையிலும் மத்திய வங்கியைக் கட்டியெழுப்புவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

2000-2002 ஆம் ஆண்டு காலப்பகுதியில் நிறை வேற்றப்பட்ட செயற்பாடுகள் பற்றிய தொகுப்பு கீழே தரப்படுகின்றது.

- இலங்கையின் உற்பத்தி வளங்களின் அபிவிருத்தியை ஊக்குவித்து மேம்படுத்தும் நோக்குடன் இலங்கை மத்திய வங்கியின் குறிக்கோள்களை இரண்டு மையக் குறிக் கோள்களாக அதாவது (அ) பொருளாதார மற்றும் விலை உறுதிப்பாடு, (ஆ) நிதியியல் முறைமை உறுதிப்பாடு என மீள் வரை விலக்கணப்படுத்தல். இது 2002 திசெம்பரில் இடம்பெற்ற நாணயவிதிச் சட்டத்திற்கான திருத்தமொன்றின் மூலம் மேற்கொள்ளப்பட்டது. இத்திருத்தத்தின் நியதிகளின்படி, மத்திய வங்கி வழக்கமாக ஒன்றுடனொன்று முரண்படும் பல்நோக்குக் குறிக்கோள்களை பின்பற்று வதினின்றும் விடுவிக்கப்பட்டது. இதனால், வங்கி இப்பொழுது தனது மையக் குறிக்கோள்களை வலுவாகவும் முரண்பாட்டின்றியும் பின்பற்றக் கூடியதாகவுள்ளது.

- மையமல்லாத் தொழிற்பாடுகளை பரவலாக்கம் செய்தல்

  - புதிய முகாமைத்துவம், தொழில்நுட்பம், செலவுச் சிக்கனத்திறன் செயற்பாடுகள் என்பன மூலம் காசோலை தீர்ப்பனவு, மின்னியல் நிதிய மாற்றல் முறை என்பவற்றை மேம்படுத்தும் நோக்குடன் இலங்கை மத்திய வங்கியினால் 2002 ஏப்பிறலில் இலங்கை தன்னியக்க தீர்வகம் லங்கா கிளீயர் (பிறைவேட்) லிமிட்டெட்டுக்கு உரிமை மாற்றம் செய்யப்பட்டது.

  - வெளிப்புற மூலங்களைப் பயன்படுத்தல் - இலங்கை மத்திய வங்கி தனது மையமல்லா தொழிற்பாடுகள் பலவற்றை குறிப்பாக பணிகள் தொடர்பானவற்றை வெளிமூலங் களிலிருந்து பெற்றுக்கொண்டதன் மூலம் வங்கி அதன் வளங்களை மையக் குறிக் கோள்களை அடைவதற்கு பிரத்தி யேகமாகப் பயன்படுத்தக் கூடியதாக இருந்தது.

- ஊ.சே.நிதியம், ஊ.ந.நிதியம் ஆகியவற்றை ஒன்றாக இணைப்பதற்கும், இலங்கை மத்திய வங்கியினால் பிரதேச அபிவிருத்தி வங்கிகளில் வைத்திருக்கப்பட்ட பங்குகளை உரிமை மாற்றம் செய்வதற்குமான நடவடிக்கை ஆரம் பிக்கப்பட்டுள்ளது.

- அமைப்பியல் ரீதியான மாற்றங்கள்

  - முக்கிய குறிக்கோள்களின் கீழ் அல்லது தொழிற்பாட்டுப் பிரிவுகளின்படி அதாவது விலை உறுதிப்பாடு, நிதியியல் முறைமை உறுதிப்பாடு, முகவராண்மை மற்றும் வர்த்தக தொழிற்பாடுகள், கம்பனிப் பணிகளின்படி திணைக்களங்களை வகைப்படுத்தும் புதிய அமைப்பியல் ரீதியான கட்டமைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

  - வங்கியின் புதிய தேவைப்பாடுகளுக்கு ஏற்ற வகையில் சில திணைக்களங்கள் ஒன்றாக இணைக்கப்பட்டுள்ளன, மீளப் பெயர் குறிப்பிடப்பட்டு, மீளமைப்புச் செய்யப் பட்டுள்ளன.

- மனித வளமும் பயிற்சியும்

  - புதிய பண் காலாச்சாரத்தை அறி முகப்படுத்தவும் ஊழியர்களிடையே தொழில்சார் தகைமையை வளர்த் தெடுக்கவுமென புதிய மனித வளக் கொள்கைகள் பின்பற்றப்பட்டன. இந் நோக்கத்துக்காக, 2002 ஏப்பிறலில் மனிதவள முகாமையாளர் புதிதாக ஆட்சேர்க்கப் பட்டார்.

- கல்வி, அறிவூட்டல், விமர்சன ரீதியான பகுப்பாய்வு என்பவற்றின் மூலம் அறிவைப் பெருக்கும் வகையில் வங்கி மற்றும் அரசதுறை நிறுவனங்களின் மூத்த அலுவலர்களை தொடர்ச்சியாக பயிற்றும் நோக்குடன் முகாமைத்துவ அபிவிருத்தி நிலையம் நிறுவப்பட்டுள்ளது.
- சுயவிருப்பிலான ஓய்வுபெறும் திட்டம் அறிமுகப் படுத்தப்பட்டு இத்திட்டத்தின் கீழ் 690 ஊழியர்கள் ஓய்வு பெற்றனர். இதனைத் தொடர்ந்து வேலை நடைமுறைகள் இலகுவாக்கப்பட்டதுடன் வேலைச் செயற்பாடுகள் தன்னியக்கப்படுத்தப்பட்டன.
- ஆளுகை
  - இலங்கை மத்திய வங்கி தீர்மானம் எடுக்கும் செயன்முறையை ஒழுங்குபடுத்துவதற்காக தொழில்நுட்ப ஆலோசனைக்குழு முறையை ஏற்படுத்தியுள்ளது. நாணயக்கொள்கை, நிதியியல் முறை உறுதிப்பாடு, கணக்காய்வு என்பன தொடர்பாக நாணயச்சபைக்கு ஆலோசனை கூறவும் விதந்துரைப்புக்களை செய்யவுமென குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன.
  - நாணயச்சபையினது அங்கத்தவர்களின் எண்ணிக்கை 3 இலிருந்து 5 ஆக அதிகரிக்கப்பட்டதன் மூலம் அது விரிவுபடுத்தப்பட்டுள்ளது. இது சபையில் மேலும் இரு தனியார்துறை பிரதிநிதிகளுக்கு இடமளித்துள்ளது.
  - வங்கி அதன் கணக்குகள் தொடர்பாக பன்னாட்டு கணக்கீட்டு நியமங்களைப் பின்பற்றியுள்ளது. இது ஒப்பிடத்தக்கதும் ஏற்கப்படக்கூடியதுமான வெளிப்படுத்தல் கொள்கைக்கு இடமளிப்பதுடன் கணக்குகளை பன்னாட்டு சிறந்த நடைமுறைகளுடன் ஒத்துப்போகவும் செய்துள்ளது.

2003 ஆம் ஆண்டின்போது, நவீனமயமாக்கல் செயற்றிட்டத்தில் மேலும் முன்னேற்றங்கள் மேற் கொள்ளப்பட்டன. இவ்வாண்டின்போது நிறைவேற்றப் பட்ட முக்கியமான விடயங்களில் சில கீழே தரப் படுகின்றன.

- புதிய மனிதவள மற்றும் பயிற்சிக் கொள்கைகள்
  - இலங்கை மத்திய வங்கி, வங்கிக்கான புதிய மனிதவள கொள்கைகள் தொடர்பாக ஆலோசனை வழங்கி நடைமுறைப் படுத்துவதற்காக ஆலோசகர் ஒருவரை ஆட்சேர்ப்பு செய்தது. இச்செயற்பாட்டில், செயலாற்றுகை மதிப்பீட்டு விடயங்கள் பற்றிய கொள்கை வரைவு பூரணப் படுத்தப்பட்டுள்ளதுடன் மனிதவளக் கையேட்டினைப் பூரணப்படுத்தும் நடவடிக்கையிலும் முன்னேற்றம் காணப் பட்டுள்ளது.
  - ஊழியர்களின் தொழில்திறன், தகுதியுடைமை என்பவற்றை விருத்தி செய்யும் நோக்குடன், வங்கியினால் தயாரிக்கப்பட்ட பயிற்சித் திட்டத்திற்கேற்ப, பூரண பயிற்சி வசதிகள் தொடர்ந்து வழங்கப்பட்டுள்ளன. இலங்கை மத்திய வங்கியை "கற்றறியும் அமைப்பாக" மாற்றும் நோக்குடனேயே இத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக ஊழியர்கள் தாமாகவே நீடிக்கத்தக்க வகையில் தத்தம் தொழிற்றிறனை விருத்தி செய்து கொள்வர்.
  - முகாமைத்துவ அபிவிருத்தி நிலையம் வங்கி அலுவலர்கட்கும் அரசதுறை அலுவலர் கட்கும் "கேள்வியால் உந்தப்படும்" எனும் அணுகுமுறை அடிப்படையில் உயர்மட்ட பயிற்சி வழங்கும் தனது நடவடிக்கைகளைத் தொடர்ந்து மேற் கொள்கின்றது.
- இயலாற்றலை கட்டியெழுப்புதல்
  - நிதியியல் உறுதிப்பாடு – வங்கியின் மையக் குறிக்கோள் என்ற வகையில் வங்கி மேற் பார்வைத் திணைக்களம் தனது வங்கி மேற்பார்வைச் செயற்பாடுகளில் நல்ல ஆற்றலுடையதென்பதை உறுதிப்படுத்துதல் முக்கியமானதாகும். இதற்கேற்ப, இலங்கையில் சிறந்த ஆற்றல் வாய்ந்த வங்கித்தொழில் துறை முன்னேற்றத்தை உறுதிப்படுத்தும் நோக்குடன், வங்கி மேற்பார்வைத் திணைக்களத்தை மேலும் வலுவுள்ள தாக்கவென இலங்கை மத்திய வங்கி ஆலோசகர் ஒருவரது உதவியைப் பெற ஒப்பந்தம் செய்துள்ளது. இவ் உதவியுடன், வங்கி மேற்பார்வைத் திணைக்களம் தனது முன் மதியுடைய ஒழுங்குவிதிகளை பன்னாட்டுத் தரத்துக்கு உயர்த்தக் கூடிய தாயிருப்பதுடன் தலத்திற் குள்ளேயான மற்றும் தலத்திற்கு வெளியேயான மேற் பார்வைக் கடமைகளை பலப்படுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளது. இத்திணைக்கள அலுவலர் களுக்கும், அவர்கள் தம் மேற்பார்வைக் கடமைகளை செவ்வனே மேற்கொள்ளும் வகையில் தொடர்ந்தும் பயிற்சிகள் வழங்கப்பட்டன.

- மின்அஞ்சல் மற்றும் இணையத்தள வசதிகள்- அலுவலகத்தை தன்னியக்கமாக்கும் நவீன யுகத்திற்கேற்ப, வங்கி சகல அலுவலர்களுக்கும் மின்னஞ்சல் வசதிகள் வழங்கியுள்ளதுடன் இணையத்தள வசதிகளை இலகுவாகப் பயன்படுத்துவதற்கும் ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

- சட்ட சீர்திருத்தங்கள் - நாணய விதிச்சட்டம் மற்றும் வங்கித்தொழில் சட்டம் என்பவற்றின் அனைத்தையுமுள்ளடக்கிய மீளாய்வுக்காக உலகவங்கி, பன்னாட்டு நாணய நிதியம் போன்றவற்றிலிருந்து சட்ட நிபுணர்களின் உதவி பெறப்பட்டது. இலங்கை மத்திய வங்கி தற்போதுள்ள நாணய விதிச்சட்டத்திற்கு பதிலாக புதிய மத்திய வங்கித்தொழில் சட்டத்தையும், ஏற்கனவேயுள்ள வங்கித்தொழில் சட்டவாக்கங்களுக்குப் பதிலாக புதிய வங்கித்தொழில் சட்டத்தையும் அறிமுகப்படுத்த எண்ணியுள்ளது.

- கணக்கீடும் கணக்காய்வும் - இலங்கை மத்திய வங்கி தொடர்ந்தும் தனது கணக்குகளை பன்னாட்டு கணக்கீட்டு நியமங்களின் அடிப்படையில் தயாரித்ததுடன் பன்னாட்டு நிதியியல் அறிக்கையிடல் நியமங்களின்படி கணக்காய்வு செய்த வங்கி தனது கணக்குகளை ஏனைய மத்திய வங்கிகளுடன் ஒப்பிடக்கூடிய அடிப்படையில் வைத்திருக்கவும் பன்னாட்டு சிறந்த நடைமுறைகளுடன் இணங்கிச்செல்லும் வகையிலும் புதிய உள்ளக கணக்காய்வு பட்டயமொன்றை பின்பற்றியுள்ளது.

- தொழில்நுட்ப ரீதியான முன்னேற்றங்கள்

  - அதேநேர மொத்த தீர்ப்பனவு முறை- வங்கி 2003 செத்தெம்பரில் அதேநேர மொத்த தீர்ப்பனவு முறையை நடைமுறைப்படுத்தியது. அதேநேர மொத்த தீர்ப்பனவு முறை பாரிய பெறுமதி கொண்ட நிதிய மாற்றத்தை இலகுபடுத்துவதுடன் நாள் முடிவில் தீர்ப்பனவு செய்வதனை விட அதே நேரத்தில் மின்னியல் அடிப்படையிலான தீர்ப்பனவையும் இலகுபடுத்துகின்றது. இது வங்கிகள், முதனிலை வணிகர்கள், நிதியியல் நிறுவனங்கள், முதலீட்டாளர்கள், வாடிக்கையாளர்கள், அரசாங்கம், பொதுமக்கள் போன்றோரிடையே நிதிய மாற்றல்களைத் துரிதப்படுத்துகின்றது. ஒவ்வொரு கொடுக்கல்வாங்கல் நடவடிக்கைகளின் பின்னரும் அவர்களது தீர்ப்பனவுக் கணக்குகளை இம்முறையானது உடனுக்குடன் சீர்செய்யுமாகையால், வங்கிகள் தமது கொடுப்பனவுக் கடப்பாடுகளை நிறைவேற்ற தம் கணக்குகளில் போதியளவு காசு, ஒதுக்கங்களைக் கொண்டிருக்க வேண்டுமாதலால், இம்முறைமையானது வங்கித்துறையில் பெருமளவு நிதியியல் ஒழுங்குமுறையை ஏற்படுத்தும். பொருளாளர்களும், நிதிய முகாமையாளர்களும் தமது திரவத் தன்மைத் தேவைப்பாடுகள் தொடர்பாக துல்லியமான மதிப்பீடுகளை தயாரிக்க வேண்டுமாதலால் இது வங்கிகளின் திரவத்தன்மை முகாமைத்துவத்தை முன்னேற்றும்.

  - பத்திரங்களற்ற பிணையங்களின் தீர்ப்பனவு முறை- பத்திரங்களற்ற பிணையங்களின் தீர்ப்பனவு முறை தொடர்பான வேலைகளின் முக்கிய பகுதி 2003 ஆம் ஆண்டின் போது நிறைவேற்றப்பட்டுள்ளது. 2004 பெப்புருவரியில், பத்திரங்களற்ற பிணையங்கள் தீர்ப்பனவு முறை மாதிரி அதேநேர மொத்த தீர்ப்பனவு முறையுடன் ஒன்றிணைக்கப்பட்டது. தொழிற்பாடுகளை இலகுபடுத்துவதற்காக, அரச பிணையங்கள் 2004 சனவரி 30 தொடக்கம் பத்திரங்களற்ற முறையில் வழங்கப்பட்டன. பத்திரங்களற்ற பிணைய தீர்ப்பனவு முறை பத்திரங்களற்ற பிணையங்களின் வழங்கலையும் முதலீட்டாளர் களிடையேயான அவர்களின் மாற்றல் களையும் வழங்கல் எதிர் கொடுப்பனவு அடிப்படையில், அதேநேர மொத்த தீர்ப்பனவு முறையூடாக சமகால நிதியை கொடுத்துத்தீர்த்தல் மூலம் இலகுவாக்கும். இலங்கையின் ஒருங்கிணைக்கப்பட்ட அதேநேர மொத்த தீர்ப்பனவு முறை/பத்திரங்களற்ற பிணைய தீர்ப்பனவு முறைகள் "லங்கா செற்றில்" என அறியப்படும்.

    இம்முறைமையானது மின்னியல் அடிப்படையிலும் உடனடித் தொடர்பு முறையிலும் தொழிற்படுவதனால், அனைத்துச் சந்தைப் பங்குபற்றுனர்

களுக்கும், அதாவது முதனிலை வணிகர்கள், வங்கிகள், முதலீட்டாளர்கள் ஆகியோருக்கு அரச பிணையங்களைக் கையாளல் மிகவும் வசதியானதாக இருக்கும். மத்திய வைப்பக முறைமை உடமையுரிமைப் பதிவகமாகவும், அரச பிணையங்களின் காப்பகமாகவும் இருக்கும். பிணையங்களின் உடமை மின்னியல் அடிப்படையில் மத்திய வைப்பக முறைமையில் பதிவு செய்யப்படும். மத்திய வைப்ப முறையில் பத்திரங்களற்ற பிணையங்களைக் கொண்டிருப்பவர்கட்கு கொடுக்கல் வாங்கல்கள் பற்றிய உறுதிப்படுத்தலும் அவர்களின் உடமைகளைப் பற்றிய பருவகால கணக்குக் கூற்றுக்களும் வழங்கப்படும். பத்திரங்களற்ற பிணையங்கள் தீர்ப்பனவு முறையும் மத்திய வைப்பக முறையும் "லங்கா செக்குயர்" எனும் வர்த்தக அடையாளப் பெயரைக் கொண்டிருக்கும்.

- திறைசேரி கையாளல் முகாமைத்துவ அறைமுறைமை - வங்கி இவ்வாண்டின் போது திறைசேரிக் கையாளல் முகாமைத்துவ அறைமுறைமை தொடர்பான வேலைகளை நிறைவேற்றியுள்ளது. இம்முறைமை 2004 சனவரி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படுவதுடன் வியாபாரப் பெறுகை, அங்கீகாரமளித்தல், இடர்நேர்வு முகாமைத்துவம், வெளிநாட்டு செலாவணி மற்றும் நிலையான வருமான பிணையங்கள் என்பவற்றின் தீர்ப்பனவு போன்றவற்றை வசதிப்படுத்தும்.

- பொதுப்பேரேட்டு முறைமை- பொதுப்பேரேட்டு முறைமையின் தன்னியக்கச் செயற்பாடு இவ்வாண்டின்போது பூரணப்படுத்தப்பட்டுள்ளதுடன் 2003 ஒகத்தில் இது செயற்படத் தொடங்கியது. இது, வங்கியினால் பின்பற்றப்பட்ட ஆட்கள் மூலமான மற்றும் தன்னியக்கம் சார்ந்த முறைகளை பிரதியீடு செய்தது. பல திணைக்களங்களில் இது பன்முகப்படுத்தப்பட்டது. இது வரவுசெலவுத்திட்ட மற்றும் முகாமைத்துவ தகவல் முறையை உருவாக்குவதில் பெரிதும் உதவியுள்ளது.

- முகவராண்மைத் தொழிற்பாடுகளை நீக்குதல்
  - ஊ.சே.நிதியம் மற்றும் ஊ.ந.நிதியம்- ஊழியர் சேமநிதியம், ஊழியர் நம்பிக்கை நிதியம் என்பவற்றை ஒருங்கிணைப்பது தொடர்பான வேலைகள் வெற்றிகரமாக நடைபெறுவதுடன் இவ்விரு நிறுவனங்களையும் ஒருங்கிணைப்பதற்கு மிகவும் சாத்தியமான வழிமுறை பற்றி ஆராய்ந்து விதந்துரைப்பு செய்யும் பணி ஆலோசனை நிறுவனம் ஒன்றிடம் ஒப்படைக்கப்பட்டது. 2004 முற்பகுதியில் வரைவு இறுதி அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

## பிரதேச அபிவிருத்தி வங்கிகள்

இலங்கை மத்திய வங்கி பிரதேச அபிவிருத்தி வங்கிகளிடம் உள்ள தனது பங்குகளை திறைசேரிக்கு உரிமை மாற்றியுள்ளதுடன் இப்பொழுது 20 சதவீத பங்குகளை மட்டுமே கொண்டுள்ளது.

## எதிர்கால நடவடிக்கைகள்

இந்நிகழ்ச்சித் திட்டத்தினால் கையாளப்படும் எதிர்கால துறைகள், நாடெங்கும் திறமையானதும், விரைவானதுமான செயற்பாட்டுக்கும் காசோலைத் தீர்ப்பனவுக்கும் வழிவகுக்கும் காசோலை உருவமைப்பு முதன்மைச் செயற்றிட்டத்தினை உள்ளடக்கும். நவீனமயப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் வங்கியால் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய தன்னியக்க முறைமைகளின் அனைத்தையுமுள்ளடக்கிய கணக்காய்வினையும் உள்ளடக்கும் உள்ளக தகவல் முறைமைக் கணக்காய்வு நடவடிக்கைகளையும் வங்கி மேற்கொள்ளும்.

## நிதியிடல் மூலங்கள்

பன்னாட்டு அபிவிருத்தி வங்கி முகவராண்மை, சுவீடன் பன்னாட்டு அபிவிருத்தி கூட்டு முகவராண்மை என்பவற்றினூடாக உலகவங்கி நவீனமயப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டத்தைச் செயற்படுத்தவென முறையே ஐ.அ.டொலர் 25.3 மில்லியன், ஐ.அ.டொலர் 1 மில்லியன் தொகைகளை வழங்கியுள்ளது. இலங்கை மத்திய வங்கி இந்நிகழ்ச்சித் திட்டத்தை 2005 ஆம் ஆண்டு நடுப்பகுதியில் நிறைவேற்றி முடிக்க எண்ணியுள்ளது.

# கணக்குகளும் நிதியும்

## 1. கணக்கீட்டு அமைப்பும் கொள்கைகளும், 2003.12.31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதியியல் கூற்றுக்களும் குறிப்புக்களும்

### அ. சமர்ப்பிக்கும் முறைமயின் அடிப்படை

2001இலிருந்து மத்திய வங்கி அதன் நிதியியல் கூற்றுக்களை பன்னாட்டு ரீதியில் ஒப்பிடத்தக்க வகையில் தயாரிக்கும் பொருட்டு அதன் நிதியியல் கூற்றுக்களை தயாரிப்பதற்கான கணக்கீட்டு அமைப்பாக பன்னாட்டு கணக்கீட்டு நியமங்களை பின்பற்றியதுடன் சிறந்த பன்னாட்டு நியமங்களுடன் இசைந்துசெல்லும் வகைகளில் வெளிப்படுத்தல் மற்றும் கணக்கீட்டுக் கொள்கைகளையும் பின்பற்றியது. இது, இதுவரையில் பின்பற்றப்பட்டு வந்த நிதியியல் அறிக்கையிடும் முறையிலிருந்தும் முழுமையாக வேறுபட்டுக் காணப்பட்டபோதும் வங்கி 2001 இலும், 2002 இலும், 2003 இலும் பன்னாட்டு கணக்கீட்டு நியமங்களில் கணிசமாக இணங்கியொழுகும் தன்மையினை அடையத்தக்கதாக இருந்ததுடன் 2004 இல் முழுமையாக இணங்கியொழுகும் தன்மையினை பூர்த்தி செய்யக்கூடியதாக இருக்குமென எண்ணுகிறது.

ஒப்பீட்டு நோக்கங்களுக்காக முரணற்ற தன்மையினை உறுதிப்படுத்துவதற்கு 2002 இலும், 2003 இலும் பின்வரும் கணக்கீட்டு கொள்கைகள் நடைமுறையிலிருந்தன.

### ஆ. பொது

தற்பொழுது நடைபெற்றுக் கொண்டிருக்கும் நவீனமயப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டத்தின் ஒரு பகுதியாக வங்கியின் நிதி பற்றிய அறிக்கையிடல் மற்றும் கணக்கீட்டு நடைமுறைகளை சிறந்த பன்னாட்டு நடைமுறைகளுக்கு இசைந்தவகையில் மேம்படுத்துவதில் வங்கி கவனம் செலுத்தியது. இதன்படி, வங்கி தொடர்ச்சியாக மூன்றாவது ஆண்டாகவும் இதனோடு இணைக்கப் பட்டிருக்கும் நிதியியல் கூற்றுக்களை பன்னாட்டு கணக்கிடல் நியமங்களுடன் இசையும் விதத்தில் தயாரித்துள்ளது.

இதனோடு சேர்ந்திருக்கும் நிதியியல் கூற்றுக்கள் கணக்கீட்டு கொள்கைகள் கூற்றில் குறிப்பிடப்பட்டுள்ள குறித்துரைக்கப்பட்டுள்ள சில இணங்கி ஒழுகப்படாதவை நீங்கலாக, பன்னாட்டு கணக்கீட்டு நியமங்களில் குறித்துரைக்கப்பட்டவாறு பன்னாட்டு நிதியியல் அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டுள்ளன. இவை பன்னாட்டு கணக்கீட்டு நியமங்கள் சபையினால் ஒப்புதலளிக்கப்பட்ட நியமங்கள் மற்றும் விளக்கக்குறிப்புக்கள், பன்னாட்டு கணக்கீட்டு நியமங்கள் குழுவினால் ஒப்புதலளிக்கப்பட்ட தற்போது நடைமுறையிலுள்ள பன்னாட்டு கணக்கீட்டு நியமங்கள் மற்றும் நிலைப்பாடு பன்னாட்டுக்குழுவின் விளக்கக்குறிப்புக்கள் என்பனவற்றை உள்ளடக்குகின்றது.

வங்கிக்கான நிதியியல் கூற்றுக்கள் தனியொரு கூறிற்கானதாக அமைந்துள்ளதுடன் பன்னாட்டு கணக்கீட்டு நியமங்களின் கீழ் தேவைப்படுத்தப்பட்டவாறு வங்கி மற்றும் அதன் துணை நிறுவனங்களுக்கான ஒன்று திரண்ட நிதியியல் கூற்றுக்களை உள்ளடக்கவில்லை. இலங்கை அரசு மற்றும் ஏனைய அரச கட்டுப்பாட்டு நிறுவனங்கள் சார்பாக சொத்துக்களையும், பொறுப்புக்களையும் கொண்டிருப்பதனால் அல்லது வைத்திருப்பதனால் வங்கியானது ஒரு முகவராக அல்லது ஏனைய நம்பிக்கைப் பொறுப்பாளர் என்ற ரீதியில் பொதுவாகச் செயற்படுகின்றது. கட்டுக்காப்பு மற்றும் நிருவாக ஒழுங்குகளின் கீழ் இலங்கை மத்திய வங்கியினால் நிருவகிக்கப்படும் அவ்வாறான சொத்துக்களும், பொறுப்புக்களும் வங்கியின் சொத்துக்களும் பொறுப்புக்களுமாக இல்லாததால் இதனுடன் இருக்கும் நிதியியல் கூற்றுக்களில் அவை உள்ளடக்கப்படவில்லை.

### இ. கணக்கீட்டு கொள்கைகள் மீதான கூற்று

#### (i) அறிக்கையிடும் நிறுவனம் மற்றும் நியதித்தளம்

இவை இலங்கையின் நாணய, நிதியியல் மற்றும் கொடுப்பனவு முறைமையின் நிருவாகம், கண்காணிப்பு மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் என்பனவற்றிற்குப் பொறுப்பான முகவராண்மையாக, காலத்திற்குக்காலம் திருத்தம் செய்யப்பட்ட 1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாணயவிதிச் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட நிறுவனமான இலங்கை மத்திய வங்கியின் (வங்கி அல்லது இ.ம.வ) நிதியியல் கூற்றுக்களாகும். இக்கூற்றுக்கள் 2003 திசெம்பர் 31இல் முடிவடைந்த நிதியியல் ஆண்டிற்கு ஏற்புடையதாகும். இவை, பன்னாட்டு கணக்கீட்டு நியமங்கள் சபையினால் ஒப்புதலளிக்கப்பட்ட நியமங்கள் மற்றும் விளக்கக்குறிப்புக்கள்; மற்றும் பன்னாட்டு கணக்கீட்டு நியமக்குழுவினால் ஒப்புதலளிக்கப்பட்ட பன்னாட்டு கணக்கீட்டு நியமங்கள் மற்றும் நடைமுறையிலிருக்கும் விளக்கக்குறிப்புக்கள் குழுவின் விளக்கக்குறிப்புக்கள் என்பனவற்றை உள்ளடக்கிய பன்னாட்டு நிதியியல் அறிக்கையிடும் நியமங்களுக்கு இணங்கித் தயாரிக்கப்பட்டவையாகும். எனினும், நிதியியல் கூற்றுக்கள் பின்வரும் தேவைப்பாடுகளுக்கு முழுமையாக இணங்கும் விதத்தில் தயாரிக்கப்படவில்லை.

- ப.க.நி 7: காசுப்பாய்ச்சல் கூற்றுக்கள்
- ப.க.நி 27: ஒன்று திரட்டிய நிதியியல் கூற்றுக்கள்
- ப.க.நி 32: நிதியியல் கருவிகள்: வெளிப்படுத்தலும் சமர்ப்பித்தலும்
- ப.க.நி 39: நிதியியல் கருவிகள்: அங்கீகரித்தலும் அளவிடலும்

# இலங்கை மத்திய வங்கி
## வருமானக் கூற்று
## 2003 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கானது

| | குறிப்பு | திசெம்பர் 2003 ('000 ரூபா) | திசெம்பர் 2002 ('000 ரூபா) |
|---|---|---|---|
| **தொழிற்பாட்டு வருமானம்:** | | | |
| **வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்களிலிருந்தான வருமானம்** | | | |
| வட்டி வருமானம் | 15 | 5,100,891 | 3,915,717 |
| விலை மீள் மதிப்பீடுகளிலிருந்தான தேறல் செய்யப்படாத இலாபம் (நட்டம்) | | (1,873,732) | 3,793,359 |
| விலை மாற்றங்களிலிருந்து தேறல் செய்யப்பட்ட இலாபம் (நட்டம்) | | 1,411,203 | 2,642,735 |
| **வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்களிலிருந்தான மொத்த வருமானம்** | | 4,638,362 | 10,351,811 |
| **வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள் மீதான செலவுகள்** | | | |
| வட்டிச் செலவு | 16 | (915,352) | (966,346) |
| **வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள் மீதான மொத்தச் செலவு** | | (915,352) | (966,346) |
| தேறிய வெளிநாட்டுச் செலாவணி மீள் மதிப்பீட்டு இலாபம் | | 6,903,079 | 3,466,518 |
| **வெளிநாட்டு நாணய முதலீட்டு வருமானம்** | | 10,626,089 | 12,851,983 |
| **உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்களிலிருந்தான வருமானம்** | | | |
| வட்டி வருமானம் | 15 | 4,015,854 | 7,403,230 |
| வட்டிச் செலவு | | (986,032) | (540,766) |
| **உள்நாட்டு நாணயநிதியியல் சொத்துக்களிலிருந்தான மொத்தவருமானம்** | | 3,029,822 | 6,862,464 |
| ஏனைய வருமானம் | 17 | 1,053,786 | 321,233 |
| **மொத்த தேறிய தொழிற்பாட்டு வருமானம்** | | 14,709,697 | 20,035,680 |
| **தொழிற்பாட்டுச் செலவுகள்:** | | | |
| ஆளணிச் செலவுகள் | 18 | (1,822,573) | (1,069,059) |
| பெறுமானத்தேய்வு | | (422,530) | (168,647) |
| சொத்துபொறிகள் மற்றும் கருவிகளின் மீள் மதிப்பீட்டிலிருந்தான வீழ்ச்சி | | - | (721,284) |
| பொருட்பட்டியல் செலவு | | (1,064,409) | (661,867) |
| சொத்துக்கள், பொறிகள் , கருவிகளின் பழுதடைதலுக்கான ஏற்பாடு | | - | (2,206) |
| நிருவாகம் | 19 | (384,884) | (872,409) |
| அறவிடமுடியா மற்றும் ஐயப்படுகடன்கள் மற்றும் தேறிய சில்லறைகளின் பகிர்ந்தளிப்பு | | (8,598) | (22,328) |
| **மொத்த தொழிற்பாட்டுச் செலவுகள்** | | (3,702,994) | (3,517,800) |
| **வருமான வரிக்கு முந்திய தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான இலாபம்** | | 11,006,703 | 16,517,880 |
| வருமானவரி | | (188,397) | (529,069) |
| **சாதாரண நடவடிக்கைகளிலிருந்தான தேறிய இலாபம்** | | 10,818,306 | 15,988,811 |

## இலங்கை மத்திய வங்கி
## ஐந்தொகை
## 2003 திசெம்பர் 31ஆம் நாளில் உள்ளவாறு

| | குறிப்புக்கள் | 2003 திசெம்பரில் முடிவடைந்த ஆண்டு ரூ.000 | 2002 திசெம்பரில் முடிவடைந்த ஆண்டு ரூ.000 |
|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | |
| **வெளிநாட்டு நிதிச் சொத்துக்கள்** | | | |
| காசு நிலுவை | 1 | 77,940,229 | 55,873,107 |
| வெளிநாட்டு நாணய வர்த்தகப்படுத்தல் பிணைகள் | 1 | 84,932,644 | 92,373,117 |
| தங்கம் | 1 | 6,654,602 | 7,955,458 |
| விற்பனைப் பிணையங்களுக்கான வெளிநாட்டு நாணயக் கிடைப்பனவுகள் | | 49,329,149 | 0 |
| பெறத்தக்கவை | 2 | 82,670 | 91,046 |
| ப.நா.நிதியத்துடன் தொடர்பான சொத்துக்கள் | | 59,486,061 | 54,588,730 |
| | | 278,425,355 | 210,881,458 |
| **உள்நாட்டுச் நிதிச் சொத்துக்கள்** | | | |
| இலங்கை அரச பிணைகள் | | 33,182,981 | 52,859,539 |
| அரசுக்கான கடன் | 3 | 31,203,900 | 31,033,000 |
| ஏனைய நிறுவனங்களுக்கான கடன் | 4 | 29,878 | 30,000 |
| பெறத்தக்கவை | | 705,415 | 398,145 |
| நிதி மற்றும் ஏயை நிறுவனங்களில் செய்யப்பட்ட முதலீடுகள் | 5 | 599,529 | 663,091 |
| | | 65,721,703 | 84,983,775 |
| **ஏனைய சொத்துக்கள்** | | | |
| பொருட்களின் இருப்பு | 6 | 497,491 | 760,344 |
| தங்க இருப்பு | | 59,766 | 425,780 |
| நானாவிதச் சொத்துக்கள் | | 1,324,063 | 1,335,085 |
| சொத்துக்கள், பொறிகள், கருவிகள் | 7 | 8,554,160 | 8,127,448 |
| | | 10,435,480 | 10,648,657 |
| | | 354,582,538 | 306,513,890 |
| **பொறுப்புக்கள்** | | | |
| **வெளிநாட்டு நிதிப் பொறுப்புக்கள்** | | | |
| வங்கிக்கும் நிதியியல் நிறுவனங்களுக்கும் செலுத்தப்படவேண்டிய தொகை | 8 | 5,616,874 | 2,711,691 |
| ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியத்திற்குச் செலுத்தப்படவேண்டிய தொகை | | 17,603,949 | 13,029,377 |
| ப.நா.நி தொடர்பான பொறுப்புக்கள் | 9 | 100,784,234 | 87,378,408 |
| ஏனைய வெளிநாட்டுப் பொறுப்புக்கள் | | 31,668 | 122,969 |
| | | 124,036,725 | 103,242,445 |
| **உள்நாட்டு நிதிப் பொறுப்புக்கள்** | | | |
| வர்த்தக வங்கிகள், நிதியியல் நிறுவனங்களின் வைப்புக்கள் | 10 | 42,641,572 | 38,085,774 |
| அரச, அரச முயற்சிகளின் வைப்புக்கள் | 11 | 1,229,705 | 769,004 |
| திறைசேரி உண்டியல்களும் பிணைகளும் (மீள் கொள்வனவுகள்) | | 20,974,201 | 11,155,685 |
| ஊழியர் நன்மைகள் திட்டத்துடனான வைப்புக்கள் | 12 | 152,168 | 193,849 |
| கொடுபடத்தக்கவை | | 686,894 | 459,844 |
| | | 65,684,540 | 50,664,156 |
| **ஏனைய பொறுப்புக்கள்** | | | |
| சுற்றோட்டத்திலுள்ள நாணயம் | | 98,784,636 | 88,307,773 |
| பிற்போடப்பட்ட அரச கொடைகள் | | 588,781 | - |
| ஒதுக்குகள் | 13 | 1,012,795 | 335,804 |
| பல்வகைப் பொறுப்புக்கள் | | 331,364 | 362,965 |
| | | 100,717,576 | 89,006,542 |
| மூலதனமும் ஒதுக்குகளும் | 14 | 64,143,697 | 63,600,747 |
| | | 354,582,538 | 306,513,890 |

**<u>கணக்காளர் நாயகத்தின் குறிப்பு</u>**

2003 திசெம்பர் 31ஆம் நாள் முடிவுற்ற ஆண்டுக்கான இலங்கை மத்திய வங்கியின் கணக்குகள் 1971ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் பிரிவு உடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியல் யாப்பின் உறுப்புரை 154 இற்கு அமையவும் 1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாணயவிதிச் சட்டத்தின் பிரிவு 42(1)இற்கு ஏற்பவும் எனது பணிப்புரையின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன.

எனது அறிக்கையின் பந்தி 2.2இல் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களினால் நிதியியல் கூற்றுக்களின் மீது ஏற்படும் தாக்கங்கள் நீங்கலாக, எனது அபிப்பிராயத்தின்படி 2003 திசெம்பர் 31இலுள்ளவாறு இ.ம.வங்கியின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த அதன் தொழிற்பாடுகளிலிருந்தான பெறுபேறுகள் என்பன பன்னாட்டு கணக்கீட்டு நியமங்கள் (ப.க.நி) மற்றும் நிதியியல் கூற்றுக்கான 1-44 வரையான குறிப்புக்களில் குறித்துரைக்கப்பட்டுள்ள கணக்கீட்டுக் கொள்கைகள் என்பனவற்றுக்கு இணங்க அனைத்து விடயங்கள் தொடர்பாகவும் நியாயமான வெளிப்படுத்தல்களை செய்வதற்காக நிதிக் கூற்றுக்கள் திருப்திகரமான முறையில் தயாரிக்கப்பட்டுள்ளன.

மேற்குறிப்பிட்ட நாணய விதிச் சட்டத்தின் பிரிவு 42(2)இன் நியதிக்கிணங்க இக் கணக்குகள் மீதான எனது கருத்துக்களும் அவதானிப்புக்களும் நிதியமைச்சருக்கு முகவரியிடப்பட்டு ஒப்படைக்கவேண்டிய எனது அறிக்கையில் உள்ளடப்பட்டுள்ளது.

கணக்காய்வாளர் நாயகத்தின் திணைக்களம்
கொழும்பு.7.
22 மார்ச்சு 2003

| எஸ். சீ. மாயதுன்ன | ஏ. எஸ். ஜயவர்த்தன | டி. எல். கட்டுவாவல |
|---|---|---|
| கணக்காய்வாளர் நாயகம் | ஆளுநர் | முதன்மைக் கணக்காளர் |

# இலங்கை மத்திய வங்கி
## காசுப்பாய்ச்சல் கூற்று
## 2003 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கானது

| | குறிப்பு | 2003 ('000 ரூபா) |
|---|---|---|
| **தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப்பாய்ச்சல்:** | | |
| **மூலம்:** | | |
| பெறப்பட்ட வட்டி - வெளிநாட்டு நாணயம் | | 4,352,505 |
| பெறப்பட்ட வட்டி - உள்நாட்டு நாணயம் - மற்றையவை | | 68,740 |
| திரவ முகாமைத்துவமும் வர்த்தக வருமானமும் | | 1,411,203 |
| பெறப்பட்ட செலாவணி இலாபம்/ (இழப்பு) | | -359,933 |
| கட்டணம், தரகு, பெறப்பட்ட ஏனைய பல்வகை வருமானம் | | 761,815 |
| | | 6,234,330 |
| **பகிர்ந்தளிப்புக்கள்:** | | |
| செலுத்தப்பட்ட வட்டி - வெளிநாட்டு நாணயம் | | 921,403 |
| செலுத்தப்பட்ட வட்டி - உள்நாட்டு நாணயம் | | 986,032 |
| ஊழியர்களுக்கான கொடுப்பனவு | | 975,045 |
| நிரம்பலர்களுக்கான கொடுப்பனவு | | 1,161,205 |
| செலுத்தப்பட்ட வருமானவரி | | 188,397 |
| | | 4,232,082 |
| **தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான தேறிய காசுப்பாய்ச்சல்:** | 20 | 2,002,248 |
| **முதலீட்டு நடவடிக்கைளிலிருந்தான காசுப்பாய்ச்சல்:** | | |
| **மூலம்:** | | |
| ஏனைய உள்ளூர் நாணய நிதியியல் சொத்துக்களில் தேறிய (அதிகரிப்பு) / குறைப்பு | | (65,576) |
| ஏனைய நிறுவனங்களுக்கான கடன்கள் மற்றும் முற்பணங்களிலிருந்தான முதல் மீள் பெறுகைகள் | | 121 |
| நிதியியல் மற்றும் ஏனைய நிறுவனங்களினது முதலீடுகளின் விற்பனை/ மீட்டல் | | 43,563 |
| சொத்து, பொறி, கருவிகளின் விற்பனை | | 567 |
| நிதியியல் மற்றும் ஏனைய நிறுவனங்களின் முதலீடுகள் மீதான வருமானம் | | 117,953 |
| மீள விற்பதற்கான உடன்படிக்கையின்கீழ் கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்களின் தேறிய அதிகரிப்பு | | 9,818,516 |
| | | 9,915,144 |
| **பகிர்ந்தளிப்புக்கள்:** | | |
| வெளிநாட்டு நாணய சந்தைப்படுத்தத்தக்க பிணையங்களின் தேறிய அதிகரிப்பு / (குறைப்பு ) | | 38,025,386 |
| ஏனைய வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்களின் தேறிய அதிகரிப்பு / (குறைப்பு) | | -170,732 |
| ஏனைய வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்களின் தேறிய அதிகரிப்பு/ (குறைப்பு) | | -9,948,239 |
| ஏனைய உள்ளூர் வைப்புக்களின் தேறிய அதிகரிப்பு / (குறைப்பு) | | 41,680 |
| கொடைகள் தவிர்ந்தசொத்து பொறிகள் மற்றும் கருவிகளின் கொள்வனவு | | 260,702 |
| | | 28,208,797 |
| | | (18,293,653) |
| **முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல்** | | |
| **நிதியிடல் நடவடிக்கைகளிலிருந்தான காசுப்பாய்ச்சல்** | | |
| **மூலம்:** | | |
| சுற்றோட்டத்திலுள்ள நாணயங்களை வெளியிடல் | | 108,826,986 |
| சுற்றோட்டத்திலுள்ள நாணயங்களை புறக்கீடு செய்தல் | | (98,350,124) |
| தேறிய சுற்றோட்டத்திலுள்ள நாணய வழங்கல் | | 10,476,862 |
| **கழிக்குக:** | | |
| அரச கொடுக்கல் வாங்கல்களிலுள்ள சுற்றோட்ட நாணயத்தின் தேறிய வழங்கல் (புறக்கீடுகள்) | 21 | (23,867,571) |
| வங்கி மற்றும் நிதியியல் நிறுவனங்களின் கொடுக்கல் வாங்கல்களிலுள்ள சுற்றோட்ட நாணயத்தின் தேறிய வழங்கல் (புறக்கீடுகள்) | 22 | (4,555,797) |
| சுற்றோட்ட நாணயத்தின் தேறிய வழங்கல்/ (புறக்கீடு) | | 38,900,230 |
| மேலதிக வெளிநாட்டு நாணய தவணைப் பொறுப்புக்கள் | | 7,197,831 |
| | | 46,098,061 |
| **பகிர்ந்தளிப்புக்கள்:** | | |
| வெளிநாட்டு நாணய தவணைப்பொறுப்புக்களின் மீள் கொடுப்பனவு | | 2,869,497 |
| அரசுக்கான மிகைக் கொடுப்பனவுகள் | | 10,000,000 |
| | | 12,869,497 |
| **நிதியிடல் நடவடிக்கைகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல்** | | 33,228,564 |
| காசு மற்றும் காசுக்குச்சமமானவற்றில் ஏற்பட்ட தேறிய அதிகரிப்பு | | 16,937,159 |
| காசு மற்றும் காசுக்கு சமமானவற்றின் மீதான செலாவணிவீதத் தாக்கம் | | 5,129,963 |
| சனவரி 1இல் உள்ளவாறு காசு மற்றும் காசுக்கு சமமானவைகள் | | 55,873,107 |
| **திசெம்பர் 31இல் உள்ளவாறு காசு மற்றும் காசுக்கு சமமானவைகள்** | | 77,940,229 |

# இலங்கை மத்திய வங்கி
## நிதியியல் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்
## 2003 திசெம்பர் 31 இல் உள்ளவாறு

| | திசெம்பர் 2003 ('000 ரூபா) | திசெம்பர் 2002 ('000 ரூபா) |
|---|---|---|
| **குறிப்பு 1 - வெளிநாட்டு நாணயப் பிணையங்கள்** | | |
| வெளிநாட்டு நாணய வர்த்தகப்படுத்தல் பிணையங்கள் | 84,932,644 | 92,373,117 |
| தங்கத்தில் குறித்துரைக்கப்பட்ட வர்த்தப்படுத்தப்பட்ட பிணையங்கள் | 6,654,602 | 7,955,458 |
| விற்பனைக்கான பிணையங்களிலிருந்து கிடைக்கத்தக்கதாகவுள்ள வெளிநாட்டு நாணயம் | 49,329,149 | |
| **மொத்த வெளிநாட்டு நாணய வர்த்தகப்படுத்தலும் விற்பனைக்கான பிணையங்களின் கிடைப்பனவும்** | 140,916,395 | 100,328,575 |
| **குறிப்பு 2 - பன்னாட்டு நாணய நிதியம் தொடர்பான சொத்துக்கள்** | | |
| சிறப்பு எடுப்பனவு உரிமையிலுள்ள உடைமைகள் | 59,811 | 226,625 |
| பன்னாட்டு நாணய நிதிய அனுமதிப்பங்கு | 59,426,250 | 54,362,105 |
| பன்னாட்டு நாணய நிதியத்துடன் தொடர்பான மொத்தச்சொத்துக்கள் | 59,486,061 | 54,588,730 |
| **குறிப்பு 3 - அரசுக்கான கடன்கள்** | | |
| சுழலும் கொடுகடன் | 31,203,900 | 31,033,000 |
| அரசுக்கான மொத்தக் கடன்கள் | 31,203,900 | 31,033,000 |
| **குறிப்பு 4 - ஏனைய நிறுவனங்களுக்கான கடன்கள்** | | |
| வெளிநின்ற மூலதனம் | 2,626,658 | 2,656,684 |
| பெறத்தக்க வட்டி | 4,349,153 | 3,967,675 |
| **பெறத்தக்க மொத்தம்** | 6,975,811 | 6,624,359 |
| கழிக்குக: ஐயத்திற்கிடமான பெறுகைகளுக்கான ஏற்பாடு | (2,596,780) | (2,626,684) |
| இடைநிறுத்தப்பட்ட வட்டி | (4,349,153) | (3,967,675) |
| **தேறிய பெறத்தக்கவை** | 29,878 | 30,000 |
| **ஐயத்திற்கிடமான பெறுகைக்கான ஏற்பாட்டிலுள்ள அசைவு பின்வருமாறு** | | |
| ஆண்டின் தொடக்கத்தில் | 2,626,684 | 2,689,246 |
| ஆண்டுப்பகுதியில் செய்யப்பட்ட ஏற்பாடு | - | - |
| அறடவிடமுடியாக் கடனின் மீள் பெறுகைகள் | (29,904) | (62,562) |
| **ஆண்டின் இறுதியில்** | 2,596,780 | 2,626,684 |
| **குறிப்பு 5 - நிதியியல் மற்றும் ஏனைய நிறுவனங்களில் முதலீடுகள்** | | |
| பிரதேச அபிவிருத்தி வங்கிகள் | 517,469 | 560,969 |
| வரையறுக்கப்பட்ட இலங்கை ஏற்றுமதி கொடுகடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் | - | 20,000 |
| வரையறுக்கப்பட்ட கொடுகடன் தகவல் பணியகம் | 12,310 | 12,372 |
| வரையறுக்கப்பட்ட தேசிய அபிவிருத்தி வங்கி | 26,250 | 26,250 |
| பிச் ரேட்டிங் லங்கா லமிடெட் | 3,500 | 3,500 |
| வரையறுக்கப்பட்ட என்.டி.பீ. வங்கி | 10,500 | 10,500 |
| வரையறுக்கப்பட்ட லங்கா (பிறைவேட்) கிளியர் | 29,500 | 29,500 |
| நிதியியல் மற்றும் ஏனைய நிறுவனங்களிலான மொத்த(முதலீடுகள்) | 599,529 | 663,091 |
| **குறிப்பு 6 - இருப்புக்கள்** | | |
| சுற்றோட்டத்திற்கான தாள்கள் | 286,002 | 683,606 |
| சுற்றோட்டத்திற்கான நாணய குத்திகள் | 248,723 | 132,431 |
| | 534,725 | 816,037 |
| கழிக்குக: மெதுவாக அசையும் விடயங்களுக்கான ஏற்பாடு | (64,700) | (64,700) |
| | **470,025** | **751,337** |
| எழுதுகருவிகள் மற்றும் நானவிதப் பொருட்கள் | 27,466 | 9,007 |
| குறைந்தசெலவில் மொத்த இருப்புக்களும் பெறத்தக்க தேறிய பெறுமதியும் | 497,491 | 760,344 |

**குறிப்பு 7 – காணி, பொறி விருட்சம்**

| **கொண்டிருக்கும் பெறுமதி** | **காணியும் கட்டடமும்** (ரூ.000) | **பொறிகள்** (ரூ.000) | **அலுவலகத் தளபாடமும் பொருத்துக்களும்** (ரூ.000) | **உந்து ஊர்திகள்** (ரூ.000) | **ஏனையவை** (ரூ.000) | **மொத்தம் 2003** (ரூ.000) | **மொத்தம் 2002** (ரூ.000) |
|---|---|---|---|---|---|---|---|
| சனவரி 1ஆம் நாள் உள்ளவாறு ஒன்று சேர்ந்த தேய்மானம் நீங்கலாக | 7,793,752 | 109,294 | 169,695 | 51,404 | 3,303 | **8,127,448** | 8,021,398 |
| கொள்வனவுகள் | 4,010 | 825,076 | 16,066 | | 4,332 | **849,484** | 400,970 |
| விற்பனை செய்யப்பட்டவை, ஒன்றுசேர்ந்த தேய்மானம் நீங்கலாக | | | (205) | | | **(205)** | (65,166) |
| கணக்கீட்டு மதிப்பீடுகளில் செய்யப்பட்ட மாற்றங்களின் தாக்கம் | | (19,058) | (9,327) | (51,404) | | **(79,789)** | |
| மீள் மதிப்பீட்டின் மீதான இலாபம் | | | | | | **-** | 662,382 |
| மீள் மதிப்பீட்டின் மீதான இழப்பு | | | | | | **-** | (721,283) |
| திருத்தங்களுக்கான கொடுப்பனவுகள் | | | | | | | (2,206) |
| ஆண்டிற்கான பெறுமானத்தேய்வு | (114,584) | (201,687) | (24,782) | | (1,725) | **(342,778)** | (168,647) |
| **திசெம்பர் 31ஆம் நாள் உள்ளவாறு திரட்டிய பெறுமானத்தேய்வின் பின்னரான பெறுமதி** | 7,683,178 | 713,625 | 151,447 | - | 5,910 | **8,554,160** | 8,127,448 |

| | திசெம்பர் 2003 ('000 ரூபா) | திசெம்பர் 2002 ('000 ரூபா) |
|---|---|---|
| **குறிப்பு 8 – வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்களுக்கான செலுத்தத்தக்க தொகை** | | |
| வங்கிகளுக்குச் செலுத்த வேண்டியவை | 5,439,958 | 2,361,981 |
| ஏனையோருக்குச் செலுத்தவேண்டியவை | 176,916 | 349,710 |
| | 5,616,874 | 2,711,691 |

**குறிப்பு 9 – பன்னாட்டு நாணய நிதியத்துடன் தொடர்பான பொறுப்புக்கள்**
**பன்னாட்டு நாணய நிதியத்துடன் தொடர்பான வெளிநாட்டு நாணயப் பொறுப்புக்கள்**

| | | |
|---|---|---|
| வட்டி செலுத்தவேண்டிய கடன்கள் - நடைமுறையற்ற | 33,525,734 | 27,036,403 |
| வட்டி செலுத்தவேண்டிய கடன்கள் - நடைமுறை | 4,519,140 | 2,945,600* |
| சிறப்பு எடுப்பனவு உரிமைகளின் ஒதுக்கு | 10,187,275 | 9,319,143 |
| ப.நா.நிதியத்திற்கு செலுத்தவேண்டிய ஏனைய தொகைகள் | 27,037,469 | 22,350,931 |
| அனுமதிப் பங்குப் பொறுப்பு | 25,514,616 | 25,726,331 |
| | 67,258,500 | 60,342,005 |
| **ப.நா.நிதியம் தொடர்பான மொத்தப் பொறுப்புக்கள்** | 100,784,234 | 87,378,408 |

**குறிப்பு 10 – வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்களுடனான நிலுவைகள்**

| | | |
|---|---|---|
| வங்கிகளிலும் நிதியியல் நிறுவனங்களிலுமுள்ள நிலுவைகள் | 45,663,572 | 38,085,774 |
| கழிக்குக: ஒருநாளுக்குள்ளோயான திரவ வசதிகளின் கீழான முற்பணங்கள் | (3,022,000) | |
| வங்கிகள் நிதியியல் நிறுவனங்களுடனான மொத்தநிலுவைகள் | 42,641,572 | 38,085,774 |

| | திசெம்பர் 2003 ('000 ரூபா) | திசெம்பர் 2002 ('000 ரூபா) |
|---|---|---|
| **குறிப்பு 11 - அரச மற்றும் அரச நிறுவனங்களுடனான நிலுவைகள்** | | |
| அரச வைப்புக்கள் | 568,906 | 200,749 |
| அரச முகவராண்மைகள் மற்றும் நிதியங்கள் | 660,799 | 568,255 |
| அரச மற்றும் அரச நிறுவனங்களுடனான மொத்த நிலுவைகள் | 1,229,705 | 769,004 |
| **குறிப்பு 12 - ஊழியர் நன்மைகள் திட்டங்களிலுள்ள நிலுவைகள்** | | |
| சேமநிதியம் | 107,466 | 159,979 |
| ஓய்வூதிய நிதியம் | 38,767 | 32,004 |
| விதவைகள் அநாதைகள் நிதியம் | 5,935 | 1,866 |
| ஊழியர் நம்பிக்கை திட்டங்களுடனான மொத்த நிலுவைகள் | 152,168 | 193,849 |
| **குறிப்பு 13 - ஒதுக்கங்கள்** | | |
| கொடுகடன் உத்தரவாதங்கள் | 168,673 | 225,685 |
| ஊழியர் ஓய்வூதியத்திட்டங்கள் | 712,006 | 175,560 |
| விதவைகள் அநானாதைகள் திட்டங்கள் | 121,624 | (68,530) |
| வெகுமதி கொடுப்பனவுகள் | 10,492 | 3,089 |
| மொத்த ஒதுக்கங்கள் | 1,012,795 | 335,804 |
| **குறிப்பு 14 - பங்கு மூலதனம்** | | |
| பங்களிப்புச் செய்யப்பட்ட மூலதனம் | 15,000 | 15,000 |
| நடுத்தர நீண்டகால கொடுகடன் ஒதுக்குகள் | 4,925,000 | 4,925,000 |
| மிகை | 985,000 | 985,000 |
| மூலதனப் பங்களிப்பு கணக்கு | 577,859 | 577,859 |
| நிலையான சொத்து மீள்மதிப்பீட்டுக் கணக்கு | 662,382 | 662,382 |
| சந்தைப் பெறுமதி ஒதுக்கு | (275,356) | - |
| பொதுஒதுக்கு | 42,760,507 | 40,446,695 |
| ஆண்டுக்கான இலாபம் | 10,818,305 | 15,988,811 |
| பன்னாட்டு மீள்மதிப்பீட்டு ஒதுக்கு | 3,675,000 | - |
| **மொத்தம்** | 64,143,697 | 63,600,747 |
| **குறிப்பு 15 - நிதியியல் சொத்துக்களிலிருந்தான வட்டி வருமானம்** | | |
| **வெளிநாட்டு நாணய நிதியியில் சொத்துக்களிலிருந்தான வட்டி வருமானம்** | | |
| காசுக்குச்சமமானவைகள் | 1,383,832 | 1,148,303 |
| சந்தைப்படுத்தக்க பிணையங்கள் | 3,665,204 | 2,689,066 |
| பன்னாட்டு நாணய நிதியம் | 51,855 | 78,348 |
| **வெளிநாட்டு நாணய நிதியச் சொத்துக்களிலிருந்ததான மொத்த வட்டி வருமானம்** | 5,100,891 | 3,915,717 |
| **உள்நாட்டு நாணய நிதியச் சொத்துக்களிலிருந்தான தேறிய வட்டிவருமானம்** | | |
| முதலீட்டுச் சொத்துப் பட்டியல் - இலங்கை அரச பிணையங்கள் | 3,901,213 | 7,295,716 |
| பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகளின் தொகுதிக்கடன்களின் மீதான வட்டி வருமானம் | 45,901 | 48,116 |
| ஏனைய கடன்களும் முற்பணங்களும் | 68,740 | 59,398 |
| **உள்நாட்டு நாணய நிதியில் சொத்துக்களிலிருந்தான மொத்த தேறிய வட்டி வருமானம்** | 4,015,854 | 7,403,230 |
| **நிதியியல் சொத்துக்களிலிருந்தான மொத்தத் தேறிய வட்டி வருமானம்** | 9,116,745 | 11,318,947 |

| | திசெம்பர் 2003 ('000 ரூபா) | திசெம்பர் 2002 ('000 ரூபா) |
|---|---|---|
| **குறிப்பு 16 - வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள் மீதான வட்டிச் செலவு** | | |
| ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியம் | 92,070 | 105,713 |
| பன்னாட்டு நாணய நிதியம் | 823,282 | 860,633 |
| **வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள் மீதான மொத்தவட்டிச் செலவினம்** | 915,352 | 966,346 |
| **குறிப்பு 17 - ஏனைய வருமானம்** | | |
| பங்கிலாப வருமானம் | 78,169 | 49,172 |
| காணி, விருட்சம் மற்றும் பொறிகளின் விற்பனையின் மீதான இலாபம் | 363 | 28,556 |
| நிதியியல் மற்றும் ஏனைய நிறுவனங்களின் முதலீடுகளை விற்பதன் மீதான இலாபம் | 213,257 | 10,598 |
| பிற்போடப்பட்ட கொடைகளின் கடன் தீர்ப்பனவு | 148,710 | - |
| பல்வகை வருமானம் | 613,287 | 232,907 |
| **மொத்த ஏனைய வருமானம்** | 1,053,786 | 321,233 |
| **குறிப்பு 18 - ஆளணிச் செலவுகள்** | | |
| தொழில்தருநரினால் செலுத்தப்பட்ட உழைக்கும்போதே செலுத்தும் வரி உட்பட கூலிகளும் சம்பளங்களும் | 850,837 | 626,779 |
| ஓய்வூதியச் செலவு | 627,852 | 246,020 |
| ஏனைய வரைவிலக்கணம் செய்யப்பட்ட நன்மைத் திட்டங்களின் செலவு | 211,070 | 213 |
| வரைவிலக்கணம் செய்யப்பட்ட உதவுதொகைத் திட்ட செலவுகள் | 132,814 | 196,047 |
| **மொத்த ஆளணிச் செலவுகள்** | 1,822,573 | 1,069,059 |
| **குறிப்பு 19 - நிர்வாகம்** | | |
| திருத்தங்களும் பேணல்களும் | 210,125 | 221,343 |
| தகவல் | 57,639 | 53,809 |
| தொழில்ரீதியான பயணம் | - | 13,781 |
| வாடகைச் செலவுகள் | 15,633 | 22,355 |
| அச்சிடல் | 36,147 | 41,127 |
| கணக்காய்வாளர் நாயகத்திற்கு செலுத்தப்பட வேண்டிய கணக்காய்வாளர் கட்டணம் | 825 | 750 |
| மீளப்பெற முடியாத நிலுவைகளுக்கான முற்பணம் | - | 20,093 |
| நாணயச்சபை உறுப்பினர்களுக்கான கொடுப்பனவுகள் | 560 | 287 |
| பல்வகை | 63,955 | 498,864 |
| **மொத்த நிருவாகச் செலவினம்** | 384,884 | 872,409 |

| | திசெம்பர் 2003 ('000 ரூபா) |
|---|---|
| **குறிப்பு 20 - தொழிற்பாட்டு இலாபங்களை தொழிற்பாட்டு காசுப்பாய்ச்சலுடன் மீளிணக்கப்படுத்தல்** | |
| **தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து அறிவிக்கப்பட்ட தேறிய இலாபம்** | 10,818,305 |
| **கூட்டுக (கழிக்குக) காசல்லா விடயங்கள்** | |
| பெறுமானத் தேய்வு | 422,567 |
| பெறப்பட்ட வட்டி உள்ளூர் நாணயம், முதலீட்டுச் சொத்துப் பட்டியல் | (4,807,971) |
| அறவிடமுடியாக்கடன் பதிவழித்தல் | 8,598 |
| வரைவிலக்கணம் செய்யப்பட்ட ஊழியர் நன்மை திட்டங்களுக்கான தேறிய ஒதுக்கு | 676,991 |
| தேறிய பெறப்படாத வெளிநாட்டுச் செலாவணி (இலாபம் / இழப்பு) | (7,263,012) |
| **கூட்டுக (கழிக்குக) ஏனைய தொழிற்படு மூலதன விடயங்களின் அசைவு** | |
| இருப்புக்களின் (அதிகரிப்பு)/ குறைப்பு | 262,854 |
| பெறத்தக்க வட்டியின் (அதிகரிப்பு)/ குறைப்பு | 155,484 |
| பல்வகைப் பொறுப்புக்களின் அதிகரிப்பு/ (குறைப்பு) | 195,448 |
| கொடுபடத்தக்க வட்டியில் அதிகரிப்பு/ (குறைப்பு) | (3,162) |
| **கூட்டுக (கழிக்குக) முதலீடு மற்றும் நிதியிடல் நடவடிக்கைகள்** | |
| முதலீட்டிலிருந்தான வருமானம் | (337,585) |
| தேறிய பெறப்படாத சந்தைப் பெறுமதி மாற்றங்கள் | 1,873,731 |
| **தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான தேறிய காசுப்பாய்ச்சல்** | 2,002,248 |
| **குறிப்பு 21 - அரச கொடுக்கல் வாங்கல்களின் மீதான சுற்றோட்ட நாணயத்தின் வெளியீடு/ (புறக்கீடு)** | |
| இலங்கை அரச பிணையங்கள் சொத்துப்பட்டியலின் முதிர்ச்சி | (66,146,340) |
| முதலீட்டுச் சொத்துப்பட்டியலுக்காக இலங்கை அரச பிணையங்களின் கொள்வனவு | 47,376,541 |
| பெறப்பட்ட வட்டி - உள்நாட்டு நாணயம் - முதலீட்டு சொத்துப்பட்டியல் | (4,807,971) |
| இலங்கை அரசுக்கான கடன்கள் முற்பணங்களின் அதிகரிப்பு / (குறைப்பு) | 170,900 |
| அரச, அரச நிறுவனங்களுடான நிலுவைகளின் (அதிகரிப்பு)/ குறைப்பு | (460,701) |
| | (23,867,571) |
| **குறிப்பு 22 - வங்கி மற்றும் நிதியியல் நிறுவனங்களின் கொடுக்கல் வாங்கல்கள் மீதான சுற்றோட்ட நாணயத்தின் தேறிய வழங்கல்/ (புறக்கீடுகள்)** | |
| வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்களுடனான நிலுவைகளின் (அதிகரிப்பு) / குறைப்பு | (7,577,797) |
| வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்களுக்கான ஒரு நாளுக்குள்ளான திரவ வசதி(அதிகரிப்பு)/ குறைப்பு | 3,022,000 |
| | (4,555,797) |
| **குறிப்பு 23 - முடிவில் காசு நிலுவைகள்** | |
| **வெளிநாட்டு நாணயச் சொத்துக்கள்** | |
| ஏனைய வெளிநாட்டு வங்கிகளுடனான காசு நிலுவைகள் | 77,940,229 |
| ***முடிவில் காசு நிலுவைகள்*** | 77,940,229 |

*(இது வங்கியினால் முதல் தடவையாக தயாரித்த காசுப்பாய்ச்சல் கூற்றாக இருப்பதன் காரணமாக இத்தகவல்களை ஒப்பிடுவது நடைமுறைச் சாத்தியமல்ல.)*

**(ii) அளவீட்டுத்தளம்**

கீழே குறித்துரைக்கப்பட்ட கணக்கீட்டு கொள்கைகளினால் அடையாளம் காணப்பட்டவாறு குறிப்பிட்ட சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் மீளமதிப்பீடு செய்யப்பட்டதன் மூலம் புதுப்பிக்கப்பட்ட வரலாற்றுச் செலவின் அடிப்படையில் நிதியியல் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

**(iii) சமர்ப்பித்தலுக்கு பயன்படுத்தப்பட்ட நாணயம்**

வேறு விதமாகக் கூறப்பட்டிருந்தாலொழிய, இலங்கை ரூபாவின் அனைத்துத் தொகைகளும் ஆயிரத் திலேயே தரப்பட்டுள்ளன.

**(iv) கணக்கீட்டு கொள்கைகளில் மாற்றங்கள்**

வங்கியானது முகாமைத்துவக் கருத்தின்படி "கிரமமான வழியில்" அமைந்த கொள்வனவுகள் மற்றும் விற்பனைகளிலிருந்து உருவான அனைத்து நிதியியல் சொத்துக்களுக்குமாக வர்த்தகம் செய்யப்பட்ட நாள் கணக்கீட்டினைப் பின்பற்றியதுடன் வர்த்தக நாள் கணக்கீடானது வங்கியின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் நிலையின் சந்தை ரீதியான சமர்ப்பிப்பினை மேம்படுத்துகிறது. கிரமமான கொள்வனவுகளும், விற்பனவுகளும் முன்னர் தீர்ப்பனவு நாள் அடிப்படையில் அங்கீகரிக்கப்பட்டன. மற்றைய அனைத்துக் கொள்கைகளும் முன்னைய ஆண்டுடன் இணங்கிச்செல்லும் விதத்தில் பிரயோகிக்கப்பட்டுள்ளன. கணக்கீட்டுக்கொள்கையின் மாற்றங்கள் முன்னுள்ளவற்றிற்கேற்ப சீராக்கப்பட்டன. நடைமுறையாண்டுடன் ஒத்துச்செல்வதனை உறுதிப்படுத்தும் விதத்தில் ஒப்பிடத்தக்க தரவுகள் பொருத்தமான இடங்களில் மீளக்குறிப்பிடப்பட்டுள்ளன.

முன்னர் சந்தை ஒப்பந்தங்களின் மூலம் உருவாக்கப்பட்ட கால வரையறையொன்றினுள் சொத்தினை வழங்க வேண்டுமென தேவைப்படுத்தும் நியதிகளில் நிதியியல் சொத்துக்களை வாங்குவதற்கு வங்கி ஒப்பந்தம் செய்யும்பொழுது வர்த்தக நாளுக்கும், தீர்ப்பனவு நாளுக்குமிடையிலான நிர்ணயிக்கப்பட்ட விலைக்கட்டுப்பாடு பெறுதியாகப் பதியப்பட்டுள்ளது.

கணக்கீட்டுக் கொள்கையில் ஏற்பட்ட இம்மாற்றத்தின் விளைவாக, கொள்வனவு செய்வதற்கு வங்கி கடப்பாடு கொண்டிருந்த நிதியியல் சொத்துக்கள் சந்தைப்பெறுமதியில் மேற்கொள்ளப்பட்டன. 2003 திசெம்பர் 31இல் இந் நிதிச்சொத்துக்களின் சந்தைப்பெறுமதி ரூ.5,439,958 (2002-ரூ.2,361,981) ஆக இருந்தது. சந்தைப்பெறுமதியில் ஏற்படும் மாற்றம் உருவாக்கப்பட்ட நிதியியல் சொத்துக்களின் சந்தைப்பெறுமதி இலாபங்கள் மற்றும் நட்டங்களை அங்கீகரிப்பதற்கான தொடர்பான கணக்கீட்டுக் கொள்கையுடன் இணங்கிச்செல்வதற்காக கணக்கிடப்பட்டது. நிதியியல் சொத்துக்களை போன்றே தொடர்பான பொறுப்பு நிதியியல் சொத்துக்களில் கணக்கிடப்பட்டதுடன் வங்கிக்கும் நிதியியல் நிறுவனங்களுக்கும் கொடுபடவேண்டிய தொகையாகவும் பதிவு செய்யப்பட்டது.

கணக்கீட்டு கொள்கையில் ஏற்பட்ட மாற்றங்கள் கொண்டிருந்த ஒப்பீட்டுரீதியான எண்ணின் தாக்கங்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வெளிநாட்டு நாணய வர்த்தகப் படுத்தல் பிணையங்கள் குறிப்பு 1 | தங்கத்தில் குறித் துரைக்கப்பட்ட வர்த்தகப் படுத்தல் பிணையங்கள் குறிப்பு 1 | வங்கிக்கும் நிதியியல் நிறுவனங்களும் கொடுபடத்தக்க தொகை குறிப்பு 8 |
|---|---|---|---|
| முன்னர் காட்டப்பட்டவாறு 1 சனவரி 2003இல் நிலுவை | 90,851,682 | 7,114,912 | 349,710 |
| கணக்கீட்டு கொள்கையின் மாற்றத்தினது தாக்கம் | | | |
| நிதியியல் சொத்துக்களில் அதிகரிப்பு | 1,521,435 | 840,546 | 2,361,981 |
| நிதியியல் பொறுப்புக்களின் அதிகரிப்பு | - | - | - |
| மீளக்குறிப்பிடப்பட்ட நிலுவை | 92,373,117 | 7,955,458 | 2,711,691 |

**(v) வெளிநாட்டு நாணய மாற்றுவீதங்கள்**

கொடுக்கல்வாங்கல்கள் இடம்பெற்ற நாளன்று ஏற்புடையதான செலாவணி வீதங்களைப் பயன்படுத்தி வெளிநாட்டு நாணயங்களிலான கொடுக்கல்வாங்கல்கள் இலங்கை ரூபாவிற்கு மாற்றப்பட்டன. வெளிநாட்டு நாணயங்களில் குறித்துரைக்கப்பட்ட நாணயச் சொத்துக்களும் பொறுப்புக்களும் ஐந்தொகைத் திகதியில் ஏற்புடையதாகவிருந்த செலாவணி வீதங்களைப் பயன்படுத்தி இலங்கை ரூபாவிற்கு மாற்றப்பட்டன. அனைத்து வேறுபாடுகளும் வருமானக்கூற்றுக்கு எடுத்துச்செல்லப்பட்டன. மீள மாற்றும் நோக்கங்களுக்காக பயன்படுத்தப்பட்ட முக்கிய நாணயங்களுக்கான இலங்கை ரூபா செலாவணி வீதங்கள் பின்வருமாறு.

| | 2003 | 2002 |
|---|---|---|
| யூரோ | 121.6048 | 101.3823 |
| இசுடேர்லிங் பவுண் | 172.1988 | 155.1227 |
| இந்தியன் ரூபா | 2.1247 | 2.0176 |
| யப்பானிய யென் | 0.9044 | 0.8164 |
| ஐக்கியஅமெரிக்க டொலர் | 96.7382 | 96.725 |
| சிறப்பு எடுப்பனவு உரிமைகள் | 143.75 | 131.50 |

**(vi) நிதியியல் சொத்துக்களும் பொறுப்புக்களும்**

வங்கியானது நிதிச்சொத்துக்களையும் பொறுப்புக் களையும் மற்றும் இணைந்த வருமானம் மற்றும்

செலவுப்பாய்ச்சல்களையும் வெளிநாட்டு நாணயம் மற்றும் உள்நாட்டு நாணய நடவடிக்கைகளிடையே வேறுபடுத்திக் காட்டுகின்றது. வெளிநாட்டு நாணய நடவடிக்கைகள் முக்கியமாக வங்கியினது வெளிநாட்டு ஒதுக்குகளின் முகாமைத்துவ தொழிற்பாட்டிலிருந்து ஏற்படுகின்றது. உள்நாட்டு நாணய நடவடிக்கைகள் முக்கியமாக நாணயக்கொள்கை நடைமுறைப்படுத்தல், வழங்கப்படுகின்ற நாணயங்களின் பெறுகைகளின் முதலீடு மற்றும் வங்கித்தொழில் நடவடிக்கைகள் என்பனவற்றுடன் தொடர்பான சொத்துக்களையும் பொறுப்புக்களையும் பிரதிபலித்தது.

வங்கியின் நிதியியல் நிலைமை, நிதியியல் செயலாற்றம் மற்றம் இடர்நேர்வு தோற்றப்பாட்டினை சிறந்த முறையில் வழங்குவதற்காக இந்நடவடிக்கை களைத் தனித்தனியாக அறிக்கையிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டது. வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு நாணயங்களின் நடவடிக்கைகளை இணைந்து அறிக்கையிடுவது நிதியியல் கூற்றுக்களின் தகவல் பெறுமதியினை நலிவுறச் செய்யுமென வங்கி கருதுகிறது.

அனைத்து முதலீடுகளும் ஆரம்பத்தில் செலவு நியதிகளில் இனங்காணப்பட்டதுடன், இச்செலவு முதலீட்டுடன் இணைந்த கொள்வனவுக் கட்டணங்கள் உட்பட செலுத்தப்பட்ட நியாயமான பெறுமதியினையும் உள்ளடக்கியுள்ளது. ஆரம்ப இனங்காணலின் பின்பு, தொடர்ந்து மேற்கொள்ளப்படட அளவீட்டுத் தளங்கள் கீழே விபரிக்கப்படுகின்றன. நிதியியல் சொத்துக்களின் அனைத்து கிரமமான வழியிலான கொள்வனவுகள் மற்றும் விற்பனைகள் வர்த்தகம் செய்யப்பட்ட திகதியைக் கொண்டு இனங்காணப்படுகின்றன. கிரமமான வழியிலான கொள்வனவுகள் மற்றும் விற்பனைகள் பொதுவான ஒழுங்குவிதிகளினால் அல்லது சந்தையின் மரபுவழி முறைகளினால் நிறுவப்பட்ட கால வரையறையினுள் சொத்துக்களின் விநியோகத்தை தேவைப்படுத்தும் நிதிச்சொத்துக்களின் கொள்வனவுகள் அல்லது விற்பனைகளாகும்.

**(vii) வெளிநாட்டு நாணயத்திலான வர்த்தகப்படுத்தல் பிணையங்கள்**

வெளிநாட்டு நாணயத்திலான வர்த்தப் படுத்தக்கூடிய பிணையங்கள் விலைக்குறிப்பீடு செய்யப்பட்ட சந்தை விலைகளில் பெறுமதியிடப் படுகின்றன. சந்தைப் பெறுமதியிலான மாற்றங்கள் ஐந்தொகையில் வர்த்தகப்படுத்தக்கூடிய பிணையங்களின் பெறுமதியில் அதிகரிப்பொன்றாகவோ அல்லது வீழ்ச்சியொன்றாகவோ இனங்காணப்படுகின்ற வேளையில் எழும் இலாபங்களும், இழப்புக்களும் வருமானக்கூற்றில் இனங்காணப்படுகின்றன.

பிணையம் இன்னமும் சொந்தமாக இருக்குமிடத்து இலாபம் அல்லது இழப்பு விலை மீள்பெறுமதி யிடலிலிருந்து பெறப்படாத இலாபமாக (இழப்பு) பதிவு செய்யப்படும். இலாபமோ அல்லது இழப்போ பெறப்படுமிடத்து (பிணையத்தினை விற்பதன் மூலம்) அது விலை மாற்றங்களிலிருந்து பெறப்பட்ட இலாபமாக (இழப்பாக) பதிவு செய்யப்படும்.

**(viii) வெளிநாட்டு நாணயத்திலான விற்பனைக்காக கிடைக்கத் தக்கதாகவுள்ள பிணையங்கள்**

வெளிநாட்டு நாணயத்திலான விற்பனைக்காக கிடைக்கத்தக்கதாகவுள்ள பிணையங்கள் விலைக்குறிப்பீடு செய்யப்பட்ட சந்தை விலைகளில் மதிப்பீடு செய்யப்படுகின்றன. சந்தைப் பெறுமதியிலான மாற்றங்கள் ஐந்தொகையில் பிணையங்களின் விற்பனைக்கு கிடைக்கத்தக்கதாகவுள்ள பெறுமதியின் அதிகரிப்பொன்றாகவோ அல்லது வீழ்ச்சி யொன்றாகவோ அடையாளங் காணப்படும்.

வெளிநாட்டு நாணயத்திலான விற்பனைக்கு கிடைக்கத்தக்கதாகவுள்ள பிணையங்களின் சந்தைப்பெறுமதியில் ஏற்பட்ட மாற்றங்களிலிருந்து எழும் இலாபமும் இழப்பும் முதலீடுகள் விற்கப்படும் வரை அல்லது சேகரிக்கப்படும் வரை அல்லது வேறுவிதமாக இதனை அகற்றும்வரை அல்லது முதலீட்டினை இல்லாதொழிப்பது என தீர்மானிக்கப்படும் வரை பங்கின் தனியொரு கூறாக இனங்காணப்படுகிறது. அந்த நேரத்தில் முன்னர் மூலதனப்பங்காக அறிவிக்கப்பட்ட ஒன்று சேர்ந்த இலாபம் அல்லது இழப்பு வருமானமாக உள்ளடக்கப்படும்.

**(ix) வர்த்தகப்படுத்தப்படும் பிணையங்கள் - தங்கம்**

வெளிநாடுகளிலுள்ள இணைக்கிணை நிறுவனங்களில் வைத்திருக்கப்படும் தங்கப்பிணையங்கள் ஆரம்பத்தில் கிரயச்செலவில் குறிப்பிடப்படுகின்றன. சந்தைப் பெறுமதியில் ஏற்படுகின்ற மாற்றங்கள் ஐந்தொகையில் தங்கத்தின் பெறுமதியிலான அதிகரிப்பொன்றாகவோ அல்லது வீழ்ச்சி யொன்றாகவோ இனங்காணப்படும்.

தங்கத்தின் சந்தைப் பெறுமதியில் ஏற்படும் மாற்றங்களிலிருந்து எழும் இலாபங்களும், இழப்புக்களும் வருமானக்கூற்றில் இனங்காணப்படும். தங்கம் இன்னமும் சொந்தமாக இருக்குமிடத்து இலாபம் அல்லது இழப்பு விலை மீள்பெறுமதியிடலிலிருந்து பெறப்படாத இலாபமாக (இழப்பாக) பதிவு செய்யப்படும். இலாபம் அல்லது இழப்பு பெறப்படுமிடத்து (தங்கத்தினை விற்பதன் மூலமாக) அது விலை மாற்றங்களினால் பெறப்பட்ட இலாபமாக (இழப்பு) பதியப்படும்.

**(x) பன்னாட்டு நாணய நிதியத்தின் நிலுவைகள்**

வங்கியானது இலங்கை அரசின் முகவராக செயற்படுவதனை காட்டிலும் அதன் சொந்த உரிமையுடன் பன்னாட்டு நாணய நிதியத்துடன் கொடுக்கல்வாங்கல்களில் ஈடுபடுகின்றது. அந்த அடிப்படையில், ப.நா.நிதியத்துடனான வங்கியின் அனைத்து கொடுக்கல்வாங்கல்களும் இந்நிதியியல் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

ப.நா.நிதியத்துடனான அனுமதிப்பங்கு ஒரு சொத்தாக வங்கியினால் பதிவு செய்யப்படுவதுடன் அனுமதிப்பங்கிற்காக ப.நா.நிதியத்திற்கு செலுத்தப்பட வேண்டிய தொகை வங்கியின் பொறுப்பாகப் பதிவு செய்யப்படுகிறது. ப.நா.நிதியத்தினால் மேற்கொள்ளப் பட்ட சிறப்பு எடுப்பனவு உரிமைகளின் ஒன்று சேர்ந்த ஒதுக்குகள் பொறுப்பாகக் கணிக்கப்படுகின்றன. ப.நா.நிதியத்தினால் வெளியிடப்பட்டவாறு ஐந்தொகை திகதியிலுள்ள செலாவணி வீதத்தினைப் பிரயோகித்து பன்னாட்டு நாணய நிதியச் சொத்துக்களினதும், பொறுப்புக்களினதும் மீள்பெறுமதியிடலிலிருந்து எழும் செலாவணி இலாபங்களும், இழப்புக்களும் வருமானக்கூற்றில் இனங்காணப்படும்.

ப.நா.நிதியத்துடனான நிலுவைகள் தொடர்பான ஏனைய அனைத்துக் கட்டணங்களும், வட்டியும் வருமானக்கணக்கில் உடனடியாகப் பதிவு செய்யப் படுகின்றன.

**(xi) காசும் காசிற்குச் சமமானவைகளும்**

காசும் காசிற்குச் சமமானவைகளும், வெளிநாட்டு வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்களில் உள்ள காசு மற்றும் 3 மாதம் அல்லது அதற்குக் குறைவான ஆரம்ப முதிர்ச்சிகளுடன் கூடிய குறுங்கால வைப்புக்களையும் உள்ளடக்கியுள்ளன.

உள்நாட்டு நாணயங்களினது நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக, இலங்கை மத்திய வங்கி குறிப்பிட்ட வருமானத்தினை உருவாக்குவதுடன் செலவுகளையும் ஏற்படுத்துகின்றது, இவை காசின் நகர்வுடன் தொடர்புபட்டவையல்ல. இந்நடவடிக்கைகள் குறிப்பிட்ட சொத்துக்களையும், பொறுப்புக்களையும் தோற்று விப்பதுடன், முக்கியமாக இலங்கை அரசாங்கத்துடனான கொடுக்கல்வாங்கல்களையும் உள்நாட்டு வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்களுடனான கொடுக்கல் வாங்கல்களையும் உள்ளடக்கியிருந்தன. அரசாங்கத் துடனான கொடுக்கல்வாங்கல்கள் அடிப்படையில், திரவத்தன்மை யினைக் கட்டுப்படுத்தும் ஒரு பொறிமுறையாக வங்கியினால் வழங்கப்பட்ட திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி முறிகளின் ஏலத்தில் கோரப்படாத பகுதியின் கொள்வனவினைக் குறிக்கிறது. அத்தகைய கொள்வனவுகள், விற்பனைகள், அல்லது அவற்றின் மீதான வட்டி என்பன இலங்கை மத்திய வங்கியின் பதிவுகளில் தனியே ஏட்டுப்பதிவுகளாகப் பிரதிபலிக்கப்படுகின்றன.

தனி அதிகாரம் கொண்ட சட்டபூர்வமான நிறுவனமாக விளங்கும் இலங்கை மத்திய வங்கியானது நாணயவிதிச் சட்டத்திற்கு இணங்க பொதுமக்களுக்கான நாணயத்தினை வழங்குகின்றது. மத்திய வங்கியினால் வெளியிடப்பட்ட நாணயம் உடமையாளரின் பெயரில் மத்திய வங்கியின் மீதான கோரலாக இருப்பதனைப் பிரதிபலிக்கிறது. இது மத்திய வங்கியின் பொறுப்பொன்றாக இருக்கின்றவேளையில் உடமையாளரின் கையிலுள்ள காசு விடயமாக இருக்கின்றது. சுற்றோட்டத்திலுள்ள நாணயத்தின் அசைவானது, காசுப்பாய்ச்சல் கூற்றுக்களை சமர்ப்பிக்கின்றது. மத்திய வங்கிகளிடையே காணப்படும் தற்போதைய தொழிற்துறை நடைமுறைகளுடன் இசைந்த விதத்தில் நிதியிடல் நடவடிக்கைகளில் ஒரு பகுதியாக உள்ளடக்கப்படுகின்றது.

இலங்கை மத்திய வங்கி காசு/ கொடுப்பனவு கட்டளைகளூடாக நாணயத்தாள்கள் மற்றும் குத்திகள் அல்லது மத்திய வங்கியின் பெயரில் எழுதப்பட்ட காசோலைகள் என்பன வடிவில் காசு பெறப்பட்ட பொருட்கள் மற்றும் பணிகளுக்காக வழங்குனர்கள் மற்றும் ஊழியர்கள் என்போரை உள்ளடக்கிய பல்வேறுபட்ட பணம் கொடுபடவேண்டியோருக்கு காசினை பகிர்ந்தளிக்கிறது. இது ஒன்றில் சுற்றோட்டத்திலுள்ள நாணயப் பொறுப்பில் அல்லது வர்த்தக வங்கிகளுடனான மீதிகளுடன் சேர்க்கப் படுகிறது. இலங்கை மத்திய வங்கியின் கொடுப்பனவு நோக்கங்களுக்கான நாணயப் பயன்பாட்டின் அத்தகைய வடிவங்கள் இலங்கை மத்திய வங்கியின் காசு வெளிப்பாய்ச்சலில் ஒரு பகுதியை உருவாக்குகிறது.

காசுப்பாய்ச்சல் கூற்று நோக்கத்திற்காக, காசு மற்றும் காசிற்குச் சமமானவைகள் மேலே வரைவிலக்கணம் செய்யப்பட்டவாறு, வெளிநின்ற வங்கி மேலதிகப்பற்றுக்கள் நீங்கலான, காசு மற்றும் காசிற்குச் சமமானவற்றை உள்ளடக்கியுள்ளன.

**(xii) மீள்கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவுக் கொடுக்கல் வாங்கல்கள்**

மீள்கொள்வனவு உடன்படிக்கைகளின் கீழ் விற்பனை செய்யப்பட்ட பிணையங்கள் ஐந்தொகையில் சந்தைப்படுத்தக்கூடிய அல்லது கிடைக்கத்தக்கதாகவுள்ள பிணையங்களாக தொடர்ந்தும் பதிவு செய்யப் படுகின்றன. மீள்கொள்வனவு செய்வதற்கான கடப்பாடு

மீள்கொள்வனவு செய்வதற்கான உடன்படிக்கையின் கீழ் விற்கப்பட்ட பிணையங்கள்) பொறுப்பொன்றாகக் காட்டப்பட்டுள்ளது. மீள்கொள்வனவுகள் கொடுக்கல் வாங்கல்களில் விற்பனை விலைக்கும் மீள்கொள்வனவு விலைக்குமிடையேயான வேறுபாடும் நேர்மாற்று மீள்கொள்வனவு கொடுக்கல்வாங்கல்களில் கொள்வனவு விலைக்கும் விற்பனை விலைக்கு மிடையேயான வேறுபாடும் செலவினத்தைக் பிரதிபலிப்பதுடன் இது வருமானக்கூற்றில் செலவினமாகக் காட்டப்படும்.

நேர்மாற்று மீள்கொள்வனவு உடன்படிக்கைகளின் கீழ் வைத்திருக்கப்படும் பிணையங்கள் (மீள்விற்பனை செய்வதற்கான உடன்படிக்கைகளின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்கள்) ஐந்தொகையில் ஒரு சொத்தாகப் பதிவு செய்யப்படுகின்றன. மீள்கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவு ஆகிய இரண்டும், ஒன்று சேர்ந்த வருமானம் அல்லது செலவினம் ஏதுமிருப்பின் அவற்றை உள்ளடக்கி கொடுக்கல்வாங்கல் பெறுமதியில் பதிவு செய்யப்படுகின்றன.

**(xiii) முதலீட்டுப்பட்டியல்- இலங்கை அரச பிணையங்கள்**

வங்கியின் முதலீட்டுப் பட்டியல் இலங்கை அரசிடமிருந்து கொள்வனவு- செய்யப்பட்ட திறைசேரி உண்டியல்களை உள்ளடக்குகின்றது. இவை வங்கியினால் பெறப்பட்ட கடன்களையும் பிரதிநிதித்துவப் படுத்துவதனால் ஐந்தொகையில் இச்சொத்துப்பட்டியல் தீர்ப்பனவு செய்யப்பட்டு செலவில் பதியப்படுகிறது.

**(xiv) அரசிற்கான கடன்கள்**

திருத்தப்பட்டவாறான 1949 ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாணயவிதிச் சட்டத்தின் பிரிவு 89இன் கீழ் இலங்கை அரசிற்கு வழங்கப்பட்ட நேரடி தற்காலிக முற்பணங்களை அரசிற்கான கடன்களாகக் காட்டப்படுகின்றன.

**(xv) ஏனைய நிறுவனங்களுக்கான கடன்கள்**

ஏனைய நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட கடன்கள் வழங்கப்பட்ட ஆரம்ப தொகைகளிலிருந்து சேகரிக்கப்பட முடியாத தொகை ஏதுமிருந்தால் அதைக் கழித்த பின்பு இனங்காணப்பட்டு, பேணப்படுகின்றது. வரவேண்டிய எல்லாத் தொகையையும் சேகரிப்பதற்கு வங்கியினால் முடியாத தன்மைக்கு போதிய சான்று காணப்படுமிடத்து ஐயக்கடன்களுக்கான (பெறமுடியாத கடன்கள்) ஏற்பாடுகள் செய்யப்பட்டன. ஏற்பாடு செய்யப்பட்ட தொகையானது புத்தகத்திலுள்ள தொகைக்கும் மதிப்பிடப்பட்ட மீளப்பெறப்படத்தக்க தொகைக்குமிடையிலான வேறுபாடாகும். அறவிட முடியாக்கடன்கள் அடையாளம் காணப்படும்போது பதிவழிக்கப்படுகின்றன.

**(xvi) வெளிநாட்டு நாணய நியதியிலான பொறுப்புக்கள்**

வெளிநாட்டு நாணய நியதியிலான பொறுப்புக்கள், பொறுப்புக்களின் கடன் தீர்ப்பனவுக் கிரயச்செலவில் பதிவு செய்யப்படுகின்றன. இப்பொறுப்புக்களின் பெறுமதியில் ஏற்படுகின்ற மாற்றங்கள் ஐந்தொகையின் நியதிப் பொறுப்புக்களின் பெறுமதியின் அதிகரிப்பொன்றாகவோ அல்லது வீழ்ச்சியொன்றாகவோ இனங்காணப்படுகிறது. வெளிநாட்டு நாணய நியதியிலான பொறுப்புக்களின் பெறுமதியில் ஏற்படுகின்ற மாற்றங்களின் விளைவாகத் தோன்றும் இலாபங்களும் இழப்புக்களும் உடனடியாகவே வருமானக்கணக்கில் செலவுகளாக இனங்காட்டப்படுகிறது. பொறுப்பு இன்னமும் செலுத்தப்பட வேண்டியிருக்குமிடத்து இலாபமோ அல்லது இழப்போ விலை மீள்பெறுமதியிடலி லிருந்தான பெற்றுக்கொள்ளப்படாத இழப்பாக (இலாபமாகப்) பதிவு செய்யப்படும். இலாபமோ அல்லது நட்டமோ பெறப்பட்டிருக்குமிடத்து (பொறுப்பின் மீள்கொடுப்பனவினூடாக) அது விலை மாற்றங்களிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட இழப்புக்களாக (இலாபம்) பதிவு செய்யப்படுகின்றது.

**(xvii) பெறுதிக் கருவிகள்**

பெறுமதிக்கருவிகளில் வங்கியின் ஈடுபாடு முக்கியமாக முன்னோக்கிய வெளிநாட்டுச் செலாவணி ஒப்பந்தங்களில் காணப்படுகிறது. அத்தகைய பெறுதி நிதியியல் கருவிகள் நியாயமான பெறுமதியில் குறிப்பிடப்படுகின்றன. முன்னோக்கிய வெளிநாட்டுச் செலாவணி ஒப்பந்தங்களின் நியாயப்பெறுமதியாக, இதையொத்த முதிர்ச்சி தோற்றப்பாட்டுடனான ஒப்பந்தங்களுக்கான முன்னோக்கிய நடைமுறை செலாவணி வீதத்துடன் தொடர்பான வீதங்களில் கணிக்கப்படுகின்றன.

இலாப அல்லது இழப்பு நிலையிலுள்ள அனைத்து பெறுதிக்கருவிகளும் வெளிநாட்டு நாணய வர்த்தகத்தின் நிலுவையில் அல்லது ஐந்தொகையிலுள்ள விற்பனைக்கு கிடைக்கத்தக்கதாகவுள்ள பிணையங்களில் பதிவு செய்யப்படுகின்றன.

**(xviii) ஏனைய நிதியியற் சொத்துக்களும் பொறுப்புக்களும்**

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நாணயக்காசு, வைப்புக்கள் மற்றும் குறுங்கால முற்பணங்கள் என்பன வர்த்தகம் செய்யப்படும் நாளில் இனங்காணப் படுகின்றன.

**(xix) துணை நிறுவனங்களில் முதலீடு**

விற்பனைக்காக வைத்திருக்கப்படுவனவற்றுடன் சேர்த்து துணை நிறுவனங்களில் வங்கியினால்

மேற்கொள்ளப்பட்ட முதலீடுகள் குறைந்த கிரயச்செலவு முறையில் கணிக்கப்படுகின்றன.

**(xx) தங்க இருப்பு**

உயர்ந்த திரவத்தன்மையைக் கொண்ட பண்டமான தங்கஇருப்பு கிரயச்செலவில் வைத்திருக்கப்படுகிறது.

**(xxi) இருப்புக்கள்**

இருப்புக்கள் குறைந்த கிரயச்செலவிலோ அல்லது விற்றுப் பெறக்கூடிய பெறுமதியிலோ வைத்திருக்கப் படுகின்றன. கிரயச்செலவு முதலில் வந்தது முதலில் வெளிச்சென்றது என்ற அடிப்படையில் நிர்ணயிக்கப் படுகின்றது. மெதுவாக வெளிச்செல்லும் இருப்புக்களுக்கு ஒதுக்கம் செய்யப்படுகின்றது.

**(xxii) சொத்து, பொறி மற்றும் கருவி**

சொத்து, பொறி மற்றும் கருவி தொடர்பான சகல விடயங்களும் ஆரம்பத்தில் கிரயச்செலவில் பதியப்படுகின்றன. அதனைத் தொடர்ந்து காணியும் கட்டடங்களும் அவற்றின் நியாயமான பெறுமதி களுக்காக ஒவ்வொரு சொத்துக்களின் அடிப்படையில் மீளமதிப்பிடப்படுகின்றன. முன்கொண்டு செல்லப்படும் தொகை ஐந்தொகைத் திகதியில் காணப்படும் அவற்றின் நியாயமான பெறுமதியிலிருந்து குறிப்பிடத்தக்களவில் வேறுபடாதிருப்பதனை உறுதிப்படுத்தும் பொருட்டு போதிய ஒழுங்கு முறைகளுடன் மீள்பெறுமதியிடல் மேற்கொள்ளப் படுகின்றது.

மீள்பெறுமதியிடப்பட்ட மற்றும் கிரயச்செலவில் அளவிடப்பட்ட முன்கொண்டு செல்லப்படும் தொகைகள் இரண்டும் அவற்றின் மீளப்பெறக்கூடிய தொகையை விட எஞ்சிய அளவில் பதிவு செய்யப்பட்டுள்ளனவா எனவும் முன்கொண்டு செல்லும் தொகை மீளப்பெற்றதாக விஞ்சியிருப்பின் சொத்துக்கள் பெறுமதி பதிவழிக்கப்பட்டுள்ளனவா என்பதனையும் அறிவதற்கு ஒவ்வொரு ஐந்தொகைத் திகதியிலும் மீளாய்வு செய்யப்படுகின்றது.

சொத்து ஒன்று மீளப்பெறுமதியிடப்படுமிடத்து, முன்பு செலவினமாக இனங்காணப்பட்ட அதே சொத்து சார்ந்த முன்னைய மீள்பெறுமதியிடல் வீழ்ச்சியை மாற்றாதவிடத்து, முன்கொண்டு செல்லல் அளவிலான எந்த ஒரு அதிகரிப்பும் நேரடியாக மீள்பெறுமதியிடல் மிகைக்கு வரவு வைக்கப்படும். இச்சந்தர்ப்பங்களில் அதிகரிப்பானது முன்பு பதிவழிக்கப்பட்ட அளவிற்குச் சமமான வருமானமாக இனங்காணப்பட்டுள்ளது. மீள்பெறுமதியிடலின் காரணமாக சொத்தொன்றின் முன்கொண்டு செல்லும் பெறுமதி வீழ்ச்சியடைந்த விடத்து, அவ்வீழ்ச்சியானது அச்சொத்து தொடர்பான முன்னைய அதிகரிப்பினை மாற்றாதவிடத்து செலவினமாக இனங் காணப்பட்டுள்ளது. இந்த விடயத்தில், அதே சொத்துக்கள் தொடர்பாக எந்த ஒரு தொடர்பான மீள்மதிப்பீட்டு ஒதுக்கிற்கும் எதிரான மீள்பெறுமதியிடல் ஒதுக்கில் வைத்திருக்கப்படும் தொகை ஏற்படும் வீழ்ச்சியை விஞ்சாதிருக்குமிடத்து இது விதிக்கப்படும். சொத்தொன்று தொடர்பாக மீள்பெறுமதியிடல் ஒதுக்கில் ஏதாவது நிலுவை காணப்படுமாயின் சொத்துக்களின் முதிர்வு அல்லது அகற்றலின்போது அது நேரடியாக பிடித்து வைத்திருக்கும் வருவாய்களுக்கு மாற்றப்படும்.

பெறுமானத்தேய்வு மதிப்பிடப்பட்ட பயன்பாட்டுக் காலத்தினைத் தொடர்ந்து நேர்கோட்டிறக்க விதிமுறையில் கணிக்கப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| கட்டிடங்கள் | 50 ஆண்டுகள் |
| உந்துஊர்திகள் | 10 ஆண்டுகள் |
| அலுவலகத்தளபாடங்களும் கருவிகளும் | 10 ஆண்டுகள் |
| கருவிகள் | 4ஆண்டு-5ஆண்டு |
| மற்றையது | 3 ஆண்டுகள் |

ஆரம்பத்தில் மதிப்பிடப்பட்ட செலாற்றத்தின் நியமத்திலிருந்து எதிர்பார்க்கப்பட்ட எதிர்கால பொருளாதார நன்மைகளை மீளஏற்படுத்தவோ அல்லது பேணும்பொருட்டு சொத்து, பொறி மற்றும் கருவியின் திருத்தவேலைக்கோ அல்லது பேணலுக்கோ ஏற்பட்ட செலவினம், அது ஏற்பட்ட நேரத்தில் காணப்பட்ட செலவினமாகக் கொள்ளப்படும்.

**(xxiii) பெறக்கூடிய கணக்குகள்**

பெறக்கூடிய கணக்குகள், ஐயத்திற்கிடமான படுகடன்களுக்கான ஒதுக்கினைச் செய்தபின்னர் எதிர்பார்க்கப்படும் பெறப்படத்தக்க பெறுமதியில் முன்கொண்டு செல்லப்படுகிறது.

**(xxiv) நானாவிதச் சொத்துக்கள்**

நானாவிதச் சொத்துக்கள் எதிர்பார்க்கப்படும் விற்றுப்பெறத்தக்க பெறுமதியில் முன் கொண்டு செல்லப்படுகின்றன.

**(xxv) ஏற்பாடுகள்**

கடந்தகால நிகழ்வொன்றின் விளைவாக, வங்கி தற்போதைய கடப்பாடொன்றினைக் (சட்டரீதியான அல்லது அமைப்பு ரீதியான) கொண்டிருக்குமிடத்து ஏற்பாடுகள் இனங்காணப்பட்டு அக்கடப்பாட்டை தீர்ப்பதற்காக பொருளாதார நன்மைகளை உள்ளடக்கியிருக்கும் மூலங்களின் வெளிப்பாய்ச்சல், தேவைப்படுவதுடன் இக்கடப்பாட்டு தொகையை நம்பத்தகுந்த மதிப்பீடொன்று மூலம் அறியமுடியும்.

ஏற்பாடொன்று மீளளிக்கப்படும் என வங்கி எதிர்பார்க்குமிடத்து அந்த மீளளிப்பு இறுதியில் நிச்சயமாக ஏற்படும்வேளையில் மட்டும் தனியான சொத்தாக மீளளித்தல் இனங்காணப்படுகிறது.

**(xxvi) சுற்றோட்டத்திலுள்ள நாணயம்**

இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்பட்ட நாணயம் அதனை வைத்திருப்பவரின் சார்பாக வங்கி மீதான கோரலைக் கொண்டிருப்பதனைக் காட்டுகின்றது. சுற்றோட்டத்திலுள்ள நாணயத்திற்கான பொறுப்பு ஐந்தொகையில் முகப்புப்பெறுமதியில் பதியப்பட்டுள்ளது.

**(xxvii) ஊழியர்களுக்கான நன்மைகள்**

**ஓய்வூதியம்**

1998 சனவரி 1ஆம் நாளுக்கு முன்னர் வங்கியில் சேர்ந்த ஊழியர்களுக்கு நன்கு திட்டமிடப்பட்ட ஓய்வூதியத்திட்டமொன்றை வங்கி தொழிற்படுத்துகின்றது. 1998 சனவரி 1ஆம் நாளிலிருந்து வங்கிக்கு புதிதாக நுழைந்தவர்களுக்கு இந்த ஓய்வூதிய வசதி வழங்கப்படவில்லை. இது உதவுதொகையற்ற செலுத்தாத ஓய்வூதியத் திட்டமாக இருப்பதனால் நன்மையின் முழுச்செலவும் வங்கியினாலேயே பொறுப்பேற்கப்படுகின்றது. தனியாக நிருவகிக்கப்படும் நிதியமொன்றிற்கு வங்கி உதவுதொகையினைச் செலுத்தி வருகின்றது. இத் திட்டத்தின்கீழ் நன்மைகளை வழங்குவதற்கான செலவு எறிவு செய்யப்பட்ட அலகுக் கொடுகடன் உண்மைப் பெறுமதி முறையினைப் பயன்படுத்தி தீர்மானிக்கப்படுகிறது. ஒவ்வொரு தனிஆளுக்குமான திட்டத்திற்கான திரண்ட இனங்காணப்படாத உண்மை இலாபங்களோ அல்லது இழப்புக்களோ தெளிவாக குறித்துரைக்கப்பட்ட நன்மைக் கடப்பாடுகளின் 10 சதவீதத்தினை விஞ்சுமிடத்தும் மதிப்பிடப்பட்ட சொத்தின் நியாயமான பெறுமதி யினையும் விஞ்சுமிடத்து வருமானமாக அல்லது செலவாக இனங்காணப்படுகிறது. உண்மை இலாபங்களும், இழப்புக்களும் இலாபமாகவோ அல்லது இழப்புக்களாகவோ இத்திட்டங்களில் பங்கேற்கும் ஊழியர்களின் எதிர்பார்க்கப்பட்ட எஞ்சியிருக்கும் வேலைக்காலத்தினால் இனங்காணப்படுகின்றன.

**ஓய்வூதிய வெகுமதி**

ஓய்வூதிய வெகுமதி நன்கு திட்டமிடப்பட்ட நன்மையளிக்கும் ஒரு திட்டமாகும். வங்கி, ஓய்வூதியத்திட்டத்திற்கு தகைமை பெறாத ஊழியர்களுக்கு வெகுமதியைச் செலுத்துவதற்கு பொறுப்புடையதாகும். பணி தொடங்கிய முதல் ஆண்டு தொடக்கம் தகைமையுடைய ஒவ்வொரு ஊழியருக்கும் அவர்கள் பூர்த்தி செய்த ஒவ்வொரு பணியாண்டிற்கும், நிதியாண்டின் இறுதி மாதச் சம்பளத்தின் அரைவாசியை அடிப்படையாகக் கொண்ட சூத்திரத்தினைப் பயன்படுத்தி, கணக்கிடப்பட்ட அளவிற்குச் சமமான தொகை ஐந்தொகையில் ஏற்பாடொன்றாக முன்னெடுத்துச் செல்லப்படுகின்றது. ஆண்டில் ஆரம்பத்திலிருந்து முன்னோக்கிக் கொண்டு வரப்பட்ட ஏற்பாடுகளுக்கும், ஆண்டினிறுதியில் முன்னெடுத்துச் செல்லப்பட்ட ஏற்பாடுகளுக்குமிடையிலான வேறுபாடு வருமானக்கூற்றுக்களான பற்று ஒன்றாக விளங்கும். வெகுமதிப் பொறுப்பு நிதியிடப்பட்டதோ அல்லது உண்மையாக பெறுமதியிடப்பட்டதோ அல்ல. இவ்விடயம் ஐந்தொகையில் ஏற்பாடுகளின்கீழ் தொகுக்கப்பட்டுள்ளது.

**ஊழியர் சேமநிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம்**

ஊழியர்கள், தொடர்பான நியதிகள் மற்றும் ஒழுங்கு விதிகளுக்கிணங்க ஊழியர் சேமநிதிய பங்களிப்புக்களுக்கும், ஊழியர் நம்பிக்கை நிதிய பங்களிப்புக்களுக்கும் தகுதியுடையவர்களாவர். வங்கியானது ஊழியர்களின் மொத்தச் சம்பளத்தில் ஊழியர் சேமநிதியத்திற்கு 24 சதவீதத்தினையும், ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கு 3 சதவீதத்தினையும் பங்களிப்புச் செய்கிறது. இவை தனித்தனியாக நிருவகிக்கப்பட்டுவரும் வரைவிலக்கணப்படுத்தப்பட்ட உதவு தொகைத் திட்டங்களாகும்.

**(xxviii) கொடைகள்**

கொடைகள் பெறப்படும் அத்துடன் அவற்றுடன் இணைந்த நிபந்தனைகள் ஏதுமிருப்பின் இணங்கி ஒழுகப்படும் என்பதற்காக உறுதிப்பாடு இருக்குமிடத்து ஏற்படுத்துமிடத்து கொடைகள் அவற்றின் சாதாரண பெறுமதியில் இனங்காணப்பட்டு, மூலதனத்தின் கீழ் காட்டப்படும். கொடைகள் செலவு விடயங்களுடன் தொடர்பானதாக இருக்கும்பொழுது, ஒழுங்கு முறையானதொரு அடிப்படையில் இழப்பீடு செய்வதற்கெனக் கருதப்பட்ட செலவினங்களுக்கு அவற்றை ஈடுசெய்வதற்குத் தேவையான காலப்பகுதிக்கு வருமானக்கணக்குக் கூற்றில் இனங்காணப்பட்டுள்ளது. கொடைகள் சொத்தொன்றுடன் தொடர்பானதாக இருக்குமிடத்து, சாதாரண பெறுமதி பிற்போடப்பட்ட அரச கொடைக்கணக்கில் வரவு வைக்கப்பட்டு தொடர்பான சொத்தின் எதிர்பார்க்கப்படும் பயன்பாட்டுக் காலம் வரை, தொடர்பான சொத்தின் தேய்மானக் கொள்கையுடன் இசைந்த விதத்தில் ஒழுங்கு முறையான அடிப்படையில் வருமானக்கூற்றிற்கு விடுவிக்கப்படும்.

**(xxix) ஆளணிச் செலவுகள்**

ஆளணிச் செலவுகள் அனைத்து அலுவலர் நன்மைகளினதும் முழுச்செலவினையும் உள்ளடக்குகிறது. சம்பளங்கள் தொடர்பான செலவுகள் மற்றும் ஆண்டின்

இறுதியில் ஒன்றுசேரும் விடுப்புக்கள் என்பன மற்றைய உள்ளூர் கொடுபடத்தக்கனவற்றுள் உள்ளடக்கப் பட்டுள்ளன.

**(xxx) தொழிற்பாட்டிலுள்ள குத்தகைகள்**

வங்கி, குத்தகைதாரராக இருக்குமிடத்து தொழிற்படு குத்தகைகள் மீது செலுத்தத்தக்க வாடகைகள் குத்தகைக்கு எடுக்கப்பட்ட சொத்துக களிலிருந்து பெறப்படும் எதிர்பார்க்கப்பட்ட நன்மை களுடன் இசைந்துசெல்லும் அடிப்படையில் குத்தகையின் தவணையைக் கருத்திற்கொண்டு வருமானக்கூற்றில் இனங்காணப்படுகிறது.

**(xxxi) வருமான வரி**

திறைசேரி உண்டியல்கள், திறைசேரிமுறிகள் உட்பட எந்த வைப்புப்பணம் மீது வங்கியினால் செலுத்தப்படக்கூடிய அல்லது அனுமதிக்கப்படக்கூடிய வட்டி தவிர்ந்த வங்கியின் வருமானம், 2000ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க உள்நாட்டரசிறைச் சட்டத்தின் பிரிவு 8(அ)(xxii) இன் கீழ் வரியிலிருந்து விலக்களிக்கப் பட்டுள்ளது. 2002ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க உள்நாட்டரசிறை (திருத்தச்) சட்டத்தின்படி அத்தகைய வட்டியோ அல்லது கொடுபடத்தக்க கழிவோ அத்தகைய வட்டிகளை செலுத்தும்போதோ அல்லது வரவுவைக்கும்பொழுதோ 10 சதவீத பிடித்துவைத்தல் வரிக்கு உட்பட்டதாக இருக்கும்.

**(xxxii) பொறுப்பாண்மை மற்றும் கட்டுக்காப்பு நடவடிக்கைகள்**

கட்டுக்காப்பு மற்றும் நிருவாக ஒழுங்குமுறைகளின் கீழ் இலங்கை மத்திய வங்கியினால் நிருவகிக்கப்பட்ட தொகை இந்த நிதியியல் கூற்றில் உள்ளடக்கப்படவில்லை.

**(xxxiii) வருமானம் மற்றும் செலவினங்கள்**

வங்கிக்கு பொருளாதார நன்மைகளை பெரும்பாலும் கொண்டுவரக்கூடியதாகவும் அவ்வருமானத்தினை நம்பகமான முறையின் அளவிடக்கூடியதாகவும் உள்ளபோது வருமானமானது இனங்காணப்படுகின்றது. உறப்பட்ட செலவிற்கும் வருமானத்தின் குறித்துரைக்கப்பட்ட விடயங்களின் வருவாய்க்குமிடையிலான நேரடி இணைப்பொன்றின் அடிப்படையில் வருமானக்கூற்றில் செலவுகள் இனங்காணப்பட்டுள்ளன. வியாபாரத்தை கொண்டு நடத்துவது தொடர்பாகவும் சொத்து, பொறி மற்றும் கருவியை வினைத்திறனுள்ள விதத்தில் பேணுவதற் காகவும் உறப்பட்ட அனைத்து செலவினங்களும் ஆண்டிற்கான இலாபத்தினைக் கணிக்கும்போது வருமானத்தில் கழிக்கப்படுகின்றன.

வருமானத்தையும், செலவினத்தையும் இனங்காண்பதற்கு முன்னர் பின்வரும் குறித்துரைக்கப் பட்ட பரிமாணங்களை அடையாளம் காணப்பட வேண்டும்.

**(xxxiv) வட்டி**

உண்மைக் கொள்வனவு விலையை அடிப்படையாகக் கொண்ட பயன்தரு விளைவு முறையைப் பயன்படுத்தி ஒன்றுசேர்ந்த அடிப்படையின் மீது அனைத்து வட்டி உழைக்கும் கருவிகளுக்குமான வட்டி வருமானமும் செலவினங்களும் வருமானக்கூற்றில் இனங்காணப்பட்டுள்ளது. வட்டி வருமானமானது, நிலையான வருமான முதலீடு மற்றும் வர்த்தகம் செய்யப்படுகின்ற பிணையங்கள் என்பன மீதான நறுக்கிலிருந்தான வருவாய்களையும் திறைசேரி உண்டியல்கள் மற்றும் ஏனைய கழிவிடப்பட்ட கருவிகளின் மீது கொடுபட வேண்டிய கழிவுகளையும் வட்டங்களையும் உள்ளடக்குகிறது. கடன்களின் சேகரிப்பு ஐயத்திற்கிடமாகும்பொழுது வட்டி வருமானம் இடைநிறுத்தப்படுகிறது. அத்தகைய வருமானம் பெறப்படும்வரை வட்டி வருமானத்திலிருந்து நீக்கப்படுகிறது.

**(xxxv) பங்கிலாபங்கள்**

பங்குடமையாளர்கள் கொடுப்பனவினைப் பெறுவதற்கான உரிமை நிறுவப்பட்டதுடன் பங்கிலாப வருமானம் இனங்காணப்படுகின்றது.

**(xxxvi) பல்தரப்பட்டவை**

பல்தரப்பட்ட வருமானமும் செலவினங்களும் ஒன்றுதிரண்ட அடிப்படையில் இனங்காணப்பட்டுள்ளன. சொத்து, பொறி மற்றும் கருவிகளின் விற்பனை மீதான வருமானத்தன்மையின் தேறிய இலாபங்களும், இழப்புக்களும் விற்பனை மூலம் பெற்ற பெறுகைகளிலிருந்து சொத்து கொண்டுள்ள பெறுமதியையும் அது சார்ந்த விற்பனைச் செலவுகளையும் கழித்த பின்பு வருமானக்கணக்கில் காட்டப்பட்டுள்ளன. மீளப்பெறுமதியிடப்பட்ட சொத்து, பொறி மற்றும் கருவியின் விற்பனவின் போதும் இச்சொத்து சார்பாக மீளப்பெறுமதியிடல் ஒதுக்கில் எஞ்சியிருக்கும் தொகை நேரடியாக திரண்ட இலாபத்திற்கு மாற்றல் செய்யப்படுகின்றது.

தற்செயலான நடவடிக்கைகள் மற்றும் முக்கிய வருமானத்தினை உருவாக்குகின்ற நடவடிக்கைகள் என்பனவற்றிலிருந்து எழும் இலாபங்களும், இழப்புக்களும் மற்றும் குறிப்பிடத்தக்களவில் இல்லாத அவ்வாறான கொடுக்கல்வாங்கல் தொகுதியிலிருந்து எழும் இலாபங்களும், இழப்புக்களும் தேறிய அடிப்படையில் திரட்டப்பட்டு அறிக்கையிடப்பட்டு வெளிப்படுத்தப்படுகிறது.

**(xxxvii) பிரிவுரீதியான அறிக்கையிடல்**

வங்கியானது நிதியியற் சொத்துக்களையும், நிதியியற் பொறுப்புக்களையும் அவற்றுடன் இணைந்த வருமானத்தையும், செலவினத்தையும் வெளிநாட்டு நாணய மற்றும் உள்நாட்டு நாணய நடவடிக்கைகளிடையே வேறுபடுத்தி வெளிப்படுத்துகிறது. இவ்வறிக்கையிடும் அணுகுமுறை கீழே விபரிக்கப் பட்டுள்ள வங்கியின் நடவடிக்கைகளை பொருத்தமான முறையில் பிரிவுபடுத்தி அறிக்கையிடப்படுவதாக வங்கி கருதுகின்றது.

**(xxxviii) நடவடிக்கைகளின் தன்மையும் அளவும்**

திருத்தப்பட்டவாறான 1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாணயவிதிச் சட்டத்தின் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நாணயச்சபை எடுத்த அல்லது பின்பற்றுவதற்கு அங்கீகாரமளிக்கப்பட்ட கொள்கைகளை அல்லது நடவடிக்கைகளை நிர்ணயிப்பதற்கு மேலதிகமாக மத்திய வங்கி அதிகாரங்கள் கடமைகள் மற்றும் தொழிற்பாடுகள் என்பன ஒப்படைக்கப் பட்டதுடன் பொதுவாக வங்கியின் முகாமை, தொழிற்பாடுகள் மற்றும் நிருவாகம், என்பனவற்றிற்கும் பொறுப்பாக இருக்கும். வங்கி, இலங்கையின் நாணய, நிதியியல் மற்றும் கொடுப்பனவு முறை என்பனவற்றின் நிருவாகம், மேற்பார்வை மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் என்பவற்றுக்கு முக்கிய பொறுப்பாக இருந்ததுடன், அரசாங்கத்தின் இறைமுகவராண்மையாகவும் தொழிற்பட்டது. வங்கியின் நடவடிக்கைகள் முக்கியமாக பின்வருவனவற்றை உள்ளடக்கியிருந்தன.

- நாணய மற்றும் செலாவணிவீத கொள்கைகளை நடைமுறைப்படுத்தல்.
- நாணய வெளியீடு
- நிதியியல் முறையில் சுதந்திரமான போட்டியையும் உறுதிப்பாட்டினையும் வசதிப்படுத்தல்.
- வரைவிலக்கணப்படுத்தப்பட்ட நிதியியல் நிறுவனங்களுக்கு உரிமம் வழங்கலும் மேற்பார்வையிடலும்.
- வங்கிகளுக்கிடையிலான தீர்ப்பனவு முறையினை ஒழுங்கு செய்தலும், முகாமைப்படுத்தலும் மற்றும் கொடுப்பனவு முறையின் சுமூகமான தொழிற்பாட்டினை மேம்படுத்தலும்.
- பல்வேறுபட்ட வசதிகளின் கீழ் அரசாங்கம், வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்களுக்கு கடன்களையும், முற்பணங்களையும் வழங்குதல்.
- அரசுடனும் அரசின் சார்பில் தொழிற்படுகின்ற முகவர்களுடனும் குறித்துரைக்கப்பட்ட ஒழுங்குகளின் கீழ் அரசின் வைப்பாளராகத் தொழிற்படல்.

இலங்கையின் உற்பத்தியாக்க மூலவளங்களின் அபிவிருத்தியினை ஊக்குவித்து மேம்படுத்துகின்ற நோக்குடன் அதன் பொருளாதாரம், விலை மற்றும் நிதியியல் முறை உறுதிப்பாடு ஆகிய குறிக்கோள்களை எய்தும் நோக்குடன் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளை வெளிநாட்டு நாணய மற்றும் உள்நாட்டு நாணய நடவடிக்கைகள் என பரந்தளவில் வகைப்படுத்திக் கொள்ளமுடியும்.

## வெளிநாட்டு நாணய நடவடிக்கைகள்

வெளிநாட்டு நாணயத் தொழிற்பாடுகள் முக்கியமாக, மத்திய வங்கியின் வெளிநாட்டு ஒதுக்குகள் முகாமைத்துவ தொழிற்பாடுகளின் கீழான இலங்கை மத்திய வங்கியின் வெளிநாட்டு நாணயச் சொத்துக்களை வைத்திருப்பதன் மூலமாக ஏற்படுகின்றது. வெளிநாட்டு ஒதுக்குகள் முகாமைத்துவ சொத்துப்பட்டியல் வெளிநாட்டு செலாவணி தலையீட்டு நோக்கங்களுக்காக (வெளிநாட்டு ஒதுக்குகள்) வைத்திருக்கப்படும் வெளிநாட்டு நாணய சொத்துக்களையும் வர்த்தக நோக்கங்களுக்காக வைத்திருக்கப்பட்ட வெளிநாட்டு நாணயங்களையும் உள்ளடக்குகிறது.

வெளிநாட்டு நாணயச் சொத்துக்கள் பல்வேறு நாணயங்களில் வைத்திருக்கப்படுகின்றன. முக்கியமான நாணய இனங்களாக ஐக்கிய அமெரிக்க டொலர், யூரோ, இசுடேர்லிங் பவுண் மற்றும் யப்பானிய யென் என்பன காணப்பட்டன. இவ்வெளிநாட்டு நாணயச் சொத்துக்களில் வைத்திருக்கப்பட்ட நிதியியல் கருவிகள், முக்கியமாக வேறு நாடுகளினது பிணையங்கள், நேர்மாற்று மீள்கொள்வனவு கொடுக்கல்வாங்கல்களின் கீழ் வைத்திருக்கப்படும் பிணையங்கள் அல்லது ஏனைய மத்திய வங்கிகள், வர்த்தக வங்கிகள் மற்றும் தீர்ப்பனவு நிறுவனங்களுடன் வைத்திருக்கப்படும் நிலுவைகள் என்பனவற்றை உள்ளடக்குகின்றன.

இலங்கை மத்திய வங்கி காலத்திற்குக்காலம் உள்நாட்டுச் சந்தைத் தொழிற்பாடுகளிலிருந்து எழும் வெளிநாட்டு நாணயச் சொத்துக்களையும், பொறுப்புக்களையும் கூட வைத்திருக்கின்றது.

இதன் வெளிநாட்டு நாணயத் தொழிற்பாடுகளின் தீவிரமான முகாமைத்துவத்தின் ஒரு பகுதியாக, இலங்கை மத்திய வங்கி பிணையங்கள் மீள்கொள்வனவு கொடுக்கல்வாங்கல்களில் நுழைந்தது. மீள்கொள்வனவு உடன்படிக்கைகள் வங்கியின் ஐந்தொகையில் சொத்துக்களாகத் தொடர்ந்தும் பதிவு செய்யப் படுகின்றன.

### உள்நாட்டு நாணய நடவடிக்கைகள்

உள்நாட்டு நாணய நடவடிக்கைகள் பின்வருமாறு தோன்றுகின்றன.

(i) திரவத்தன்மை முகாமைத்துவத் தொழிற்பாடுகள். திரவத்தன்மை முகாமைத்துவமானது வங்கித்தொழில் முறைக்கு நிதியங்களை முற்பணமாக வழங்குதல் மூலம் அல்லது வங்கித்தொழில் முறையிலிருந்து நிதியங்களை மீளப்பெறல் மூலம் அரசுக்கான நாளாந்த தேறிய பாய்ச்சல்களையும் அல்லது அரசிடமிருந்தான தேறிய நாளாந்தப் பாய்ச்சல்களையும் இலங்கை மத்திய வங்கி நாளாந்தம் எதிரீடு செய்ததுடன் பெருமளவிற்கு தொடர்புடைய தாகவுள்ளது. இத் தொழிற்பாடுகளில் பெரும்பாலானவை நாளாந்த திறந்த சந்தைத் தொழிற்பாடுகளூடாக மேற்கொள்ளப்படுகின்றன.

(ii) சுற்றோட்டத்திலுள்ள நாணயத்தின் பொறுப்பிற்கு உதவுவதற்கான இலங்கை அரசாங்கத்தின் பிணையங்களை உள்ளடக்கிய முதலீட்டுப் பட்டியலொன்றைக் கொண்டிருப்பதுடன் இலங்கை மத்திய வங்கியின் தேறிய மூலதனத்தின் முதலீட்டினையும் பிரதிபலிக்கின்றது. நாணயத் தொழிற்பாடுகளுக்காக இம் முதலீடுகளை வைத்திருப்பதே வங்கியின் கொள்கையாகும்.

## 2. சொத்துக்கள்/ பொறுப்புக்கள் 2003

2003இன் இறுதியில் மத்திய வங்கியின் மொத்த சொத்துக்களும் பொறுப்புக்களும் ரூ.354.6 பில்லியனாக விளங்கி 2002இன் இறுதியில் காணப்பட்ட ரூ.306.5 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூ.48.1 பில்லியன் அல்லது 15.7 சதவீதம் கொண்ட அதிகரிப்பினைக் காட்டியது. வங்கியின் சொத்துக்களில் ஏற்பட்ட அதிகரிப்பு வெளிநாட்டு நிதியியல் சொத்துக்களில் ஏற்பட்ட அதிகரிப்புக்களில் (ரூ.67.5 மில்லியன்) பிரதிபலித்தது. எனினும், வங்கியின் உள்நாட்டு நிதியியல் மற்றும் நானாவித சொத்துக்கள் ரூ.19.5 மில்லியனால் வீழ்ச்சியடைந்தன. இதற்கு திறைசேரி உண்டியல் ரூ.19.7 மில்லியனால் வீழ்ச்சியடைந்தமையும் அரசிற்கான கடன்கள் ரூ.0.2 பில்லியனால் அதிகரித்தமையும் காரணமாகும்.

வங்கியின் பொறுப்புக்களில் ஏற்பட்ட அதிகரிப்பினைச் (ரூ.48.1 பில்லியன்), வெளிநாட்டு நிதியியல் பொறுப்புக்கள் (ரூ.20.8 பில்லியனால்), சுற்றோட்டத்திலுள்ள நாணயம் (ரூ.10.5 பில்லியனால்), உள்நாட்டு நிதியியல் பொறுப்புக்கள் (ரூ.15.1 பில்லியனால்), ஏனைய பொறுப்புக்கள் (ரூ.1.2 பில்லியனால்), மூலதனம் மற்றும் ஒதுக்குகள் (0.5 பில்லியனால்) என்பனவற்றின் அதிகரிப்புக்களில் பிரதிபலிக்கப்பட்டது.

### அ. சொத்துக்கள்

#### (i) வெளிநாட்டு நிதியியல் சொத்துக்கள்

வெளிநாட்டு நிதியியல் சொத்துக்கள் வங்கியின் மொத்த சொத்துக்களில் 78.5 சதவீதத்திற்கு வகைகூறி சொத்துக்களில் மிகப்பெரும் வகையை உள்ளடக்கியிருந்ததுடன் முன்னைய ஆண்டின் மட்டத்துடன் ஒப்பிடுகையில் 2003இல் 32 சதவீதத்தினைப் பதிவு செய்தது. இவ்வதிகரிப்பிற்கு ப.நா.நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதியவசதி மற்றும் வறுமைக்குறைப்பு மற்றும் வளர்ச்சி வசதியின் கீழ் பெறப்பட்ட மீள்கொடுப்பனவும் வட்டியும் நீங்கலான பெறுகைகள் (ஐ.அ.டொலர் 52.3 மில்லியன்), வெளிநாட்டு ஒதுக்குகளைக் கட்டியெழுப்புவதற்காக உள்ளூர் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையிலிருந்து மத்திய வங்கியினால் மேற்கொள்ளப்பட்ட ஐக்கிய அமெரிக்க டொலர்களின் தேறிய கொள்வனவுகள் (ஐ.அ.டொலர் 373.4 மில்லியன்), முதற்றொகை மற்றும் வட்டி என்பனவற்றின் மீள்கொடுப்பனவுகள் நீங்கலாக அரசினால் திரட்டப்பட்ட வெளிநாட்டுக் கடன்களின் பெறுகைகள் மற்றும் இவ்வாண்டில் முக்கிய நாணயங்களுக்கெதிராக ரூபாவின் பெறுமானத் தேய்விலிருந்து எழும் வெளிநாட்டுச் சொத்துக்களின் ரூபாப் பெறுமதியில் ஏற்பட்ட அதிகரிப்பு என்பன ஓரளவிற்குக் காரணமாக இருந்தன.

#### (ii) உள்நாட்டு நிதியியல் சொத்துக்கள்

வங்கியின் மொத்தச் சொத்துக்களில் 18.5 சதவீதத்திற்கு வகைகூறும் உள்நாட்டு நிதியியல் சொத்துக்கள் 2002 இன் ரூ.85 பில்லியனிலிருந்து 2003இல் ரூ.65.7 பில்லியனிற்கு அல்லது 27.7 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு திறைசேரி உண்டியல்கள் ரூ.19.7 பில்லியனால் வீழ்ச்சியடைந்தமையே முக்கிய காரணமாகும். நிதியியல் மற்றும் ஏனைய நிறுவனங்களில் செய்யப்பட்ட முதலீடுகளும் கீழே தரப்பட்டுள்ள விபரங்களிலுள்ளவாறு ரூ.63.5 பில்லியனால் வீழ்ச்சியடைந்தது.

### நிதியியல் மற்றும் ஏனைய நிறுவனங்களில் முதலீடுகள்

திருத்தப்பட்டவாறான இலங்கையின் 1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாணயவிதிச் சட்டம், இலங்கை

மத்திய வங்கி வர்த்தகத்தில் ஈடுபடுவதையோ அல்லது ஏதாவது வர்த்தக, கைத்தொழில் அல்லது ஏனைய நிறுவனங்களில் நேரடி நலவுரித்துக்களை கொண்டிருப்பதனையோ அல்லது அதன் வழமையான வியாபார நடவடிக்கைகளின்போது ஏனைய வங்கித்தொழில் நிறுவனங்களின் பங்குகளைக் கொள்வனவு செய்வதனையோ குறிப்பாகத் தடைசெய்கிறது. எனினும், நாணயச்சபையின் கருத்துப்படி, வங்கித்தொழில் மற்றும் நிதியியல் துறையில் மனிதவள மூலவளங்களையும், தொழில்நுட்ப பிரதேச அபிவிருத்தி வங்கிகள், தேசிய அபிவிருத்தி வங்கி, இலங்கை ஏற்றுமதிக் கொடுகடன் காப்புறுதிக்கூட்டுத்தாபனம், கொடுகடன் தகவல் பணியகம் என்பனவற்றுடன் தொடர்பான குறித்துரைக்கப்பட்ட சட்டவாக்கங்கள் வங்கி முறையே பிரதேச அபிவிருத்தி வங்கிகள், தேசிய அபிவிருத்தி வங்கி, இலங்கை ஏற்றுமதிக் கொடுகடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் மற்றும் கொடுகடன் தகவல் பணியகம் என்பனவற்றின் பங்குகளில் வங்கி முதலீடு செய்வதனை இயலச்செய்தன.

| கம்பனி | வணிகம் | கொண்டிருக்கும் உடமை% 2003 | 2002 | ஆண்டு இறுதி |
|---|---|---|---|---|
| றுகுணு அபிவிருத்தி வங்கி லிமிட்டெட் | அபிவிருத்தி வங்கித்தொழில் | 20 | 20 | 31 திசெம்பர் |
| ரஜரட்டை அபிவிருத்தி வங்கி லிமிட்டெட் | அபிவிருத்தி வங்கித்தொழில் | 20 | 20 | 31 திசெம்பர் |
| கந்துரட்ட அபிவிருத்தி வங்கி லிமிட்டெட் | அபிவிருத்தி வங்கித்தொழில் | 20 | 20 | 31 திசெம்பர் |
| வயம்பா அபிவிருத்தி வங்கி லிமிட்டெட் | அபிவிருத்தி வங்கித்தொழில் | 20 | 20 | 31 திசெம்பர் |
| சப்பிரகமுவ அபிவிருத்தி வங்கி லிமிட்டெட் | அபிவிருத்தி வங்கித்தொழில் | 20 | 20 | 31 திசெம்பர் |
| ஊவா அபிவிருத்தி வங்கி லிமிட்டெட் | அபிவிருத்தி வங்கித்தொழில் | 20 | 20 | 31 திசெம்பர் |
| இலங்கை ஏற்றுமதிக் கொடுகடன் காப்புறுதிக் கூட்டுத்தாபன லிமிட்டெட் | ஏற்றுமதிக் கொடுகடன் காப்புறுதி | இல்லை | 67 | 31 திசெம்பர் |
| இலங்கை கொடுகடன் தகவல் பணியகம் லிமிட்டெட் | கொடுகடன் தகவல் வழங்கல் | 50 | 50 | 31 திசெம்பர் |
| தேசிய அபிவிருத்தி வங்கி லிமிட்டெட் | அபிவிருத்தி நிதியிடல் | 5 | 5 | 31 திசெம்பர் |
| பிச் றேட்டிங் லங்கா லிமிட்டெட் | கொடுகடன் தரமிடல் | 10 | 10 | 31 திசெம்பர் |
| லங்கா கிளியர் (பிறைவேட்) லிமிட்டெட் | தன்னியக்க தீர்ப்பனவு | 20 | 20 | 31 மாச்சு |
| என்.டி.பீ. வங்கி லிமிட்டெட் | வர்த்தக வங்கி | 2 | 2 | 31 திசெம்பர் |

வங்கியினால் வைத்திருக்கப்படும் முதலீடுகளின் பொதுவான உள்ளமைப்பு பின்வருமாறு.

| | 2003 ரூ.000 | 2002 ரூ.000 |
|---|---|---|
| துணைக்கம்பனிகளின் பங்குகளில் முதலீடு | இல்லை | 180,000 |
| (பிரதேச அபிவிருத்தி வங்கிகள் உட்பட) | 337,469 | 400,969 |
| துணைக்கம்பனிகளின் தொகுதிக்கடன்களில் முதலீடுகள் | 192,310 | 12,372 |
| இணைக்கம்பனிகளின் தொகுதிக்கடன்களில் முதலீடுகள் | 69,750 | 69,750 |
| ஏனைய பங்குகளில் முதலீடுகள் | | |
| | 599,529 | 663,091 |

அபிவிருத்தியையும் முன்னேற்றுவதற்கும் மேம்படுத்துவதற்கும் அல்லது இலங்கையில் தொழிற்படுகின்ற வர்த்தக வங்கிகளுக்கிடையே கொடுக்கல்வாங்கல்களின் தீர்ப்பனவினை வசதிப் படுத்துவதற்குமாக ஏதாவது கம்பனி நிறுவப்படுமிடத்து அக்கம்பனிகளிலிருந்து பங்குகளைக் கொள்வனவு செய்வதற்கு இச்சட்டம் அங்கீகாரமளிக்கிறது. மேலும் மேற்குறிப்பிட்ட தேவைப்பாடுகளின் அடிப்படையில் வங்கி பின்வரும் முதலீடுகளைக் கொண்டுள்ளது.

பிரதேச அபிவிருத்தி வங்கிகளின் பங்குகளில் ஒரு பகுதியினை பொருத்தமான விதத்தில் அரச தொழில் முயற்சிகள் மறுசீரமைப்புக்குழு மூலமாக உரிமை மாற்றம் செய்வதற்காக அரசாங்கத்திற்கு

மாற்றுவதற்கும் விற்பனை செய்யப்படும் பெறுகைகளை வங்கிக்கு அனுப்புவதற்கும் 2002 திசெம்பர் 29ஆம் நாளன்று வங்கியின் நாணயச்சபை ஒப்புதலளித்தது. 2003 திசெம்பர் 15ஆம் நாளன்று வங்கியும் இலங்கை அரசாங்கமும் பங்குமாற்றல்களை செல்லுபடியாக்குவதற்காக 6 உடன்படிக்கைகளில் கையெழுத்திட்டதுடன் பங்குடமைகளின் தேறிய சொத்துப்பெறுமதி மாற்றல் விலையாக நிர்ணயிக்கப்பட்டது. இதன்படி பிரதேச அபிவிருத்தி வங்கிகள் மீதான கட்டுப்பாடு இந்நாளிலிருந்து முடிவிற்கு வந்தது. பிரதேச அபிவிருத்தி வங்கிகளிலுள்ள எஞ்சிய முதலீடுகள் அண்மிய எதிர்காலத்தில் விற்றுத்தீர்ப்பதற்காக வைத்திருக்கப் பட்டுள்ளதுடன் ஐந்தொகையில் கிரயச்செலவில் பதியப்பட்டுள்ளது. மாற்றல்கள் முதலீடுகளின் விற்றுத் தீர்ப்பனவாக பதிவு செய்யப்பட்டுள்ளதுடன் ரூ.213 மில்லியன் கொண்ட இலாபம் இவ்வாண்டில் வருமானக்கூற்றில் இனங்காணப்பட்டுள்ளது. உரிமை மாற்றல் தொடர்பாக இலங்கை அரசாங்கத்திடமிருந்து பெறத்தக்கதாக இருந்த விற்பனவுப் பெறுகைகளான ரூ.565 மில்லியன்(2002இல் ரூ.352 மில்லியன்) உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்களின் ஏனைய உள்நாட்டு பெறப்பட்டத்தக்கவையின் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ளன.

வ/ப இலங்கை ஏற்றுமதிக் கொடுகடன் காப்புறுதிக்கூட்டுத்தாபனத்திலான முதலீடு 2003 யூலை 21 ஆம் நாளிலிருந்து கிரயச்செலவில் விற்பனை செய்யப்பட்டது.

## ஆ. பொறுப்புக்கள்

### (i) வெளிநாட்டு நிதியியல் பொறுப்புக்கள்

வெளிநாட்டு நிதியியல் பொறுப்புக்கள் வங்கியின் மொத்தப் பொறுப்புக்களின் 35 சதவீதத்திற்கு வகைகூறின. 2003ஆம் ஆண்டில் ப.நா.நிதியம் தொடர்புற்ற பொறுப்புக்கள் ரூ.13.4 பில்லியனால் அல்லது 15 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு ப.நா.நிதியத்திலிருந்தான விரிவாக்கப்பட்ட நிதியவசதி மற்றும் வறுமைக்குறைப்பு வளர்ச்சி வசதி என்பனவற்றிலிருந்தான பெறுகைகளும், ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியத்திற்கான கொடுபடத்தக்க தொகையிலான அதிகரிப்பு, வெளிநாட்டு நாணயத்திலான பொறுப்புக்களது மீள்மதிப்பீடு என்பன காரணமாக இருந்தன.

### (ii) உள்நாட்டு நிதியியல் பொறுப்புக்கள்

மொத்தப் பொறுப்புக்களில் 18.5 சதவீதத்திற்கு வகைகூறிய உள்நாட்டு நிதியியல் பொறுப்புக்கள் இவ்வாண்டில் ரூ.15 பில்லியனால் அல்லது 29.6 சதவீதத்தினால் அதிகரித்தன. உள்நாட்டு நிதியியல் சொத்துக்களின் அதிகரிப்பிற்கு வர்த்தக வங்கிகளின் வைப்புக்கள் ரூ.4.5 பில்லியனாலும், திறைசேரி உண்டியல்கள் மற்றும் முறிகள் (மீள்கொள்வனவு உடன்படிக்கைகள்) ரூ.9.8 பில்லியனாலும் அதிகரித்தமையே முக்கிய காரணமாகும்.

### (iii) ஏனைய பொறுப்புக்களும் ஒதுக்குகளும்

பொறுப்புக்கள் வகையில் பாரிய வகையினை உள்ளடக்கியுள்ள ஏனைய பொறுப்புக்கள் வங்கியின் மொத்தப் பொறுப்புக்களில் 46.5 சதவீதத்திற்கு வகைகூறுகின்றன. ஏனைய பொறுப்புக்களில் முக்கியமான வகையாக விளங்கும் சுற்றோட்டத்திலுள்ள நாணயம் 2002இன் ரூ.88.3 பில்லியனிலிருந்து 2003இல் ரூ.98.8 பில்லியனுக்கு ரூ.10.5 பில்லியனால் அல்லது 11.9 சதவீதத்தினால் அதிகரித்தது. ஏனைய பொறுப்புக்கள் 2002இன் 0.7 பில்லியனிலிருந்து 2003இல் 1.9 பில்லியனுக்கு ரூ.1.2 பில்லியனால் அல்லது 1.3 சதவீதத்தினால் அதிகரித்தன. மூலதனமும் ஒதுக்குகளும் 2002இன் ரூ.63.6 பில்லியனிலிருந்து 2003இல் ரூ.64.1 பில்லியனுக்கு ரூ.0.5 பில்லியனால் அதிகரித்தன.

## இ. வருமானம்

இவ்வாண்டிற்கான தொழிற்பாட்டு வருமானம் (வட்டிக் கொடுப்பனவுகள் நீங்கலாக) முன்னைய ஆண்டின் ரூ.20 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூ.14.7 பில்லியனாக காணப்பட்டது. இத்தேறிய தொழிற்பாட்டு வருமானத்தின் ரூ.10.6 பில்லியன் தொகை கொண்ட பெரும்பகுதி வட்டி, அடையப்பட்ட விலைமாற்றங்கள், அடையப்படாத விலை மாற்றங்கள் மற்றும் வங்கியின் வெளிநாட்டு நிதியியல் தொழிற்பாடுகளிலிருந்தான தேறிய வெளிநாட்டுச் செலாவணி மீளமதிப்பிடு இலாபம் ஆகியவற்றிலிருந்து பெறப்பட்டது. இது முன்னைய ஆண்டின் ரூ.12.9 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூ.2.3 பில்லியன் கொண்ட வீழ்ச்சியைக் காட்டியது. இவ்வீழ்ச்சிக்கு வங்கியிலிருந்த வெளிநாட்டுப் பிணையங்களின் சந்தைப் பெறுமதி வீழ்ச்சியடைந்தமையினால் மீளாய்விற்குரிய ஆண்டில் பெறப்பட முடியாமல்போன இழப்பு முன்னைய ஆண்டில் பெறப்படாத வருமானமான ரூ.3.8 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூ.1.9 ஆகக் காணப்பட்டமையே முக்கிய காரணமாகும். இவ்வாண்டில் வெளிநாட்டு நாணயத்தில் குறித்துரைக்கப்பட்ட கொடுக்கல்வாங்கல்களுடன் இணைந்த செலாவணிவீத மாற்றங்களிலிருந்து எழும் இலாபங்கள் மற்றும் இழப்புக்கள் தொடர்பாகவும், ஆண்டு இறுதியில் வெளிநாட்டு நாணயத்தில் குறித்துரைக்கப்பட்ட சொத்துக்களினதும், பொறுப்புக்களினதும் பெறுமதியினை இலங்கை ரூபாவிற்கு மாற்றுவதனாலும் இனங்காணப்பட்ட தேறிய வருமானம் முன்னைய ஆண்டின் ரூ.3.5 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூ.6.9 பில்லியனாக விளங்கியமைக்கு முக்கிய நாணயங்களுக்கெதிராக இலங்கை ரூபாவின் பெறுமதி தேய்வடைந்தமையே காரணமாகும்.

உள்நாட்டு நிதியியல் தொழிற்பாடுகளிலிருந்தான வருமானத்தின் பங்கும், மற்றைய வருமானமும் முன்னைய ஆண்டின் ரூ.7.2 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூ.4.0 பில்லியனாக விளங்கியது. உள்நாட்டு நிதியியல் வருமானம் வீழ்ச்சியடைந்தமைக்கு திறைசேரி உண்டியல் சொத்துப்பட்டியல் 2002இன் ரூ.52.9 பில்லியனிலிருந்து 2003இல் ரூ.33.2 பில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தமையே முக்கிய காரணமாகும்.

### ஈ. செலவினம்

வங்கியின் மொத்த தொழிற்பாட்டுச் செலவினம் 2002ஆம் ஆண்டின் ரூ.3.5 பில்லியனிலிருந்து 2003இல் ரூ.3.7 பில்லியனுக்கு 5.7 சதவீதத்தினால் சிறிதளவு அதிகரித்தது. ஆளணிச் செலவினம் 2002இன் ரூ.1.07 பில்லியனிலிருந்து 2003இல் ரூ.1.82 பில்லியனுக்கு அதிகரித்தமைக்கு அடிப்படையாகக் கொண்ட பெறுமதியிடல் முறை பிரயோகத்தைத் தொடர்ந்து ஓய்வூதிய பங்களிப்புச் செலவு அதிகரித்தமையே காரணமாகும். இருப்புச்செலவு முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் ரூ.0.4 பில்லியனால் அதிகரித்தமைக்கு நாணய இருப்பின் செலவில் ஏற்பட்ட அதிகரிப்பே காரணமாகும்.

### உ. பொது

வங்கி பொதுப்பேரேட்டு முறைகள் மற்றும் அவற்றுடன் தொடர்பான துணை-முறைகள் என்பனவற்றுடன் தொடர்புபட்டவற்றில் விரிவான கணனி மயப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டத்தினை அறிமுகப்படுத்தியதன் மூலம் அதன் நிதியிடல் அறிக்கையிடும் அமைப்பினை தரமுயர்த்திக் கொண்டது. அதேநேர மொத்த தீர்ப்பனவு முறையும், உள்நாட்டுப் பிணையங்களுக்கான வைப்பகமுறையும் (பத்திரங்களற்ற) நிதியிடல் அறிக்கையிடும் முறையில் உடனடியாக நாளது வரையான பூரணப்படுத்தலை வழங்குவதற்காக பொதுப்பேரேட்டு முறையுடன் இணைக்கப் பட்டிருக்கிறது. இம்முன்னேற்றங்கள், ஒரு புறத்தில், நிதியியல் இடர்நேர்வுக்குள்ளாவதை முகாமைப் படுத்துவதற்கான வங்கியின் இயலாற்றலை வலுப்படுத்துவதற்கும், மறுபுறத்தில், நிதியியல் கூற்றுக்கள் தொடர்பாக நியமங்கள், அறிக்கையிடல், மற்றும் வெளிப்படுத்துகை என்பன உட்பட கணக்கீடு மற்றும் நிதித்துறையில் சிறந்த பன்னாட்டு நடைமுறைகளுடன் இணங்கிச் செல்வதற்குமாகும்.

**பன்னாட்டு நிதியியல் அறிக்கையிடும் நியமங்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட 2003 ஆம் ஆண்டுக்கான இலங்கை மத்திய வங்கியின் நிதியியல் கூற்றுக்கள் தனியான ஆவணமாக வெளியிடப்படுகின்றது.**

## வங்கி மேற்பார்வை

வங்கித்தொழில் முறையின் பாதுகாப்பினையும் வலுவாற்றலையும் உறுதிப்படுத்தும் பொருட்டும், வைப்பாளர்களின் நலவுரித்துக்களைப் பாதுகாத்துக் கொள்ளும் பொருட்டும் மத்திய வங்கியினால் உரிமம் வழங்கப்பட்ட வங்கிகள் தொடர்பான மத்திய வங்கியின் ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வைத் தொழிற்பாடுகள் வங்கி மேற்பார்வைத் திணைக் களத்தினால் மேற்கொள்ளப்படுகின்றது. தற்பொழுது ஒழுங்குமுறைப்படுத்தப்பட்டு மேற்பார்வை செய்யப்பட்டு வரும் நிறுவனங்களாக உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளும், காணப்படுகின்றன. வங்கித்தொழில் சட்டம் மற்றும் நாணயவிதிச் சட்டம் என்பனவற்றினால் நிருவகிக்கப்பட்டு வரும் ஒழுங்குவிதிகளின் தொழிற் பாடுகள் மற்றும் மேற்பார்வை என்பன பணிப்புரை களை வழங்குதல், வங்கிகள் மற்றும் கிளைகள் மற்றும் வங்கிகளின் ஏனைய வியாபார நிலையங்களைத் திற ப்பதற்கு அல்லது மூடிவிடுவதற்கு ஒப்புதல்களை வழங்குதல், வங்கிகளின் தலப்பரீட்சிப்புக்கள் மற்றும் தலத்திற்கு வெளியேயான பரீட்சிப்புக்கள் மற்றும் நலிவுற்ற வங்கிகளின் ஒழுங்குமுறைப்படுத்தல் நடவடிக்கையையும், தீர்மானங்களையும் நடைமுறை ப்படுத்தல் என்பனவற்றை உள்ளடக்கியிருந்தன. மேற்குறிப்பிட்டவற்றிற்கு மேலதிகமாக, வங்கி மேற்பார்வைத் திணைக்களம் சுயவிருப்பிலான வைப்புக் காப்புறுதித் திட்டத்தினை நிருவகித்ததுடன், உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் என்பனவற்றின் முதன்மை நிறைவேற்று அலுவலர்கள், நிதியியல் துறை சீர்திருத்தக் குழு மற்றும் நிதியியல் உறுதிப்பாட்டுக்குழு என்போருடனான ஆளுநரின் மாதாந்தக்கூட்டத்திற்கும் பொறுப்பாக இருந்தது. வங்கி மேற்பார்வைத் திணைக்களம் வங்கித்தொழில் துறை பற்றி பொதுமக்களுக்கு விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித் திட்டங்களையும் மேற்கொண்டது.

2003 இறுதியில் மத்திய வங்கியின் மேற்பார்வை வரம்பிற்குள் வியாபாரத்தினை கொண்டு நடாத்திய 22 உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளும், (11 உள்நாட்டு, 11 வெளிநாட்டு) 14 சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளும் தொழிற்பட்டிலிருந்தன. வங்கிகளின் பெயர்ப்பட்டியல் கீழே தரப்பட்டுள்ளது.

**உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளாக (ஆங்கில நெடுங்கணக்கு ஒழுங்கில்) :** இலங்கை வங்கி, சிற்றி வங்கி என்.ஏ, இலங்கை வர்த்தக வங்கி லிமிட்டெட், டியூச் வங்கி, டி.எவ்.சிசி வர்தன வங்கி லிமிட்டெட், கபீப் வங்கி லிமிட்டெட், அட்டன் நசனல் வங்கி லிமிட்டெட், இந்தியன் வங்கி, இந்தியன் ஓவசியஸ்

வங்கி, முஸ்லீம் வர்த்தக வங்கி லிமிட்டெட், நேசன்ஸ் றஸ்ட் வங்கி லிமிட்டெட், மக்கள் வங்கி, பப்ளிக் பாங் பேர்காட், சம்பத் வங்கி லிமிட்டெட், செலான் வங்கி லிமிட்டெட், ஸ்டான்டட் சார்ட்டட் வங்கி, ஸ்டேட் பாங் ஒவ் இந்தியா, த ஹொங்கொங் அன்ட் சங்காய் பாங்கிங் கோபரேசன் லிமிட்டெட், கொழும்பு யூனியன் வங்கி லிமிட்டெட் மற்றும் யூனியன் வங்கி லிமிட்டெட் (பாகிஸ்தானில் கூட்டிணைக்கப்பட்டது) என்பன காணப்பட்டன.

**உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளாக (ஆங்கில நெடுங்கணக்கு ஒழுங்கில்) :** சிலிங்கோ சேமிப்பு வங்கி லிமிட்டெட், டிஎவ்சிசி வங்கி, இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன வங்கி, கந்துரட்ட அபிவிருத்தி வங்கி, இலங்கை தேசிய அபிவிருத்தி வங்கி, தேசிய சேமிப்பு வங்கி, என்டிபி வீடமைப்பு வங்கி லிமிட்டெட், இரஜரட்ட அபிவிருத்தி வங்கி, ருகுணு அபிவிருத்தி வங்கி, சப்பிரகமுவ அபிவிருத்தி வங்கி, சனச அபிவிருத்தி வங்கி லிமிட்டெட், அரச ஈட்டு முதலீட்டு வங்கி, ஊவா அபிவிருத்தி வங்கி மற்றும் வயம்பா அபிவிருத்தி வங்கி என்பன விளங்கின.

மேலும், உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கியான பிரமுக சேமிப்பு அபிவிருத்தி வங்கி லிமிட்டெட் தொடர்பான கலைத்தல் தொடர்ந்தும் சட்ட நியதிகளுக்குட்பட்டிருக்கிறது.

## முன்மதியுடைய ஒழுங்குவிதிகள் மற்றும் பணிப்புரைகள்

வங்கித்தொழில் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் காலத்திற்குக்காலம் அறிமுகப்படுத்தப்பட்ட ஒழுங்குவிதிகளின் தேவைப்பாடுகளுடன் மூலதனம், திரவத்தன்மை, பாரிய வெளிப்படுத்தல்கள், வங்கிகளிலுள்ள பங்குடமை, வங்கிகளினால் மேற்கொள்ளப்படும் பங்கு முதலீடுகள், சொத்துக்களின் தரம், வருமான இனங்காணல், அறவிடமுடியா மற்றும் ஐயக்கடன்களுக்கான ஒதுக்கங்கள், சம்பந்தப்பட்ட சாராரின் கொடுக்கல்வாங்கல்கள், அசையாச் சொத்துக்களின் கையேற்பு, காலாண்டு வருடாந்த நிதியியல் கூற்றுக்களின் வெளிப்படுத்துகை மற்றும் வங்கிகளின் கணக்காய்வு என்பனவற்றுடன் தொடர்புபட்ட ஏனைய முன்மதியுடைய தேவைப் பாடுகளுடன் வங்கிகள் இணங்கி ஒழுகுகின்றனவா என்பதனை வங்கி மேற பார்வை திணைக்களம் தொடர்ந்தும் கண்காணித்தது.

## 2003ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட பணிப்புரைகளும் மற்றைய முன்மதியுடைய தேவைப்பாடுகளும்

ஆய்விற்குரிய ஆண்டில் நாணயச்சபையின் பின்வரும் பணிப்புரைகளும், தீர்மானங்களும் வங்கி மேற்பார்வைத் திணைக்களத்தினால் விடுக்கப்பட்டன.

(i) செயற்படா முற்பணங்கள் மீதான வட்டியை இடைநிறுத்துவது மீதான பணிப்புரைகளின் ஒதுக்க நோக்கங்களுக்கான பிணையங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் ஒதுக்க நோக்கங்களுக்காக அறவிடமுடியா மற்றும் ஐயக்கடன்களின் பகுப்பாய்வு தொடர்பான அட்டவணை II இற்கான திருத்தம். இத்திருத்தம் பின்வருவனவற்றை நிகழ்விக்கும்.

(அ) சொத்துக்களின் முதல் ஈட்டிற்கு எதிராக பெறப்பட்ட கடன்களுக்கான முதலாவது ஒதுக்கு செய்யப்படும் நேரத்தில் நடைமுறை தொழில்சார் மதிப்பீட்டு அறிக்கையை அடிப்படையாகக் கொண்ட சொத்துக்களின் கட்டாய விற்பனை பெறுமதியில் 75 சதவீதத்தினை மட்டும் பிணையத்தின் பெறுமதியாகக் கருதப்பட முடியும்.

(ஆ) கடன்கள் 'இழப்பு' வகைக்கு மாற்றல் செய்யப்படும்பொழுது (அதாவது கடனானது 18 மாதங்களாக அல்லது அதற்குக் கூடுதலாகச் செயற்படாதிருக்குமிடத்து) நடைமுறையிலுள்ள தொழில்சார் மதிப்பீட்டு அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு பிணையாக வைத்திருக்கப்படும் அசையாச் சொத்தின் கட்டாய விற்பனைப் பெறுமதியில் பின்வரும் படிப்படியான கழிவிடல்கள் மேற்கொள்ளப் படும். நடைமுறையிலுள்ள தொழில்சார் மதிப்பீட்டு அறிக்கை என்பது கடன்பாட்டாளர் குடியிருக்கும் வதிவிடச் சொத்துகளுக் கெதிராக வதிவிட நோக்கங்களுக்காக வழங்கப்பட்ட கடன்கள் தொடர்பாக நான்கு ஆண்டுகளுக்கு மேற்படாத ஒரு அறிக்கையாக இருப்பதுடன் மற்றைய அனைத்து நோக்கங்களுக்காகவும் வழங்கப்பட்ட கடன்கள் தொடர்பில் இவை மூன்று ஆண்டுகளுக்கு மேற்படாத ஒரு அறிக்கை யாகவும் இருத்தல் வேண்டும்.

| "இழப்பு" வகையிலுள்ள ஆண்டுகளின் எண்ணிக்கை | பிணைப்பெறுமதியாகக் கணக்கிடப்படக்கூடிய அசையாச் சொத்துக்களின் நிர்ணயிக்கப்பட்ட விற்பனைப் பெறுமதியின்% |
|---|---|
| 1-2 ஆண்டுகள் | 60% |
| 2-3 ஆண்டுகள் | 50% |
| 3-4 ஆண்டுகள் | 40% |

(இ) 4ஆண்டுகளுக்கும் கூடுதலாக 'இழப்பில்' உள்ள கடன்கள் தொடர்பாக பிணையங்களாக வைத்திருக்கப்படும் அனைத்து அசையாச் சொத்துக்களும் கிரமமான அடிப்படையில் மீளாய்வு செய்யப்பட்டு முகாமைத்துவத்தின் தற்றுணிபின்படி மேலும் கழிவிடப்பட வேண்டும்.

(ii) தனியொரு கடன்பாட்டாளருக்கான வரையறை மீதான பணிப்புரைகள் இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் என்பனவற்றைப் பொறுத்த வரை பின்வருவனவற்றை உள்ளடக்கும் விதத்தில் திருத்தப்பட்டன.

(அ) புதிய பங்குவழங்கல்கள் அல்லது உரிமப்பங்கு வழங்கல்களிலிருந்து பெறப்பட்ட நிதிகள், பங்குவழங்கல் பெறுமதிகள் வங்கியினால் பெறப்பட்டு அதன் ஏடுகளில் கணக்கு வைக்கப்பட்ட நாளிலிருந்து தனியொரு கடன்பாட்டாளர் வரையறையைக் கணிப்பதற்கான மூலதனமாக கருத்திற் கொள்ளப்படலாம்.

(ஆ) வங்கியொன்றின் நடைமுறையாண்டின் இலாபங்கள், வெளிக்கணக்காய்வாளர்களினால் அத்தகைய இலாபங்களை மூலதன மயமாக்கப்பட்ட இலாபங்களாக உறுதிப் படுத்தும் நாளிலிருந்து தனியொரு கடன்பாட்டாளர் வரையறையைக் கணிப் பதற்கான மூலதனமாகக் கணிக்கப்படலாம்.

(இ) மேலும் வங்கியொன்று நடைமுறையாண்டில் இழப்புக்களை கொண்டிருக்குமாயின் அல்லது பங்கிலாபம் போன்றவற்றின் கொடுப்பனவு காரணமாக அது பிடித்துவைத்திருக்கும் இலாபத்தில் ஏதாவது குறைப்பு ஏற்படுமிடத்து தனியொரு கடன்பாட்டாளர் வரையறையைக் கணிப்பதற்காக பரிசீலனைக்கெடுக்கப்படும் மூலதன நிதியம் குறைப்பினைப் பிரதிபலிக்கும் விதத்தில் குறைக்கப்பட வேண்டும்.

(iii) உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் கரைகடந்த வங்கித்தொழில் பிரிவுகளின் நியதி திரவச் சொத்துக் களைப் பேணுவது தொடர்பான தேவைப்பாடுகள் கரைகடந்த வங்கித்தொழில் பிரிவுகளுக்கான வெளிநாட்டு நாணயத் திரவத் தன்மையினையும் உள்நாட்டு வங்கித்தொழில் பிரிவுகளுக்கான ரூபாத் திரவத்தன்மையினையும் பேணுவதற்கேற்ற விதத்திலும் குறித்துரைக்கப்பட்ட கருவிகளை உள்ளடக்குவதற்கேதுவாக, திரவச் சொத்துக்களின் திரவத் தன்மையினை விரிவாக்குவதற்கான வசதியினை அளிக்கும் விதத்தில் திருத்தப்பட்டன. இது தொடர்பான பணிப்புரைகள் இவ்வாண் டறிக்கையின் வேறோரிடத்தில் தரப்பட்டுள்ளன.

(iv) வைப்புச் சான்றிதழ் தொடர்பாக "உங்கள் வாடிக்கையாளரை தெரிந்து கொள்ளுங்கள்" விதிகள் பற்றிய வழிகாட்டல்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளும், உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வர்த்தக வங்கிகளும் வங்கிகளுடன் வைப்புச் சான்றிதழ்களில் முதலீடு செய்யும் வாடிக்கையாளர் தொடர்பிலான வாடிக்கையாளரைத் தெரிந்துகொள்ளுங்கள் விதிகள் பற்றி அவை தாமாகவே திருப்தியடைந்து கொள்ள வேண்டுமெனவும் வங்கிகளுடன் வைப்புச் சான்றிதழ்களில் முதலீடு செய்து கொள்கின்ற ஆட்களின் வாடிக்கையாளரை அடையாளம் காணுதல் தொடர்பாகவும் 2003 யூன் 30ஆம் திகதியன்று அல்லது அதற்குப் பின்னர் வழங்கப்பட்டு முதிர்ச்சி நாளன்று வங்கியில் மாற்றுகின்ற ஆட்களினதும் போதுமான விபரங்களைக் கொண்ட பதிவேடுகளைப் பேணவேண்டுமெனவும், கேட்டுக்கொள்ளப்பட்டன.

(v) பத்திரிகைகளில் நிதியியல் கூற்றுக்களை பிரசுரிப்பதன் மூலம் பொதுமக்களுக்கு வெளிப்படுத்தல். அனைத்து வர்த்தக வங்கிகளும், உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளும் அவற்றின் நிதியியல் கூற்றுக்களை காலாண்டு அடிப்படையில் அக்காலாண்டு முடிவடைந்த இரண்டு மாதங்களுக்கிடையில் பத்திரிகைகளில் பிரசுரிக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்ளப்பட்டன.

(vi) வட்டி வீதங்களையும், செலாவணி வீதங்களையும் பார்வைக்கு வைத்தல். அனைத்து உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளும், சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளும், வைப்புக்கள் மற்றும் முற்பணங்களின் மீதான அவற்றின் வட்டி வீதங்களையும் வெளிநாட்டு நாணயங்களுக்கான அவற்றின் வாங்கும் மற்றும் விற்கும் வீதங்களையும் காட்டுகின்ற பட்டியலொன்றைத் திரட்டி அத்தகைய தகவல்களை அனைத்துக் கிளைகளிலும் மற்றைய வங்கித்தொழில் பிரிவுகளிலும் 2004 சனவரி 1ஆம் நாள் தொடக்கம் பொதுமக்களின் பார்வைக்கு வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டன.

இது குறித்தான பணிப்புரைகள் இவ்வறிக்கையின் வேறோரிடத்தில் தரப்பட்டுள்ளன.

## வங்கிகள், கிளைகள் மற்றும் ஏனைய வங்கித்தொழில் பிரிவுகளுக்கான ஒப்புதல்களும், வங்கித்தொழில் துறையினை வலுப்படுத்தலும்

2003ஆம் ஆண்டில் ஒன்றிணைப்பு மற்றும் கையேற்பு, கிளைகளையும் மற்றைய வங்கித்தொழில் வியாபார பிரிவுகளையும் மீளமைத்தல், மூடிவிடுதல் மற்றும் திறத்தல் என்பனவற்றினூடாக வங்கித்தொழில் துறையின் வலுப்படுத்தல் தொடர்ந்து இடம்பெற்றது.

I. இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன வங்கியானது உரிமம்

பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கியாக தொழிற்படுவதற்கு நாணயச்சபை உரிமம் வழங்கியது. 1984 இல் கட்டடவாக்கச் சங்கமொன்றாக தொழிற்படத் தொடங்கிய வீடமைப்பு அபிவிருத்தி கூட்டுத்தாபனம் 1997ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன சட்டத்தின் மூலம் 2000ஆம் ஆண்டில் அரச கூட்டுத்தாபனமாக மாற்றப்பட்டது. 2003 ஓகத்தில் வீடமைப்பிற்கான நிதியினை வழங்குகின்ற குறிக்கோளிற்காக 2003ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க சட்டத்தின் நியதியின்படி வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபனம் சிறப்பியல்பு வாய்ந்த வங்கியாக உரிமம் பெற்றது.

II. வங்கித்தொழில் சட்டத்தின் நியதிகளுக்கிணங்க உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் என்பனவற்றினால் கிளைகளைத் திறத்தல், மூடிவிடுதல் மற்றும் வேறு இடங்களுக்கு மாற்றுதல் என்பன தொடர்பாக செய்யப்படும் கோரிக்கைகளையும் திணைக்களம் தொடர்ந்தும் மேற்கொண்டது. இவ்வாண்டுப் பகுதியில் இவை தொடர்பாக வழங்கப்பட்ட ஒப்புதல்கள் பின்வருவனவற்றை உள்ளடக்கியிருந்தன.

அ) கிளைகளைப் பொறுத்தவரையில், 54 புதிய கிளைகளுக்கும் ஒரு கிளையினை மூடி விடுவதற்கும் 52 கிளைகளை வேறிடத்தில் மீளநிறுவுவதற்கும் 3 கிளைகளை தரம் குறைப்பதற்கும் ஒப்புதல் வழங்கப்பட்டது. இதன் விளைவாக, 2003, இறுதியில் தொழிற்பட்ட கிளைகளின் மொத்த எண்ணிக்கை 2002 இறுதியில் காணப்பட்ட 1350 உடன் ஒப்பிடுகையில் 1416 ஆகக் காணப்பட்டது.

ஆ) பணி வழங்கும் பீடங்கள், அடகு வைக்கும் நிலையங்கள், மாணவர் சேமிப்பு பிரிவுகள், விரிவாக்க அலுவலகங்கள் மற்றும் கொடுப்பனவு அலுவலகம் போன்ற ஏனைய வங்கித்தொழில் அலுவலக பிரிவுகளைப் பொறுத்தவரையில் 42 புதிய பிரிவுகளுக்கும், ஒன்றை மூடிவிடுவதற்கும், 4 வேறிடங்களில் மீளஅமைப்பதற்கும், 10 தர முயர்த்தலுக்கும் ஒப்புதல் வழங்கப்பட்டது. தொழிற்பாட்டிலிருக்கின்ற அத்தகைய வங்கித்தொழில் நிலையங்களின் மொத்த எண்ணிக்கை 2002 இறுதியில் காணப்பட்ட 659 உடன் ஒப்பிடுகையில் 2003 இறுதியில் 684 ஆகக் காணப்பட்டது.

இ) அதேவேளை புதிய கிளைகளில் தன்னியக்க கூற்றுப்பொறிகளை நிறுவியமைக்கு மேலதிகமாக வெளியிடங்களில் 24 தன்னியக்க கூற்றுப் பொறிகளை திறப்பதற்கும், ஒன்றினை வேறி டத்தில் மீளஅமைப்பதற்கும் ஒப்புதல் வழங்கப்பட்டது. தொழிற்பாட்டிலுள்ள மொத்த தன்னியக்க கூற்றுப்பொறிகளின் எண்ணிக்கை 2002 இறுதியின் 647 உடன் ஒப்பிடுகையில் 2003 இறுதியில் 722 ஆக விளங்கியது.

## தலத்திற்கு வெளியேயான கண்காணிப்பு முறை

தலத்திற்கு வெளியேயான கண்காணிப்பு முறை யின் கீழ், உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளினாலும், உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளினாலும் அவற்றின் தொழிற்பாடுகள் தொடர்பாக காலத்திற்குக்காலம் வழங்கப்பட்ட தகவல்களின் அடிப்படையில் அவ்வங்கிகளின் நிதியியல் நிலைமைகளை வங்கி மேற்பார்வைத் திணைக்களம் தொடர்ந்தும் கண்காணித்தது. காலத்திற்குக்காலம் பெறப்படும் தகவல்கள் முக்கியமாக வைப்புக்கள் மற்றும் முற்பணங்களின் மீதான வாராந்த வட்டி வீதங்கள், தெரிந்தெடுக்கப்பட்ட நிதியியல் தகவல்களின் மீதான மாதாந்தக் கூற்று, சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், நியதி திரவச் சொத்துக்கள், வருமானம் மற்றும் செலவினம் மீதான காலாண்டு திரட்டுக்கள், மூலதனப்போதுமை, செயற்படா முற்பணங்கள், பகுப்பாய்வு செய்யப்பட்ட முற்பணங்கள் மற்றும் அறவிட முடியா மற்றும் ஐய முற்பணங்களுக்கான ஒதுக்கங்கள், பங்குகளிலான முதலீடுகள் வங்கிப் பணிப்பாளர்களுக்கு வழங்கப்பட்ட கடன் வசதிகள், பணிப்பாளர் கணிசமான நலவுரித்தினை கொண்டிருப்பவராயின் அவரின் நெருங்கிய தொடர்பும் கரிசனைகளும், வட்டி வீத வீச்சு மற்றும் வங்கிகளின் பங்குடமைகளின் மீதான அரையாண்டுக்கூற்று மற்றும் கணக்காய்வு செய்யப்பட்ட ஆண்டு நிதியியல் கூற்றுக்கள் என்பனவற்றை உள்ளடக்கியிருந்தன.

திரட்டப்பட்ட தகவல்கள் தனிப்பட்ட வங்கிகள் மற்றும் முழு வங்கி முறையினதும் இடர்நேர்வு வெளிப்படுத்தல்களை கண்டறிவதற்காக பகுப்பாய்வு செய்யப்படுகின்றன. இது தனிப்பட்ட வங்கிகளின் நிதியியல் தரத்தினையும், செயலாற்றத்தினையும் அவர்களது போட்டியாளர்கள் மற்றும் அத்தொழில்துறை சராசரிகளுக்கெதிராகவும் ஒப்பிடுவதனை இயலச்செய்கிறது. மேலும் வங்கிகளின் நிதி நிலைமைகளின் மீது குறிப்பிடத்தக்கது முக்கிய மானதுமான மாற்றங்களை இனங்கண்டு குறிப்பிட்ட வங்கிகளது பாதிப்புக்குள்ளாகக்கூடிய தன்மை குறித்து எடுத்துக்காட்டுவதற்கான முன்னெச்சரிக்கை யொன்றை வழங்குவதற்கு அல்லது மேலதிக புலனாய்வு மற்றும் பரீட்சிப்பு தேவைப்படும் விடயங்களைக் கண்டறி வதற்கு இத்தகவல்கள் உதவுகின்றன. நேரகாலத்

துடனான எச்சரிக்கை சமிக்ஞைகளின் அடிப்படையில், பாதுகாப்பற்ற மற்றும் வலுவற்ற வங்கித்தொழிலுக்கு இட்டுச்செல்கின்ற முன்மதியற்ற நடைமுறைகளைத் திருத்துவதற்கு பொருத்தமான உடனடி சரிசெய்தல் நடவடிக்கைகளை மேற் கொள்ளுமாறு வங்கிகள் கேட்டுக் கொள்ளப் படுகின்றன.

2000 ஆம் ஆண்டில் சுவீடன் பன்னாட்டு அபிவிருத்தி ஒத்துழைப்பு முகவரினால் அனுசரணை வழங்கப்பட்ட நிபுணர்களினால் செய்யப்பட்ட விதந்துரைப்புக்களின் அடிப்படையில் உத்தேச தலத்திற்கு வெளியேயான புதிய கண்காணிப்பு முறையை நடைமுறைப்படுத்தத் தேவையான நடவடிக்கைகளை வங்கி மேற்பார்வைத் திணைக்களம் 2003ஆம் ஆண்டிலும் தொடர்ந்து மேற்கொண்டது. தற்போதுள்ள விபரத்திரட்டுக்களுக்குப் பதிலாக வங்கிகளினால் காலாந்திரம் சமர்ப்பிக்கப்படவுள்ள உத்தேச விபரத்திரட்டுக்கள் ப.நா.நிதியம் மற்றும் சுவீடன் நிதியியல் மேற்பார்வை அதிகாரசபை என்பனவற்றி லிருந்தான நிபுணர்களினால் ஆய்வு செய்யப்பட்டு நடைமுறைப்படுத்தலுக்காக இறுதியாக்கப்பட்டது. புதிய முறையினை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கு, நேரகாலத்துடன் எச்சரிக்கையிடும் சமிக்ஞைகளையும், வங்கியின் செயலாற்றக் குறிகாட்டிகளையும் உள்ளடக்கிய வடிவமைக்கப்பட்ட வெளியீட்டு அறிக்கைகளை காலந்திர திரட்டுகளிலிருந்து பெற்றுக்கொள்ளும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. வங்கித்தொழில் துறையினால் மத்திய வங்கிக்கு அறிக்கையிடப்படும் அனைத்து தரவுகளையும் உள்ளடக்கிய மத்திய தரவுத்தளமொன்றினை மத்திய வங்கிக்காக வடிவமைத்து நடைமுறைப்படுத்துவதற்கான ஆரம்ப முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

## நியதி தலப்பரீட்சிப்புக்கள்

நாணயவிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் நியதிகளின்படி அனைத்து உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளும் நியதிச்சட்ட பரீட்சிப்புக்களுக்கு அதாவது தலப்பரீட்சிப்புக்களுக்கு நாணயச்சபையினால் நிர்ணயிக்கப்படும், தற்பொழுது இரண்டாண்டுகளாகவுள்ள ஒவ்வொரு பரீட்சிப்புக்கள் காலப்பகுதியிலும் ஒரு முறையாவது அல்லது அவசியம் ஏற்படுமிடத்து குறைந்த கால இடைவெளியில் உட்பட வேண்டும். உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் மீதான தலப்பரீட்சிப்புக்கள் வங்கித்தொழில் சட்டத்தின் ஏற்பாடுகளின் நியதிகளில் நடத்தப்படுகின்றன.

வங்கி மேற்பார்வைத் திணைக்களம் தற்பொழுது முழுமையான புதிய அணுகு முறையொன்றை பின்பற்றுகிறது. இடர்நேர்வினை அடிப்படையாகக் கொண்ட பரீட்சிப்பானது, வங்கி இடர்நேர்வுகளை அடையாளம் காண்பதிலும், இவ்விடர்நேர்வுகளை முகாமைப்படுத்துவதிலும், இவ்விடர்நேர்வுகளை தணிப்பதற்கேற்ற விதத்தில் மூலவளப் போதுமையை மதிப்பிடுவதிலும் கவனம் செலுத்தியது. மேலும், நியதித் தேவைப்பாடுகள், ஏற்புடைய சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகள், உள்ளக கட்டுப்பாடுகள் மற்றும் கம்பனி நிருவாக நியதிகள் என்பனவற்றிற்கு வங்கிகள் இணங்கியொழுகுகின்றமையும் மதிப்பிடப்பட்டது.

ஆய்விற்குரிய ஆண்டில் வங்கி மேற்பார்வைத் திணைக்களம் 15 வங்கிகளின் பரீட்சிப்புக்களைத் தொடங்கியுள்ளதுடன் 2002ஆம் ஆண்டில் தொடங்கிய 13 வங்கிகளின் பரீட்சிப்புக்களை நிறைவுசெய்து கொண்டது. 13 வங்கிகளில் 11 வங்கிகளின் பரீட்சிப்பு அறிக்கைகள் 2003ஆம் ஆண்டில் தொடர்பான வங்கிகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டன. 2003ஆம் ஆண்டில் பரீட்சிப்புச் செயற்பாடுகள் முகாமைத் துவத்துடனான நேர்முக கலந்துரையாடல், நாணயச்சபைக்கு பரீட்சிப்பு அறிக்கைகளைச் சமர்ப்பித்தல் மற்றும் தொடர்பான வங்கிகளுக்கு அறிக்கைகளை அனுப்பி வைத்தல் என்பனவற்றினூடாக 15 நியதிப் பரீட்சிப்புக்கள் நிறைவு செய்யப்பட்டன. 2003இல் தொடங்கப்பட்ட 11 வங்கிகளின் பரீட்சிப்புக்கள் நிறைவு செய்யப்படவுள்ளன.

## வங்கிக் கையேற்பு

2003 ஒகத்தில் இலங்கையிலுள்ள உரிமம் பெற்ற வர்த்தக வங்கியான மாஸ்றேக் வங்கி பி.எஸ்.சி (ii) யூனியன் வங்கி லிமிட்டெட்டினால் (பாகித்தானில் கூட்டிணைக்கப்பட்டது) கையேற்கப்பட்டது. மாஸ்றேக் வங்கி, துபாயில் ஒருங்கிணைக்கப்பட்ட ஓமான் வங்கி லிமிட்டெட்டின் கிளையொன்றாக 1980 ஏப்பிறலில் இலங்கையில் தொழிற்படத் தொடங்கியதுடன் 1993இல் மாஸ்றேக் வங்கி பிஎஸ்சி என பெயர் மாற்றம் பெற்றது. கையேற்கப்பட்ட நேரத்தில் மாஸ்றேக் வங்கி ஏறத்தாழ ரூ.1பில்லியன் பெறுமதியான சொத்துப் பட்டியலை முகாமைப்படுத்தியதுடன் இது இலங்கையிலுள்ள வர்த்தக வங்கிகளின் மொத்தச் சொத்துக்களின் 0.1 % மாகும்.

## வங்கி மீளமைப்பு

இரண்டு உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளான கொழும்பு யூனியன் வங்கி லிமிட்டெட்டும், நேசனல் மேர்கண்டைல் வங்கி லிமிட்டெட்டும் பிரபல்யமான பாரிய இரண்டு வங்கிகளின் உதவியுடன் வெற்றிகரமாக மீள்மூலதனமயப்படுத்தப்பட்டு மீளமைக்கப்பட்டன. இம்மீளமைப்பு வங்கி மேற்பார்வைத் திணைக்களத்தின் மேற்பார்வையின் கீழ் மேற்கொள்ளப்பட்டு நாணயச்சபையினால் ஒப்புதலளிக்கப்பட்ட அவசியமான

ஒழுங்குமுறைப்படுத்தல்களின் மூலம் வசதியளிக்கப் பட்டது.

(i) கொழும்பு யூனியன் வங்கி லிமிட்டெட், சம்பத் லிமிட்டெட்டினை தலைமையாகக் கொண்ட கூட்டமைப்பினால் 2003 ஒகத்தில் மீள் மூலதனமயமாக்கப்பட்டு மீளமைக்கப்பட்டது. இதன்படி கூட்டமைப்பு வேறுபட்ட வகைகளைக் கொண்ட சாதாரண பங்குகளை கொள்வனவு செய்ததன் மூலம் ரூ.525 மில்லியன் புதிய பங்கு மூலதனத்தினை உட்புகுத்தின. மேலும், தொகுதிக்கடன்கள் வடிவில் ரூ.100 மில்லியன் பெற்றுக்கொள்ளப்பட்டதன் மூலம் மொத்த புதிய மூலதன உள்ளீடு ரூ.625 மில்லியனாக விளங்கியது. சிறப்பு நோக்கத்தினைக் கொண்ட கம்பனியொன்றினை நிறுவி அதற்கு செயற்படாக் கடன்களை மாற்றல் செய்ததன் மூலமாக கொழும்பு யூனியன் வங்கியின் செயற்படாக் கடன்களுக்கு தீர்வு காணப்பட்டது. இந்த மீள் மூலதன மயமாக்கலும் மீளமைப்பு செயற்பாடும் மூலதனப்போதுமை விகிதத்தினை ஆகக்குறைந்த நியதித் தேவைப்பாடான 10 சதவீதத்திற்கு மேல் உயர்த்தியதன் மூலமும் செயற்படாக் கடன்களை குறிப்பிடத்தக்களவிற்கு குறைத்ததன் மூலமும் கொழும்பு யூனியன் வங்கி லிமிட்டெட்டின் பலவீனமான நிதியியல் நிலைமை மாற்றியமைக்கப்பட்டது.

(ii) டிஎவ்சிசி வங்கியானது (சிறப்பியல்பு வாய்ந்த வங்கி) மேர்க் வங்கி லிமிட்டெட்டின் 94 சதவீதமான பங்குகளை கையேற்று அதனை டிஎவ்சிசி வங்கியின் துணை நிறுவனமாக்கியதன் மூலம் மேர்க் வங்கி லிமிட்டெட் மீள் மூலதனமயப்படுத்தப்பட்டு மீள வமைக்கப்பட்டது. மீள மூலதனமயமாக்கப் பட்டதன் விளைவாக, மேர்க் வங்கியின் மூலதன நிலைமையானது அதன் மூலதன போதுமை விகிதத்தினை மீள நிறுவும் வகையில் ஆகக் குறைந்த நியதி ஒதுக்கு வீதமான 10 சதவீதத்திற்கும் கூடுதலான விதத்தில் போதுமான மட்டத்திற்கு உயர்த்தப்பட்டது. மேர்க் வங்கியின் பணிப்பாளர் சபையும் டிஎவ்சிசி வங்கிக்கு போதியளவு பிரதிநிதித்துவம் வழங்கும் விதத்தில் மாற்றியமைக்கப்பட்டது. பின்னர் மேர்க் வங்கியின் கம்பனி பெயரானது டிஎவ்சிசி வர்தன வங்கி லிமிட்டெட் என மாற்றப்பட்டது. மீளமைக்கப்பட்ட நேரத்தில் 3 கிளைகளூடாக மேற்கொள்ளப்பட்டு வந்த இதன் தொழிற்பாடுகள் டிஎவ்சிசி வங்கியின் 4 கிளைகள் அமைந்துள்ள பணிமனைகளில் நிறுவப்பட்ட மேலும் 4 கிளைகள் மூலம் விரிவாக்கப்பட்டது.

## பிரமுக சேமிப்பு மற்றும் அபிவிருத்தி வங்கி லிமிட்டெட்டின் பிணக்கிற்கு தீர்வுகாணல்

2002 ஒத்தோபரில் பிரமுக சேமிப்பு மற்றும் அபிவிருத்தி வங்கி லிமிட்டெட்டின் வியாபாரம் இடைநிறுத்தப்பட்டதனையும் அதனைத் தொடர்ந்து நிகழ்ந்த சம்பவங்களையும் தொடர்ந்து, நாணயச்சபை பிரமுக சேமிப்பு மற்றும் அபிவிருத்தி வங்கியின் வங்கித்தொழில் உரிமத்தினை இரத்துச்செய்து, நாணயவிதிச் சட்டத்தின் ஏற்பாட்டு நியதிகளின்படி பிரமுக சேமிப்பு வங்கியின் தொழிற்பாடுகளை முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு வங்கி மேற்பார்வைப் பணிப்பாளருக்கு கட்டளையிடப்பட்டது. இத்தீர்மானமானது 2002 திசெம்பர் 18ஆம் நாளன்று பிரமுக சேமிப்பு மற்றும் அபிவிருத்தி வங்கிக்கு அறிவிக்கப்பட்டது.

இதனையடுத்து வங்கியை ஒடுக்கிவிடுவதற்கும் உரிமத்தினை ரத்துச் செய்வதற்குமான நாணயச் சபையின் தீர்மானத்தினை எதிர்த்து 5 நீதிமன்ற வழக்குகள் வைப்பாளர் குழுக்களினாலும், பிரமுக சேமிப்பு அபிவிருத்தி வங்கியின் முகாமையினாலும் மேன்முறையீட்டு நீதிமன்றில் தாக்கம் செய்யப்பட்டது. மேன்முறையீட்டு நீதிமன்றம் நாணச்சபையின் தீர்மானத்திற்கு எழுத்திலான தடையுத்தரவினைப் பிறப்பித்தது. மேலும் நீதிமன்றம் பிரமுக சேமிப்பு மற்றும் அபிவிருத்தி வங்கி வியாபாரத்தினை மீண்டும் தொடங்குவதற்கான சாத்தியத்தினைப் பரிசீலிப்பதற்கு நாணயச்சபையின் மீது நீதிமன்ற ஆணையைக் கொண்ட உத்தரவினை வழங்கியது.

மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தீர்ப்பிற்கெதிராக 2003 யூலை 3ஆம் நாளன்று மத்திய வங்கி உயர்நீதிமன்றத்தில் சிறப்பு விண்ணப்பமொன்றைதாக்கல் செய்தது. எனினும், உயர்நீதிமன்றத்தின் ஆலோசனையின் பேரில் பிரமுக சேமிப்பு மற்றும் அபிவிருத்தி வங்கி மீண்டும் வியாபாரத்தினை தொடங்குவதற்கான சாத்தியத்தினை மேலும் பரிசீலிப்பதற்கு மத்திய வங்கி உடன்பட்டது.

உயர்நீதிமன்றத்தில் காணப்பட்ட உடன்பாட்டிற்கு வலுவளிக்கும் பொருட்டு, நாணயச்சபை பிரமுக சேமிப்பு மற்றும் அபிவிருத்தி வங்கியின் வியாபாரத்தினை 2003 யூலை 22ஆம் நாளன்று மீண்டும் இடைநிறுத்தியது. அதன் பின்னர் மத்திய வங்கி 2003ஆம் ஆண்டின் எஞ்சிய பகுதியில் பிரமுக சேமிப்பு மற்றும் அபிவிருத்தி வங்கியின் வியாபாரத்தினை மீண்டும் தொடங்குவதற்கான சாத்தியத்தினை கீழே குறித்துக்காட்டப்பட்டவாறு பரிசீலனைக்கெடுத்தது.

2003 ஒகத்து 13ஆம் நாளன்று மத்திய வங்கி பிரமுக சேமிப்பு மற்றும் அபிவிருத்தி வங்கியினைப்

பிரதிநிதித்துவப்படுத்தும் விதமாக 2003 நவெம்பரில் மீள மாற்றியமைக்கப்பட்டது. 2002ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க நாணயவிதிச் திருத்தச்சட்டத்தின் (2002 திசெம்பர் 17ஆம் நாளன்று உறுதிப்படுத்தப்பட்டது) படி மத்திய வங்கி இலங்கையின் நாணய, நிதியியல் மற்றும் கொடுப்பனவு முறை என்பனவற்றின் நிருவாகம், மேற்பார்வை மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தப்படுத்தல் என்பவற்றுக்கு பொறுப்பாகவுள்ளதுடன் மத்திய வங்கியின் இரு குறிக்கோள்களில் ஒன்றாக நிதியியல் முறையின் உறுதிப்பாடு இருக்கின்றது. ஆகவே, நிதியியல் உறுதிப்பாட்டுக்குழுவின் தொழிற்பாடு, மத்திய வங்கி அதன் பொறுப்புக்களையும், குறிக்கோள்களையும் நிறை வேற்றுவதற்கான அனுகூலங்களை வழங்குவதுடன் நேர டியாக தொடர்புபட்டிருக்கிறது. இதன்படி, நிதியியல் உறுதிப்பாட்டுக்குழு தொடர்பான நியதிகள் முதலாவது ஆண்டில் வருடாந்த (i) நிதியியல் உறுதிப்பாட்டு அறிக்கையையும் பின்னர் அரையாண்டு அறிக்கையையும் தயாரித்தல் மற்றும் முதலாவது அறிக்கை 2004 யூன் இறுதியளவில் நிறைவு செய்யப்பட வேண்டும், (ii) நாட்டின் முக்கிய நிதியியல் முறையின் உறுதிப்பாடின்மைக்கு இட்டுச்செல்லும் இடர்நேர்வுகளையும் பாதிப்பிற்குள்ளாகக்கூடிய தன்மைகளையும் மதிப்பிடல், (iii) நிதியியல் முறையின் உறுதிப்பாட்டினைக் கண்காணித்தல் அத்துடன் (iv) காலாந்திர அறிக்கைககளை ஆளுநருக்கும் நாணயச்சபைக்கும் சமர்ப்பித்தல் மற்றும் நிதியியல் முறை உறுதிப்பாட்டினை மேம்படுத்துவதற்குத் தேவையான கொள்கைகளை விதந்துரைத்தல் என்பனவற்றை மேலும் நிதியியல் உறுதிப்பாட்டுக் குழுவானது பொருத்தமான ஆராய்ச்சி தொடர்பான ஆய்வுகள் நடத்துவதற்காகவும், நிதியியல் உறுதிப்பாட்டு அறிக்கைகளைத் தயாரிப் பதற்காகவும், தேவையான விதந்துரைப்புக்களைச் செய்தல் மற்றும் குழுவின் துறைசார் நிபுணர்களாக தொழிற்படல் என்பனவற்றுக்காக தொடர்பான திணைக்கங்களிலிருந்து 12 உறுப்பினர்களை உள்ளடக்கிய ஆய்வுக் குழுவொன்றினை நியமித்தது. 2003 இறுதியில் முதலாவது நிதியியல் உறுதிப்பாட்டு அறிக்கைக்கான மேலெழுந்தவாரியாக விடயங்கள் இறுதியாக்கப் பட்டதுடன் இது மத்திய வங்கியினால் ஒழுங்குமுறைப் படுத்தப்பட்டு மேற்பார்வை செய்யப்படும் நிறுவனங்களினால் உள்ளடக்கப்படும் துறைகள் அனைத்து முறைசார்ந்த முக்கிய நிறுவனங்களைக் கொண்டுள்ளன என்ற அடிப்படையில் அவற்றின் மீதான பகுப்பாய்வுகளுக்கு மட்டுமே முக்கியமாக மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. நிதியியல் உறுதிப்பாட்டு அறிக்கைக்கு தேவையான தகவல்களைத் திரட்டுவதில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் அடையப்பட்டுள்ளது. வங்கி மேற்பார்வைத் திணைக்களத்தில் நிதியியல் உறுதிப்பாட்டிற்கான பிரத்தியேக பிரிவொன்றை ஏற்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது. அத்துடன் இலங்கையில் நிதியியல் உறதிப்பாட்டுக் கட்டமைப்பினை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கு ப.நா.நிதியம் மற்றும் சுவேறியஸ் றிஸ்க் வங்கி (சுவீடன் மத்திய வங்கி) என்பனவற்றின் ஆலோசனைப் பணிகள் மூலமாக கிடைக்கும் தொழில்நுட்ப உதவிகள் எதிர்பார்க்கப் படுகின்றன.

## நிதிநிறுவனங்கள் குறித்த பொதுமக்களின் விழிப்புணர்வு

பொதுமக்களிடமிருந்து வைப்புக்களை ஏற்றுக் கொள்வதற்கு சட்டரீதியாக அனுமதிக்கப்பட்ட மத்திய வங்கிகளின் உரிமம் வழங்கப்பட்ட வங்கிகளின் வட்டி வீதங்கள் மற்றும் பணிக்கட்டணங்கள்/அறவீடுகள் பற்றி பொதுமக்களின் சந்தை விழிப்புணர்வினை அதிகரிக்கும் நோக்குடன் 2003இல் வங்கி மேற்பார்வைத் திணைக்களம் பின்வரும் பத்திரிகை விளம்பரங்களை வெளியிட்டது.

(i) 2003 மே 18ஆம் நாளிலிருந்து 31ஆம் நாள் வரையான காலப்பகுதியில் "வங்கிகளின் வட்டி வீதங்கள் மற்றும் கட்டணங்களுக்கானதொரு வழிகாட்டி" என்பது தொடர்பான ஒரு பக்க விளம்பரமொன்று வெளியிடப்பட்டது. இவ்வெளியீட்டில் 2003 ஏப்பிறல் 28ஆம் நாளன்று உள்ளவாறு வங்கிகளின் படியான கடன்வழங்கல் வீதங்கள் மற்றும் வைப்பு வீதங்கள் பற்றிய தகவல்களும், 2003 மாச்சு இறுதியில் உள்ளவாறு வர்த்தக வங்கித் தொழில்துறையின் கட்டணங்கள் மற்றும் அறவீடுகளின் மட்டங்களும் வெளியிடப்பட்டன. நாட்டில் காணப்படும் கடன்வழங்கல் மற்றும் வைப்பு வீதங்களுக் கிடையிலான வேறுபாடு பற்றி பொதுமக்களுக்கு மேலும் தகவல்கள் வழங்கப்பட்டதுடன் சந்தைத் சூழலுக்கேற்ப சிறந்த வட்டி வீதங்களைப் பெற்றுக்கொள்ள வங்கிகளுடன் பேச்சுவார்த்தை களிலீடுபடுமாறும் அறிவுறுத்தப்பட்டனர்.

(ii) 2003 திசெம்பர் 17ஆம் நாளிலிருந்து 22ஆம் நாள் வரையான காலப்பகுதியில் "பொதுமக்களிடமிருந்து வைப்புக்களை ஏற்றுக்கொள்ள சட்டரீதியாக அனுமதிக்கப்பட்ட நிறுவனங்கள்" என்ற தலைப்பில் அரைப்பக்க பத்திரிகை விளம்பரமொன்று வெளியிடப்பட்டது. இவ்வெளியீட்டின் நோக்கம் பொதுமக்கள் அவர்களின் வைப்புக்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்தும் விதத்தில் அவர்களை விழிப்பாக இருக்கச்செய்வதற்கு உதவுவதேயாகும். இது பொதுமக்களிடமிருந்து வைப்புக்களை ஏற்றுக்கொள்வதற்கு மத்திய வங்கியினால் உரிமம் வழங்கப்பட்ட வங்கிகளினதும்,

நிதிக்கம்பனிகளினதும் பெயர்ப்பட்டியலைக் கொண்டிருந்தவேளையில் பொதுமக்கள் வைப்புச் செய்வதற்கான எந்த ஒரு நிறுவனத்தின் பெயரையும் விதந்துரைக்கவில்லை. முதலீடுகளைச் செய்வதனைப் பொறுத்தவரையில் பொதுமக்கள் தாம் சுயமாகவே அவற்றைத் தெரிவு செய்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டனர். எனினும், இப் பிரசுரம் தெரிவுகளை மேற்கொள்வதில் பொதுமக்களுக்கு உதவக்கூடிய வழிகாட்டல்களைக் கொண்டிருந்தது.

மேலே குறிப்பிடப்பட்ட பிரசுரங்கள் மத்திய வங்கியின் வெப் தளத்திலும் கிடைக்கச் செய்யப்பட்டன.

## 2003 இல் வங்கி மேற்பார்வைத் திணைக்களத்தில் இடம்பெற்ற நிறுவன ரீதியான அபிவிருத்தி

2003ஆம் ஆண்டில், வங்கி மேற்பார்வைத் திணைக்களம் ஆலோசனைப் பணிகள், பயிற்சி வசதிகள் போன்றவற்றினூடாக அதன் தொழிற்பாடுகளை வலுப்படுத்திக் கொள்வதற்கு குறிப்பிடத்தக்களவு மூலவளங்களைப் பெற்றுக்கொண்டது. 2003 இறுதியில் மொத்த அலுவலர்களின் எண்ணிக்கை 2002 இறுதியில் காணப்பட்ட 61 உடன் ஒப்பிடுகையில் 65 ஆகக் காணப்பட்டது. 2003 யூனில், உலக வங்கியினால் நிதியிடப்பட்ட மத்திய வங்கியை வலுப்படுத்துகின்ற செயற்றிட்டத்தின் கீழ் வதியும் வங்கி மேற்பார்வை ஆலோசனையாளரின் பணிகள் ஆரம்பத்தில் 18 மாதங்களுக்குப் பெற்றுக் கொள்ளப்பட்டது. ஆலோசனையாளர் இடர்நேர்வினை முக்கிய கவனத்தில் கொண்ட தலப்பரீட்சிப்புக்களைத் தரமுயர்த்துவதிலும் பரீட்சிப்பினை மேற்கொள்ளும் அலுவலர்களுக்கு பயிற்சியளிப்பதிலும் முக்கியமாக ஈடுபட்டிருந்தார். ப.நா.நிதியமும் வங்கி மேற்பார்வைத் திணைக்களத்தின் உள்ளகச் செயல்முறைகளை முன்னேற்றுவதற்கான மதியுரையினை வழங்குவதற்காக இரு ஆலோசனையாளர்களின் பணிகளை மூன்று தடவைகள் ஒவ்வொன்றும் 3-6 வரையான காலப்பகுதிகளை உள்ளடக்கிய காலப்பகுதிக்கு வழங்கியது. அதேவேளை அலுவலர்களுக்கு பயிற்சியளிக்கும் பொருட்டு சுவீடன் பன்னாட்டு அபிவிருத்தி முகவரின் சுவீடிஸ் அலுவலர் பரிமாற்றத் திட்டத்தின்கீழ் சுவீடன் நிதியியல் பணிகள் அதிகாரசபையிலிருந்தான இரு அலுவலர்களின் பணிகள் ஒரு வாரத்திற்கும் பெற்றுக்கொள்ளப்பட்டன. மேலும் 2003இல் வங்கி மேற்பார்வைத் திணைக்களத்திற்கு புதிதாக பதவிலியமர்த்தப்பட்ட 17 புதிய உயர் பதவி அலுவலர்களுக்கு பயிற்சி வழங்குவதற்காக முன்னாள் வங்கி மேற்பார்வைப் பணிப்பாளரின் பணிகளும் 2003 ஒத்தோபரிலிருந்து ஓராண்டிற்குக் பெற்றுக்கொள்ளப்பட்டன.

## நாணய வெளியீடு

இலங்கையில் நாணயத்தினை வெளியிடுகின்ற அதிகாரம் படைத்த ஒரே நிறுவனமாக விளங்கும் இலங்கை மத்திய வங்கி 2003ஆம் ஆண்டுப்பகுதியில் உள்நாட்டுக் கொடுக்கல் வாங்கல்களின் பயன்பாட்டிற்காக சட்டரீதியான நாணயத்தினை வழங்குகின்ற அதன் தொழிற்பாட்டினை மேற்கொண்டது. 2003ஆம் ஆண்டின் இறுதியில் சுற்றோட்டத்திலிருந்த நாணயத்தாள்களினதும் குத்திகளினதும் அளவு 2002 இறுதியில் காணப்பட்ட ரூ.88,308 மில்லியனுக்கெதிராக ரூ.98,785 மில்லியனாகக் காணப்பட்டது. இது நாட்டின் நாணயச் சுற்றோட்டத்தில் பதிவு செய்யப்பட்ட முன்னெப்பொழுதுமில்லாத உயர்ந்த அளவாகும். நாணயத்திற்குத் தொடர்ந்தும் உயர்ந்த கேள்வி காணப்பட்டமைக்கு சமாதான செயற்பாட்டினைத் தொடர்ந்து அதிகரித்த கொடுக்கல் வாங்கல்களே காரணமாகும். சுற்றோட்டத்திலுள்ள தாள்கள் சுற்றோட்டத்திலுள்ள மொத்த நாணயத்தில் 96.5 சதவீதத்தினை உள்ளடக்கியிருந்தன. இவ்வாண்டில் வர்த்தக வங்கிகளுக்கு வழங்கப்பட்ட நாணயக் குத்திகளின் எண்ணிக்கை 103.4 மில்லியன் ஆகவும் அதன் மொத்தப் பெறுமதி ரூ.264.4 மில்லியனாகவும் காணப்பட்டது. ஒப்பிடுகையில் முன்னைய ஆண்டில் இதன் எண்ணிக்கை 76.7 மில்லியனாகவும் மொத்தப் பெறுமதி ரூ.251.6 மில்லியனாகவும் காணப்பட்டது. 2000 - 2003 காலப்பகுதியில் வர்த்தக வங்கிகளுக்கு வழங்கப்பட்ட குத்திகளின் அளவும் பெறுமதியும் அட்டவணை II.I இல் தரப்பட்டுள்ளன.

இலங்கையிலுள்ள சியாமோபாளி மகா நிக்காயவின் 250ஆவது ஆண்டு நிறைவினை நினைவு கூருமுகமாக ரூபா ஐந்து இனத்தினைக் கொண்ட இரண்டு ஞாபகார்த்த சுற்றோட்டக்குத்திகளை 2003 யூலையில் வழங்கியது. மல்வத்தை மற்றும் அஸ்கிரிய பீடாதிபதிகளின் வேண்டு கோளையடுத்து நாணயங்களின் முன்புறத்தில் முறையே வெலிவிற்ற சிறி சறனங்கார சங்கராஜ மாகிமி மற்றும் சியாம (தாய்லாந்து) சேர்ந்த பிறவகற உபாலி நகிமி என்போரது உருவங்கள் பொறிக்கப்பட்டிருந்தன. இரண்டு குத்திகளும் நிக்கல் கலந்த செம்பினால் வார்க்கப்பட்டிருந்ததுடன் சரியான அளவிலும் நிறையிலும் தற்போதுள்ள ஐந்து ரூபாக் குத்தியினை ஒத்ததாகவே காணப்பட்டது.

போலி நாணயத்தாள்களைத் தயாரிக்கும் முயற்சியைக் கருத்திற்கொண்டு, 3 மி.மீற்றர் மற்றும் 4 மி. மீற்றர் அகலமான இசுடார் வைட் என அழைக்கப்படும் பாதுகாப்பு இழையங்கள் முறையே ரூ.500 மற்றும் 1000 நாணயத்தாள்களில் பொறிக்கப்பட்டதன்

## அட்டவணை II.I
### வர்த்தக வங்கிகளுக்கு வழங்கப்பட்ட குத்திகளின் அளவும் பெறுமதியும் 2000– 2003
*அளவு (குத்திகளின் எண்ணிக்கை ஆயிரத்தில்)*

| ஆண்டு | ரூபா.10 | ரூபா.5 | ரூபா.2 | ரூபா.1 | 50 சதம் | 25 சதம் | 10 சதம் | 5 சதம் | 2 சதம் | 1 சதம் | மொ.அளவு | மொத்தப் பெறுமதி (ரூ.000) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 2000 | 10,693 | 15,413 | 16,186 | 4,876 | 6,936 | 4,320 | 1,955 | 1,287 | 75 | 430 | 62,171 | 226,057 |
| 2001 | 6,136 | 20,726 | 22,668 | 19,328 | 4,286 | 5,996 | 2,380 | 399 | 60 | 205 | 82,184 | 233,557 |
| 2002 | 10,965 | 16,820 | 19,968 | 11,991 | 8,466 | 5,752 | 1,770 | 396 | 185 | 425 | 76,738 | 251,553 |
| 2003 | 5,735 | 23,512 | 27,187 | 29,160 | 8,276 | 5,964 | 2,905 | 294 | 195 | 220 | 103,448 | 264,384 |

*மூலம்: இலங்கை மத்திய வங்கி.*

## அட்டவணை II.2
### விற்பனைக்குக் கிடைக்கத்தக்கதாகவுள்ள ஞாபகார்த்த நாணயக் குத்திகளும் தாள்களும்

| விடய எண். | விபரணம் | வழங்கப் பட்ட ஆண்டு | முகப்புப் பெறுமதி (ரூபா) | உலோகம் | விற்பனை விலை (ரூபா) |
|---|---|---|---|---|---|
| 1. | இலங்கை மத்திய வங்கியின் 40ஆவது ஆண்டு நிறைவு (உறை) | 1990 | 500 | வெள்ளி | 600 |
| 2. | 5ஆவது தென் ஆசியா விளையாட்டுப் போட்டி (பாதுகாப்பான பெட்டி) | 1991 | 500 | 12 கரட் தங்கம் | 600 |
| 3. | 5ஆவது தென் ஆசியா விளையாட்டுப் போட்டி (பாதுகாப்பான பெட்டி) | 1991 | 100 | வெள்ளி | 200 |
| 4. | சனாதிபதி ஆர். பிரேமதாசவின் மூன்றாவது ஆண்டுநிறைவு (உறை) | 1992 | 1 | செப்பு/ நிக்கல் | 250 |
| 5. | 2300 மிகுந்து ஜெயந்தி (பாதுகாப்புப் பெட்டி) | 1993 | 500 | வெள்ளி | 700 |
| 6. | 2300 மிகுந்து ஜெயந்தி (உறை) | 1993 | 500 | வெள்ளி | 500 |
| 7. | ஐக்கிய நாடுகள் அமைப்பின் 50ஆவது ஆண்டு நிறைவு (உறை) | 1995 | 5 | நிக்கல்/ செம்பு | 200 |
| 8. | இலங்கை சுதந்திரமடைந்த 50ஆவது ஆண்டு நிறைவு (பாதுகாப்புப் பெட்டி) | 1998 | 5,000 | 22 கரட் தங்கம் | 8,000 |
| 9. | இலங்கை சுதந்திரமடைந்த 50ஆவது ஆண்டு நிறைவு (பாதுகாப்புப் பெட்டி) | 1998 | 1,000 | வெள்ளி | 1,200 |
| 10. | இலங்கை சுதந்திரமடைந்த 50ஆவது ஆண்டு நிறைவு (தாள் மடிப்பு) | 1998 | 200 | பொலிமர் | 400 |
| 11. | 1996 கிரிக்கெட் உலக கிண்ணம் (பாதுகாப்புப் பெட்டி) | 1999 | 1,000 | வெள்ளி | 1,200 |
| 12. | இலங்கை இராணுவத்தின் 50ஆவது ஆண்டு நிறைவு (பாதுகாப்புப் பெட்டி) | 1999 | 1 | உருக்கு | 400 |
| 13. | இலங்கை இராணுவத்தின் 50ஆவது ஆண்டு நிறைவு சிறப்புவாய்ந்த சுற்றோட்டத்திற்கு விடப்படாதவை (பாதுகாப்புப் பெட்டி) | 1999 | 1 | உருக்கு | 150 |
| 14. | இலங்கை மத்திய வங்கியின் 50ஆவது ஆண்டு நிறைவு (பாதுகாப்புப் பெட்டி) | 2000 | 1,000 | வெள்ளி | 1,200 |
| 15. | இலங்கைக் கடற்படையின் 50ஆவது ஆண்டு நிறைவு (பாதுகாப்புப் பெட்டி) | 2000 | 1 | செப்பு/ நிக்கல் | 500 |
| 16. | இலங்கைக் கடற்படையின் 50ஆவது ஆண்டு நிறைவு சிறப்புவாய்ந்த சுற்றோட்டத்திற்கு விடப்படாதவை (பாதுகாப்புப் பெட்டி) | 2000 | 1 | உருக்கு | 200 |
| 17. | சியாமோபாலி மகா நிக்காய (தாள் மடிப்பு) | 2003 | 5x10 (குத்தி) | செம்பும் நிக்கல் | 100 |

மூலம் 2003 மார்ச்சில் உயர்ந்தளவு பாதுகாப்புப் பண்புகள் அறிமுகப்படுத்தப்பட்டன. போலி நாணயத் தாள்களைக் கட்டுப்படுத்துவதற்கும் அவற்றை மிகக் குறைப்பதற்குமாக திணைக்களம், குற்றவியல் புலனாய்வுத் திணைக்களத்தின் போலி நாணயத்தாள்கள் பணியகத்துடன் மிக நெருக்கமான ஒத்துழைப்புடன் தொடர்ந்தும் பணியாற்றியது. நாணயவிதிச் சட்டத்தினால் கேட்டுக் கொள்ளப்பட்டவாறு நாட்டில் கண்டுபிடிக்கப்பட்ட மத்திய வங்கியின் உறுதிப் படுத்தலுக்காக சமர்ப்பிக்கப்பட்ட போலி நாணயத் தாள்களின் எண்ணிக்கையானது 2002இல் சுற்றோட்டத்திலிருந்த ஒவ்வொரு மில்லியன் தாள்களுக்கும் 1.8 தாள்கள் என்ற அளவிலிருந்து 2003இல் சுற்றோட்டத்திலிருந்த ஒவ்வொரு மில்லியன் தாள்களுக்கும் 1.75 தாள்கள் என்ற அளவிற்கு சிறிதளவால் வீழ்ச்சியடைந்தது. இவ்வாண்டுக் காலத்தில் இரண்டு நாணய சரிபார்ப்பு கணக்கிடல் மற்றும் பிரித்தலை மேற்கொள்ளும் பொறிகள் 135.9 மில்லியன் கொண்ட பாவிக்கக்கூடிய மற்றும் பாவிக்க முடியாத நாணயத் தாள்களை செய்முறைப்படுத்தின.

திணைக்களம் நாணய அறிவியலாளர்களுக்கும் அதனை சேகரிப்பவர்களுக்கும் ஞாபகார்த்த நாணயக் குத்திகளைத் தொடர்ந்தும் வழங்கி வந்தது. இலங்கை மத்திய வங்கியில் கிடைக்கத்தக்கதாகவுள்ள அனைத்து ஞாபகார்த்த தாள்களினதும் குத்திகளினதும் விபரங்கள் அவை விற்கப்படுகின்ற விலைகளுடன் அட்டவணை II.2இல் தரப்பட்டுள்ளன. நாணயக் குத்திகளைச் சேகரிக்கின்ற நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 2003இல் மத்திய வங்கியினால் ரூ.53.0 மில்லியன் முகப்புப் பெறுமதியினைக் கொண்ட 10.0 மில்லியன் நாணயக் குத்திகள் சமய வழிபாட்டுத் தலங்களிலிருந்து சேகரிக்கப்பட்டன.

போலி நாணயத் தாள்களை இனங்காண்பது மற்றும் சுத்தமான நாணயத்தாள் கொள்கை என்பன தொடர்பாக வங்கி அலுவலர்கள், பள்ளிக்கூடப் பிள்ளைகள், அரசாங்க ஊழியர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோருக்கு பகிரங்க விரிவுரைகள் மற்றும் மின்னியல் ஊடகங்கள் என்பனவற்றினூடாக தொடர்ந்தும் விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களை நடத்தியது. நாட்டின் சில பகுதிகளில் புதிய நாணயத் தாள்களுக்கு காணப்பட்ட பற்றாக் குறையைக் கருத்திற்கொண்டு மத்தியவங்கி, வங்கிகளை பாவிக்க முடியாத தாள்களை அவற்றை அழித்து விடுவதற்காக சேகரித்து அனுப்பி வைக்குமாறு அவற்றின் வெளியிடங்களிலுள்ள கிளைகளின் மூலம் புதிய தாள்களை சுற்றோட்டத்திற்கு விடுமாறும் கேட்டுக்கொண்டது.

திணைக்களம் கைத்தொழில் அமைச்சினால் ஒழுங்கு செய்யப்பட்ட பின்வரும் கண்காட்சிகளிலும் பங்கேற்றது.

1. 2003 யூலை 4ஆம் நாளிலிருந்து 6ஆம் நாள்வரை எம்பிலிப்பிட்டியவில் நடத்தப்பட்ட "திறிகமன" கண்காட்சி
2. 2003 செத்தெம்பர் 5ஆம் நாளிலிருந்து 11ஆம் நாள்வரை மாத்தறையில் நடத்தப்பட்ட "யுகதெக்மா" கண்காட்சி
3. 2003 திசெம்பர் 12ஆம் நாளிலிருந்து 22ஆம் நாள்வரை கொழும்பில் நடத்தப்பட்ட "நவதெக்ம" கண்காட்சி

இவ்வனைத்துக் கண்காட்சிகளிலும் மத்திய வங்கியின் கண்காட்சி நிலையமானது பள்ளிக்கூட மாணவர்களினதும் பொது மக்களினதும் மிகுந்த ஆதரவைப் பெற்றிருந்தது. வங்கியின் நாணய தொல் பொருட்காட்சிச்சாலைக்கு இவ்வாண்டில் 4100 இற்கும் அதிகமான மாணவர்களும் பொது மக்களும் வருகை தந்தனர்.

## உள்நாட்டுத் தொழிற்பாடுகள்

உள்நாட்டுத் தொழிற்பாட்டுத் திணைக்களம் முக்கியமாக திறந்த சந்தைத் தொழிற்பாடுகளூடாகவும் நியதி ஒதுக்குத் தேவைப்பாடுகளை நடைமுறைப் படுத்துவதனூடாகவும் வங்கியின் நாணயக்கொள்கை யினை நடைமுறைப்படுத்துவது, மற்றும் வர்த்தக வங்கிக்கும் அரசாங்கத்திற்கும் வங்கியாளராகத் தொழிற்படுத்துவது ஆகிய இரு தொழிற்பாடுகளைத் தொடர்ந்தும் மேற்கொண்டது. மேலும் 2003 செத்தெம்பரில் அறிமுகப்படுத்தப்பட்ட அதேநேர மொத்த தீர்ப்பனவு முறையின் சுமூகமான தொழிற்பாட்டினை உறுதிப்படுத்துவதற்காக, வர்த்தக வங்கிகளுக்கும், முதனிலை வணிகர்களுக்கும் ஒரு நாளுக்குள்ளேயான திரவத்தன்மை வசதிகளை வழங்குகின்ற புதிய பொறுப்பையும் ஏற்றுக்கொண்டது. இவ்வாண்டில், நாணயக் கொள்கைத் தொழிற்பாடுகளின் வினைத்திறனையும் சந்தை சார்ந்த தன்மையினையும் உயர்த்துவதற்காக தீவிரமான திறந்த சந்தைத் தொழிற்பாட்டு முறை அறிமுகப்படுத்தப்பட்ட வேளையில் திணைக்களத்தின் வங்கித்தொழில் தொழிற்பாடுகளுக்காக தன்னியக்கப்படுத்தப்பட்ட பொதுப்பேரட்டு முறையொன்றிற்குள் அதேநேர மொத்த அடிப்படையின் மீது கொடுக்கல்வாங்கல்களை தீர்ப்பனவு செய்வது அறிமுகப்படுத்தப்பட்டது.

### 1. நாணயக்கொள்கையின் நடைமுறைப்படுத்தல்

#### (i) *திறந்த சந்தைத் தொழிற்பாடுகள்*

மத்திய வங்கியின் நாணயக்கொள்கை இலக்குகளை அடைவதற்கு சந்தையின் திரவத் தன்மையினை தீவிரமாக முகாமைப் படுத்துவதற்கு அதனை இயலச்செய்யும் திறந்த சந்தைத் தொழிற்பாடுகளின் புதிய முறையொன்று (மத்திய வங்கியின் ஆண்டறிக்கை 2002இன் சிறப்புக்குறிப்பு எண் 20இனைப் பார்க்கவும்) 2003 மாச்சு 3ஆம் நாளன்று அறிமுகப்படுத்தப்பட்டது. தீவிரமான திறந்த சந்தைத் தொழிற்பாட்டு முறையின் கீழான ஆரம்ப அனுபவங்களும் அறைகூவல்களும் இவ்வாண்டறிக்கையின் சிறப்புக்குறிப்பு எண் 4 இல் தரப்பட்டுள்ளன. இம்முறையின் கீழ், திறந்த சந்தைத் தொழிற்பாடுகள், (அ) மிகையான திரவத்தன்மையினை ஈர்ப்பதற்காக ஒன்றில் மீள்கொள்வனவுக் கொடுக்கல்வாங்கல்களுக்காக அல்லது திரவத்தன்மையில் பற்றாக்குறை காணப்படுமாயின் திரவத்தன்மையினை அதிகரிப்பதற்காக நேர்மாற்றுக் கொடுக்கல் வாங்கல்களுக்காக நாளாந்த ஏலங்களை நடாத்துதல் (ஆ) துணைநில் வசதியின் கீழ் மீள்கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவு வசதிகளை வழங்கல், (இ) நீண்டகால அடிப்படையில் திரவத்தன்மையினை ஈர்ப்பதற்காக அல்லது அதிகரிப்பதற்காக மத்திய வங்கியின் தற்றுணிபின்படி திறைசேரி உண்டியல்களின் கிரய விற்பனைகள் அல்லது திறைசேரி உண்டியல்கள் (முதலாந்தர அல்லது இரண்டாந்தரச் சந்தைகளில்) திறைசேரி முறிகள் (இரண்டாந்தரச் சந்தையில் மாத்திரம்) இரண்டினதும் கொள்வனவுகள் ஆகிய பல தொழிற்பாடுகளை உள்ளடக்கியுள்ளன. கடந்த காலத்தினைப் போன்றே திறைசேரி உண்டியல் மாத்திரம் மீள்கொள்வனவு கொடுக்கல் வாங்கல்களுக்கான பிணையாகப் பயன்

புனரமைப்பு செய்வதற்கு ஆர்வம் கொண்டவர்களிடமிருந்து முன்மொழிவுகளைக் கோரி சிங்களம், ஆங்கிலம் மற்றும் தமிழ் மொழிகளில் பத்திரிகை அறிவித்தல்களை வெளியிட்டது. ஆரம்பத்தில் ஆறு சாரார் விருப்பங்களைத் தெரிவித்தபோதும் இறுதியில் மத்திய வங்கி பின்வருவோரிடமிருந்து மட்டுமே கருத்துக்களை/ முன்மொழிவுகளைப் பெற்றுக்கொண்டது.

(அ) பிரமுக சேமிப்பு மற்றும் அபிவிருத்தி வங்கியின் முகாமைத்துவம்.

(ஆ) பிரமுக வங்கியின் மீளமைத்தல்குழு.

(இ) ஏசியா கப்பிட்டல் லிமிட்டெட்டின் தலைமையிலான முதலீட்டாளர் அமைப்பொன்று.

மத்திய வங்கி விருப்ப ஆவணங்களை/ முன்மொழிவுகளைச் சமர்ப்பித்த சாராருடன் கலந்துரையாடல்களை நடத்தியது. மேற்குறிப்பிட்ட விருப்ப ஆவணங்களை/ முன்மொழிவுகளையும் இந்த நோக்கத்திற்காக மத்திய வங்கியின் ஆலோசனையாளராக நியமிக்கப்பட்ட எர்னஸ்ட் அன்ட் யங்கின் விதந்துரைப்புக்களையும் கவனத்திலெடுத்து பரிசீலித்ததன் பின்னர் நாணயச்சபை சிறந்த முறையில் காணப்பட்ட ஏசியன் கப்பிட்டல் நிறுவனத்தின் தலைமையிலான அமைப்பினால் செய்யப்பட்ட ஒரு முன்மொழிவினை மட்டும் மேற்கொண்டு பரிசீலிப்பதற்கு தீர்மானித்தது. பிரமுக சேமிப்பு மற்றும் அபிவிருத்தி வங்கி புனரமைப்புச் செய்யப்பட வேண்டுமாயின் மிக இன்றியமையாததாகக் கருதப்படும் மூலதனத்தை உள்ளீடு செய்வதற்கான உறுதியான கடப்பாட்டினை இந்த முன்மொழிவு மட்டுமே கொண்டிருந்தது என்பது குறிப்பாக கவனத்தில் கொள்ளப்பட வேண்டியதாகும்.

ஏசியா கப்பிட்டல் முன்மொழிவுகளைப், பொறுத்தவரையில் இதில் குறிப்பிட்ட சில கரிசனைக்குரிய விடயங்களும் முன்மொழிவுகளின் நடைமுறைப்படுத்தலானது பல முன் நிபந்தனைகளை நிறைவேற்றுவதுடன் இணைந்துள்ளது என்ற உண்மையினையும் நாணயச்சபையானது கருத்திற் கொண்டபோதும், முன்மொழிவின் சாத்தியமான தன்மைகளை முழுமையாகக் நிராகரித்து விட முடியாது. எனவே நாணயச்சபையானது பிரமுக சேமிப்பு வங்கியினை ஒடுக்கிவிடுகின்றது தான் ஒரே வழி என்ற சாத்திய தன்மைக்கு எதிராக இந்த சாத்தியமான தன்மையினை பரீட்சிப்பதற்கு தீர்மானித்தது. இத்தகைய முடிவிற்கு வருவதற்கு, தற்போதைய மதிப்பீட்டின்படி ஒடுக்கிவிடுவதன் காரணமாக இறுதியில் வைப்பாளர்கள் மூலதன வைப்பில் ஏறத்தாழ 60 சதவீதமான பங்கைப் பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்கின்றபோதும் பிரமுக சேமிப்பு அபிவிருத்தி வங்கியின் நாணயச்சந்தை உண்டியல்களில் நிதியங்களை முதலீடு செய்த மற்றைய கடன் கொடுத்தோர் போன்றோர் ஒடுக்கிவிடும் செயற்பாட்டில் வைப்பாளர்களாகக் கருதப்பட மாட்டார்களாகையால் ஒடுக்கிவிடும் செயற்பாட்டில் அவர்கள் எந்த ஒரு மீள்கொடுப்பனவினையும் பெறத்தகுதிபெற மாட்டார்கள் என்ற உண்மையை நாணயச்சபை உணர்ந்தமையே காரணமாகும்.

ஏசியா கப்பிட்டலானது, தொடர்ந்தும் வியாபாரத்தினை முன்னெடுத்துச்செல்வதனை இயலச்செய்யும் விதத்தில் பிரமுக சேமிப்பு மற்றும் அபிவிருத்தி வங்கியின் மீளமைப்பினை அவர்கள் மேற்கொள்ள முடியுமா என்பதனையிட்டு இறுதியாக தீர்மானிப்பதற்கு மிகுந்த சிரத்தையுடன் ஈடுபட்டு வருகின்றவிடத்து, நாயணச்சபையானது சில நிபந்தனைகளுக்குட்பட்டு நாணயவிதிச் சட்டத்தின் பிரிவு 30(3) இன் நியதிகளின்படி 2004 சனவரி 22ஆம் நாளிலிருந்து வரையறுக்கப்பட்ட அளவிலான வியாபாரங்களைத் தொடங்குவதற்கு பிரமுக சேமிப்பு மற்றும் அபிவிருத்தி வங்கியினை அனுமதிப்பதற்கு தீர்மானித்தது. ஏசியா கப்பிட்டல் கூர்மையான ஆய்வினை நிறைவு செய்ததன் பின்னர் 2004 யூலை 22 ஆம் நாளன்று இவ்விடயம் தொடர்பாக மேலும் தீர்மானம் எடுக்கப்படும்.

## வைப்புக் காப்புறுதித் திட்டத்தினை நிருவகித்தல்

1987இல் தொடங்கிய வைப்புக் காப்புறுதித் திட்டத்தினை வங்கி மேற்பார்வைத் திணைக்களம் தொடர்ந்தும் நிருவகித்தது. மத்திய வங்கியினால் உரிமம் வழங்கப்பட்ட வங்கித்தொழில் நிறுவனங்களுக்கும், 1972ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் கீழ் வங்கித்தொழில் நடவடிக்கைகளில் ஈடுபட்டுவரும் பதிவு செய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கங்களுக்கும் இந்த சுயவிருப்பிலான காப்புறுதித் திட்டம் வழங்கப்பட்டுள்ளது. தற்பொழுது, மூன்று பல நோக்குக்கூட்டுறவுச் சங்கங்கள் மட்டுமே அவற்றின் கிராமிய வங்கிகளினது வைப்புப் பொறுப்புக்கள் தொடர்பாக இத்திட்டத்தின்கீழ் காப்புறுதி வசதியைப் பெற்றுக்கொண்டுள்ளன. காலாண்டொன்றிற்கு ஒவ்வொரு ரூ.100 இற்கும் ரூ.3.75 சதம் காப்புறுதிக்கட்டணமாகச் செலுத்தப்பட வேண்டியிருந்ததுடன் 2003இல் காப்புறுதிக்கட்டணமாக வைப்புக் காப்புறுதி நிதியத்திற்கு செலுத்தப்பட்ட தொகை ரூ.1.3 மில்லியனாகக் காணப்பட்டது. 1997இல் மத்திய வங்கியினால் ஒதுக்கப்பட்ட ரூ.50 மில்லியனையும் சேர்த்து 2003 திசெம்பர் 31ஆம் நாளன்று நிதியத்தில் காணப்பட்ட தொகை ரூ.158.6 மில்லியனாகும். இந்நிதிகள் ரூ.167.3 மில்லியன் முகப்புப் பெறுமதி கொண்ட திறைசேரி உண்டியல்களில் முதலீடு செய்யப்பட்டன.

## வங்கிகளின் முதன்மை நிறைவேற்று அலுவலர்களுடனான கூட்டங்கள்

உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் என்பனவற்றின் முதன்மை நிறைவேற்று அலுவலர்களுடனான மாதாந்த கூட்டங்களை ஆளுநரின் தலைமையில் வங்கி மேற்பார்வைத் திணைக்களம் தொடர்ந்தும் ஒழுங்குசெய்தது. இக்கூட்டங்கள் வங்கித்தொழில் தொழிற்பாடுகள் தொடர்பான விடயங்கள், கொள்கைகள் பற்றிய கருத்துக்களை பரிமாறிக்கொள்வதற்கான ஒரு அரங்கமாக விளங்குவதுடன் இது மத்திய வங்கிக்கும் ஏனைய வங்கிகளுக்குமிடையில் நெருங்கிய உறவுகளைக் கட்டியெழுப்புவதற்கும் உதவுகின்றது. கடன்கள் மீதான சொத்து ஈட்டுப்பெறுமதியின் மீது படிப்படியான கழிவிடலைப் பிரயோகிப்பதன் மூலம் வங்கிகளின் அறவிடமுடியா மற்றும் ஐயத்திற்கிடமான ஒதுக்கங்களை வலுப்படுத்தல், வைப்புச் சான்றிதழ்களின் கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பாக "உங்கள் வாடிக்கையாளரை தெரிந்துகொள்ளுங்கள்" விதிகள் என்பதனைப் பின்பற்றுதல், வைப்பு மற்றும் முற்பணங்கள் மீதான வங்கி வட்டி வீதங்களை பிரசுரிப்பதுடன் அத்தகைய தகவல்களை கிளைகளிலும், ஏனைய வங்கித்தொழில் பிரிவுகளிலும் பார்வைக்கு வைத்தல், மத்திய வங்கியின் மீள்கொள்வனவு வீதம் மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவு வீதம் என்பனவற்றினால் பிரதிபலிக்கப்படும் கொள்கை வீதங்கள் இவ்வாண்டில் பல தடவைகள் குறைக்கப்பட்டமை என்பனவற்றினைத் தொடர்ந்து வங்கிக்கடன் வழங்கல் வீதங்களை தொடர்ந்தும் குறைக்க வேண்டிய தேவை, வங்கிகளின் உயர்ந்த வட்டிவீத வேறுபாடுகள் தொடர்பான கரிசனைகள், நிதியியல் குறைகேள் அதிகாரித் திட்டத்தினை நடைமுறைக்கிடல், 2003ஆம் ஆண்டு வரவுசெலவுத்திட்டத்தின் முன்மொழிவுகளுக்கிணங்கி ஒழுகும் விதத்தில் கொடுகடன் தரமிடலைப் பெற்றுக்கொள்ளுதல் மற்றும் கரைகடந்த வங்கித்தொழில் பிரிவுகளின் தொழிற்பாடுகள் மீதான முன்மதியுடைய தேவைப்பாடுகளின் பிரயோகம் என்பன கூட்டத்தில் கலந்துரையாடப்பட்ட முக்கிய விடயங்களில் சிலவாகும். கரைகடந்த வங்கித்தொழில் பிரிவுகள் தொடர்பாக முன்மதியுடைய தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகப்படாவிடின் பங்கிலாபங்கள் மற்றும் தாய்நாட்டிற்கான இலாபஅனுப்பல்களின் கொடுப்பனவுகளைக் கட்டுப்படுத்துவதற்கான முதன்மை நிறைவேற்று அலுவலர்களின் இணக்கம் பெறப்பட்டது. மேலும், மிகக் கூடுதலான தகவல்களைக் கொண்ட வியாபார தீர்மனங்களை எடுப்பதற்கு பயனுள்ள தகவல்களை வழங்கும் நோக்குடன் முதனிலை நிறைவேற்று அலுவலர்களுக்கு நாட்டின் பொருளாதார மற்றும் நாணய அபிவிருத்திகள் தொடர்பாக கிரமமாகத் தெரிவிக்கப்பட்டது.

## நிதித்துறை சீர்திருத்தக்குழு

மத்திய வங்கியினால் நிறுவப்பட்ட நிதியியல் துறை சீர்திருத்த குழுவிற்கு வங்கி மேற்பார்வைத் திணைக்களம் தொடர்ந்தும் பணியாற்றுவதற்குப் பொறுப்பாக இருந்தது. நிதித்துறை சீர்திருத்தக்குழு தொடக்கத்தில் 2002ஆம் ஆண்டு மாச்சில் மத்திய வங்கியின் உள்ளகக்குழுவாக ஏற்படுத்தப்பட்டது. பரந்த அடிப்படையில் இயங்கச்செய்யும் பொருட்டு மத்திய வங்கியிலமைந்திருந்த நிதித்துறை சீர்திருத்தக்குழு 2002 மேயில் மீள மாற்றியமைக்கப்பட்டது. அதன் பின்னர் நிதித்துறை சீர்திருத்தக்குழுவானது, தனியார்துறை மற்றும் அரசதுறை உள்ளிட்ட நிதியியல் முறையிலுள்ள பங்குடமையாளர்களின் பிரதிநிதித்துவத்தினை உள்ளடக்கும் விதத்தில் விரிவாக்கப்பட்டிருக்கிறது. இதன்படி, மீண்டெழும் இலங்கை நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நிதித்துறை சீர்திருத்தங்களை ஆரம்பித்து, ஒருங்கிணைத்து நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை நிதித்துறை சீர்திருத்தக்குழு மேற்கொண்டது.

ஆளுநரைத் தலைவராகக் கொண்ட நிதித்துறை சீர்திருத்தக்குழு மத்திய வங்கியிலிருந்தான 10 உறுப்பினர்கள் உட்பட 20 உறுப்பினர்களை உள்ளடக்கியிருந்தது. மேலும் நிதித்துறை செயற்பாட்டுடன் ஈடுபாடு கொண்டுள்ள மத்திய வங்கியின் ஏனைய திணைக்களத் தலைவர்கள்/ அலுவலர்கள் மற்றும் தொடர்பான நிறுவனங்களின் பிரதிநிதிகள் ஆகியோரும் தேவையேற்படும் வேளைகளில் அவர்களின் கருத்துக்களைத் தெரிவிப்பதற்காக கூட்டங்களுக்கு அழைக்கப்பட்டனர். இக்குழு 2-3 கிழமைகளுக்கொரு தடவை கூடியதுடன் 2003 இறுதியில் மொத்தமாக 32 கூட்டங்களை கூட்டியிருந்தது. இதில் 17 கூட்டங்கள் 2003இல் நடைபெற்றன. வங்கி மேற்பார்வைத் திணைக்களம் கூட்டங்களை ஒழுங்குசெய்தல், கூட்ட அறிக்கைகளைப் பேணுதல் மற்றும் கண்காணித்தல் என்பனவற்றை மேற்கொண்டதுடன் நிதியியல்துறை சீர்திருத்தக்குழுவின் தீர்மான நியதிகளின்படி மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் முன்னேற்றத்தினை தொடர்ந்தும் அவதானித்து வந்தது.

## நிதியியல் உறுதிப்பாட்டுக் குழு

2002இல் தொழிற்படத் தொடங்கிய நிதியியல் உறுதிப்பாட்டுக்குழு, நாட்டின் நிதியியல் முறைக்கான தொழிற்பாடுகளை நிறைவேற்றும் விதத்தில் மத்திய வங்கியின் திணைக்களங்களைச் சிறந்த முறையில்

படுத்தப்பட்ட வேளையில் திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரிமுறிகள் ஆகிய இரண்டும் நேர்மாற்று மீள்கொள்வனவு கொடுக்கல்வாங்கல்களுக்காகப் பயன்படுத்தப் பட்டன. மத்திய வங்கியின் திறந்த சந்தைத் தொழிற்பாடுகளின் கீழ் அனைத்து வர்த்தக வங்கிகளும் முதனிலை வணிகர்களும் கொடுக்கல் வாங்கல்களில் பங்கேற்பதற்கு தகுதியுடைய பங்கேற்கும் நிறுவனங்களாக தொடர்ந்துமிருந்தன.

2003இல் ரூபாத்திரவத்தன்மை மிகையுடன் சந்தை தொழிற்பட்டமைக்கு மத்திய வங்கி சந்தையிலிருந்து வெளிநாட்டுச் செலாவணி யினைக் கொள்வனவு செய்ததும், தேறிய வெளிநாட்டுக் கடன்கள் அரசினால் பெறப்பட்டமையுமே முக்கிய காரணமாகும். மிகையான திரவத்தன்மையின் ஒரு பகுதி நீண்டகால அடிப்படையில் கிரய அடிப்படை யொன்றில் திறைசேரி உண்டியல் சந்தையில் மத்திய வங்கியின் தொழிற்பாடுகளூடாகவும் மத்திய வங்கியின் பிணையங்களின் வழங்க லூடாகவும் ஈர்க்கப்பட்ட வேளையில் மீதி ஓரிரவு மீள்கொள்வனவுக் கொடுக்கல்வாங்கல் களூடாக நாளாந்த அடிப்படையில் ஈர்க்கப்பட்டன.

### (அ) மீள்கொள்வனவுக் கொடுக்கல்வாங்கல்கள்

#### (i) ஏலமிடும் முறையின் கீழ்

சந்தைத் திரவத்தன்மை சமநிலையில் இருந்த ஒரு நாள் நீங்கலாக, மிகையான திரவத் தன்மையினை ஈர்ப்பதற்காக ஒவ்வொரு வேலைநாளன்றும் மீள்கொள்வனவுக் கொடுக்கல் வாங்கல்களுக்காக ஏலங்கள் நடாத்தப்பட்டன. சந்தைக்கு விடப்பட்ட மீள்கொள்வனவு ஏலங்களின் நாளாந்தச் சராசரி ரூ.5.5 பில்லிய னாகக் காணப்பட்டது. நாளொன்றுக்கு சராசரியாக ரூ.8.0 பில்லியன் பெறுமதி கொண்ட விலைக்கோரல்கள் பெறப்படுவதன் காரணமாக ஏலங்கள் பொதுவாகவே முழுவதுமாக அல்லது கேட்கப்பட்ட அளவிற்கு அதிகமாகவே கோரல்களை கொண்டிருந்தன. பத்து நாட்கள் மாத்திரம் ஏலங்கள் (ஏலங்களின் 5 சதவீதம்) விடப்பட்ட தொகையிலும் பார்க்க குறைந்தளவில் கோரல்களைக் கொண்டிருந்தன. ஏலத்தில் சந்தைக்கு விடப்பட்ட தொகை சராசரியாக ஏறத்தாழ ரூ.3.7 பில்லியனாக அமைந்து மதிப்பிடப்பட்ட திரவ மிகைகளிலும் பார்க்க குறைவாக இருந்தமையினால் ஏலங்களில் சராசரி விளைவுவீதம் மத்திய வங்கியின் மீள்கொள்வனவு வீதத்துடன் மிக நெருக்கமாகக் காணப்பட்டது.

வரைபடம் II-1
வழங்கப்பட்ட தொகை பெறப்பட்ட விலைக் குறிப்பீடு மற்றும் சராசரி விளைச்சல்
(மீள்கொள்வனவு ஏலங்களின் மாதாந்தச் சராசரி)




#### (ii) துணைநில் வசதி முறையின் கீழ்

ஏலங்களில் வெற்றிபெறாத அல்லது பங்கேற்காத பங்கேற்கும் நிறுவனங்கள் அவர்களது மிகையான பணத்தினை துணைநில் முறை வசதியின் கீழ் மீள்கொள்வனவில் முதலீடு செய்தன. மேலும் மத்திய வங்கியின் உள்ளக ரீதியாக முகாமைப்படுத்தப்படும் நிதியங்களும் அவர்களது மிகையான நிதியினை துணைநில் வசதியின் கீழ் முதலீடு செய்தனர். பங்கேற்கும் நிறுவனங்களுடனான மீள்கொள்வனவு உடன்படிக்கையின் முதிர்ச்சிக்காலம் ஒரு நாளாக இருந்தவேளையில் உள்ளக நிதியங்கள் ஆகக்கூடியது ஏழு நாள் வரையிலான மீள்கொள்வனவில் முதலீடு செய்ய அனுமதிக்கப்பட்டன. தற்போதைய முறை அறிமுகப்படுத்தப்பட்டதன் காரணமாக, துணைநில் வசதியின் கீழ் நாளொன்றுக்கு ரூ.3.6 பில்லியன் கொண்ட சராசரி மீள்கொள்வனவு வசதிகள் பங்கேற்கும் நிறுவனங்களினால் பயன்படுத்தப்பட்ட வேளையில் உள்ளகரீதியாக

வரைபடம் II-2
மாதாந்த மீள்கொள்வனவு அளவுகளும் வீதங்களும் 2002 - 2003
(2002 மற்றும் 2003)



முகாமைப்படுத்தப்படும் நிதியங்களினால் பயன்படுத்தப்பட்ட தொகை (நாளொன்றுக்குச் சமமான ஓரிரவு) ரூ.2.8 பில்லியனாகக் காணப்பட்டது. துணைநில் வசதியின் கீழான மீள்கொள்வனவு கொடுக்கல் வாங்கல்கள் மத்திய வங்கியின் மீள்கொள்வனவு வீதத்தில் காணப்பட்டன.

**(iii) மொத்த அளவு**

உள்ளக ரீதியாக முகாமைப்படுத்தப்பட்ட நிதியங்களின் மூலம் செய்யப்பட்ட முதலீடுகள் உட்பட ஏலமுறைமை மற்றும் துணைநில் வசதி இரண்டின் கீழுமான மீள்கொள்வனவு கொடுக்கல்வாங்கல்களின் மொத்தப் பெறுமதி 2002இன் ரூ.1,764 பில்லியனிலிருந்து 2003இல் (ஓரிரவிற்குச் சமமானவை) ரூ.4,331 பில்லியனுக்கு இரு மடங்கிற்கும் கூடுதலாக விளங்கி சந்தையில் தொடர்ச்சியாகக் காணப்பட்ட மிகையான திரவத்தன்மையினைப் பிரதிபலித்தது. இக்கொடுக்கல்வாங்கல்களில் பெரும்பகுதி (78 சதவீதம்) பங்கேற்கும் நிறுவனங்களுடனேயே காணப்பட்டன.

**ஆ) நேர்மாற்று மீள்கொள்வனவு கொடுக்கல் வாங்கல்கள்**

2003ஆம் ஆண்டில் சந்தைத் திரவத் தன்மை கொண்டதாக விளங்கியமை யினால், ஏலங்களூடாக நாளாந்த அடிப்படையில் திரவத்தன்மையினை புகுத்தவேண்டிய தேவை காணப்படவில்லை. எனினும், ஒருசில சந்தர்ப்பங்களில் துணைநில் வசதிகளின் கீழான நேர்மாற்று மீள்கொள்வனவு வசதிகள் ஏப்பிறலிலும் மேயிலும் மிகச்சில வங்கிகளினால் பயன்படுத்திக் கொள்ளப்பட்டன. இதற்கு ஒரு வங்கியினால் இன்னொரு வங்கியின் கடன்வழங்கல் மீது விதிக்கப்பட்ட உள்ளக வரையறைகளின் காரணமாக வங்கிகளுக்கிடையிலான சந்தையில் அவர்களது முழுத் தேவைப்பாடுகளையும் பூர்த்தி செய்யமுடியாமல் இருந்தமையே காரணமாகும். 2003ஆம் ஆண்டில் நேர்மாற்று மீள்கொள்வனவு உடன்படிக்கையின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட அரச பிணையங்களின் மொத்தப்பெறுமதி ரூ.11 பில்லியனாக இருந்ததுடன் இது 2002இல் கொள்வனவு செய்யப்பட்ட தொகையில் 5 சதவீதமாக மட்டும் இருந்தது. இவ் அபிவிருத்திக்குப் பங்களித்த முக்கியமானதொரு காரணியாக இருந்தது யாதெனில், நாணயத்திற்கான பாரிய பருவகால கேள்வி காரணமாக சந்தையில் திரவநிலைக்கு வழமையாகப் பற்றாக்குறை காணப்படும் பண்டிகைக் காலப்பகுதியில் போதுமான திரவநிலைமையை உறுதிப்படுத்துவதற்காக மத்திய வங்கியினால் எடுக்கப்பட்ட நடவடிக்கையேயாகும்.

**இ) அரச பிணையங்களிலான உடனடிக் கொடுக்கல் வாங்கல்கள்**

தற்போதைய திறந்த சந்தைத் தொழிற்பாடுகள் முறை அறிமுகப்படுத்தப் பட்டதைத் தொடர்ந்து, மத்திய வங்கியின் இரண்டாந்தரச் சந்தையில் கழிவிடல் மற்றும் மீள்கழிவிடலுக்கான வசதியானது, நீண்டகால அடிப்படையில் திரவநிலைமையை முகாமைப் படுத்துவதற்காக மத்திய வங்கியின் தற்றுணிபில் அமைந்த திறைசேரி உண்டியல்களின் உடனடி விற்பனைகள் மற்றும் கொள்வனவுகளின் மூலம் அகற்றப்பட்டது.

2003ஆம் ஆண்டுப்பகுதியில் மத்திய வங்கியின் உடமைகளிலிருந்து உடனடி அடிப்படையில் திறைசேரி உண்டியல்களை விற்பனை செய்வதற்கு நான்கு வாராந்த ஏலங்கள் நடத்தப்பட்டன. ஒவ்வொரு ஏலத்திலும் ரூ.1 பில்லியன் முகப்புப் பெறுமதி கொண்ட திறைசேரி உண்டியல்கள் வழங்கப்பட்டன. எனினும், சந்தைப் பங்கேற்பாளர்கள் தமது மிகையான நிதியினை ஓரிரவு அடிப்படையில் முதலீடு செய்வதற்கான முன்னுரிமை காணப்பட்டமையின் விளைவாக முதலாவது தவிர்ந்த மற்றைய ஏலங்களில் கோரல்கள் குறைவாகவே காணப்பட்டன. இவ் ஏலங்களினூடாக விற்பனை செய்யப்பட்ட திறைசேரி உண்டியல்களின் மொத்தப்பெறுமதி ரூ.1.7 பில்லியனாகும். இவ்ஏலங்களிலான நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதங்கள் 7.61 சதவீதத்திற்கும் 8.08 சதவீதத்திற்கு மிடையிலான வீச்சில் காணப்பட்டதுடன் முதலாந் தரச்சந்தை திறைசேரி உண்டியல் விளைவு வீதங்களுடன் மிக நெருக்கமாக ஒப்பிடத்தக்கதாகவும் இருந்தது. மேலும், ரூ.0.7 பில்லியன் முகப்புப் பெறுமதியினைக் கொண்ட திறைசேரி உண்டியல்கள் சந்தையில் நிலவிய விளைவு வீதங்களில் நேரடி கையாளல் மூலமாக விற்பனை செய்யப்பட்டன.

சந்தையில் திரவநிலைமை காணப் பட்டமையினால் மத்திய வங்கி இரண்டாந்தரச் சந்தையில் அரச பிணையங்கள் எதனையும்

கொள்வனவு செய்யவில்லை. எனினும், போதுமான திரவநிலைமையை குறிப்பாக பண்டிகைக் காலத்தில் உறுதிப்படுத்தும் பொருட்டு மத்திய வங்கி முதலாந்தரச் சந்தையில் திறைசேரி உண்டியல்களைக் கொள்வனவு செய்தது. 2003இல் முதலாந்தரச் சந்தையில் இவ்வாறு கொள்வனவு செய்யப்பட்ட மொத்த திறைசேரி உண்டியல்கள் ரூ.49 பில்லியனாக விளங்கியவேளையில், ரூ.67 பில்லியன் முகப்புப் பெறுமதி கொண்ட திறைசேரி உண்டியல்கள் இவ்வாண்டில் முதிர்ச்சியடைந்தன.

### ஈ) மத்திய வங்கிப் பிணையங்களின் வழங்கல்

தொடர்ந்தும் விரிவடைந்து வந்த மிகையான திரவத்தன்மையினை ஈர்த்துக் கொள்ள மத்திய வங்கி வசமிருந்த திறைசேரி உண்டியல் உடமைகள் போதுமானதாக இராத இடர்நேர்வொன்று காணப்படாமையினால் 2003 செத்தெம்பரில் ரூ.5.1 பில்லியன் முகப்புப் பெறுமதியினைக் கொண்ட மத்திய வங்கிப் பிணையங்கள் வழங்கப்பட்டன. இப்பிணையங்கள் நறுக்கு வீதத்திலன்றி, கழிவிடல் அடிப்படையில் வழங்கப்பட்டதுடன் இந்த வீதம் திறைசேரி உண்டியலுக்காக நிலவும் முதலாந்தரச்சந்தை விளைவுவீதங்களுடன் ஒப்பிடத்தக்கதாகும். இவ்வழங்கல்களின் விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

### உ) நியதி ஒதுக்குத் தேவைப்பாடுகள்

மத்திய வங்கிப் பிணையங்கள்

| வழங்கப் பட்ட திகதி | முதிர்ச்சி அடையும் திகதி | முதிர்ச்சி அடை வதற்கான நாள் | முகப்புப் பெறுமதி (ரூ. பில்லியன்) | புத்தகப் பெறுமதி (ரூ. பில்லியன்) | விளைவு வீதம் (வரி நீங்கலாக) |
|---|---|---|---|---|---|
| 23 செத்.03 | 23 திசெ.03 | 91 | 1,020 | 0.999 | 7.50 |
| 24 செத்.03 | 24 திசெ.03 | 91 | 1,528 | 1.497 | 7.50 |
| 29 செத்.03 | 29 நவெ.03 | 60 | 2,024 | 1,997 | 7.34 |
| 30 செத்.03 | 30 நவெ.03 | 91 | 0.509 | 0.499 | 7.26 |

இலங்கை ரூபாவில் குறித்துரைக்கப்பட்ட வர்த்தக வங்கிகளின் வைப்புப் பொறுப்புக் களுக்கு எதிரான நியதி ஒதுக்குத் தேவைப்பாடு இவ்வாண்டில் 10 சதவீதத்தில் நிலைத்திருந்தது.

2003 ஏப்பிறல் 3ஆம் நாளிலிருந்து நியதி ஒதுக்குத் தேவைப்பாட்டினைக் கணிக்கும் அடிப்படை ஒதுக்கு வாரத்தின் முன்போந்த புதன்கிழமையன்று வியாபாரம் முடிவடைகையில் காணப்பட்ட வைப்புப் பொறுப்புக்கள் மற்றும் காப்பறையிலிருந்த சராசரி நிலுவைகள் என்பனவற்றிலிருந்து ஒதுக்கு வாரத்தின் முற்போந்த செவ்வாய்க்கிழமையுடன் முடிவடைந்த வாரப்பகுதியின் வைப்புப் பொறுப்புக்கள் மற்றும் காப்பறைக் காசு என்பனவற்றின் நாளாந்த சராசரி நிலுவைகளுக்கு மாற்றப்பட்டது. இம்மாற்றம் நியதி ஒதுக்கு தேவைப்பாட்டின் பயனுறு தன்மையினை மேம்படுத்துவதற்காகவே முக்கியமாக அறிமுகப்படுத்தப்பட்டது.

### ஊ) வங்கி வீதம்

நாணயவிதிச் சட்டத்தின் பிரிவு 87இன் கீழ் குறித்துரைக்கப்பட்ட உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கான குறுங்கால முற்பணங்களின் மீதான மத்திய வங்கியின் வட்டி வீதமானது வங்கியின் சொந்த கொள்கை வீதமான மீள்கொள்வனவு வீதம் மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவு வீதம் என்பனவற்றில் ஏற்பட்ட பொதுவான வீழ்ச்சியுடன் இசையும் விதத்தில் 2003 ஒகத்து 15ஆம் நாளிலிருந்து 18 சதவீதத்திலிருந்து 15 சதவீதத்திற்கு குறைக்கப்பட்டது.

## 2. வர்த்தக வங்கிகளுக்கும் அரசிற்கும் வங்கியாளராகத் தொழிற்படுகின்றமை

### (i) நிதியியல் நிறுவனங்களின் கணக்குகள்

வங்கியாளர்களின் வங்கியாகத் தொழிற்படும் விதத்தில் வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறையின் வினைத்திறனை உறுதிப்படுத்துவதற்காக வர்த்தக வங்கிகளுக்கும், முதனிலை வணிகர்களுக்கும் மத்திய வங்கி தொடர்ந்தும் நடைமுறைக்கணக்கு வசதிகளை வழங்கியது. 2003ஆம் ஆண்டு செத்தெம்பர் 8ஆம் நாள் தொடக்கம் இக்கணக்குகள் வங்கியின் தன்னியக்கப்படுத்தப்பட்ட பொதுப்பேரேட்டு முறைக்குள் அதேநேர மொத்த தீர்ப்பனவு அடிப்படையில் தொழிற்படுத்தப்பட்டன.

### (ii) அரச கணக்குகள்

அரசிற்கான வங்கியாளர் என்ற முறையில், மத்திய வங்கியானது அரச திணைக்களங்கள், அரச முகவர்கள் மற்றும் நிறுவனங்கள் மற்றும் குறிப்பிட்ட நியதிச்சபைகள் என்பனவற்றின் கணக்குகளைத் தொடர்ந்து பேணுவதுடன் தேவையான வங்கித்தொழில் வசதிகளையும் அவற்றிற்கு வழங்கியது. வங்கியினால் பேணப்பட்ட அத்தகைய கணக்குகளின் மொத்த எண்ணிக்கை 2003 இறுதியில் 121 ஆகக்

காணப்பட்டது. 2003இல் நான்கு புதிய கணக்குகள் திறக்கப்பட்டவேளையில் அரசாங்கத்தின் வேண்டுகோளின் பேரில் இரண்டு கணக்குகள் மூடப்பட்டன. நாணயவிதிச் சட்டத்தின் 89ஆம் பிரிவின் நியதிகளின்படி வங்கி தொடர்ந்தும் அரசிற்கு முற்பணங்களை வழங்கி வருகின்றது. அத்தகைய முற்பணங்களின் மீதான வரையறை (மதிப்பிடப்பட்ட அரச அரசிறையில் 10 சதவீதம்) 2003இல் ரூ.1,600 மில்லியனால் ரூ.32,972 மில்லியனுக்கு அதிகரிக்கப்பட்டது. இம்முற்பணங்களின் மீது வட்டி விதிக்கப்படவில்லை.

**(iii) ஏற்றுமதியாளர்களுக்கான இறக்குமதித்தீர்வைத் தள்ளுபடி**

ஏற்றுமதியாளர்களுக்கு உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளினால் செலுத்தப்பட்ட இறக்குமதித்தீர்வைத் தள்ளுபடிகள் தொடர்பாக அரசாங்கத்தின் சார்பில் வங்கியானது 2002ஆம் ஆண்டில் செலுத்தப்பட்ட மொத்தத் தொகையான ரூ.304 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2003இல் ரூ.65 மில்லியன் கொண்ட மொத்தத் தொகைககளைச் செலுத்தியது. இலங்கைச் சுங்கத்தின் அறிவுறுத்தலுக் கிணங்க இப்பணியானது 2003 மார்ச்சு 15ஆம் நாளிலிருந்து இலங்கை வங்கிக்கு மாற்றப்பட்டது.

**(iv) தாய்நாட்டிற்கு குடிபெயர்ந்து செல்லும் இந்திய மக்களுக்கான உதவுதொகையும் வெகுமதிக் கொடுப்பனவும்**

1964ஆம் ஆண்டின் இந்திய இலங்கை உடன்படிக்கையின் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ள இந்திய வம்சாவழித் தோட்டத் தொழிலாளர்களை தாய்நாட்டிற்கு அனுப்புவதற்காக அரசின் சார்பில் செலுத்தப்பட்ட மொத்த உதவுதொகைக் கொடுப்பனவுகள் 2002ஆம் ஆண்டின் ரூ.42,250 உடன் ஒப்பிடுகையில் 2003இல் ரூ.61,901 ஆக விளங்கியது. வெகுமதிக் கொடுப்பனவுகள் 2002இனைதைப் போன்றே 2003இலும் ரூ.3,300 ஆகக் காணப்பட்டது.

## 3. ஒரு நாளுக்குள்ளேயான திரவத்தன்மை வசதி வழங்கல்

2003 செத்தெம்பர் 8ஆம் நாளன்று இலங்கையில் நிறுவப்பட்ட அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையின் வினைத்திறன் மிக்க சுமுகமான தொழிற்பாட்டிற்கு இன்றியமையாததாக இருக்கும் வர்த்தக வங்கிகள் மற்றும் முதனிலை வணிகர்களுக்கான ஒரு நாளுக்குள்ளேயான திரவத்தன்மையை வழங்கும் பொறுப்பினைத் திணைக்களம் ஏற்றுக்கொண்டது. ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதியானது அதேநேர அடிப்படையில் தீர்ப்பனவு செய்யப்படாமல் தேவையின்றி நீண்ட வரிசையில் வைத்திருக்கப்படுகின்ற கொடுப்பனவுகளை தடை செய்வதன் மூலம் கொடுப்பனவு முறையினைக் கூடுதலான அளவிற்கு வினைத்திறனுள்ளதாக்கியுள்ளது. ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதியின் கீழான நிதியானது தகுதியுடைய பிணையங்களினால் (அரச திறைசேரி உண்டியல்களும் முறிகளும்) பிணையிடப்பட்ட ஒரு நாளுக்குள்ளேயான நேர்மாற்று மீள்கொள்வனவு கொடுக்கல்வாங்கல் மூலமாக வட்டியின்றி வழங்கப்படுகின்றது. ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதியின் கீழ் விடுவிக்கப்பட்ட நிதியத்தின் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதற்காகவும் மத்திய வங்கிக்கு அவை அதே வேலைநாளன்று முடிவடைவதற்கு முன்னர் திரும்ப வழங்கப்படுவதற்கு வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தகைமையுடைய பிணையங்கள் நாளன்று ஏற்படக்கூடிய விலைமாற்றங்களை உள்ளடக்குவதற்குப் போதுமான "இலாப" மொன்றினால் சீராக்கப்பட்ட அவற்றின்

**வரைபடம் II-3**
**ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதியின் கீழான நாளாந்த எடுப்பனவுகள் - 2003**




நடைமுறைச்சந்தை விலைகளில் மதிப்பிடப்படுகின்றன. ஒரு நாளுக்குள்ளேயான வசதியின் கீழ் பெறப்பட்ட நிதியத்தினை அந்நாள் முடிவடைவதற்கு முன்னர் முழுமையாகத் தீர்ப்பனவு செய்ய பங்கேற்கும் நிறுவனங்கள் தவறுமிடத்து முதற் சந்தர்ப்பத்தில் முழுத்தொகையின் மீதும் வங்கி வீதத்தில் செலுத்தத் தவறிய வட்டிவீதம் விதிக்கப்படுவதுடன் அந்தக் கலண்டர் ஆண்டுப்பகுதியில் செலுத்தத் தவறிய ஒவ்வொரு தொடர்ந்துவரும் சந்தர்ப்பத்திலும், அத்தகைய, செலுத்தத் தவறிய வட்டி வீதம் 100 அடிப்படைப் புள்ளிகளினால் அதிகரிக்கப்படும். அத்தகைய செலுத்தத்தவறும் சந்தர்ப்பம் ஒரு தடவைக்கு கூடுதலாக இருக்குமிடத்து ஒரு நாளுக்குள்ளேயான திரவவசதி வழங்கப்பட்டமைக்கு எதிரான

பிணையங்களை பிடித்துவைத்திருப்பதற்கான மற்றும் செலுத்தத் தவறிய வட்டியை விதிப்பதற்குமான உரிமையை மத்திய வங்கி கொண்டிருக்கும்.

ஆரம்பத்தில், ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதியின் கீழ் வங்கிகளினாலும், முதனிலை வணிகர்களினாலும் செய்யப்பட்ட எடுப்பனவுகள் சார்புரீதியில் உயர்வானதாகவும், செத்தெம்பரில் நாளொன்றிற்கு சராசரியாக ரூ.8.4 பில்லியனாகவும் காணப்பட்டமைக்கு இம்முறை புதியதொரு முறையாகவும் சில பங்கேற்பாளர்கள் முன்னெச்சரிக்கை வழிமுறையாக ஒப்பீட்டுரீதியில் பெரும் தொகையைப் பெற்றுக்கொண்டமையுமே காரணமாகும். அனுபவமடைந்ததும் பங்கேற்பாளர்கள் தமது ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதி எடுப்பனவுகளை படிப்படியாகக் குறைத்ததன் மூலம் திசெம்பரில் நாளொன்றிற்கான சராசரி எடுப்பனவு ரூ.3.2 பில்லியனுக்கு குறைவடைந்தது. ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதியின் உண்மையான பயன்பாடு இன்னும் குறைவாக அமைந்து 2003 திசெம்பரின் சராசரி எடுப்பனவில் ஏறத்தாழ 35 சதவீதமாக (ரூ.1.11 பில்லியன்) காணப்பட்டது. மீதி மத்திய வங்கியிலுள்ள பங்கேற்பாளரின் அதேநேர மொத்தத் தீர்ப்பனவின் தீர்ப்பனவுக் கணக்கில் பயன்படுத்தாது வைத்திருக்கப்பட்டது. வங்கிகள் அவற்றின் நியதி ஒதுக்குத் தேவைப்பாட்டின் கீழான அவற்றின் நிலுவைகளை ஒரு நாளுக்குள்ளேயான தீர்ப்பனவு நோக்கங்களுக்குப் பயன்படுத்த அனுமதிக்கப்பட்டமையினால், பெரும்பாலான வங்கிகள் ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதியின்றியே தொழிற்படஇயலக்கூடியனவாக இருந்தன. பங்கேற்பாளரினால் ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதி ஒன்றின் செலுத்தத் தவறும் சந்தர்ப்பம் ஒரு தடவை மட்டும் காணப்பட்டதெனினும் உடனடியாக விதிக்கப்பட்ட தண்டத்தின் காரணமாக திரும்ப திரும்ப இது நிகழ்வது தவிர்க்கப்பட்டது.

அன்றைய நாளிலேயே செலுத்தப்பட வேண்டிய ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதி (பகல் முற்பணம்) ஒதுக்குப்பணத்தின் மீதும் அதன் மூலம் நாணயக் கொள்கை நிலையிலும் நடுநிலையானதாகக் கருதப்படுகிறது.

## ஊழியர் சேமநிதியம்

ஊழியர் சேமநிதியம் 2003இல் இன்னொரு ஆண்டிற்கான சாதனைகளைக் குறித்து நிற்கிறது. நிதியியல்துறைச் சீர்திருத்தங்களின் நிகழ்ச்சித் திட்டத்தின் ஒரு கூறாக விளங்கும் ஓய்வூதிய சீர்திருத்தங்கள் வலுவான சந்தைசார்ந்த பொறிமுறையொன்றினூடாக வயது முதிர்ந்தவர்களின் பாதுகாப்பினை மேலும் வலுப்படுத்துகின்ற அதன் இலக்கினைநோக்கி மேலும் முன்னேறியிருக்கின்றன. ஓய்வூதிய முறையினைச் சீர்திருத்துவதும் நிதியியல் சந்தைகளை அபிவிருத்தி செய்வதும் ஒன்றில் ஒன்று தங்கியிருப்பதுடன், இரண்டு துறைகளினதும் வினைத்திறன்மிக்க தொழிற்பாட்டிற்கும் உறுதியான தன்மைக்கும் இவை இணைந்து செல்லவேண்டும். மிகப் பாரிய ஓய்வூதியத் திட்டமாகவும் இலங்கையில் மிகப்பாரிய நிறுவனரீதியான முதலீட்டாளராகவும் இருந்துவருகின்ற ஊழியர் சேமநிதியம் சீர்திருத்தநிகழ்ச்சித் திட்டத்தில் பெரும் கவனத்தை ஈர்த்திருந்தது.

ஊழியர் சேமநிதியத்தின் பாதுகாவலனான நாணயச்சபை ஊழியர் சேமநிதியச் சட்டத்தின் நியதிகளின்படி தொழில் திணைக்களத்தின் ஊழியர் சேமநிதிய பிரிவின் ஒத்துழைப்புடன் உதவுதொகைகள் மிகைக் கட்டணங்கள் மற்றும் முதலீடுகளிலிருந்தான வருமானம் என்பனவற்றைப் பெறுதல், பதிவு செய்யப்பட்ட தொழில்நிலை, உறுப்பினர்கள் மற்றும் நிதியத்தின் கணக்குகளைச் சரியாகப் பேணுதல், பொருத்தமான முதலீடுகளில் முதலீடுகளை மேற்கொள்ளுதல், மற்றும் நிதியத்தின் உறுப்பினர்களுக்கு நன்மைகளைச் செலுத்துதல் ஆகியவற்றில் அதன் பொறுப்புக்களைத் தொடர்ந்தும் நிறைவேற்றி வருகிறது.

### முறையினை நவீனப்படுத்தல்

2003இல் அறிமுகப்படுத்தப்பட்ட முறையின் நவீனப்படுத்தல்கள், நிதியம் அதன் வினைத்திறன் செலவுச் சிக்கனம் மற்றும் துல்லியமான தன்மை என்பனவற்றை மேம்படுத்துவதனை இயலச் செய்தன. புதிய மற்றும் ஏற்கனவேயுள்ள தொழில்நருநர் மற்றும் ஊழியர்களின் விபரங்களுடன் கூடிய தரவுத் தளத்தைசிரமமான முறையில் நாளதுவரை பூரணப்படுத்தும் பொருட்டு சி3 சேகரிப்பு முறைக்கு பல நவீனப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டன. மின்னியல் ரீதியான உதவுதொகைகளை பெற்றுக் கொள்வதனைக் கையாளுவதற்கு பயன்படுத்துப்பட்டு வந்த தனியாள் கணனி முறை 2003ஆம் ஆண்டுப் பகுதியில் நிதியத்தின் முதன்மை ஏ.எஸ்/400 முறைக்கு தரமுயர்த்தப்பட்டது. பல்வேறுபட்ட கணக்காய்வுப் பிரிவுகளுக்கு உடனடிக் கணக்காய்வு வசதிகள் ஏற்படுத்தப்பட்டமையானது கணக்காய்வு நடைமுறைகளில் மேம்பாட்டினை உருவாக்கியுள்ளது. சேகரிப்புப் பீடத்தில் பெற்ற காசோலைகளைப் பதிவு செய்வதற்கான முறையொன்று 2003இன் பின்னரைப் பகுதியில் வடிவமைக்கப் பட்டது. 1992-1997 காலப்பகுதியில் செய்யப்பட்ட மீளளிப்புக்கள்

தொடர்பான முழு விபரங்களையும் தெரிந்து கொள்வதற்காக காசோலை உருமாதிரி பயன்படுத்தப்பட்டது. இதன்மூலம் ஊழியர் சேமநிதிய நிலுவைகளை மீண்டும் கோருகின்ற எந்தவொரு சாத்தியமான மோசடிகளும் தவிர்க்கப்படுகின்றன.

## அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறையில் ஊழியர் நிதியத்தின் பங்கேற்பு

அரச பிணையங்களில் முதலீடு செய்தல் மற்றும் இரண்டாந்தரச் சந்தை வர்த்தகம் என்பன வற்றிற்கு பிரத்தியேகமாகவும் அத்துடன் முறையின் கொடுக்கல் வாங்கல்களுடன் தொடர்பான செய்திகளை அனுப்புவதற்காக அதேநேர மொத்த தீர்ப்பனவு முறையில் பங்கேற்பதற்காக மத்திய வங்கியுடன் தீர்ப்பனவுக் கணக்குகளைத் திறப்பதற்கு ஊழியர் சேம நிதியத்திற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டது. இதன் விளைவாக, ஊழியர் சேமநிதியம் 2003இன் நான்காவது காலாண்டில் அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறை யின்மீது தொழிற்பாடுகளைத் தொடங்கியதுடன் அது பாரிய பெறுமதிகளுடன் கூடிய வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவுகளை உள்ளடக்கக் கூடியதாகவும் அரச பிணையங்களைத் தீர்ப்பனவு செய்யக் கூடியதாகவும் இருந்தது.

## பொதுமக்களுக்கான விழிப்புணர்வு

நிதியத்தினை அதன் அனைத்து பங்குடைமை யாளர்களுக்கும் நெருக்கமாகக் கொண்டுவரும் பொருட்டு அனைத்தையும் உள்ளடக்கிய பொதுமக்கள் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டத்திற்கான தேவையொன்று வரவேற்கப்பட்டிருப்பதன் காரணமாக இவ்வாண்டுப் பகுதியில் பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. உறுப்பினர்களினால் கேட்கப்படும் பிரச்சனைகளுக்கு விரைந்து பதிலளிக்கும்பொருட்டு, 2003 மேயில் நிறுவப்பட்ட உதவிப்பீடம் இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட மிக முக்கியமானதொரு வழிமுறை யாக விளங்குகின்றது. உதவிப்பீடத்தில், உறுப்பினரின் பிரச்சனைகள் தொலைபேசி, மின்அஞ்சல் மற்றும் தொலைநகல் என்பவற்றினூடாக ஏற்றுக் கொள்ளப் படுவதுடன் சரியான பதில்களும் உறுதிப்படுத்தப் படுகின்றன. மேலும் ஊழியர் சேமநிதியம் எம்பிலிப்பிட்டியவிலும் மாத்தறையிலும் நடத்தப்பட்ட கைத்தொழில் கண்காட்சியான யுகதெக்ம 2003 இல் தீவிரமாகப் பங்கேற்றுக்கொண்டது. இது தூரப் பிர தேசங்களிலுள்ள உறுப்பினர்களைச் சென்றடைவதற்கு காத்திரமான முறையில் உதவியதுடன் இதன்மூலம் அவர்களது பிரச்சனைகளை உடனடியாக தீர்த்துக் கொள்ளக்கூடிய வாய்ப்பினையும் வழங்கியது. இந்த விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்கள் நிதியத்தின் அனைத்துப் பங்குடைமையாளர்களுக்கும் அறிமுகப் படுத்துவதிலும் ஊழியர் சேமநிதியம் தொடர்பான அவர்களின் உரிமை மற்றும் பொறுப்புக்கள், பின்பற்றப்படவேண்டிய சரியான நடைமுறைகள் மற்றும் ஓய்வு பெற்றபின்னர் உறுப்பினர்களின் நல்வாழ்விற்கு ஊழியர் சேமநிதியத்தின் முக்கியத்துவம் என்பனமீது மிகுந்த கவனத்தைச் செலுத்தும்.

2002ஆம் ஆண்டிற்கான உறுப்பினர்களின் கூற்றுக்களும் 2003ஆம் ஆண்டின் முன்னரைப் பகுதிக்கான அரையாண்டு உறுப்பினர் கூற்றுக்களும் இவ்வாண்டில் அவர்களது தொழில் தருநர்களூடாக வழங்கப்பட்டன.

## நிதி முகாமைத்துவ இயலளவுகளை வலுப்படுத்தல்

மிகக்கடுமையான தேர்வு செய்முறைகளின் பின்னர் தெரிவு செய்யப்பட்ட 20 இளம் தொழில்சார் அலுவலர்கள் 2003 நவெம்பரில் நிதிய முகாமைத்துவத்தில் இரண்டாண்டு அனைத்தையு முள்ளடக்கிய பயிற்சி நிகழ்ச்சித் திட்டத்திற்கு சேர்த்துக் கொள்ளப்பட்டனர். இத்தேர்ச்சி அபிவிருத்தியின் குறிக்கோள் யாதெனில் ஊழியர் சேமநிதியத்துறை யிலுள்ள நிதிய முகாமைத்துவத்தில் தற்பொழுது நடைபெற்றுவரும் மீளமைப்பு நடவடிக்கைகளுக்கு வசதியளிக்கும் பொருட்டு தகுதிவாய்ந்த நிதிய முகாமைத்துவ தொழில்சார் அலுவலர்களின் பங்களிப்புடன் ஊழியர் சேமநிதியத்தினை வலுப்படுத்துவதேயாகும். தொழில்சார் நிதிய முகாமையாளர்களுக்கான அங்கீகரிக்கப்பட்ட உலகப்பட்டய நிதியியல் ஆய்வாளர் பட்டயத்தினை வழங்குகின்ற முதலீட்டு முகாமைத்துவம் மற்றும் ஆராய்ச்சிக்கான ஐக்கிய அமெரிக்காவை தளமாகக் கொண்ட அமைப்பின் உறுப்பினை இலங்கை முதலீட்டு தொழில்சார் அலுவலர் சங்கத்தின் பங்கு யாதெனில் இந் நிகழ்ச்சித் திட்டத்திற்கான வசதியளிப்பவர்கள் மற்றும் பயிற்சியாளர் என அங்கீகரிப்பதேயாகும்.

## அரச ஊழியர்களுக்கான உதவுதொகை ஓய்வூதிய நிதியத்தினை முகாமைப்படுத்தல்

2003 சனவரி 1ஆம் நாள் தொடக்கம் அரசாங்கம் மற்றும் உள்ளூராட்சி பணிகளுக்கு புதிதாக ஆட்சேர்த்துக் கொள்பவர்களின் ஓய்வூதியத்தினை உள்ளடக்குவதற்காக உதவுதொகை செலுத்தும் ஓய்வூதிய நிதியம் தாபிக்கப்பட்டது. நிதியமைச்சு கேட்டுக்கொண்டதற் கிணங்க நாணயச் சபையினால் உதவுதொகை செலுத்தும் ஓய்வூதிய நிதியத்தினைப் பாதுகாக்கும் பொறுப்பும் முகாமைத்துவமும் பொறுப்பேற்கப்பட்ட வேளையில் ஓய்வூதியத் திணைக்களத்தின் தலைவர் முறைக்கும் நிருவாகச் செயற்பாட்டிற்கும் பொறுப்பாக

இருப்பார். நாணயச்சபை 2003இல் ஊழியர் சேமநிதித் தினூடாக இத் தொழிற்பாடுகளை மேற்கொள்ளத் தொடங்கியது. உதவு தொகை செலுத்தும் ஓய்வூதிய நிதியத்தினை முகாமைப்படுத்துவதற்காக ஊழியர் சேமநிதியத்தில் தனியான பிரிவொன்று நிறுவப்பட்டுள்ளது. உதவு தொகை செலுத்தப்படும் ஓய்வூதியத்திட்டம், அது ஆரம்பிக்கப்பட்டதிலிருந்தே சுமுகமாக தொழிற்படுவத்னை உறுதிப்படுத்துவதற்காக தாங்கக்கூடியதும் மிகப் பொருத்தமானதுமான கணனிமயப்படுத்தப்பட்ட முறையொன்று ஊழியர் சேம நிதியத்தினால் பெறப் பட்டிருக்கிறது.

## வீடமைப்புக் கடன் வசதிகள்

ஊழியர் சேமநிதிய உறுப்பினர் ஒருவர், உறுப்பினர் நிலுவையைப் பிணையாக வைத்து, அத்தகைய நிலுவையில் ஆகக்கூடியது 75 சதவீதத்தினை, ஒப்புதலளிக்கப்பட்ட கடன் வழங்கல் நிறுவனங் களிடமிருந்து வீடமைப்பு நோக்கங்களுக்குக் கடனாகப் பெற்றுக்கொள்ளத் தகைமையுடையவராவர். முதலாவது கடன் வெற்றிகரமாகத் தீர்ப்பனவு செய்யப்பட்டதும் இரண்டாவது கடன் கிடைக்கக் கூடியதாகவிருக்கும். 2003ஆம் ஆண்டுப்பகுதியில் ஊழியர் சேம நிதியம் ரூ.2791 மில்லியன் கொண்ட மொத்தமாக ஒப்புதலளிக்கப்பட்ட தொகைக்காக கடன் வழங்கும் நிறுவனங்களுக்கு 18689 உறுப்பினர் நிலுவைகளுக்கு சான்றிதழ்களை வழங்கியது.

## முதலீட்டு நடவடிக்கைகளும் விளைவுகளும்

இவ்வாண்டில், நிதியத்தின் மொத்த முதலீட்டுச் சொத்துப் பட்டியல் 13.2 சதவீதமான வளர்ச்சியைக் காட்டி 2003 இறுதியில் ரூ.320 பில்லியன் கொண்ட கிரயப் பெறுமதியினைப் பதிவு செய்தது. மேலும் கடந்த 5 ஆண்டுகளின் போக்கினை உறுதிப்படுத்துகின்ற விதத்தில் மொத்த முதலீட்டுச் சொத்துப் பட்டியலில் நீண்டகால சந்தைசார்ந்த முதலீட்டுக் கருவியான - திறைசேரி முறிகளில் - செய்யப்பட்ட மொத்தமுதலீடு

**அட்டவணை II.3**

ஊ.சே.நி.2002 மற்றும் 2003 காலப்பகுதியில் பங்குச் சொத்துப்பட்டியலின் செயலாற்றம்

ரூ.மில்லியன்

| விடயம் | 2002 | 2003 |
|---|---|---|
| சராசரி சொத்துப்பட்டியல் | 1,219 | 1,229 |
| மொத்த பங்கிலாபவருமானம்(அ) | 90 | 97 |
| மொத்த மூலதன நன்மைகள் | 143 | 605 |
| பெறப்பட்டமிகை இலாபப் பங்குகள் (காலமுடிவில் பெறுமதி) | 2 | 143 |
| **மொத்த பங்கிலாபங்கள் மூலதன நன்மைகள் மிகை இலாபப் பங்குகள்** | **235** | **845** |

மூலம்: ஊழியர் சேம நிதியம்.

(அ) வரிவிலக்குப் பெற்ற பங்கிலாபங்கள் மீதான வரிச்சேமிப்பினை உள்ளடக்குகிறது.

**அட்டவணை II-4**

ஊ.சே.நி: 2003 இல் இரண்டாந்தரச் சந்தை நடவடிக்கைகள்

ரூ.மில்லியன்

| விடயம் | கொள்வனவு அளவு(அ) | விற்பனவு அளவு(அ) | மூலதன நன்மைகள் |
|---|---|---|---|
| திறைசேரி முறிகள் | 15,525 | 21,795 | 1,474 |
| திறைசேரி முறிகள் | 33,165 | 33,567 | 3,124 |
| உண்டியல்கள் | 158 | 245 | 2 |
| மத்திய வங்கிப் பிணையங்கள் | - | 1,875 | 3 |
| பங்குகள் | 437 | 690 | 605 |
| **மொத்தம்** | **33,760** | **36,377** | **3,734** |

(அ) செலவுப் பெறுமதிகளில் மூலம்: ஊழியர் சேம நிதியம்

2003இல் முதற் தடவையாக நீண்டகால சந்தை சார்ந்த முதலீட்டுக் கருவியான அரச ரூபாப் பிணைகளில் செய்யப்பட்ட மொத்த முதலீடுகளை விஞ்சிக் காணப்பட்டது. இது, சந்தை சார்ந்த கருவிகளில் அதன் முதலீடுகளை பன்முகப்படுத்துகின்ற ஊழியர் சேம நிதியத்தின் முதலீட்டுக் கொள்கையுடன் இணங்கிச் செல்வதாக இருந்தது. இதன் காரணமாக திறைசேரி முறிகளில் செய்யப்பட்ட முதலீடுகள் 2003ஆம் ஆண்டின் 36 சதவீதத்திற்கெதிராக 2003 இறுதியில் மொத்தமுதலீட்டுச் சொத்துப் பட்டியலில் 56 சதவீதமாகக் காணப்பட்டது. இதன் விளைவாக அரச ரூபாப் பிணையங்களில் செய்யப்பட்ட முதலீடுகளின் பங்கு 2002இன் 61 சதவீதத்திலிருந்து 2003 இறுதியில் 41 சதவீதத்திற்கு தொடர்ச்சியாக வீழ்ச்சியடைந்தது.

ஆய்விற்குரிய காலப்பகுதியானது ஊழியர் சேம நிதியத்தின் பட்டியலிடப்பட்ட பங்குப் பட்டியலின் செயலாற்றத்தில் முன்னேற்றம் காணப்படுவதை எடுத்துக் காட்டியது. சமாதான முயற்சிகளினால் உருவாக்கப்பட்ட புதிய முதலீட்டாளர் நம்பிக்கை மற்றும் நாட்டில் காணப்பட்ட தூண்டுதலளிக்கும் பேரண்டப் பொருளாதார நிலைமைகள் என்பன வற்றின் காரணமாக தூண்டப்பட்ட பங்குச் சந்தையில் காணப்பட்ட விலை உயர்வுப்போக்கு, 2003இல் வர லாற்றில் முன்னெப்பொழுதுமில்லாத உயர்ந்த அளவினை அடைந்தது. இதன் விளைவாக 2003இல் ஊழியர் சேமநிதியத்தின் பட்டியலிடப்பட்ட சொத்துப்பட்டியல் (அட்டவணை II.Iஇல்) ரூ.845 மில்லியன் மொத்தவிளைவை அல்லது அதன் சராசரிச் சொத்துப் பட்டியலில் 69 சதவீதமான விளைவு வீதத்தினை உருவாக்கியது. பொதுவான வட்டிவீத அமைப்பின் கீழ்நோக்கிய போக்குக் காணப்படுகையில் அரசபிணையங்களின் இரண்டாந்தரச் சந்தை வர்த்தகத்தில் ஊழியர் சேமநிதியம் தீவிரமாகப் பங்கேற்றமையானது 2003இல் கணிசமான மூலதன இலாபங்களை ஊழியர் சேமநிதியம் பெற்றுக் கொள்வதனை இயலச் செய்தது. ஊழியர் சேமநிதியம் அதன் இரண்டாந்தர சந்தை நடவடிக்கைகளின் மூலம்

பெற்றுக்கொண்ட ரூ.3,734 மில்லியன் கொண்ட மொத்த மூலதன இலாபமானது, மொத்த முதலீட்டுச் சொத்துப் பட்டியலின் மீதான விளைவு வீதம் 2002இன் 13.64 சதவீதத்திலிருந்து 2003இல் 13.68 சதவீதத்திற்கு அதிகரிக்கக் காரணமாகியது. நாட்டின் பொதுவான வட்டிவீதஅமைப்பு 2002இலும் 2003இலும் தொடர்ந்தும் கீழ்நோக்கிய போக்கினைக் கொண்டிருந்தபோதிலும், பட்டியலிடப்பட்ட பங்குகள் மற்றும் அரச பிணையங்களிலிருந்து பெறப்பட்ட உயர்ந்த மூலதன இலாபங்களின் அனுசரணையுடன் ஊழியர் சேம நிதியத்தின் உயர்ந்த விளைச்சலைக் கொண்ட நீண்டகால முதலீட்டுச் சொத்துப் பட்டியலானது ஊழியர் சேமநிதியம் 2003 இற்கான அதன் உறுப்பினர் நிலுவைகளின் மீது ஏறத்தாழ 12 சதவீதமான வட்டிவீதத்தினை பிரகடனப்படுத்துவதனை இயலச் செய்தது.

## மொத்த உறுப்பினர் நிலுவையும் 2003ஆம் ஆண்டிற்கான வட்டி வீதமும்

ஊழியர் சேம நிதியத்தின் மொத்த உறுப்பினர் நிலுவை, 2003ஆம் ஆண்டிற்காக மதிப்பிடப்பட்டு பிரகடனப்படுத்தப்பட்ட வட்டிவீதமான 12 சதவீதத்திற்கு கணக்கீடு செய்ததன் பின்னர், 2003இன் இறுதியில் ரூ.334 பில்லியன் கொண்ட பெறுமதிக்கு 13.2 சதவீமான வளர்ச்சியைப் பதிவு செய்தது. பிரகடனப்படுத்தப்பட்ட இவ்வட்டி வீத மட்டத்தில் உண்மையில் கிடைக்கத்தக்கதாகவுள்ள வீதம் ஏறத்தாழ 12.07 சதவீதமாகவும் கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணினால் அளவிடப்படும் 6.3 சதவீதமான பணவீக்கத்துடன் ஒப்பிடுகையில் உண்மையான பயன்தரு விளைவு வீதம் 5.77 சதவீதமாகக் காணப்பட்டது.

அட்டவணை II- 5

ஊ.சே.நி : அடிப்படைப் பண்புகள்

| விடயம் | 2002 | 2003 |
|---|---|---|
| உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கை | | |
| தற்பொழுது உதவுதொகை செலுத்தும் உறுப்பினர் கணக்குகள் | 9,378,384 | 9,725,000 |
| தற்பொழுது உதவுதொகை செலுத்தாத உறுப்பினர் கணக்குகள் | 1,860,122 | 1,997,000 |
| மொத்த உதவு தொகைகள் (ரூ.மில்.) | 7,518,262 | 7,728,000 |
| மொத்த மீளளிப்புக்கள் (ரூ.மில்.) | 47,660 | 49,225 |
| மீளளிப்புக்களின் எண்ணிக்கை | 18,927 | 20,118 |
| மொத்த முதலீட்டு சொத்துப் பட்டியல் (ரூபில்.) | 12,553 | 17,032 |
| மொத்த முதலீடுகளின் %மாக | 91,463 | 89,342 |
| அரசபிணையங்களின் முதலீடுகள்(%) | 283 | 320 |
| மொத்த முதலீடுகளின் %மாக | 97.5 | 98.3 |
| தனியார்துறை முதலீடுகள்(%) | 2.5 | 1.7 |
| சராசரிச் சொத்துச் பட்டியலின் மீதான பெறப்பட்டவருமான வீதம் | 13.64 | 13.68 |
| மொத்த உறுப்பினர் நிலுவை (ரூ.பில்) | 295 | 334 |
| மொத்த வருமானம் (ரூ.மில்.) | 36,171 | 41,313 |
| வருமான வரி (ரூ.மில்.) | 3,327 | 1,448 |
| நிருவாகச் செலவுகள் (ரூ.மில்.) | 333 | 299 |
| மொத்த வருமானத்தின் % நிருவாகச் செலவுகள் (%) | 0.9 | 0.7 |
| வீடமைப்புக் கடன்களுக்காக வழங்கப்பட்ட உறுப்பினர் நிலுவைச்சான்றிதழ் | 19,502 | 18,689 |
| உறுப்பினர் நிலுவைகளின்மீது பிரகடனப் படுத்தப்பட்ட ஆண்டு வட்டிவீதம் (%) | 12.10 | 12.00 |
| உறுப்பினர் நிலுவைகளின்மீது பிரகடனப் படுத்தப்பட்ட பயனுரு வட்டிவீதம் (%) | 12.26 | 12.07 |

மூலம் : ஊழியர் சேம நிதியம்

வரைபடம் II-4

உறுப்பினர் நிலுவைகள் மீதான வருவாய் வீதம்




வரைபடம் II-5

ஊழியர் சேமலாப நிதிய பங்களிப்பு எதிர் மீளளிப்பனவுகள்




வரைபடம் II-6

ஊழியர் சேமலாப நிதிய உறுப்பினர் நிலுவை




## செலாவணிக் கட்டுப்பாடு

2003ஆம் ஆண்டில், செலாவணிக் கட்டுப்பாட்டு சீர்திருத்தத்துறையில் பல முக்கிய அபிவிருத்திகள் காணப்பட்டன. மிக முக்கியமானது யாதெனில் வெளிநாட்டுச் செலாவணி முகாமைத்துவச் சட்டம் என்ற

பெயரிலான புதிய சட்டவாக்கமொன்று அறிமுகப் படுத்தப்பட்டதில் அடையப்பட்ட முன்னேற்றமேயாகும். இது தற்போதுள்ள செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தினை இரத்துச்செய்கிறது. இது வரையறை களையும் கட்டுப்பாடுகளையும் கொண்ட தற்போதைய வெளிநாட்டுச் செலாவணி அமைப்பிலிருந்து முகாமைப்படுத்தலையும் ஒழுங்குமுறைப்படுத்தலையும் கொண்ட வெளிநாட்டுச் செலாவணிக்கு மாறிச் செல்வதனை நோக்கமாகக் கொண்டது. இச்சட்ட வாக்கத்திற்கான மசோதா அரச வர்த்தமானியில் 19.09.2003அன்று வெளியிடப்பட்டது. அதனைத் தொடர்ந்து இது 19.11.2003அன்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுவதற்காக நிகழ்ச்சி நிரலில் பட்டியலிடப்பட்டது. அதன் பின்பு இம்மசோதா விற்கெதிராக உயர்நீதிமன்றத்தில் மனுச் செய்யப் பட்டதுடன், அரசியல் யாப்பிற்கு இணங்க இம் மசோதாவில் குறிப்பிடப்பட்ட திருத்தங்கள் செய்யப்பட வேண்டுமென நீதிமன்றம் தீர்மானித்தது. இத்திருத்தங்கள் சட்டவரைஞர்களால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இவ்வாண்டில், 2003 வரவு செலவுத் திட்டத்தில் அறிவிக்கப்பட்டவாறு, மூலதனக் கணக்கு கொடுக்கல் வாங்கல்களை மேலும் தாராளமாக்கும் பொருட்டு நடைமுறைக் கணக்கு கொடுக்கல் வாங்கல்கள் மீதான குறிப்பிட்ட தடைகளை அகற்றுவதற்கான வழிமுறை கள் நடைமுறைக்கிடப்பட்டன. இவ்வழிமுறைகள், செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்தினை தொடர்பு கொள்ளாமல் அனைத்து இறக்குமதிகளையும் இலங்கைச் சுங்கத்தினால் விடுவிப்பதற்கு அனுமதித்தல், முதலீட்டுச்சபைச் சட்டத்தின் 17ஆம் பிரிவின்கீழ் ஒப்புதலளிக்கப்பட்ட வெளிநாட்டவர் கட்டுப்பாட்டிலுள்ள கம்பனிகளுக்கு ரூபாக்கடன்களை வழங்குவதன் மீதிருந்த வரையறைகளை இலகுபடுத்தல், கடன்களின் மீள் கொடுப்பனவு நோக்கங்களுக்காக வெளிநாட்டு நாணயங்களின் முன்னோக்கிய கொள்வனவிற்காக அனுமதிக்கப்பட்ட காலப்பகுதியை அதிகரித்தல், நியாயமான வட்டிவீதமொன்றில் 360 நாட்கள் வரை யான கொடுகடன் அடிப்படையில் இறக்குமதிப் பொருட்களை அனுமதித்தல், இறக்குமதி ஆவணங்களை கையாளுகின்ற வங்கிகள் தவிர்ந்த வங்கியொன்றிலிருந்து இறக்குமதிக்கான வெளிநாட்டு நாணயங்களின் முன்னோக்கிய கொள்வனவு, வெளிநாட்டு நாணயக் கடனுக்காக ஈடுவைக்கப்பட்ட சொத்துக்கள் அத்தகைய கடன்கள் செலுத்தப்படாதவிடத்து விற்கப்பட்டு பெறப்பட்ட ரூபாவினை வெளிநாட்டு நாணயத்திற்கு மாற்றுவதற்கு அனுமதித்தல், மற்றும் வதிவற்றோ ாருக்கான உத்தரவாதங்களை வழங்குவதன் மீதான கட்டுப் பாடுகளை இலகுபடுத்தல் என்பனவற்றை உள்ளடக்கி யிருந்தன. வெளிநாட்டு நாணயங்களின் உள் அனுப்பல்களின் மூலம் நாட்டிற்குள் கொண்டுவரப்பட்ட பணத்தின் மூலம் வதிவற்ற ஒருவரால் கொள்வனவு செய்யப்பட்ட உண்மைச் சொத்துக்களை விற்பனை செய்வதன் மூலம் பெறப்படும் பணப்பெறுகைகளை இலங்கைக்கு வெளியே அனுப்புவதற்கும் அனுமதிக் கப்பட்டது. மேலும், வெளிநாட்டு நாணயத்திலான கடன்கள் மீதான குறைந்த வட்டி வீதங்களின் நன்மைகளை வெளிநாட்டில் தொழில்புரியும் இலங்கை வேலையாட்களுக்கும் வழங்கும் வழிமுறையாக அத்தகைய வேலையாட்களுக்கு வெளிநாட்டு நாணயக் கடன்களை வழங்குவதற்கு வங்கிகள் அனுமதிக்கப் பட்டன. இவை அத்தகைய வேலையாட்களின் வதியாதோர் வெளிநாட்டு நாணயக் கணக்கின் மீதியைப் பிணையாகக் கொண்டு அதற்கெதிராக இலங்கையின் எந்தவொரு தேவைப் பாட்டையும் பூர்த்தி செய்யும் விதத்தில் குறித்துரைக்கப்பட்ட நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உள்பட்டு விடுவிக்கப்பட வேண்டும்.

ஐக்கிய நாடுகளின் ஒழுங்குவிதிகளுக்கு இணங்கி ஒழுகும் விதத்தில் பயங்கரவாதத்துடன் தொடர்பான கொடுக்கல் வாங்கல்களைக் கண்டுபிடித்தல், நிதி நடவடிக்கை செயலணிக் குழுவினால் வழங்கப்பட்ட வழிகாட்டல் நியதிகளின்படி சட்டத்திற்கு முரணான பணத்தை சட்டரீதியானதாக மாற்றுவதனைத் தடைசெய்தல் மற்றும் தவறான செலாவணி முறை கேடுகளை தடுத்தல் போன்ற பல்வேறு குறிக் கோள்களுடன் செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம் கண்காணிப்பு நடவடிக்கைகளை மேலும் ஒழுங்குமுறைப்படுத்தியது. செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்திற்கு மாறானவற்றைப் புலனாய்வு செய்வது தொடர்பான நடவடிக்கைகள், சரக்கு அனுப்புவோரை பதிவு செய்தல், பயணமுகவர்கள், நாணய மாற்றுநர்கள் மற்றும் வெளிநாட்டு நாணயங்களை ஏற்றுக்கொள் வதற்கு அனுமதிக்கப்பட்ட மற்றைய ஆட்கள் மற்றும் நிறுவனங்களுக்கு அனுமதிகளை வழங்குவதும் அவற்றைப் புதுப்பித்தல் என்பன இவ்வாண்டில் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டன. நாணயமாற்று னர்களின் நடவடிக்கைகளை மேற்பார்வை செய்வதும் கண்காணிப்பதும் இவ்வாண்டில் மேலும் வலுவாக்கப்பட்டது.

## 1. வெளிநாட்டுச் செலாவணி முகாமைத்துவச் சட்டம்

கொடுக்கல் வாங்கல்களை இலகுவாகவும் சுமுகமாகவும் மேற்கொள்ளும் பொருட்டு செலாவணிக் கட்டுப்பாட்டு ஒழுங்குவிதிகளை தளர்த்தும் நோக்குடன் அவற்றை பரீட்சிப்பதற்காக நிதித்துறை சீர்திருத்தக் குழுவினால் நியமிக்கப்பட்ட செயலணிக் குழுவின் விதந்துரைப்புக்களை அடிப்படையாகக் கொண்டு நாணயச்சபையின் ஒப்புதலுடன் நிதித்துறைச் சீர்திருத்தக்

குழுவினால் தற்போதைய செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தினை இரத்துச் செய்து அதற்குப் பதிலாக "வெளிநாட்டுச் செலாவணி முகாமைத்துவச் சட்டம்" என்ற பெயரிலான புதிய சட்டவாக்கத்தினைக் கொண்டுவருவதற்கு அரசாங்கத்திற்கு விதந்துரைக்கப்பட்டது. தற்போதுள்ள செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் பணிப்புரைகளை வழங்குவதன் மூலமும் பொதுவான அனுமதியினை வழங்குவதன் மூலமும் மூலதனக் கணக்கு கொடுக்கல் வாங்கல்களை மேலும் தாராளமாக்குவதற்கு தற்பொழுதும் சாத்தியமான தன்மைகள் காணப்பட்ட போதும், கீழே குறிப் பிடப்படுகின்ற காரணங்களுக்காக புதுச் சட்டவாக் கத்தினை இயற்றுவதற்கு விதந்துரைக் கப்பட்டது.

(i) சட்டவாக்கத்திலேயே ஏற்பாடுகளைச் செய்வதன்மூலம் நடைமுறை மற்றும் மூலதனக் கொடுக்கல் வாங்கல்களின் தாராளமாக்கல் மாற்றமுடியாததும் உறுதியானதுமாகும் என்ற நம்பிக்கையை உருவாக்குவதற்கு.

(ii) நிதித்துறையில் காணப்படுகின்ற அண்மைய அபிவிருத்திகள் மற்றும் அயல் நாடுகளின் வெளிநாட்டுச் செலாவணி அமைப்பில் ஏற்படுகின்ற மாற்றங்கள் என்பனவற்றின் பின்னணியில் தற்போதைய செலாவணிச் சட்டத்தின் பழமையான தன்மை, பெரும்பாலான நாடுகளில் செலாவணிக் கட்டுப்பாடு/ முகாமைத்துவச் சட்டங்கள், வதிவோருக்கும் வதிவற்றோருக்குமிடையிலான குறித்துரைக்கப்பட்ட கொடுக்கல் வாங்கல் நியதிகளிலன்றி, நடைமுறை மற்றும் மூலதன கொடுக்கல் வாங்கல்களின் அடிப்படையில் நாட்டிற்குள்ளேயும் வெளியேயுமான செலாவணி அசைவுகளின் நியதிகளில் அமைந்திருக்கும் தன்மை.

(iii) தற்போதைய சட்டத்தின் ஏற்பாடுகளை மீறுவதற்குக் கிடைக்கக்கூடிய கட்டாய சிறைப்படுத்தல் ஆணை உள்படக் கடுமையான தண்டத்தினை விதிக்கக்கூடிய குற்றத்தன்மையைக் கொண்டிருப்பதானது முதலீடு மற்றும் வியாபார நடவடிக்கைகளில் பங்கேற்பவர்களின் தொடர்பில் அத்தகைய தண்டங்களை செலுத்த வேண்டியிருக்கும் என்ற பயத்தின் காரணமாக வெளிநாட்டு முதலீட்டாளர் நடவடிக்கைகள் மற்றும் வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல் வாங்கல்களுடன் தொடர்பான மற்றைய வியாபார நடவடிக்கைகள் என்பன வற்றைத் தடைசெய்வதாகவுள்ளது.

நிதியமைச்சிலுள்ள குழுவினால் இறுதியாக்கப்பட்ட உத்தேச வெளிநாட்டுச் செலாவணி முகாமைத் துவச்சட்டம் தற்போதைய சட்டத்தின் வரையறை மற்றும் தடை விதிக்கும் ஏற்பாடுகளை அகற்றுவதுடன் மிகத் தாராளமான சூழலொன்றில் நடைமுறை மற்றும் மூலதன கொடுக்கல் வாங்கல் நியதிகளில் வெளிநாட்டுச் செலாவணியின் வெளிச் செல்லும் மற்றும் உள்வரும் விடயங்களையும் பொறுத்த வரையில் கடுமையான வரையறைகளை விதிப்பதனை விட முறையான முகாமைத்துவத்தினையும் ஒழுங்கு விதிகளையும் வழங்கும். இது முதலீடுகளுக்கான வெளிநாட்டு மூலதனங்களின் உள்பாய்ச்சலை ஊக்குவித்து வியாபார நடவடிக்கைக்கான மிகத் தூண்டுதலளிக்கும் சூழலை உருவாக்கும். இவ்வுத்தேசச் சட்டம் 2004இல் இயற்றப்படும் என எதிர்பார்க் கப்படுகிறது.

## 2. மூலதனக் கொடுக்கல் வாங்கல்கள்

### (அ) வதியாதோரால் இலங்கையில் மேற்கொள்ளப்படும் முதலீடுகள்

2003ஆம் ஆண்டில் வதியாதோரால் இலங்கையில் மேற்கொள்ளப்படும் முதலீடுகள் தொடர்பான செலாவணிக் கட்டுப்பாட்டு ஒழுங்கு விதிகள் தொடர்பாக மேலதிக மாற்றங்கள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை.

### (ஆ) இலங்கையில் வதிவோரின் வெளிநாட்டு முதலீடுகள்

2003ஆம் ஆண்டில் வதியும் கம்பனிகளின் வெளிநாட்டு முதலீடுகளுக்காக மாண்புமிகு நிதியமைச்சரினால் 12 ஒப்புதல்கள் வழங்கப்பட்டதுடன் அத்தகைய முதலீடுகளின் மொத்தப் பெறுமதி ஐ.அ.டொலர் 29.2 மில்லியனாகக் காணப்பட்டது. அத்தகைய முதலீடுகள் அனுமதிக்கப்பட்ட துறைகள் ஏற்றுமதி ஊக்குவிப்பு, நிதியியல் பணிகள் மற்றும் பயணப்பணிகள் என்பன வற்றை உள்ளடக்கியிருந்தன. மேலும் வெளிநாட்டுக் கம்பனிகளின் துணைக் கம்பனிகளான இரு கம்பனிகள் அவற்றின் தாய்க் கம்பனிகளின் பங்குக் கொள்வனவுத் திட்டங்களில் பங்கேற்பதற்கு அனுமதிக்கப்பட்டன.

### (இ) வதிவற்றோரின் கட்டுப்பாட்டிலுள்ள கம்பனிகளுக்கு ரூபாக் கடன் வழங்கல்

2003 இல் வரவு செலவுத் திட்டத் தீர்மானத்தின் நியதிகளின்படி, செலாவணிக்கட்டுப்பாட்டிலிருந்து முழுமையாக விலக்களிக்கப்பட்ட முதலீட்டுச்சபைக் கம்பனிகளுக்கும் ஏனைய வெளிநாட்டவரின் கட்டுப்பாட்டிலுள்ள கம்பனிகளுக்குமிடையிலான

பாரபட்சமான தன்மையினை அகற்றும் நோக்குடன், வதிவற்றோரின் கட்டுப்பாட்டிலுள்ள முதலீட்டுச்சபைக் கம்பனிகளின் கடன்வழங்கலுக்கு இதுவரை பிரயோகிக் கத்தக்கதாக இருந்த முன்மதியுடைய வரையறைகள் அகற்றப்பட்டன.

### (ஈ) வதிவுள்ளோரின் வெளிநாட்டு நாணயக் கடன்பாடுகள்

தற்பொழுது, அங்கீகரிக்கப்பட்ட வணிகர்கள் நேரடி மற்றும் குறித்துரைக்கப்பட்ட மறைமுக ஏற்றுமதியாளர்களுக்கு வெளிநாட்டுச் செலாவணிக் கடன்களை வழங்க அனுமதிக்கப்பட்டுள்ளனர். தேசிய அபிவிருத்தி வங்கியும், டிஎவ்சிசி வங்கியும் அவற்றிடம் வெளிநாட்டுக் கடன் வசதிகளூடாகப் பெறப்பட்ட வெளிநாட்டுச் செலாவணி மூலவளங்கள் இருப்பின் மட்டும் வெளிநாட்டுச் செலாவணியிலான கடன்களை ஏற்றுமதியாளர்களுக்கு வழங்க அனுமதிக்கப்பட்டன. இதுவரை, உள்நாட்டுச் சொத்துக்களை ஈட்டினைப் பிணையாக வைத்துப் பெறப்பட்ட வெளிநாட்டு நாணயக் கடன்கள் மீளச் செலுத்தப்படாத விடயங்களைப் பொறுத்தவரை அத்தகைய சொத்துக்களின் விற்பனை மூலம் பெறப் பட்ட ரூபாப் பெறுகைகளை வெளிநாட்டு நாணயத்தில் மாற்றுவதற்கான அனுமதிக்கு அங்கீகரிக்கப்பட்ட வணிகர்கள் செலாவணிக் கட்டுப்பாட்டாளருக்கு விண்ணப்பிக்க வேண்டுமென கேட்டுக் கொள்ளப் பட்டனர். எனினும் 21.01.2003 இலிருந்து கடனை வழங்குகின்ற வேளையில் கொடுகடன் இடர்நேர்வு தொடர்பாக சரியான மதிப்பீடுகள் செய்யப்பட்டன என்பதற்கும், ஈடு வைக்கப்பட்ட சொத்துக்களை வெளிநாட்டு நாணயத்திற்கு விற்பதற்கு எடுக்கப்பட்ட முயற்சிகள் வெற்றியளிக்கவில்லை என்பதற்கும் வங்கிகள் திருப்திகரமான சான்றுகளை தம்வசம் வைத்திருக்குமிடத்து செலுத்தப்படாத வெளிநாட்டு நாணயக் கடன்கள் தொடர்பாக ஈடுவைக்கப்பட்ட சொத்துக்களின் விற்பனையிலிருந்து பெறப்பட்ட ரூபாப் பெறுகைகளை வெளிநாட்டுச் செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்தினை தொடர்பு கொள்ளாமலே வெளிநாட்டு நாணயத்திற்கு மாற்று வதற்கு வர்த்தக வங்கிகள் அனுமதிக்கப்பட்டன. வெளிநாட்டில் தொழில்புரியும் இலங்கையருக்குக் கிடைக்கத்தக்கதாகவுள்ள வசதிகளை அதிகரிக்கின்ற தொரு வழிமுறையாக, கடன்கள் ரூபாவில் வழங்கப்பட்டு மீள் கொடுப்பனவுகள் வெளிநாட்டு நாணயத்தில் மேற்கொள்ளப்பட வேண்டுமென்ற தேவைப்பாடு உள்ளிட்ட சில நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்குட் பட்டு, அவர்களது வதிவற்றோர் வெளிநாட்டு நாணயக் கணக்கிலுள்ள மீதிகளின் பிணைக்கெதிராக, இலங்கையில் எந்தவொரு நோக்கத்திற்கும் பயன்படுத்துவதற்காக அத்தகைய வேலையாட்களுக்கு வெளிநாட்டு நாணயக் கடன்களை வழங்குவதற்கு 2003 திசெம்பரிலிருந்து வர்த்தக வங்கிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டது. இவ்வாண்டுக் காலத்தில் இரு முதலீட்டுச்சபைக் கம்பனிகளுக்கு வழங்கப்படவுள்ள இரண்டு கூட்டுக் கடன்களில் பங்கேற்பதற்கு டிஎப்சிசி வங்கிக்கு அவற்றுள் ஒன்றுக்கான கூட்டுக்கடனில் பங்கேற்க இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திற்கும் அனுமதி வழங்கப்பட்டது.

### (உ) வதிவுள்ள கம்பனிகளின் வெளிநாட்டிலிருந்தான கடன்பாடுகள்

செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் (முதலீட்டுச்சபைக் கம்பனிகளின் 17ஆம்பிரிவு) ஏற்பாடுகளிலிருந்து முழுமையாக விலக்களிக்கப்பட்ட முதலீட்டுச்சபைச் சட்டத்தின் 17ஆம் பிரிவின் கீழ் ஒப்புதலளிக்கப்பட்ட கம்பனிகள் தவிர்ந்த, வதியும் கம்பனிகளின் வெளிநாட்டுக் கடன்பாடுகள் செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்தின் முன் அனுமதியைத் தொடர்ந்தும் பெறவேண்டும். ஆய்விற்குரிய ஆண்டுப் பகுதியில் இரண்டு கம்பனிகள் மொத்தமாக ஐ.அ.டொலர் 4.08 மில்லியன் பெறுமதியான கடனை வெளிநாட்டிலிருந்து பெற அனுமதிக்கப்பட்டன.

### (ஊ) கடன்களைத் தீர்ப்பதற்கான வெளிநாட்டு நாணயத்திலான முன்னோக்கிய ஒப்பந்தங்கள்

2003இல் நடைமுறைப்படுத்தப்பட்ட மற்றொரு வரவு செலவுத்திட்ட தீர்மானத்தின் நியதிகளின்படி கடன் கடப்பாடுகளை நிரூபிக்கும் விதத்தில் வங்கி விற்பனை உடன்படிக்கையொன்றை மேற்கொள்ளும் என்ற நியதிக்குட்பட்டு கடன்களைத் தீர்ப்பதற்காக வங்கிகளிலிருந்து வெளிநாட்டு நாணயங்களை கொள்வனவு செய்வதற்கான காலப்பகுதி, 360 நாட்களிலிருந்து 720 நாட்களுக்கு அதிகரிக்கப்பட்டுள்ளது.

### (எ) வதிவற்றோரின் பேரில் வங்கி உத்தரவாதங்களை வழங்கல்

உத்தரவாதங்களின் வழங்கலையும் புதுப்பித் தலையும் மேலும் தாராளமயமாக்கும் பொருட்டு 2003 இற்கான வரவு செலவுத் திட்டத்தில் உள்ளடக்கப் பட்டிருந்த தீர்மானம் 21.01.2003அன்று நடைமுறை ப்படுத்தப்பட்டதுடன் கீழே குறிப்பிடப் பட்டுள்ள நோக்கங்களுக்காக வதிவற்றோருக்கு வெளிநாட்டுச் செலாவணியில் கொடுப்பனவினை மேற்கொள்வதுடன் தொடர்பான வதிவோரினால் பொறுப்பேற்கப்பட்ட பின்வரும் கடப்பாடுகள் தொடர்பாக செலாவணிக் கட்டுப்பாட்டு திணைக்களத்திற்கு அறிவிக்காமலே உத்தரவாதங்களை வழங்கவும் அவற்றைப் புதுப்பிக்கவும் வர்த்தக வங்கிகள் அனுமதிக்கப்பட்டன.

(i) கேள்விப் பத்திரத்தில் அல்லது விலைக் கோரலில் குறித்துரைக்கப்பட்ட நிபந்தகைக்குள் பட்டு, ஏற்றுமதிகள் மற்றும் ஏனைய பணி ஒப்பந்தங்கள் தொடர்பாக வரையறை எதுவுமின்றி வதிவற்றோரின் பேரில் கோரல்முறி வழங்கல்

(ii) ஒப்பந்தம் வழங்கப்பட்டமையை நிரூபித்தல் அத்துடன் ஒப்பந்தத்தில் குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளுக்குட்பட்டு ஏற்றுமதிகள் அல்லது ஏனைய பணி ஒப்பந்தங்கள் தொடர்பாக வரையறை எதுவுமின்றி வதிவற்றோரின் பேரில் செயலாற்ற முறிகள் வழங்கல்

(iii) மேலே விடயம் (i) மற்றும் (ii)இல் குறிப்பிடப்பட்ட விடயங்கள் நீங்கலான நோக்கங்களுக்காக குறிப்பிட்ட கொடுக்கல் வாங்கல்களின் சான்றுகளைச் சமர்ப்பித்தல் மற்றும் மற்றைய நியதிகள் மற்றும் நிபந்தனைக் குட்பட்டு ஐ.அ.டொலர் 500,000 பெறுமதி வரைக்கும் வதிவற்றோரின் பேரில் உத்தரவாதக் கடிதங்கள் வழங்கல்

(iv) உத்தரவாதக் கடிதம் தொடர்பில் மேலே குறித்துரைக்கப்பட்ட மற்றைய நியதிகள் மற்றும் நிபந்தனைக்களுக்குப் புறம்பாக, வதிவற்ற முதன்மை ஆளிடமிருந்து அதே நியதிகளில் இணை உத்தரவாதம் அல்லது இணை நட்டஈட்டினைப் பெறுவதற்குள்பட்டு, இலங்கையில் வதியும் முகவரின் வேண்டுகோளின்படி அவர்களின் வெளிநாட்டு முதன்மை ஆளின் சார்பாக வதிவற்றோரின் பேரில் ஐ.அ.டொலர் 500,000 பெறுமதிவரையில் உத்தரவாதக் கடிதங்களை வழங்கல்.

இத்தாராளமயமாக்கலுக்கு முன்னதாக, ரூ.200,000இற்கு கூடுதலாக, வதிவற்றோரின் பேரில் கேள்விப் பத்திரம் மற்றும் உத்தரவாதக் கடிதங்கள் என்பனவற்றின் பெறுமதியில் முறையே 5 சதவீதத்திற்கும் 10 சதவீதத்திற்கும் கூடுதலாக கோரல் முறியினதும் செயலாற்ற முறியினதும் வழங்கலானது, விடய ஒழுங்கின்படி ஒவ்வொன்றிற்கும் முன் ஒப்புதலைப் பெறவேண்டும்.

### (ஏ) இலங்கையிலிருந்து குடிபெயர்ந்தோர் மற்றும் வெளிநாட்டு பிரசைகளின் வசமுள்ள தடுத்து வைக்கப்பட்ட நிதிகள்

இலங்கையிலிருந்து குடிபெயர்ந்தோருக்குச் சொந்தமான மூலதனச் சொத்துக்களின் விற்பனையிலிருந்து பெறப்பட்ட நிதிகள் தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்ட கணக்குகளில் வைத்திருக்கப்பட்ட வேளையில் அத்தகைய கணக்குகளிலிருந்து உழைக்கப்பட்ட வட்டி, ஏதேனும் வரிப் பொறுப்புக்கள் இருப்பின் அதனைச் செலுத்திய பின்னர் வெளியில் அனுப்புவதற்கு அனுமதிக்கப்பட்டது. கடந்த காலத்தினைப் போன்றே அத்தகைய தடுத்து வைக்கப்பட்ட கணக்குகளிலிருந்து வர்த்தக வங்கிகளூடாக தனிப்பட்ட ஆளுக்கு ரூ.750,000 மற்றும் குடும்ப அலகொன்றிற்கு ரூ.1.0 மில்லியன் என்ற வரையறைக்குள்பட்டு, நிதியினை விடுவிப்பதற்கு அனுமதியளிக்கப்பட்டது. இதன்படி, இவ்வாண்டில் நிரந்தர வதிவுரிமை பெற்று நாட்டைவிட்டுச் சென்றோரிடமிருந்து பெற்ற 277 விண்ணப்பங்கள் தொடர்பாக ரூ.95.98 மில்லியன் கொண்ட தொகை வெளிநாடுகளுக்கு அனுப்பப்பட்டது. மேலும் இலங்கையிலிருந்து குடிபெயர்ந்த இலங்கையருக்குச் சொந்தமான அசையாச் சொத்துக்களின் விற்பனையிலிருந்து பெறப்பட்ட ரூ.23.24 மில்லியன் வரையான நிதியமும் இவ்வாண்டில் வெளியில் அனுப்பி வைக்கப்பட்டது. பின்னைய வகையானது இறந்து போனவர்களுக்கு சொந்தமானவற்றின் விற்பனைப் பெறுமதி தொடர்பாக அவர்களின் வதிவற்ற வழித்தோன்றல்களினால் கோரப்பட்டவற்றையும் உள்ளடக்குகிறது.

### (ஐ) வதிவற்றவர்களுக்குச் சொந்தமான சொத்துக்களின் விற்பனைப் பெறுகைகளைத் திருப்பியனுப்புதல்

வதிவற்ற ஒருவருக்கு அல்லது அவரின் வாரிசான வதிவற்ற ஒருவருக்குச் சொந்தமான வதிவிட சொத்தின் கொள்வனவு விலையினை அத்தகைய சொத்தினை வெளிநாட்டு நாணயத்திலமைந்த உள்நாட்டுப் பணவனுப்பல்கள் மூலம் அத்தகைய வதிவற்றோரால் ஆரம்பத்தில் கொள்வனவு செய்யப்பட்டதாக அல்லது விருத்தி செய்யப்பட்டதாக இருக்குமிடத்து அந்தக் கொடுப்பனவினை அனுமதிப்பதற்கான வரவுசெலவுத்திட்ட தீர்மானம் நடைமுறைக்கிடப்பட்டது. இத்தகைய சொத்துக்களை கொள்வனவு செய்ய அல்லது அபிவிருத்தி செய்ய இலங்கைக்கு கொண்டு வரப்பட்ட பெறுமதியின் அளவிற்கு அவற்றின் விற்பனைப் பெறுகைகளை வதிவற்றவர் அல்லது வதிவற்றவரின் வாரிசு மீண்டும் இலங்கைக்கு வெளியே அங்கீகாரமளிக்கப்பட்ட வணிகர்களூடாக அனுப்பவும் அனுமதிக்கப்பட்டது. அனுமதிக்கப்பட்ட தொகையை அனுப்பிய பின் ஏதாவது மீதி நிதி இருப்பின் அதனை வதிவற்ற விற்பனையாளரின் பெயரிலுள்ள தடுத்துவைத்தல் கணக்கில் இடவேண்டும். இத்தீர்மானமானது 2003 ஒத்தோபர் 28ஆம்

நாளிடப்பட்ட எண் 1312/9 கொண்ட அரசாங்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட அறிவித்தலின் மூலம் நடைமுறைக்கிடப்பட்டது.

### 3. வர்த்தகக் கொடுக்கல் வாங்கல்கள்

பன்னாட்டு வர்த்தகக் கொடுக்கல் வாங்கல்கள் துறையில், முக்கியமானதொரு அபிவிருத்தி யாதெனில், இறக்குமதிகளுக்கான கொடுப்பனவு நியதிகள் தொடர்பில் 1998 ஏப்பிறல் 8ஆம் நாளிடப்பட்ட 1022/6 எண் கொண்ட அரச வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட இறக்குமதி ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் விதிக்கப்பட்ட ஒழுங்குவிதிகளுக்கான திருத்தமாகும். 27.02.2003ஆம் நாளிடப்பட்ட எண் 1277/12 கொண்ட அரசாங்க வர்த்தமானியில் அதே சட்டத்தின் கீழ் செய்யப்பட்ட ஒழுங்கு விதிகளின் கீழான இறக்குமதிகளுக்கான கொடுப்பனவு நியதிகளுக்குச் செய்யப்பட்ட திருத்தமானது, இவை முன்னைய ஒழுங்கு விதிகளில் குறித்துரைக்கப்பட்ட கொடுப்பனவு நியதிகளின் கீழ் வராத இவ் இறக்குமதிகளை செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்திற்கு அறிவிக்காமல் விடுவிப்பதற்கு இலங்கைச் சுங்கத்திற்கு அதிகாரமளிக்கின்றது. வெளிநாட்டுச் செலாவணி சம்பந்தப்படவில்லை என்னும் அடிப்படையில் பெறப்பட்ட ஐ.அ.டொலர் 1000 இற்கு மேற்பட்ட அன்பளிப்பு, வர்த்தக மாதிரிகள், வெளிநாட்டு முதலீட்டாளர்களால் இலங்கையிலுள்ள தமது செயற்றிட்டங்களுக்காக அனுப்பப்படும் கருவிகள் மற்றும் பொறிகள் என்பனவற்றை உள்ளடக்குகின்றது. நடைமுறைக் கொடுக்கல் வாங்கல்களில் தற்பொழுது காணப்படும் வரையறைகளை அகற்றுவதற்கான ஒரு வழிமுறையாகவே இது அறிமுகப்படுத்தப்பட்டது. முன்கூட்டியே செய்யப்பட்ட கொடுப்பனவுகளின்மீது பொருட்களை இறக்குமதி செய்வதற்காக வழங்கப்பட்ட ஆகக்கூடிய காலப்பகுதியும் 18.12.2003இல் நாளிடப்பட்ட எண். 1319/28 கொண்ட அரச வர்த்தமானியில் வெளியிடப்பட்ட ஒழுங்கு விதிகளின் மூலம் 1 மாதத்திலிருந்து 3 மாதத்திற்கு அதிகரிக்கப்பட்டது. எனினும், முன் கூட்டியே செய்யப்பட்ட கொடுப்பனவுகளுக்கெதிரான பொருட்களின் வருகையை உறுதிப்படுத்தவதற்காக, பொருட்களின் இறக்குமதிக்காகச் செய்யப்பட்ட அத்தகைய கொடுப்பனவுகளை செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம் தொடர்ந்தும் கண்காணித்து வருகின்றது. வர்த்தகக் கொடுக்கல் வாங்கல்களுக்கு மேலும் வசதிகளை வழங்குகின்ற நோக்கத்துடனான மற்றும் இரு வரவு செலவுத் திட்டத் தீர்மானங்கள் 21.01.2003 அன்று நடைமுறைக் கிடப்பட்டன. இவற்றில் ஒன்று முன்னோக்கிய ஒப்பந்தம் மீதான வெளிநாட்டு நாணயத்தினை இறக்குமதிகளுக்கான ஆவணக் கொடுகடன் மற்றும் ஏற்றுக் கொள்ளலின் மீதான ஆவண நியதிகளில் அல்லது கொடுப்பனவின் பின்னரான ஆவண நியதிகளில் இறக்குமதிச் சேகரிப்புக்கள் கையாளப்படுகின்ற வங்கிகள் தவிர்ந்த, வங்கி ஒன்றிலிருந்து கொள்வனவு செய்ய இறக்குமதியாளர்களை அனுமதிப்பதாகும். இதுவரை, அத்தகைய முன்னோக்கிய கொள்வனவுகள் இறக்குமதி ஆவணங்களை கையாளுகின்ற வங்கிகளிலிருந்து மட்டுமே அனுமதிக்கப்பட்டன. மற்றையது வட்டி விதிப்பனவுகள், நியாயமானதாக இருக்குமிடத்து 360 நாட்கள் வரையான கொடுகடன் அடிப்படையிலான பொருட்களின் இறக்குமதிக்கு ஒப்புதலளிக்க வர்த்தக வங்கிகளை அனுமதிப்பதாகும். பின்னர் கூறப்பட்ட வரவு செலவுத் திட்டத்தீர்மானத்தினை நடைமுறைப்படுத்த முன்னர், அத்தகைய நிரம்பலர் கொடுகடன் வசதிகள் மீதான வட்டிக் கொடுப்பனவிற்கு செலாவணிக் கட்டுப்பாட்டாளரின் முன் ஒப்புதல் தேவையாக இருந்தது.

### 4. கப்பற் சரக்கேற்றுவோரை பதிவு செய்தலும் அந்நியச் செலாவணிக் கொடுக்கல் வாங்கலில் ஈடுபட உரிமப் பத்திரங்களை வழங்கலும்

செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களமானது கப்பல் சரக்கேற்றுவோரைப் பதிவு செய்தல், பயணிகள் காசோலை வழங்கும் அதிகாரத்தினை பயண முகவர்களுக்கு வழங்குதல், பணமாற்றுநர்கள் மற்றும் சுற்றுலா விடுதிகள், தீர்வையற்ற கடைகள், பயண முகவர்கள் மற்றும் பணி வழங்குபவர்கள் போன்ற மற்றைய நிறுவனங்களுக்கும் உல்லாசப் பயணிகளுக்கும் அவர்கள் மேற்கொண்ட விற்பனை மற்றும் பணிகள் தொடர்பில் வெளிநாட்டுச் செலாவணியினை ஏற்பதற்கான உரிமம் வழங்கல்/புதுப்பித்தல் போன்றவைகளைத் தொடர்ந்தும் மேற்கொண்டு வருகின்றது.

#### (அ) கப்பற் சரக்கேற்றுவோரைப் பதிவு செய்தல்

2003ஆம் ஆண்டுப் பகுதியில் 9 புதிய கம்பனிகள் கப்பல் சரக்கேற்றுவோராக பதிவு செய்யப்பட்டதன் மூலம் கப்பற் சரக்கேற்றுவோரின் மொத்த எண்ணிக்கை ஆண்டின் இறுதியில் 126 இற்கு அதிகரித்தது. செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம் அதனுடன் பதிவு செய்து கொண்டுள்ள கப்பற் சரக்கேற்றுவோரின் நடவடிக்கைகளைத் தொடர்ந்தும் கண்காணித்தது.

#### (ஆ) பயணிகள் காசோலை வழங்குவதற்கு பயண முகவர்களுக்கு அதிகாரமளித்தல்

2003ஆம் ஆண்டில் மேலுமொரு பயண முகவரான என் கார் ரவல்ஸ் அன்ட் ரூர்ஸ் லிமிட்டட்டிற்கு பயணிகள் காசோலைகளை வழங்க அதிகாரம் வழங்கப்பட்டதுடன் அங்கீகாரமளிக்கப்பட்ட

பயண முகவர்களின் மொத்த எண்ணிக்கை 9 இற்கு உயர்வடைந்தது.

### (இ) நாணய மாற்றுநர்களின் நியமனமும் அவர்களை மேற்பார்வை செய்தலும்

2003இல் செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம் நாணயமாற்று வியாபாரங்களில் ஈடுபடுவதற்கு 3 கம்பனிகளுக்கு புதிதாக அனுமதிப் பத்திரங்களை வழங்கிய வேளையில் 37 நாணய மாற்றுனர்களின் அனுமதிப் பத்திரங்கள் புதிப்பிக்கப் பட்டதன் மூலமாக அங்கீகரிக்கப்பட்ட நாணய மாற்றுநர்களின் எண்ணிக்கை 40 இற்கு அதிகரித்தது. மாதமொன்றிற்கான ஆகக் குறைந்த புரழ்வாக ஐ.அ.டொலர் 5000 தேவைப்படுத்தப்பட்டமை, மற்றும் நாணய மாற்றுநர்கள் கிரமமாகப் பரிசோதிக்கப் பட்டமை என்பனவற்றின் விளைவாக நாணயமாற்று வியாபாரத்தில் 2003இலும் வளர்ச்சி பதிவு செய்யப் பட்டது. நாணயமாற்றுநர்களின் வருடாந்தப் புரழ்வு 2002இன் ஐ.அ.டொலர் 155.0 மில்லியனிலிருந்து 2003இல் ஐ.அ.டொலர் 170.2 மில்லியனுக்கு உயர்ந்து முன்னைய ஆண்டினைவிட 9.0 சதவீதங்கொண்ட அதிகரிப்பினைக் காட்டியது.

## 5. கண்காணிப்பு

1994இல் நடைமுறைக் கணக்குக் கொடுக்கல் வாங்கல் தாராளமயமாக்கப்பட்டதன் காரணமாக அங்கீகாரமளிக்கப்பட்ட வணிகர்களும் அனுமதியளிக் கப்பட்ட பயண முகவர்களும் நடைமுறைக் கணக்குக் கொடுக்கல் வாங்கல்களுக்காக தமது நியாய பூர்வமான தன்மையினையும் தற்றுணிபையும் பயன்படுத்தி கோரிக்கைகளின் மெய்த்தன்மைத் தொடர்பில் திருப்தியடைந்தால் வரையறை எதுவுமின்றி வெளிநாட்டுச் செலாவணியை வழங்க அனுமதிக்கப் பட்டனர்.

அனைத்து அங்கீகாரகமளிக்கப்பட்ட வணிகர்களும், ஒப்புதலளிக்கப்பட்ட பயண முகவர்களும் வெளிநாட்டுச் செலாவணியின் விற்பனை மற்றும் கொள்வனவு தொடர்பான விடயங்களை கிரமமான அடிப்படையில் செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம் அத்தகைய கொடுக்கல் வாங்கல்களைக் கண்காணிப்பதற்கு ஏதுவாக அத்திணைக்களத்திற்கு அறிக்கையிடுமாறு வேண்டப்பட்டன. 1999இலிருந்து அங்கீகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் மின்னியல் நிதி பரிமாற்றல் அட்டைகளூடான வெளிநாட்டுச் செலாவணி வழங்கல்களையும் அறிக்கையிடுமாறு வேண்டப்பட்டனர். தற்பொழுது அங்கீகாரமளிக்கப்பட்ட வணிகர்கள், வெளிநாட்டுச் செலாவணியிலமைந்த மாதாந்த எடுப்பனவுகள் அட்டையொன்றிற்கு ஐ.அ.டொலர் 5,000இனை விஞ்சுமிடத்து அது தொடர்பாக விபரமான மாதாந்த அறிக்கையொன்றை சமர்ப்பிக் கின்றனர்.

அங்கீகாரமளிக்கப்படாத மூலதன மாற்றல்கள் அதேபோன்று பணவனுப்பல்கள் என்பன பயங்கரவாத நடவடிக்கைகளுக்கான நிதியிடலுடன் அல்லது சட்டத் திற்குமாறான பணத்தினை சட்டரீதியான பணமாக மாற்றும் நடவடிக்கைகளுடன் இணைந்துள்ளதா என்பதனைக் கண்டறியும் முக்கிய வலியுறுத்தலுடன் வெளிநாட்டுச் செலாவணியின் விற்பனை மற்றும் கொள்வனவு மீதான கண்காணிப்பு நடவடிக்கைகள் கூடியளவிற்குத் தீவிரமாக்கப்பட்டன. இவ்வாண்டுக் காலத்தில் வெளிநாட்டுச் செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம், அனைத்து வர்த்தக வங்கிகளினதும் தலைமை அலுவலகத்தில் தற்பொழுது நிறுவப்பட்டுள்ள மென் பொருளைப் பயன்படுத்தி, வெளிநாட்டு நாணயத்தின் விற்பனை மற்றும் கொள்வனவு தொடர்பான தகவல்களை மின்னியல் ரீதியாக வழங்குவதற்கு வங்கிகளை ஊக்குவிக்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டது. தற்பொழுது பயணத்திற்கான வெளிநாட்டுச் செலாவணியின் விற்பனை ஐ.அ.டொலர் 5000 இனை விஞ்சுமிடத்து அது தொடர்பான தகவல்கள் அவற்றின் தலைமை அலுவலகத்தினால் மின்னியலூடாக சமர்ப்பிக்கப் படுகின்றன. கிளை அலுவலகங்களையும் உள்ளடக்கும் விதத்தில் தரவுகள் மின்னியல் ஊடாகச் சமர்ப்பிக்கப்படுவது விரிவுபடுத்தப்படும்போது கண்காணிப்பு நடவடிக்கைகள் விரைவடைவதுடன் வெளிநாட்டுச் செலாவணியின் உட்பாய்ச்சல்கள் மற்றும் வெளிப்பாய்ச்சல்களின் போக்குகளை மிகக் காத்திரமான முறையில் நேர காலத்துடன் இனங்காண உதவுகின்ற வேளையில் இம்முறையானது நிதியியல் உறுதிப்பாட்டு நிலைமை தொடர்பாகவும் வெளிநாட்டுச் செலாவணி நெருக்கடி போன்றன எந்தவொரு அச்சத்தையும் நேரகாலத்துடன் பயனுறு முறையில் எச்சரிக்கைப்படுகின்ற ஒரு கருவியாகவும் தொழிற்படும்.

சட்டத்திற்கு மாறாகப் பெறப்பட்ட பணத்தினை சட்டரீதியான பணமாக மாற்றுவதற்கெதிரான சட்டம் இலங்கையில் இன்னமும் நிறைவேற்றப்படாத போதும், அவ்வாறான சட்டத்திற்கு மாறான பணத்தினை சட்டரீதியான பணமாக மாற்றுவதனைத் தடுப் பதற்காக நிதியியல் நடவடிக்கை செயலணிக்குழுவின் 40 விதந்துரைப்புக்களையும் அனைத்து வர்த்தக வங்கிகளும் பின்பற்றுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டன. செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்தினாலும் வங்கிகளினாலும் மேற்கொள்ளப்பட்ட கடுமையான நடவடிக்கைகள் காரணமாக, நிதியியல் மோசடிகளை

மேற்கொள்வதற்கு வங்கித் தொழில் முறையைப் பயன்படுத்துவதற்கு எடுக்கப்பட்ட முயற்சிகள் முறியடிக்கப்பட்டன. மேலும், ஒரு தடவை முன்கூட்டிய கொடுப்பனவு ஒன்றின் தொடர்பாக இலங்கைக்கு நிதி மூலங்கள் அனுப்பப்பட்ட விடத்து நிதி மோசடிகளின் காரணமாக இது நிகழ்ந்திருக்கலாம் என சந்தேகிக்கப்பட்டதனைத் தொடர்ந்து, வங்கித் தொழில் முறையிலிருந்து அத்தகைய நிதியை எடுப்பனவு செய்வதிலிருந்தும் அந்தஆளை தடுப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

இவ்வாண்டுக் காலத்தில், செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம், வர்த்தக வங்கிகள், சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள், நாணய மாற்றுநர்கள், பயணிகள் காசோலைகளை வழங்க அங்கீகாரமளிக்கப்பட்ட பயண முகவர்கள், மற்றும் வெளிநாட்டு நாணயத்தினை ஏற்றுக்கொள்ள அங்கீகாரமளிக்கப்பட்டுள்ள நிறுவனங்கள் என்பனவற்றிற்கு, 2001ஆம் ஆண்டின் எண் 1 கொண்ட ஐக்கிய நாடுகள் சபையினது ஒழுங்குவிதிகளின் நியதிகளின்படி வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சினால் வழங்கப்பட்ட பணிப்புரைகளுக்கு தீவிரமாக இணங்கி ஒழுகச் செய்வதற்காக அவர்களின் கவனத்தினை ஈர்ப்பதற்காக பல தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களை வழங்கியதுடன், அவை தொடர்பான எங்களின் அறிவுறுத்தல்களும் மேலே குறிப்பிடப்பட்ட ஒழுங்கு விதிகள் பிரயோகிக்கத்தக்க ஆள்கள் மற்றும் நிறுவனங்களாக வெளிநாட்டு அமைச்சினால் பெயர் குறித்துரைக்கப்பட்ட ஆட்கள் மற்றும் நிறுவனங்களின் பட்டியலுடன் எந்தவொரு விதத்திலும் தொடர்புடைய ஆட்கள் அல்லது நிறுவனங்களினால் கணக்குகளைத் திறக்க அல்லது கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ள எடுக்கப்படும் முயற்சிகள் தொடர்பாகத் தகவல்கள் கோரப்படுகின்றன. உள்வரும் வெளிநாட்டுச் செலாவணிப் பணவனுப்பல்கள் அத்தகைய ஆட்களுடன் அல்லது நிறுவனங்களுடன் தொடர்புபட்டனவாக இருக்கின்றன என்ற ஐயம் ஏற்பட்ட பல சந்தர்ப்பங்களில், அப்பணவனுப்பல்களின் மூலத்தை முழுமையாகக் கண்டறியும்வரை அத்தகைய நிதிகளை விடுவிப்பதனைத் தடுப்பதற்கு பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

முன்கூட்டியே செய்யப்பட்ட கொடுப்பனவுகளுக்கெதிராக நாட்டிற்குள் பொருட்களும் பணிகளும் பெறப்படுகின்றனவா என்பதனை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக முன்கூட்டியே செய்யப்பட்ட கொடுப்பனவுக்கெதிரான இறக்குமதிகளை செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம் தொடர்ந்தும் கண்காணித்து வருகின்றது. வெளிநாட்டிலுள்ள உரிமையாளர்/ முகவரின் சார்பாக கப்பற்படுத்தல் மற்றும் வான்பயண முகவர்கள் அதேபோன்று கப்பற் சரக்கு ஏற்றுவோர் ஆகியோரினால் பேணப்படும் ரூபாக் கணக்கிற்கு செய்யப்படும் பற்று மற்றும் வரவும் இவ்வாண்டுப் பகுதியில் தொடர்ந்தும் கண்காணிக்கப்பட்டது.

### 6. புலனாய்வு

செலாவணிக் கட்டுப்பாட்டுச்சட்ட மீறல்கள் தொடர்பான குற்றச்சாட்டுக்களை செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம் தொடர்ந்தும் புலனாய்வு செய்தது. மொத்தமாக 42 வழக்குகள் தொடர்பான புலனாய்வுகள் முடிவடைந்துள்ளதுடன் 6 வழக்குகள் தொடர்பாக தண்டம் விதிக்கப்பட்டதுடன் மேலும் 5 வழக்குகள் தண்டம் விதிப்பதற்காக அடையாளங் காணப்பட்டுள்ளன. மேலும், செலாவணிக் கட்டுப்பாட்டினை மீறியமை கண்டுபிடிக்கப்பட்டு சம்பந்தப்பட்ட சாரரினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட செலாவணிக் கட்டுப்பாட்டு மீறல்கள் தொடர்பில் மேலும் 3 வழக்குகள் தொடர்பாகத் தண்டங்கள் விதிக்கப்பட்டன. இவ்வாண்டில் இவ்வனைத்து வழக்குகள் தொடர்பாகவும் விதிக்கப்பட்ட மொத்தத் தண்டம் ரூ.2.4 மில்லியனாக விளங்கியது. புலனாய்வுத்துறையில் காணப்பட்ட குறிப்பிடத்தக்க அபிவிருத்தி யாதெனில் பாரிய செலாவணிக் கட்டுப்பாட்டு மோசடியில் ஈடுபட்ட ஆட்களுக்கெதிராக செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்தினால் பூரணப்படுத்தப்பட்ட புலனாய்வுகளின்மீது சட்டமாஅதிபர் திணைக்களம் முறையாக வழக்கினைப் பதிவு செய்தமையேயாகும். இம் மோசடியில் தொடர்புபட்ட தொகை ரூ.1331மில்லியன் என மதிப்பிடப்பட்டுள்ளது.

சுங்க நடைமுறைகள் மீதான இலங்கை - இந்திய இருபுடை பேச்சுக்களில் செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்தின் பிரதிநிதிகள் பங்கேற்றதுடன், இந்திய சுங்க அதிகாரிகளினால் மத்திய வங்கியிடம் கேட்கப்பட்டதற்கிணங்க /இலங்கையில் மாற்று பணவனுப்பல் முகவர்களின் நடவடிக்கைகளுடன் தொடர்பான புலனாய்வுகளில் அடையப்பட்ட முன்னேற்றம் பற்றியும் இந்திய சுங்க அதிகாரிகளுக்கு தெளிவாக விளக்கப்பட்டது.

## தகவல்

வங்கி ஆளணியினருக்கும் அதேபோன்று பொது மக்களுக்கும் தகவல்களைப் பரப்புவதற்கு பொறுப்பாகவும், வங்கிக்கான மத்திய தகவல் பிரிவாகவும் விளங்கும் தகவல் திணைக்களமானது 2003ஆம் ஆண்டுக் காலப்பகுதியிலும் அதன் தொழிற்பாடுகளையும் கடமைகளையும் அத்துடன் சிறப்புப் பொறுப்புக்களையும் தொடர்ந்தும் ஆற்றியது.

உள்ளகச் செய்திகளைத் தாங்கிய சஞ்சிகைக்கான பண்புகளைக் கொண்ட "கவுளுவ" ஊழியர்களுக்கும் முகாமைத்துவத்திற்குமிடையில் இருவழி தொடர்புகளை ஏற்படுத்தி அதன் நடவடிக்கைகளைத் தொடர்ந்ததுடன் பல்வேறு கருப்பொருள்களை சிறப்பாக வங்கியினை நவீனமயப்படுத்தும் நிகழ்ச்சித் திட்டங்களைக் கொண்ட விடயங்களைக் கொண்ட 11 வெளியீடுகள் வெளியிடப்பட்டன. உள்ளடக்கப்பட்ட தலைப்புக்களில் மனிதவள அபிவிருத்தி, முகாமைத்துவ முறைகளின் செயலாற்றம், தன்னியக்கப்படுத்தப்பட்ட கொடுப்பனவு முறைகள் அதாவது அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறை மற்றும் பத்திரங்களற்ற பிணையங்கள்முறை என்பன உள்ளடக்கியிருந்தன. புதிதாக அறிமுகப்படுத்தப் பட்ட உள்ளக வலையமைப்பு தளம் உள்ளகத் தொடர்பூட்டலுக்கான திணைக்களத்தின் தகவல் பணித் தளத்திற்கு புதிதாகச் சேர்க்கப்பட்டுள்ள தொன்றாகும். இது வங்கி அலுவலர்களை பரந்தள விலான உள்நாட்டு மற்றும் பன்னாட்டு நிதியியல் செய்திகளிலும் ஏனைய நடைமுறை பொருளாதாரத் தகவல்களிலும் மிக இன்றியமையாத விதத்தில் இணைக்கிறது.

நிதியியல்துறை தொடர்பாக மின்னியல் மற்றும் அச்சு ஊடகங்களில் வெளிவருகின்ற தவறாக வழிநடத்துகின்ற மற்றும் ஒழுக்கக்கேடான விளம் பரங்களைக் கட்டுப்படுத்தும் பொருட்டு நிதித்துறை யிலுள்ள ஊடகத் தொடர்பூட்டல்களுக்காக திணைக்களம் முன்னணி விளம்பர முகவர்கள் அமைப்புக்களின் உறுப்பினர்களுக்கு சிறந்த நடைமுறைகளடங்கிய ஒழுக்கக் கோவையின் வரைவினை முன்மொழிந்தது. ஊடக நிறுவனங்கள் சுயவிருப்புடன் பின் பற்றுவதற்காக உத்தேச ஒழுக்கக் கோவை நிதியியல் துறைச் சீர்திருத்தக் குழுவின் கீழான பொதுமக்கள் விழிப்புணர்வு தொடர்பான செயலணிக் குழுவினால் தயாரிக்கப் பட்டிருக்கிறது.

திணைக்களமானது பொது மக்களுக்கான தகவல்களைப் பல்வேறு வழிகளில் வழங்கிவருகின்றது. இது நாளாந்த செலாவணிவீதங்கள், வாராந்த மற்றும் மாதாந்த பொருளாதாரக் குறிகாட்டிகள், நுகர்வோர் விலைச் சுட்டெண்கள், திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி முறிகள் மீதான தகவல்கள் என்பனவற்றைக் கிரமமாக வெளியிட்டு வருகின்றது. திணைக்களம், 66 பத்திரிகை வெளியீடுகள், 07 அரச வர்த்தமானி அறிவித்தல்கள் மற்றும் செய்தித்தாள்களில் வெளியிடப்பட்ட 141 விளம்பரங்கள் என்பனவற்றினூடாக வங்கியினது நடவடிக்கைகளை பிரபல்யப்படுத்தும் வேலைகளையும் கையாண்டு வருகின்றது. ஊடகப் பிரிவானது இவ்வாண்டுக் காலத்தில் நாணயக் கொள்கைமீதும், மொ.உ.உற்பத்தி காலாண்டுத் தரவுகளின் ஆய்வின்மீதும் 10 பத்திரிகையாளர் மாநாடுகளை ஒழுங்கு செய்துள்ளது. முக்கியத்துவம் வாய்ந்த பொருளாதார விடயங்களைக் கலந்துரை யாடுவதற்காக ஊடக நிறுவனங்களின் தலைவர்களுக்கு சிறப்பு பகல் உணவுடன் கூட்டமொன்று நடத்தப்பட்டது.இது வங்கித் தொழில் கற்கைளுக்கான ஆய்வு நிலையத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட பகிர ங்க விரிவுரைக்கான ஊடாக இணைப்பினையும் கையாண்டது. திணைக்களம் "சட்டகன" என்ற மாதாந்த வெளியீட்டினையும் மாதத்திற்கு இருமுறை வெளிவரும் "நியூஸ்சேர்வே" இனையும் தொடர்ந்து வெளியிட்டது. தமிழ் வாசகர்களின் நன்மைக்காக 2002இல் தொடங்கப்பட்ட சட்டகனவின் தமிழ்ப் பதிப்பான குறிப்பேடு இவ்வாண்டிலும் வெளியிடப்பட்டது. திணைக்களத்தின் விளம்பரப்படுத்தல் நிகழ்ச்சித் திட்டத்தின்கீழ் அது பல தொலைக்காட்சி நிகழ்ச்சித் திட்டங்களையும் ஒழுங்குபடுத்தியது.

முன்னைய ஆண்டுகளைப் போன்றே, வங்கியின் அச்சகம் வங்கியின் அச்சிடல் தேவைகள் அனைத்தையும் தொடர்ந்தும் நிறைவேற்றியது. கிரமமான அச்சிடல் பணிகள் மத்திய வங்கியின் ஆண்டறிக்கை, இலங்கை சமூகப் பொருளாதார தரவு மற்றும் இலங்கையின் பொருளாதார சமூக புள்ளி விபரங்கள், நியூஸ்சேர்வே, சட்டகன, கவுளுவ, மற்றும் உயர் அலுவலர் ஆய்வுகள், என்பவற்றை உள்ளடக்கியிருந்தன. மேலும் அதேநேர மொத்த தீர்ப்பனவுமுறை, பத்திரங்களற்ற பிணையங்கள் முறை தொடர்பான இரு சிறப்பு வெளியீடுகளும் தயாரிக்கப்பட்டன. முன்னைய ஆண்டுகளில் பெரும்பாலும், கறுப்பு வெள்ளையாக அச்சிடப்பட்டுவந்த மத்திய வங்கியின் மாதாந்த உள்ளக செய்திச் சஞ்சிகையான கவுளுவ நான்கு வண்ணங்களில் அச்சிடப்பட்டது. புள்ளிவிபரத் திணைக்களத்தினால் நடத்தப்படும் 2003/ 2004 நுகர்வோர்நிதி அளவீடு தொடர்பான அனைத்து அச்சிடல் வேலைகளும் இவ்வாண்டில் மேற்கொள்ளப்பட்டன. சிறப்பு வெளியீடான இலங்கையில் வங்கித் தொழில் மற்றும் நிதி தொடர்பான சட்டங்களின் நான்காவது திருத்தம் இவ்வாண்டில் வெளியிடப்பட்டது. இவ்வச்சிடல் வேலைகளுடன் சேர்த்து, வங்கியின் வாழ்த்துமடல் மற்றும் மத்திய வங்கியின் நாட்குறிப்பு என்பன உள்ளிட்ட 230 அச்சிடல் வேலைகளையும் பொறுப்பேற்றுக் கொண்டது. நிதியமைச்சின் ஆறு வெளியீடுகளும் இவ்வாண்டில் அச்சிடலுக்காக அச்சகத்திடம் ஒப்படைக்கப்பட்டன. திணைக்களம் தொடர்ந்தும் புகைப்படமெடுத்தல், மற்றும் கலை வடிவமைப்பு போன்ற பணிகளை வங்கிக்கு வழங்கி வந்தது.

ஊழியர் சேமநிதியம் பற்றிப் பொதுமக்களுக்கு அறிவூட்டுவதற்காக கல்விசார்ந்த தொலைக்காட்சி நாடகமொன்றை வடிவமைப்பதற்கான பொறுப்பையும்

திணைக்களம் ஏற்றுக் கொண்டது. ஆரம்ப கதைவசன வேலைகளின் தயாரிப்பு முற்றுப் பெற்றிருப்பதுடன் விபர ணச் சித்திரத்தினை 2004இன் தொடக்கப்பகுதியில் தயாரிப்பதற்கும் இலக்கிடப்பட்டுள்ளது.

விற்பனை மற்றும் விநியோகப் பிரிவு வங்கியிலுள்ள அதன் விற்பனை நிலையங்களூடாகவும் நாடுமுழுவதிலுமுள்ள புத்தக கடைகள் வலையமைப் பினூடாகவும் திணைக்களத்தின் விநியோக வேலைகளைக் கையாண்டது. திணைக்களம் மாத்தறையில் இடம் பெற்ற "யுகதெக்ம" கைத்தொழில் கண்காட்சியிலும் கொழும்பில் இடம்பெற்ற "நவதெக்ம" கண்காட்சியிலும் மிகத் தீவிரமாகப் பங்கேற்றது. இவை தவிர, கொழும்பு பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற "சர சவிமேளா" விலும் எம்பிலிப்பிட்டியாவிலும் கொழும்புப் பல்கலைக் கழகத்திலும் இடம்பெற்ற "நவதெக்ம" கண்காட்சியிலும் விற்கப்படுவதற்காக வெளியீடுகள் ஒப்பந்த அடிப்படையில் வழங்கப்பட்டன. சில பள்ளிக்கூடங்களினால் செய்யப்பட்ட வேண்டு கோளுக்கிணங்க நாணய தொல்பொருட் காட்சிச்சாலை உட்பட மத்திய வங்கியை அவர்கள் பார்வையிடுவதற்கு வசதிகள் செய்யப்பட்டன.

## நூலகமும் தகவல் நிலையமும்

நூலகம் மற்றும் தகவல் நிலையம் அதன் நூல்களை, 11274 இலிருந்து 14,562 இற்கும் அறிக்கைகளை 7674 இலிருந்து 9627இற்கும், இறுவட்டிகளை 800 இலிருந்து 843இற்கும், பிரதேசப் படங்களை 7இலிருந்து 22 இற்கும் அதிகரித்துக் கொண்டதுடன் கட்டப்பட்ட 210 தொகுதிகளும் இவ்வாண்டில் சேகரிக்கப்பட்டன. வங்கித் தொழில் கற்கைகளுக்கான ஆய்வு நிலையத்திலுள்ள நூலகமும் அதன் சேகரிப்புக்களை 4296இலிருந்து 4637ஆக அதிகரித்துக் கொண்டது.

மேலும் நூலகமும் மற்றும் தகவல் நிலையமும் இணையத்தள நேரடி வசதிகளைக் கொண்ட 240 சஞ்சிகைகளுக்கும் centralbanknet.com.Economist,FT.com.AWSJ,com போன்ற நேரடி இணையத்தள வசதிகளுக்கும் உதவுதொகை செலுத்தப்பட்டன.

ஆய்விற்குரிய ஆண்டில் நூலகம் மற்றும் தகவல் நிலையம் புதிதாகச் சேர்க்கப்பட்டவை (நூலகத்தினால் பெறப்பட்ட புதிய நூலின்) புதிய உள்ளடக்க விடயங்கள் தெரிந்தெடுக்கப்பட்ட கட்டுரைகள், உலகம் முழுவதிலும் மத்திய வங்கித் தொழில், விழிப்புச் செய்திகள் போன்ற மின்னியல் வெளியீடுகள் தொடர்ந்தும் சேகரிக்கப் பட்டதுடன் நூலகத்தைப் பயன்படுத்துபவர்களுக்கு உள்ளக வலயமைப்பினூடாக அத்தகவல்கள் பரப்பப்பட்டன.

நூலக வழிகாட்டிகள், நூல் நிலையத்தினைப் பயன்படுத்துபவர்களைப் பதிவு செய்தல், நூலகத் தாமதத்திற்கு தண்டப்பணம் விதித்தல் போன்றன அறிமுகப்படுத்தப்பட்டதுடன் மற்றும் சேகரிக்கப்பட்ட முழு நூல்களுக்கும் கிடைக்கோடு இடப்பட்டதன் மூலமும் நூல்களின் சுற்றோட்டம் ஒழுங்கு முறைப்படுத்தப் பட்டதன் காரணமாக நூலக மற்றும் தகவல் நிலையத் தினால் வழங்கப்பட்ட பணிகள் மேம்பாடுற்றன. இதன் விளைவாக நூல்களின் சுற்றோட்டம் யூலையிலிருந்து மிகத் தெளிவாக அதிகரித்தது.

2002இல் நூலக மற்றும் தகவல் நிலையத்தினால் தொடங்கப்பட்ட பொருளாதாரம் மற்றும் வங்கித் தொழில் நூலக வலையமைப்பின் (ebanklibnet.sl) உறுப்புரிமைத் தொகை 17இலிருந்து 23இற்கு அதிகரித்தது. நூலக மற்றும் தகவல் நிலையம இவ்வாண்டுக் காலத்தில் வலயமைப்பிற்கான மிக உயர்ந்த பங்களிப்பாளராக விளங்கியது.

## தகவல் தொழில்நுட்பம்

பன்னாட்டு ரீதியாகக் காணப்படும் சிறந்த நடைமுறைகளைத் பின்பற்றி, மத்திய வங்கி, முறை சார்ந்த எந்த ஒரு இடர்நேர்வினையும் குறைப் பதற்காகவும், நிதியியல் சந்தையில் முக்கிய பங்கினை வகிக்கும் வர்த்தக வங்கிகள், முதனிலை வணிகர்கள் மற்றும் தெரிந்தெடுக்கப்பட்ட நிறுவன ரீதியான முதலீட்டாளர்கள் என்போருக்கிடையேயான கொடுக்கல்வாங்கல்களை விரைவாக தீர்ப்பனவு செய்வதற்குமாக தேசிய கொடுப்பனவு முறையினைத் தரமுயர்த்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டது. இது மேம்பட்ட நுட்பம் 3 முறைமைகளை நிறுவுவதுடன் தொடர்புடையதாகும். அதாவது மத்திய வங்கிக்கான அதேநேர மொத்த தீர்ப்பனவு முறை, பத்திரங்களற்ற பிணையங்கள் தீர்ப்பனவு முறை மற்றும் தன்னியக்கப்படுத்தப்பட்ட பொதுப்பேரேட்டு முறை என்பனவாகும். இம்மூன்று முறைகளையும் நடைமுறைப்படுத்தும் பொறுப்பு தகவல் தொழில்நுட்பத் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டது. உலக வங்கியின் நிதியுதவியுடன் மத்திய வங்கியின் நவீனமயப்படுத்தல் செயற்றிட்டத்தின் கீழான தொழில்நுட்ப மேம்பாடுகளுடன் தொடர்புபட்டுள்ள மிக முக்கியமான செயற்றிட்டங்கள் இவையாகும்.

2003 செத்தெம்பர் 8ஆம் நாளன்று அதேநேர மொத்த தீர்ப்பனவு முறை நடைமுறைப் படுத்தப்பட்டமையும் 2004 பெப்புருவரியில் பத்திரங்களற்ற பிணையங்கள் தீர்ப்பனவு முறையினை நடைமுறைப்படுத்துவதற்கான செயற்பாடுகள் 2003 பெப்புருவரியில் நிறுவப்பட்டமையும் தேசிய கொடுப்பனவுக்கட்டமைப்பில் தகவல் தொழில்நுட்பத்தின்

பயன்பாட்டில் ஒரு கணிசமான பாய்ச்சலாகக் காணப்படுவதுடன், இப்பிராந்தியத்தில் சிறந்த தொழில்நுட்பத் தரத்துடன் கொடுப்பனவு முறையினைத் தொழிற்படுத்தும் முதலாவது நாடு என்ற ஈடிணையற்ற தகுதியையும் ஈட்டிக்கொண்டிருக்கிறது. தகவல் தொழில்நுட்பத் திணைக்களமானது திட்டமிடுவதிலிருந்து நடைமுறைப்படுத்தும் கட்டம் வரையான செயற்றிட்ட முகாமைத்துவம் வர்த்தக வங்கிகளுக்கும், முதனிலை வணிகர்களுக்கும் தொழில்நுட்ப அறிவினை மாற்றல் செய்தல், தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பினைத் தயாரித்தல், விலைக்குறிப்பீட்டு ஆவணத்தில் குறித்துரைக்கப்பட்ட வியாபார மற்றும் தொழில்நுட்பத் தேவைகளுடன் தொழிற்பாட்டுத் தன்மைகள் ஒத்துச்செல்கின்றமை என்பதனைப் பரீட்சிப்பதற்கான மென்கலத்தினை மேற்பார்வை செய்தல் மற்றும் இயக்கச்சூழலிற்குள் நுழையும் செயற்பாடுகளை முகாமை செய்தல் போன்ற செயற்றிட்டத்தின் முக்கியமான துறைகளில் தீவிரமாகத் தொழிற்பட்டது. கொடுப்பனவு முறையினை மேலும் நவீனமயப்படுத்துவதற்காக, மின்னியல் காசோலை முறையை நோக்கிச் செல்லும் நீண்டகால குறிக்கோளுடன் நாட்டின் காசோலை தீர்ப்பனவு முறைக்கு காசோலை உரு மாதிரிமுனை மடிப்பினை அறிமுகப்படுத்துவதற்காக மத்திய வங்கி வேலைகளைத் தொடங்கியுள்ளது. இச்செயற்றிட்டத்திலும் தலையாய பங்கினை வகிக்கும் என எதிர்பார்க்கப்படும் தகவல் தொழில்நுட்பத் திணைக்களம் காசோலை உருமாதிரிமுனை மடிப்பு கோட்பாட்டினை கோட்டிபாட்டியல் ரீதியாக்குவதற்காகவும் மற்றும் தரவுத் தொடர்பூட்டல் முறையிலும் தொழில்நுட்ப உள்ளீடுகளை வழங்கியது.

தகவல் தொழில்நுட்பத் திணைக்களம் வங்கியின் தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பினையும் அதேபோன்று தகவல் தொழில்நுட்ப அறிவினை தரமுயர்த்தவதிலும் தொடர்ந்தும் முயற்சித்தது. இவ்வாண்டுப் பகுதியில் வங்கியில் தகவல் தொழில்நுட்ப பயன்பாட்டில் குறிப்பிடத்தக்க விரிவாக்கம் எய்தப்பட்டமைக்கு அதேநேர மொத்த தீர்ப்பனவு முறை, ஒருங்கிணைக்கப்பட்ட பொதுப்பேரேடு, பன்னாட்டுத் தொழிற்பாடுகளுக்கான திறைசேரி வணிகக் கையாளல் அறை முகாமைத்துவம், தீவிரமான திறந்த சந்தை தொழிற்பாடுகளை நடத்துவதற்கான கணனி மயப்படுத்தப்பட்ட முறை என்பன போன்ற பல தகவல் தொழில்நுட்ப முறைகளின் நடைமுறைப்படுத்தல்கள், காரணங்களாக இருந்தன. இம்முறைகள் உடனடியாகத் தரவுகளைப் பதியும் வசதிகளையும், கொடுக்கல்வாங்கல் செயற்பாடுகளை அதே நேரத்திலேயே மேற்கொள்வதற்குமான வசதிகளையும் தகவல்களைப் பெறுவதற்கான வசதியான வழிகளையும் வழங்குகிறது. தற்பொழுது மத்திய வங்கியின் நாளாந்த தொழிற்பாடுகளில் பெரும்பாலானவற்றை தகவல் தொழில்நுட்பம் இயலச் செய்கிறது. எல்லாமாக வலயமைப்பினைக் கொண்ட சரியான நேரத்தில் கிடைக்கும் தகவல்கள் மற்றும் பகுப்பாய்வுகளின் அடிப்படையில் தமது தீர்மானங்களை எடுப்பதனை வசதிப்படுத்தும் விதமாக 700 தனியாள் கணனிகள், அலுவலர்கள் தமது கடமைகளை தகவல் தொழில்நுட்ப ஆற்றலைக் கொண்ட சூழலில் ஆற்றுவதற்காக அவர்களின் மேசைகளில் இணைக்கப்பட்டுள்ளன.

முன்னர் அனைத்து உயர்பதவி அலுவர்களுக்குமென மட்டுப்படுத்தப்பட்டிருந்த மின்அஞ்சல் வசதி உயர்தரமல்லாத அலுவலர்களையும் உள்ளடக்கும் விதத்தில் விரிவாக்கப்பட்டது. பரந்தளவு தொகுதியினருக்கு தகவல்களைக் கிடைக்கச்செய்யும் மனிதவள அபிவிருத்தியின் ஒரு பகுதியாக சுயகற்கையினை மேம்படுத்துவதற்கான வசதிகளை வழங்குவதற்காக உயர்பதவி அலுவலர்களின் கணனிகளுக்கான இணையத்தள தொடர்புகள் விரிவாக்கப்பட்டன. அதிகரித்த மின்அஞ்சல் மற்றும் இணையத்தள உள்வெளிச்செல்கைகளுக்கு இடமளிப்பதற்காக இணையத்தள/மின்அஞ்சல் இணைப்பினை வழங்குகின்ற கொண்டுசெல்லும் வழி இயலளவு 256 kbps இற்கு விரிவாக்கப்பட்டது. வெப்தளங்களில் தனிப்பட்ட திணைக்களங்களால் சேர்க்கப்படும் தகவல்கள் உள்ளக அலுவலர்களினால் மட்டுமே அடையப்பட வேண்டுமென்ற மத்திய வங்கி தகவல் பணியின் பணிப்பிற்கிணங்க அலுவலர்களின் தகவல்களைப் பெற்றுக்கொள்ளலில் "சுய-பணிக்" கோட்பாடு நடைமுறைப்படுத்தப்பட்டது. நலன்புரித் திணைக்களத்திற்கான வெப்தளமொன்று தகவல் திணைக்களத்தினால் உருவாக்கப்பட்டதுடன் இது 2003 ஒத்தோபர் 29 இலிருந்து நடைமுறைப்படுத்தப்பட்டது. தற்பொழுது திணைக்கள ரீதியான வெப்தளங்கள் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் புள்ளிவிபரம், தகவல் தொழில்நுட்பம், பயிற்சி, தகவல் மற்றும் நலன்புரி என்பனவற்றில் சிறப்பாகக் காணப்படுகின்றன. இத்தகைய அபிவிருத்திகள் பத்திரங்களை அடிப்படையாகக் கொண்டு தொழிற்படுகின்ற சூழலொன்றிலிருந்தும் விலகி நவீன மத்திய வங்கிக்கான தூண்டுதலாகக் கருதப்படுகின்ற முறைக்கு இட்டுச்செல்வதாகவுள்ளன.

## மென்கல அபிவிருத்திச் செயற்றிட்டங்கள்

தகவல் தொழில் நுட்பத் திணைக்களம், வங்கியானது திணைக்களங்களின் பயன்பாட்டிற்காக பல ஏஎஸ்/ 400 இனையும் அதேபோன்று தனியாள் கணனியினையும் அடிப்படையாகக் கொண்ட

பிரயோகங்களைத் தொடர்ந்தும் அபிவிருத்தி செய்தது. கைகளினால் மேற்கொள்ளப்பட்ட பெரும்பாலான செய்முறைகளுக்குப் பதிலாகவும் அதேநேர மொத்த தீர்ப்பனவு முறை பத்திரங்களற்ற பிணையங்கள் தீர்ப்பனவு முறை மற்றும் தன்னியக்க பொதுப் பேரேட்டு முறை என்பனவற்றை மேற்கொள்வதற் காகவும் இச்செயற்றிட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன.

நாணயத் திணைக்களத்தின் தொழிற்பாடுகளை கணனி மயப்படுத்துவதற்காக முன்னைய ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட செயற்றிட்டமானது 2003ஆம் ஆண்டிலும் தொடர்ந்ததுடன் நாணயத் திணைக் களத்தின் பெரும்பாலும் அனைத்துப் பிரிவுகளினதும் அதாவது வைப்புக்கள், பிரதான காப்பறை, வழங்கல் காப்பறை, நாணயம் எண்ணும் மற்றும், சரிபார்க்கும் பிரிவு என்பனவற்றின் கணனி மென்கல அபிவிருத்தி நிறைவு பெற்றுள்ளது. மென்கலமானது பயன் படுத்துநரின் குறித்துரைப்புக்களுக்கிணங்க செயற் படுகின்றதா என்பதனைப் பரீட்சிக்கும் செயற் பாடுகள் இடம்பெற்று வருகின்றன. முன்னேற்றங் கண்டுள்ள உள்ளக கணனி மயப்படுத்தப்பட்ட முறையின் நடைமுறைப்படுத்தலானது நாணய முகாமைத்துவ தொழிற்பாடுகளில் மேலும் முன்னேற்றங்களுக்கு இட்டும்செல்லும் என எதிர்பார்க்கப்படுவதுடன் குறைந்த அலுவலர்களுடன் நாணயத் திணைக்களம் மிகக் காத்திரமான முறையில் தொழிற்பாட்டினைக் காட்டவும் இயலச்செய்தது. நாணயப்பீடப் பிரிவிற்கான மென்கலம் இம்மாதிரி முறைகள் நடைமுறைப் படுத்தப்பட்ட பின்னர் அபிவிருத்தி செய்யப் படவுள்ளதுடன் திணைக்களத்தின் தொழிற்பாட்டினை தன்னியக்கப்படுத்துவதும் 2004 இன் முதலாம் காலாண்டுப்பகுதியில் நிறைவு செய்யப்படும்.

நாணயக்கொள்கைத் தொழிற்பாடுகளை சந்தை சார்ந்த ரீதியில் மேற்கொள்ளும் நடவடிக்கையாகவும் அவற்றின் பயனுறு தன்மையினை மேம்படுத்து வதற்காகவும், இலங்கை மத்திய வங்கி 2003 பெப்புருவரியிலிருந்து தீவிர சந்தை தொழிற்பாடுகளைத் தொடங்கியது. தீவிரமான திறந்த சந்தைத் தொழிற் பாடுகளை இலங்கை மத்திய வங்கியின் வலயமைப்பு (பரந்தளவு வலயமைப்பு) உட்கட்டமைப் பினை பயன்படுத்தி நடத்துவதற்காகவும் தொடர்பான பிணையங்கள்/நிதிகளை அதேநேர மொத்த தீர்ப்பனவு முறை/பத்திரங்களற்ற பிணையங்கள் தீர்ப்பனவு முறை யினூடாக மாற்றல்செய்ய மற்றும் தீர்ப்பனவு செய்வ தற்காகவும் மென்கலம் தகவல் தொழில்நுட்பத் திணைக்களத்தினால் உருவாக்கப்பட்டு நடைமுறைப் படுத்தப்பட்டது.

பொறியியல் களஞ்சியங்களின் இருப்புக்களின் அசைவினை கண்காணிப்பதற்கான பிரயோகமும், ஒவ்வொரு திணைக்களத்திற்குமான வரவுசெலவுத்திட்ட ஒதுக்கிற்குள் வெளிமூலங்களிலிருந்தான வாடகை ஊர்திப் பணிகளினூடாக திணைக்களங்களுக்கு வழங்கப்பட்ட போக்குவரத்துப் பணிகளின் செலவினைக் கண்காணித்து கட்டுப்படுத்துவதற்கான பிரயோகமும் நடைமுறைப்படுத்தப்பட்டதன் காரணமாக தகவல் தொழில்நுட்பத் திணைக்களத்தின் மென்கல அபிவிருத்தி முயற்சியினால் பணிமனைத் திணைக்களம் நன்மையடைந்தது.

மென்கலத்தையும் அதனுடன் தொடர்பான ஆவணத்தையும் உருவாக்குவதில் பின்பற்றப்பட்ட நடைமுறைகளானவை பயன்படுத்துநர் தேவைப்பாட்டு குறித்துரைப்புக்கள், தீர்வுக்கான வடிவமைப்பு, பரீட்சிப்பு பத்திரங்களை கொண்ட ஆவணம், நடைமுறைப் படுத்துவதற்கான மென்கலத்தினை ஏற்றுக்கொள் வதற்கான பரீட்சிப்புத்திட்டம் என்பன தொடர்பில் அவற்றை தயாரித்து ஒப்புதலை பெறவேண்டுமென கட்டாயப்படுத்தப்பட்டதன் மூலம் ஒழுங்குமுறை ப்படுத்தப்பட்டது.

## ஊழியர் சேமநிதிய திணைக்களத்திற்கான தகவல் தொழில்நுட்ப மூலவளங்களின் முகாமைத்துவம்

தகவல் தொழில்நுட்ப திணைக்களம், ஊழியர் சேமநிதியத் திணைக்களத்திற்காக, ஊழியர் சேமநிதிய பிரயோக முறையினை தொடர்ந்தும் பேணியது. 2003ஆம் ஆண்டில் மேலும் தன்னியக்கப்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. ஊழியர் சேமநிதிய வலயமைப்பு விரிவாக்கப்பட்டது. தற்பொழுது 197 கணனித் தொகுதிகள் ஊழியர் சேமநிதிய முறையுடன் நேரடியாக இணைக்கப்பட்டுள்ளன. திறைசேரி முறிகளின் வர்த்தகப்படுத்தலையும் உள்ளடக்குவதற்காக தகவல் தொழில்நுட்பத் திணைக்களம் திறைசேரி உண்டியல் முறையின் விற்பனை மற்றும் கொள்வனவுப் பரப்பினை விரிவாக்கியுள்ளது.

தகவல் தொழில்நுட்பத் திணைக்களம், அரச உதவு தொகை ஓய்வூதியத் திட்டம் பற்றிய ஆரம்ப ஆய்வுகளில் ஈடுபட்டிருந்தது. தரவுகளைப் பதிதல் மற்றும் கணக்கிடல் நோக்கங்களுக்கு வசதியளிப் பதற்காக மாதிரி முறையமைக்கப்பட்ட பிரயோக மொன்று உருவாக்கப்பட்டது. தகவல் தொழில்நுட்பத் திணைக்களமானது ஊழியர் சேமநிதியம் ஊழியர் நம்பிக்கை நிதியம் இரண்டினையும் ஒருங்கிணைக்கும் வழிகாட்டல் குழுவிலும் பிரதி நிதித்துவம் பெற்றதுடன் புள்ளிவிபரங்களையும் மற்றைய தேவையான தகவல்களையும் வழங்குவதன் மூலம் உதவி வருகிறது. ஊழியர் சேமநிதியம் தொடர்பான விடயங்களில் தகவல்

தொழில்நுட்பத் திணைக்களம் தொழில் திணைக்களத்திற கும் அதனுடன் தொடர்பான நிறுவனங்களுக்கும் தொடர்ந்தும் தகவல்களை வழங்கியது. இவ்வசதிகளை, தகவல் தொழில் நுட்பத் திணைக்களம் ஊழியர் சேமநிதியத்தின் கணனி வலையமைப்பின் அனைத்து பேணல் வேலைகளுக்கும் மேலதிகமாக வழங்கியது.

## தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பினை விரிவாக்குதல்

அதேநேர மொத்த தீர்ப்பனவு முறை, பத்திரங்களற்ற பிணையங்கள் வர்த்தகப்படுத்தல் முறை மற்றும் தன்னியக்கப்படுத்தப்பட்ட பொதுப்பேரேட்டு முறை என்பனவற்றை நடைமுறைப்படுத்துவதற்கு வசதியளிக்கும் விதத்தில் தகவல் தொழில்நுட்பத்தின் உட்கட்டமைப்பினை பெருமளவிற்கு விரிவாக்க வேண்டியிருந்தது. சுவிப்ற் தொடர்பான கொடுக்கல் வாங்கல்கள் செய்திகளை பங்கேற்கும் வங்கிகள் மற்றும் முதனிலை வணிகரிடமிருந்து பெறுவதற்கும் அவற்றை அதேநேர மொத்த தீர்ப்பனவு முறை/ பத்திரங்களற்ற பிணையங்கள் முறைக்கு செய்முறைப்படுத்து வதற்காக மாற்றல் செய்வதற்கும் இயலச்செய்யும் விதத்தில் இலங்கை மத்திய வங்கியில் சுவிப்ற் மென்கலமொன்றை நிறுவுவது அவசியமாயிற்று. முன்னர் வின்டோஸ் என்.ரி யில் காணப்பட்ட 'சுவிப்ற்' மென்கல தொழிற்பாட்டுத் தளமானது அதேநேர மொத்த தீர்ப்பனவு முறை/ பத்திரங்களற்ற தீர்ப்பனவு முறை என்பனவற்றுடன் இணங்கிச் செல்லக்கூடிய 'யூனிக்ஸ்' தளத்திற்கு மாற்றப்பட்டது. அதேநேர மொத்த தீர்ப்பனவு முறை பத்திரங்களற்ற பிணையங்கள் முறைக்கு சுவிப்ற் செய்திகளை நிச்சயமாக மாற்றுவதற்காக அனைத்து பங்கேற்பாளர்களும் சுவிப்ற் நெருங்கிய பயன்பாட்டுநர் குழுவினை அணுகினர்.

அதேநேர மொத்த தீர்ப்பனவு முறை/ பத்திரங்களற்ற பிணையங்கள் தீர்ப்பனவு முறையினை நடைமுறைப்படுத்துவதற்கு முன்னர் நிறைவு செய்யப்பட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்திகளில் சில பின்வருமாறு.

(i) தலைமை அலுவலகத்திலிருந்து தகவல்களை சேமித்து வைக்கும் பின்தளத்துக்கான இணைப்பு வழி 2 எம்பீபிஎஸ் இற்கு தரமுயர்த்தப்பட்டது.

(ii) தலைமை அலுவலகத்தில் தகவல்களைச் சேமித்துவைக்கும் ஆதாரமான தளமொன்றை அமைக்கும் வேலைகள் முற்றுப்பெற்றுள்ளன.

(iii) 'சேர்வர்' என அழைக்கப்படும் தகவல்களைச்சேமித்து வைத்திருக்கும் கணனி அறைகளில் தீ பாதுகாப்புக் கருவிகளை நிறுவுதல்.

(iv) பிரதான அமைவிடத்திலும் அதேபோன்று தகவல்களை பாதுகாத்து வைக்கும் பின்தள அமைவிடங்களிலும் யூபிஎஸ் இன் இயலாற்றலை அதிகரித்தல்.

(v) பேரழிவு ஏற்படும் காலத்தில் தரவுகளைச் பாதுகாத்து வைக்கும் பின்தள இடத்திலேயே தொழிற்பாடுகளைத் தொடங்கும் விதத்தில் தரைப்பரப்பின் அளவை விரிவாக்குதல்.

(vi) தரவுகளைச் பாதுகாத்து வைக்கும் பின்தள இடத்தில் கணக்காய்வு செய்யத்தக்க கட்டுப்பாட்டு வசதி வழிகளை நிறுவுதல்.

கணனி வலயமைப்பு விரிவடைந்தமையுடன் தகவல் தொழில் நுட்பத்திற்கான மூலவளத் தேவை குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்ததுடன் கிடைக்கத் தக்கதாகவுள்ள தகவல் தொழில்நுட்ப மூலவளங்களை மிகக் கூடியளவில் வைத்திருக்க வேண்டியதன் அவசியத்தை இது எடுத்துக்காட்டுகிறது. பயன்படுத்துவோரின் பிரச்சனைகளை தீர்ப்பதற்காக உதவி வழங்கும் பீடமொன்று தகவல் தொழில்நுட்பத் திணைக்களத்தில் நிறுவப்பட்டுள்ளது. திணைக்களங்களிலுள்ள தகவல் தொழில்நுட்ப அலுவலர்களுக்கு பல பயிற்சித் தொடர்கள் நடத்தப்பட்டமையின் காரணமாக அவர்கள் தமது சொந்த திணைக்களங்களின் தகவல் தொழில்நுட்பத்துடன் தொடர்பான பெரும்பாலான பிரச்சனைகளை தாமே கையாளக்கூடிய ஆற்றலைப் பெற்றிருந்தனர். மத்திய வங்கி அலுவலர்களின் தகவல் தொழில்நுட்ப அறிவாற்றலை அதிகரிக்கும் நோக்குடன் தகவல் தொழில்நுட்ப திணைக்களத்தின் அலுவலர்கள் வங்கித்தொழில் கற்கை ஆய்வு நிலையத்தில் விரிவுரைகளையும், பயிற்சிகளையும் நடத்துவதற்கு விடுவிக்கப்பட்டனர்.

## அதேநேர மொத்த தீர்ப்பனவு முறை/ பத்திரங்களற்ற பிணையங்கள் தீர்ப்பனவு முறைகளை நடைமுறைப்படுத்தல்

பின்வருவனவற்றை அடைவதற்காக இலங்கையின் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறை மற்றும் பத்திரங்களற்ற பிணையங்கள் தீர்ப்பனவு முறை என்பனவற்றை தன்னியக்கப்படுத்துவதற்கு இலங்கை மத்திய வங்கியினால் அதேநேர மொத்த தீர்ப்பனவு முறை மற்றும் பத்திரங்களற்ற பிணையங்கள் தீர்ப்பனவு முறைச் செயற்றிட்டங்கள் பொறுப்பேற்கப்பட்டன.

- தற்பொழுது தோற்றம் பெற்றுவரும் சிறந்த பன்னாட்டு நடைமுறைகளுடன் இணைந்து செல்லும் விதத்தில் கொடுப்பனவு முறை மற்றும் பிணையங்கள் முறையில் காணப்படும் இடர்நேர்வுகளைக் குறைத்தல்.

- பொதுப்படுகடனின் நம்பகத் தன்மையினையும் வர்த்தகப்படுத்தலையும் உயர்த்துதல்.
- புதிய தொழிற்பாட்டு பொறிமுறைக்கு வலுவூட்டுவதற்கு ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பினை நிறுவுதல்.

அதேநேர மொத்த தீர்ப்பனவு முறைச் செயற்றிட்டம் 2003 ஓகத்து 8ஆம் நாளன்று வெற்றிகரமாக நடைமுறைக்கிடப்பட்டது. பத்திரங்களற்ற பிணையங்கள் தீர்ப்பனவு முறையின் நடைமுறைப்படுத்தலை 2004 பெப்புருவரி 2ஆம் நாளன்று நடைமுறைப்படுத்துவதற்கும் அட்டவணையிடப்பட்டிருக்கிறது. பத்திரங்களற்ற பிணையங்கள் தீர்ப்பனவு முறையின் நடைமுறைப்படுத்தலுடன், அனைத்து அரச பிணையங்களும் மின்னியல் வடிவில் இலங்கை மத்திய வங்கியிலுள்ள மத்திய வைப்பகத்தில் வைத்திருக்கப்படும். கணனி தொழிற்பாட்டாளரினால் வழங்கப்பட்ட பிரயோக மென்கலமான சிஏஎஸ்/எல்சிஎஸ்எஸ் பதிப்பு 2.60 ஆனது ஏஐஎக்ஸ் 5.1 உடன் சேர்ந்து தொழிற்பாட்டு முறை மற்றும் தகவல் முறையாகவும் தொடர்புமுறை தரவுத்தள முகாமைத்துவ முறையாகவும் ஐபீஎம் ஆர்எஸ் 6000/ கணனி முறையில் இயங்கிவருகிறது. அதேநேர மொத்த தீர்ப்பனவு முறை/ பத்திரங்களற்ற பிணையங்கள் முறையின் கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் சுவிப்ற் செய்திகள் என்பனவற்றை செய்முறைப்படுத்துவதற்கு தகவல்களை சேமித்து வைக்கும் இரண்டு கணனி சேவர்களில் ஒன்று முதலாவது தலத்திலும் மற்றையது தகவல்களைச் பாதுகாத்து வைக்கும் நோக்கங்களுக்காக இரண்டாவது தலத்திலும் அமைக்கப்பட்டுள்ளன. இரண்டாவது தலம் முதலாவது தலத்துடன் உடனடியாக தகவல்களைப் பரிமாறிக்கொள்ளும் விதத்தில் இணைக்கப்பட்டுள்ளதுடன் அதேநேர அடிப்படையில் பூரணப்படுத்தப்படும். கொடுப்பனவுக் கொடுக்கல் வாங்கல்கள் சுவிப்ற் இணைப்புக்களினூடாக அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறையினூடாக பெறப்படுகின்றன. இது மிகப் பாதுகாப்பானதும், மிகப் பத்திரமானதுமான தொடர்பூட்டல் முறையாகக் கருதப்படுகிறது. அனைத்து வர்த்தக வங்கிகளும், முதனிலை வணிகர்களும் கணனி அமைப்பிற்கும் இலங்கை மத்திய வங்கியின் விசாலித்த அளவு வலயமைப்பிற்கும் கொடுக்கல்வாங்கல்கள் செய்திகளை அனுப்புவதற்கு ஏற்ற விதத்தில் சுவிப்ற் இணைப்பினூடாக இணைக்கப்பட்டிருக்கின்றார்கள். இலங்கை மத்திய வங்கியின் விசாலித்த அளவு வலயமைப்பு வங்கிகள் அவற்றின் கணக்கு நிலுவைகள் தீர்ப்பனவிற்காகக் காத்திருக்கும் கொடுப்பனவுகள் அத்தகைய கொடுப்பனவுகளின் முன்னுரிமையை மாற்றுதல் மற்றும் அணுகும் முறைகளைப் பயன்படுத்தி கணனியில் அறிக்கைகளைப் பெற்றுக்கொள்ளுவதற்கும் பயன்படுத்தி வருகின்றன.

இதன் நடைமுறைப்படுத்தலை வசதிப்படுத்துவதற்காக தகவல் தொழில்நுட்ப திணைக்களம் பின்வரும் இணைப்பு நிகழ்ச்சித்திட்டங்களை விருத்தி செய்ய வேண்டியிருந்தது.

- லங்கா கிளியரிலிருந்து அதேநேர மொத்த தீர்ப்பனவு முறைக்கு முக்கியமானதும், தீர்ப்பனவு தரவுகளை அனுப்புதல்.
- சிலிப்ஸ் என அழைக்கப்படும் வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு தரவுகளை லங்கா கிளியரிலிருந்து அதேநேர மொத்த தீர்ப்பனவு முறைக்கு அனுப்புதல்.
- ஏல விலைக்குறிப்பீடு மற்றும் இரண்டாந்தரச் சந்தை வர்த்தகப்படுத்தல் என்பனவற்றிற்கான உடனடி திறந்த சந்தைத் தொழிற்பாடுகள்.
- பத்திரங்கள் வடிவிலிருக்கும் பிணையங்களை பத்திரங்களற்றதாக மாற்றுவதற்கான வசதி.
- பத்திரங்களற்ற பிணையங்கள் தீர்ப்பனவு முறையில் தரப்பட்டுள்ள பொருந்தச் செய்யப்பட்ட வர்த்தக உள்ளீட்டு சாத்தியத்தினைப் பயன்படுத்தி கொடுக்கல்வாங்கல்களை அனுப்பும்வசதி.

மேலே குறிப்பிடப்பட்ட முறைகளில் பெரும்பாலானவை ஏஎஸ்/400 மூலவளங்கள் மற்றும் இலங்கை மத்திய வங்கியின் வலயமைப்பு என்பனவற்றைப் பயன்படுத்தி நடைமுறைப் படுத்தப்பட்டன.

## தன்னியக்கப்படுத்தப்பட்ட பொதுப்பேரேட்டு முறையினை நடைமுறைப்படுத்தல்

2003 ஓகத்து 8ஆம் நாள் நடைமுறைக்கு வந்த பொதுப்பேரேட்டு முறையினை நடைமுறைப் படுத்துவதில் தகவல் தொழில்நுட்பத் திணைக்களம் முக்கிய பங்காற்றியது. வங்கியின் நிதியியல் மற்றும் கணக்கீட்டு தொழிற்பாடுகளை இலகுபடுத்துவதற்காகவும், கொள்கை வகுப்பதற்கான தகவல்களை நேரத்திற்கு வழங்குவதற்காக முகாமைத்துவ தகவல் முறையினை உருவாக்குவதற்கான வசதியை அளிப்பதற்காகவும் இது மேற்கொள்ளப்பட்டது. டி.எம்.எஸ் லிமிட்டெட்டினால் உருவாக்கப்பட்ட மென்கலப் பிரயோகம் பொதுப்பேரேட்டு மற்றும் திறைசேரி வணிகப்படுத்தல் அறைக் கண்காணிப்பு முறை ஆகிய இரண்டு மாதிரி முறைகளைக் கொண்டிருந்தது. இவ்விரண்டு முறைகளும் எச்பி 9000 கணனி சேவர்களையும் UNIX தொழிற்படுத்தும் முறையினையும்

பயன்படுத்தி நடைமுறைப்படுத்தபபட்டது. ஒறாகிள் 9 தரவுத்தள முகாமைத்துவ முறையாகப் பயன்படுத்தப் படுகிறது. இரண்டு கணனி சேவர்கள் பொதுப்பேரேடு மற்றும் திறைசேரி வணிகப்படுத்தல் அறைக் கண்காணிப்பு முறைகளுக்காக முதலாவது தலத்தில் அமைக்கப்பட்டன. மற்றொரு சேவர் மீளப்பெறும் நோக்கங்களுக்காக இரண்டாவது தலத்தில் அமைக்கப்பட்டது. மற்றொரு சேவர் மீளப்பெறும் நோக்கங்களுக்காக இரண்டாவது தலத்தில் அமைக்கப்பட்டது. இரண்டாவது சேவர் உடனடி அதேநேர அடிப்படையில் பூரணப்படுத்தப்படுகிறது. இரண்டாவது தலத்தில் அமைந்துள்ள மற்றைய இரு எச்பீ/ சேவர்களும் பரிசோதனை மற்றும் பயிற்சி மற்றும் அபிவிருத்தி வேலைகளுக்காகப் பயன்படுத்தப்படவுள்ளன. பொதுப்பேரேட்டின் புதிய வடிவமைப்பிற்கு வசதியளிப்பதற்காக, வங்கிக்குள்ளேயான அனைத்து அலுவலர்களினதும் கொடுப்பனவினை பொதுப்பேரேட்டு முறையுடன் இணைக்கின்ற பல இடைத்தள நிகழ்ச்சித்திட்டங்களை தகவல் தொழில்நுட்பத் திணைக்களம் உருவாக்க வேண்டியிருந்தது.

## பன்னாட்டுத் தொழிற்பாடுகள்

### (அ) 2003ஆம் ஆண்டின் செயற்பாடு பற்றிய அறிக்கை

மத்திய வங்கி நாட்டின் அலுவல்சார் பன்னாட்டு ஒதுக்கின் பாதுகாவலனாகவும் அதன் முகாமைத்துவத்திற்கு பொறுப்பாகவும் இருக்கின்றது. இத் தொழிற்பாடானது பன்னாட்டுத் தொழிற்பாட்டுத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படுகின்றது. 1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாணயச் சட்டமானது, அதன் சொத்துக்களில் தங்கத்திலான முக்கிய ஒதுக்கினைப் பேண வேண்டுமெனவும், இலங்கை ரூபாவின் பன்னாட்டு உறுதிப்பாட்டினைப் பேணும்பொருட்டும் அதன் தற்போதைய பன்னாட்டுக் கொடுக்கல் வாங்கல்களில் சாத்தியமானளவிற்கு பெருமளவு சுதந்திரத்தை உறுதிப்படுத்துவதற்கும் இலங்கை மத்திய வங்கி திரவ நாணயங்களில் போதுமானளவு பன்னாட்டு ஒதுக்கினை பேண வேண்டுமெனவும் குறித்துரைக்கின்றது.

மத்திய வங்கியின் ஒதுக்கு முகாமைத்துவதத்தில் பாதுகாப்பு, திரவத்தன்மை மற்றும் வருவாய் என்பன முக்கிய பரிசீலனை விடயங்களாக இருந்துவருகின்றன. பன்னாட்டுத் தொழிற்பாட்டுத் திணைக்களம், முகாமைத்துவத்தினால் அங்கீகரிக்கப்பட்ட வரையறைக்குள்நின்று, ஒப்புதலளிக்கப்பட்ட இணைக்கிணையாளர்களினூடாக பன்னாட்டு நாணய மற்றும் மூலதனச் சந்தைகளில் அலுவல்சார் வெளிநாட்டுச் செலாவணி ஒதுக்கில் முதலீடு செய்தவேளையில் திரவச் சொத்திறகும் வங்கிச் சொத்துக்கள் மீதான வருவாய் வீதத்திறகுமிடையில் பொருத்தமான சமநிலையொன்றையும் பேணிவருகின்றது. பன்னாட்டு ஒதுக்கில் பெரும்பகுதி நிலையான வருமானப் பிணையங்களிலும் மீதி நிலையான வைப்புக்கள், அழைப்பு மற்றும் நடைமுறைக்கணக்குகள், மற்றும் தங்கம் என்பவற்றில் முதலீடு செய்யப்பட்டுள்ளன. வங்கி உயர்ந்தவீத அரசாங்க மற்றும் அரசாங்க உத்தரவாதம் கொண்ட நிலையான வருமான பிணையங்கள் அல்லது வளர்ச்சிகண்ட நாடுகளின் பிணையங்களில் மாத்திரம் முதலீடு செய்தது. பணச்சந்தை கருவிகளிலான இதன் முதலீடுகள் வங்கியினால் தரமிடல் கிரமமாக ஆய்வு செய்யப்படும் உயர் தரமிடப்பட்ட இணைக்கிணையாளர்களுக்கு மாத்திரம் வரையறுக்கப்பட்டிருந்தது.

பன்னாட்டுத் தொழிற்பாட்டுத் திணைக்களம் முக்கிய நாணயங்கள், வட்டிவீதங்கள் மற்றும் செலாவணி வீதங்களின் பொருளாதார அடிப்படைகளை கிரமமாக மீளாய்வு செய்ததுடன் நாணயம் மற்றும் ஒதுக்குகளின் சொத்து உள்ளமைப்பின் பெறுமதியினைப் பேணுமுகமாக தேவையான சீராக்கங்களையும் செய்கிறது. ஒவ்வொரு நாணயத்தினதும் வலிமை, படுகடன் தீர்ப்பனவுத் தேவைப்பாடுகள், நாணயங்களினதும் பிணையங்களினதும் வருமான உருவாக்க இயலளவு என்பனவற்றினைப் பொறுத்து உள்ளமைப்பிற்கு செய்யப்படும் பொருத்தமான மாற்றங்களுடன் 2003ஆம் ஆண்டுப் பகுதியில் ஒதுக்கில் முக்கியமாக ஐ.அ.டொலர், ஸ்டேர்லிங் பவுண் மற்றும் யூரோ ஆகிய நாணயங்களில் பேணப்பட்டன. வெளிநாட்டுச் செலாவணி ஒதுக்கு முகாமைத்துவ தொழிற்பாடுகளூடாக உருவாக்கப்பட்ட மொத்தத் தேறிய வெளிநாட்டு வருமானம் 2003ஆம் ஆண்டுப் பகுதியில் ஐ.அ.டொலர் 67.5 மில்லியனாக அல்லது ரூ.6.5 பில்லியனாகக் காணப்பட்டது.

சந்தையின் சுமுகமான தொழிற்பாட்டினை ஊக்குவிப்பதற்காகவும் செலாவணி வீதத்தின் ஒழுங்கான சீராக்கத்தினை உறுதிப்படுத்துவதற்காகவும் பன்னாட்டுத் தொழிற்பாட்டுத் திணைக்களம் உற்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையின் அபிவிருத்தியினைத் தொடர்ந்தும் நெருக்கமாகக் கண்காணித்தது. உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் பன்னாட்டுத் தொழிற்பாட்டுத் திணைக்களத்தின் தொழிற்பாடுகள் 2003ஆம் ஆண்டுப் பகுதியில் செலாவணிவீத உறுதிப்பாட்டினைப் பேணுவதற்குப் பங்களித்தன. 2003 திசெம்பர் இறுதியில் செலாவணி வீதம் பெரும்பாலும் மாற்றமின்றி டொலரொன்றுக்கு ரூ. 96.90 ஆக விளங்கி 2002ஆம் ஆண்டில் ஐ.அ.டொலருக்கெதிராகக் காணப்பட்ட 3.7 சதவீத தேய்விற்கெதிராக 0.01 சதவீதங் கொண்ட தேய்வினை மட்டும் பதிவு செய்தது. பன்னாட்டுத் தொழிற்பாட்டுத் திணைக்களம்

செலாவணிவீத உறுதிப்பாட்டினை, குறிப்பாக அனைத்து நாணயங்களுக்கெதிராகவும் ஐ.அ.டொலர் தேய்வடைந்தபோதும் பாரிய வெளிநாட்டுச் செலாவணி உட்பாய்ச்சலின் மத்தியில் ரூபா உயர்வடைகையிலும் பேணக் கூடியதாகவிருந்தது. 2003ஆம் ஆண்டில் ஒதுக்கிற்குள்வந்த பாரிய தனியொரு வெளிநாட்டுச் செலாவணி உட்பாய்ச்சல்களுக்குப் புறம்பாக, பன்னாட்டுத் தொழிற்பாட்டுத் திணைக்களம் சந்தையிலிருந்து ஐ.அ.டொலர் 375 மில்லியனைக் கொள்வனவு செய்தமையின் மூலம் நாட்டின் வெளிநாட்டுச் செலாவணி ஒதுக்கினைக் கட்டியெழுப்பக் கூடியதாகவிருந்தது. (அட்டவணை II-6)

2003இல் உள்நாட்டுச் சந்தையில் இலங்கை மத்திய வங்கியின் வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல் வாங்கலின் தொகுப்பிணை அட்டவணை II-6 மற்றும் II-7 இல் தரப்பட்டுள்ளன. வங்கிகளுக்கிடையிலான வெளிநாட்டுச் செலவாணி கொடுக்கல் வாங்கல்கள் அட்டவணை II-8 இல் தரப்பட்டுள்ளன.-

அட்டவணை II-6
2003ஆம் ஆண்டில் இலங்கையிலுள்ள வர்த்தக வங்கிகளுக்கும் இலங்கை மத்திய வங்கிக்குமிடையிலான அந்நியச்செலாவணி கொடுக்கல்வாங்கல்களின் மாதாந்த சுருக்கம்
(ஐ.அ.டொ.மில்லியனில்)

| மாதம் | கொள்வனவுகள் | விற்பனைகள் |
|---|---|---|
| சனவரி | 38.8 | - |
| பெப்புருவரி | 16.0 | - |
| மாச்சு | 18.0 | - |
| ஏப்பிறல் | 30.0 | - |
| மே | 10.0 | - |
| யூன் | 42.0 | - |
| யூலை | 46.2 | - |
| ஒகத்து | 56.5 | - |
| செத்தெம்பர் | 76.5 | - |
| ஒத்தோபர் | 28.8 | - |
| நவெம்பர் | - | 2.5 |
| திசெம்பர் | 14.8 | - |
| **மொத்தம்** | 377.4 | 2.5 |

அட்டவணை II-7
இலங்கை மத்திய வங்கியினால் கொள்வனவு செய்யப்பட்ட, விற்பனை செய்யப்பட்ட வெளிநாட்டு செலாவணியின் ஆண்டு அளவு(காசு, மறுநாள், உடன்) - 2003
(ஐ.அ.டொ.மி)

| ஆண்டு | கொள்வனவுகள் | விற்பனைகள் | தேறிய |
|---|---|---|---|
| 1996 | 96.2 | 198.0 | -101.8 |
| 1997 | 136.7 | 154.0 | -17.3 |
| 1998 | 61.0 | 214.8 | -153.8 |
| 1999 | 0.4 | 58.2 | -57.8 |
| 2000 | 2.0 | 303.6 | -301.6 |
| 2001 | 179.2 | 51.8 | +127.4 |
| 2002 | 223.7 | 46.6 | +177.1 |
| 2003 | 377.4 | 2.5 | +374.9 |

பன்னாட்டு தொழிற்பாட்டுத் திணைக்களத்தின் மத்திய அலுவலகம் வெளிநாட்டுச் செலாவணி ஒதுக்கு முகாமைத்துவ நடவடிக்கைகளுடன் தொடர்பான இடர்நேர்வுகளைக் கண்காணிப்பதுடன் முகாமைத் துவத்திற்கு அறிக்கைகளைச் சமர்ப்பிக்கின்றது. இப்பிரிவின் தொழிற்பாட்டு மட்டம் இடர்நேர்வுகளை

அட்டவணை II-8
வங்கிகளுக்கிடையிலான வெளிநாட்டுச் செலாவணி கொடுக்கல் வாங்கல் அளவு-2003
(ஐ.அ.டொ.மி)

| மாதம் | காசு | மறுநாள் | உடன் | முன்னோக்கிய | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| சனவரி | 23.275 | 47.5 | 89.5 | 152.15 | 312.425 |
| பெப்புருவரி | 28.175 | 40.875 | 62.95 | 97.3 | 229.3 |
| மாச்சு | 26.35 | 25.9 | 50.9 | 113.5 | 216.65 |
| ஏப்பிரல் | 40.75 | 35.75 | 60.8 | 124.45 | 261.75 |
| மே | 36.6 | 31.725 | 50.475 | 96.55 | 215.35 |
| யூன் | 23.3 | 49.6 | 71.375 | 133.1 | 277.375 |
| யூலை | 35.575 | 31 | 92.875 | 105.75 | 265.2 |
| ஒகத்து | 30.35 | 36.65 | 99.05 | 141.6 | 307.65 |
| செத்தெம்பர் | 20.8 | 40.45 | 419.1 | 229.85 | 710.2 |
| ஒத்தோபர் | 19.975 | 29.1 | 211.65 | 128.1 | 388.825 |
| நவெம்பர் | 6.5 | 12.35 | 178.325 | 62.65 | 259.825 |
| திசெம்பர் | 14.25 | 20.65 | 115.65 | 51.9 | 202.45 |
| மொத்தம் | 305.9 | 401.55 | 1,502.65 | 1,436.90 | 3647 |

மதிப்பீடு செய்தலும், உள்ளிட்ட இடர்நேர் முகாமைத்துவம், கண்காணித்தலும் முன்னரங்க அலுவலகத்திலுள்ள வணிகர்களுக்கும் தீர்மானங்களை மேற்கொள்வதற்காக முகாமைத்துவத்திற்கும் தகவல்களை வழங்குதல், உலகளாவிய நிதியியல் சந்தைகளின் மீதான ஆராய்ச்சி, ஒதுக்கு முகாமைத்துவத்தின் மீதான மையத்தகவல்களை (முதன்மை) பேணுதல், வணிகம் கையாளல் அறையின் நடவடிக்கைகளையும், வணிகர்களது செயலாற்றத் தினையும் கிரமமாக மதிப்பீடு செய்தல், நிதியியல் முன்மாதிரி நுட்பங்களில் ஆராய்ச்சி நடவடிக்கைகள், கருவிகளை உயர்த்துவதற்கான ஏனைய தீர்மானம், வணிக உறவு முறைகளையும் வங்கியின் இணைக் கிணையாளர்களையும் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்தல் என்பனவற்றை உள்ளடக்கும் விதத்தில் 2003இல் விரிவாக்கப்பட்டுள்ளது.

இடர்நேர்வு முகாமைத்துவ செயற்பாட்டின்போது, பரிசீலனையின் கீழ் உள்ள இடர்நேர்வுகளின் வகையினை அடிப்படையாகக் கொண்டு வங்கி பல்வேறுபட்ட அணுகுமுறைகளைப் பின்பற்றி வருகின்றது. உண்மையான சொத்துப்பட்டியலுடன் கூடிய கிரமமான ஒப்பீட்டிற்கான பொறிமுறையுடன் கூடிய காலப்பகுதி யொன்றினை மதிப்பிடுவதுடன் தொடர்பான வேலை இவ்வாண்டில் தொடங்கப்பட்டதுடன் அண்மிய எதிர்காலத்தில் மிகத்துல்லியமான காலத்தைக் கொண்ட அடித்தளமாகக் கொண்ட அளவுக்கு வீதம் அறிமுகப்படுத்தப்படவுள்ளது. இணைக்கிணை சாராரின் கொடுகடன் நம்பகத்தன்மையை (தரமிடலை அடிப்படையாகக் கொண்ட கட்டமைப்பொன்றிற்கு மதிப்பிடப்பட்டது) அடிப்படையாகக் கொண்ட விபரமான வரையறை அமைப்பொன்று வங்கி கொடுகடன் இடர்நேர்வுகளுக்கு உள்ளாகும் தன்மையினைக் குறைப்பதற்கு பயன்படுத்தப்பட்டது. இடர்நேர்வுகளின் பெறுமதி என அறியப்படும் பரந்தளவிற்குப் பயன்படுத்தப்பட்டுவரும் புள்ளி விபர வழிமுறைகளை அடிப்படையகக் கொண்டு சந்தை

இடர்நேர்வுகளை வங்கி மதிப்பிடுகிறது. சந்தை இடர்நேர்வுகளின் முகாமைத்துவத்திற்கு வசதியளிக்கும் பொருட்டு சொத்துப்பட்டியல் மட்டத்திலும் அதேபோன்று துணைக்கூறு மட்டத்திலும் தனித்தனி வரையறைகள் நிறுவப்பட்டுள்ளன.

வங்கியின் வெளிநாட்டு ஒதுக்கு சொத்துப் பட்டியல்களுடன் இணைந்து காணப்படும் பல்வேறு வகைப்பட்ட இடர்நேர்வுகளை மத்திய அலுவலகம் தொடர்ந்தும் மதிப்பீடு செய்து வருவதுடன் அதேநேர அடிப்படையில் நிறுவப்பட்டுள்ள அடித்தளமாகக் கொள்ளப்பட்ட அளவுக்குறியுடனும் ஒப்பிடுகிறது. ஒப்புதலளிக்கப்பட்ட வீச்சுக்களுக்கு அப்பால் காணப்படும் ஏதாவது விலகல்களின் தாக்கம் நேர அடிப்படையில் மதிப்பீடு செய்யப்படுவதுடன் நிவாரண வழிமுறைகளுக்கான யோசனைகளுடன் முகாமைத் துவத்தின் கவனத்திற்கு கொண்டு வரப்படுகின்றது. இடர்நேர்வு வழிமுறைகள் வெளிநாட்டுச் செலாவணி வணிகர்களுக்கும் அவர்களது நாளாந்த முதலீட்டுத் தீர்மானங்களுக்கு உதவும் விதத்தில் வழங்கப்படுகின்றது. புதிய திறைசேரி கையாளல் அறை முகாமைத்துவ முறை அறிமுகப்படுத்தப்பட்டதுடன் வணிகர் மேற்பார்வை, இடர்நேர்வு கண்காணிப்பு மற்றும் கொடுக்கல்வாங்கல் பதிவிடல் என்பன அதேநேர அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்றன. இதுவும் இடர்நேர்வு வழிமுறைகளை உரிய நேரத்தில் வெளிக்காட்டுதல் மற்றும் மற்றைய தீர்மானத்திற்கு ஆதரவான விடயங்கள் என்பவற்றுக்கு வசதியளிப்பதாகவுள்ளது. ஒதுக்கு முகாமைத்துவ நடவடிக்கைளின் செயலாற்றமானது மதிப்பிடப்பட்டு ஒதுக்கு சொத்துப்பட்டியலின் இடர்நேர்வு தோற்றப்பாட்டில் மேற்கொள்ளப்பட வேண்டிய ஏதாவது மாற்றங்களுடன் சேர்த்து காலத்திற்குக்காலம் நாணயச்சபைக்கு அறிக்கையிடப்படுகின்றது. மத்திய அலுவலகம் வணிகர்/வணிகர் கையாளல் அறையின் நாளாந்த நடவடிக்கைகள் பற்றி கவனித்து வருவதுடன் முன்ஒப்புதல் வழங்கப்பட்ட வழிகாட்டல்கள் மற்றும் வரையறைகளுடன் நடவடிக்கையினையும் செயலாற்றத் தினையும் ஒப்பிட்டு வருகின்றது. ஒப்புதலளிக்கப்பட்ட வீச்சிலிருந்து ஏதாவது விலகல்கள் காணப்படுமாயின் உடனடியாக முகாமைத்துவத்திற்கு அறிக்கை யிடப்படுகின்றது.

### (ஆ) 2003ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட முக்கியமான நிருவாக வழிமுறைகள்

வெளிநாட்டு ஒதுக்குகளின் முகாமைத்துவ தொழிற்பாடுகளுக்கு பொறுப்பாகவுள்ள துணைக் குழுவொன்றான வெளிநாட்டு ஒதுக்கு முகாமைத்துவக் குழு கொள்கைகளையும் பொதுவான உத்திகளையும் தொடர்ந்தும் உருவாக்கி வந்தவேளையில், தற்போதுள்ள நடைமுறைகள், வழிகாட்டல்கள், பொறுப்பாண்மைகள், சொத்துப்பட்டியல் ஏற்பாடுகள் மற்றும் இடர்நேர்வு முகாமைத்துவம் என்பனவற்றையும் மீளாய்வு செய்கின்றது. இது வினைத்திறன் மிக்க முகாமைத் துவத்திற்கும் இடர்நேர்வு முகாமைத்துவதற்கும் தேவைப்படும் கொள்கைகளையும், நடைமுறைகளையும் பின்பற்றியது. அதேவேளை நாளாந்த நாணய மற்றும் செலாவணிவீத கொள்கைகளைக் கவனித்து வரும் இன்னொரு துணைக்குழுவான சந்தைத் தொழிற் பாட்டுக்குழு நாளாந்தம் கூடி நாளாந்த முதலீட்டு மற்றும் சந்தைத் தலையீட்டு உபாயங்களை மேற்கொண்டு வருகின்றது. 2003இல் ஏற்படுத்தப்பட்ட திறைசேரி தொழிற்பாட்டுக்குழு வணிகம் செய்தல், தீர்ப்பனவுகள் மற்றும் கணக்குப்பதிவு என்பனவற்றின் தொழிற்பாடு விடயங்கள் பற்றி தேவையெழும் நேரங்களில் கலந்துரையாடியது.

சிறந்த பன்னாட்டு நடைமுறைகளுடன் இணைந்துசெல்லும் விதத்திலும் பன்னாட்டு கணக்கீட்டு நியமங்களுக்கு உதவும் விதத்திலும் இலங்கை மத்திய வங்கி அதன் நிலையான வருமான பிணையங்கள் சொத்துப்பட்டியலை விற்பனைக்கு கிடைக்கத்தக்க தாகவுள்ளது, மற்றும் வர்த்தகப்படுத்தல் வகைகளுக்கு மீளவகைப்படுத்த 2003இல் தீர்மானித்தது. பன்னாட்டு கணக்கீட்டு நியமங்களின்படி இலாபங்களைத் நிர்ணயிப்பதற்காக சந்தைப் பெறுமதிக்கு விலையிடல் கணக்கீட்டினை பின்பற்றி வருகின்றவேளையில், பன்னாட்டு தொழிற்பாட்டுத் திணைக்களம் நிறையேற்றப்பட்ட சராசரி செலவு அடிப்படையின் படியும் முகாமைத்துவத்திற்கு தொழிற்பாட்டு இலாபங்களை அறிவித்தல் வேண்டுமெனவும் தீர்மானிக்கப்பட்டது.

2003ஆம் ஆண்டில் பன்னாட்டுத் தொழிற்பாட்டுத் திணைக்களம் ஒதுக்கு முகாமைத்துவம் தொடர்பான தற்போதைய வழிகாட்டல்களை திருத்தியமைத்ததுடன் வணிக நடவடிக்கைகளைத் தன்னியக்கப்படுத்தும் வேலைகளையும் நிறைவுசெய்தது. முன்னையது இரு முக்கிய பணிகளுடன் தொடர்புபட்டிருந்தது. (i) 1995இல் தயரிக்கப்பட்ட ஒதுக்கு முகாமைத்துவ வழிகாட்டல்களை முழுமையாகத் திருத்துதல் மற்றும் (ii) முன்னேற்ற கரமான இணைக்கிணையாளர் கொடுகடன் இடர்முகாமைத்துவ முறையினை ஏற்படுத்துதல். பின்னயது பன்னாட்டு தொழிற்பாட்டுத் திணைக்களத் தின் தேவைப்பாடுகளுக்கிணங்க உள்நாட்டு நிறுவன மொன்றினால் திறைசேரி முகாமையினை புதுப்பித்து அபிவிருத்தி செய்யப்படுவதுடனும் 2004 சனவரி 2ஆம் நாளளளவில் மாதிரிகள் மற்றும் முறைகளை மேற்கொள்வதுடனும் தொடர்பானதாக இருந்தது. இவ்வழி முறைகள் வங்கியானது வணிகர்களை மேற்பார்வை செய்வதனை வலுப்படுத்தவும் அதன் வெளிநாட்டு ஒதுக்கு முகாமைத்துவ தொழிற்பாடு களிலுள்ள இடர்நேர்வுகளைக் குறைக்கவும் இயலச்

செய்ததுடன் ஒதுக்கு முகாமைத்துவத்தின் மேம்பட்ட வினைத்திறனின் காரணமாக உடனடியாகவே இடர்நேர்வுகளை அளவிட்டு கண்காணிப்பது இயலுவதாயிற்று.

### (இ) 2003இல் வழங்கப்பட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் சுற்றறிக்கைகள், பணிப்புரைகள்

**(i) நாளாந்த வெளிநாட்டு நாணய தொழிற்பாட்டு மீதிகள் மீதான வரையறைகள்**

வர்த்தக வங்கிகளின் நாளாந்த தேறிய வெளிநாட்டு செலாவணியின் திறந்த நிலை மீதான வரையறைகள் 2001 சனவரியில் மிதக்கும் செலாவணிவீத முறை அறிமுகப்படுத்துவதற்கு முன்பாக உருவாக்கப்பட்டது. 2001 சனவரியில் அறிமுகப்படுத்தும் நேரத்தில் இந்த வரையறையானது நேர்க்கணிய (மிகையாக வாங்கப்பட்டது) தேறிய வெளிநாட்டு செலாவணி திறந்த நிலைமை தொடர்பான ஒதுக்குகள் உட்பட ஒவ்வொரு வர்த்தக வங்கிகளினதும் உள்நாட்டு வங்கித் தொழில் பிரிவுகளின் மூலதனத்தின் 10 சதவீதத்தில் விதிக்கப்பட்டதுடன் அதன் பின்னர் 2002 மாச்சில் 15 சதவீதத்திற்கு திருத்தப்பட்டது.

இவ்வரையறைகளை நிர்ணயம் செய்வதன் குறிக்கோள் யாதெனில் நாணயம் மிதக்கவிடப் பட்டமையைத் தொடர்ந்து வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் இடம்பெறக்கூடிய மோசமான ஊக நடவடிக்கையினைக் கட்டுப்படுத்துவதேயாகும். 2003ஆம் ஆண்டில் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையின் உறுதிப்பாட்டையும் சந்தையின் ஆழத்தையும் நெகிழ்ச்சித்தன்மையினையும் அதிகரிப்பதன் மூலம் மேலும் அபிவிருத்தி செய்யப்பட வேண்டியதன் அவசியத்தையும் கருத்திற்கொண்டு வரையறையை உள்நாட்டு வங்கித்தொழில் பிரிவின் மூலதனத்தினது 15 சதவீதத்திலிருந்து தனிப்பட்ட வங்கிகளின் மூலதன வலுவினைப் பொறுத்து அவற்றின் ஒன்று திரட்டப்பட்ட மூலதன நிதியத்தில் ஆகக்கூடியது 20 சதவீதத்திற்கு 2003 செத்தெம்பர் 1ஆம் நாளிலிருந்து உயர்த்துவதற்கு தீர்மானிக்கப்பட்டது. மூலதனப் போதுமைக்கான முன்மதியுடைய தேவைப்பாடுகளுக்கான அடிப்படை 2003 சனவரியில் உள்நாட்டு வங்கித்தொழில் பிரிவுகளின் மூலதனத்திலிருந்து ஒன்று திரட்டப்பட்ட மூலதனத்திற்கு (உள்நாட்டு வங்கித்தொழில் பிரிவும், வெளிநாட்டு நாணய வங்கித்தொழில் பிரிவும்) திருத்தப்பட்டமையின் காரணமாக வரையறைக்காக ஒன்று திரட்டப் பட்ட மூலதன நிதியம் பயன்படுத்தப்பட்டது.

மிகை விற்பனை (எதிர்க்கணிய) வெளிப்படுத்துகை நிலைமைகள் மீதான வரையறைகள் வங்கிகளின் முகாமைகளினால் உள்ளகரீதியில் மேற்கொள்ளப் படுவதற்காக விடப்பட்டன. வங்கிகளின் மூலதன நிலுவைகள் காலத்திற்குக்காலம் மாறுகின்றதன் காரணமாக கணக்காய்வு செய்யப்பட்ட நிதியியல் கூற்றுக்களின் அடிப்படையில் இவ்வரையறைகள் ஆண்டுதோறும் திருத்தியமைக்கப்படும்.

**(ii) வெளிநாட்டு நாணய வைப்புப் பொறுப்புக்கள் மீதான வர்த்தக வங்கிகளின் வாராந்த அறிக்கைக்கு திருத்தங்கள்**

வர்த்தக வங்கிகள் அவற்றின் வெளிநாட்டு நாணய வைப்புப் பொறுப்புக்களை ஐ.அ.டொலருக்கு மாற்றிக் கொள்வதற்கும் அத்தகைய நிலுவைகளை மத்திய வங்கிக்கு அறிக்கையிடுவதற்குமாக மத்திய வங்கி செலாவணி வீதங்களின் அட்டணையொன்றினை வாரந்தோறும் வழங்கி வருகின்றது. இவ்வட்டவணை யூரோ பிரதேசத்தின் மரபுரீதியான நாணயங்களையும் உள்ளடக்கியிருந்தது. யூரோ பிரதேசத்தின் மரபுரிமை நாணயங்களை 2002 மாச்சு தொடக்கம் சட்டரீதியானதாக இருந்துவரும் யூரோ பிரதேச மரபு நாணயங்கள் நிறுத்தப்படவுள்ளமையினால் பெல்ஜியம் பிராங், டியூச் மார்க், பிரான்சிய பிராங், இத்தாலியன் லீரா மற்றும் நெதர்லாந்து கில்டர் ஆகிய நாணயங்கள் 13 ஒகத்து 2003 ஆம் நாளன்று வெளிநாட்டு நாணய வைப்புப் பொறுப்புக்கள் மீதான வாராந்த அறிக்கையிலிருந்து நீக்கப்பட்டன.

**(iii) வெளிநாட்டு நாணயத்தாள்களின் கொள்வனவும் மத்தியகிழக்கு நாணயங்களின் கொள்வனவிற்கான சிறப்பு ஒழுங்குகளும்**

கடந்த காலத்தில், குறிப்பாக வெளிநாட்டு செலாவணிவீத பிரிவுகள் தொழிற்பாட்டிலிருந்த, உள்ளூர் சந்தை குறைந்தளவில் அபிவிருத்தியடைந்து காணப்பட்ட மற்றும் சுங்கத்திணைக் களத்தினால் பறிமுதல் செய்யப்பட்ட நாணயத் தாள்களை பெற்றுக்கொள்வதன் மூலம் அரசாங்கத்திற்கான முகவராக தொழிற்பட்ட அந்தக் காலத்தில் மத்திய வங்கி வெளிநாட்டு நாணயத்தாள்களை வாங்குவதில் ஈடுபட்டிருந்தது. மிதக்கின்ற வீதமுறை அறிமுகப்படுத்தப் பட்டமையின் காரணமாகவும் வெளிநாட்டு நாணயத்தாள்களை கொள்வனவு செய்தல் மற்றும் அவற்றைத் தாய்நாட்டிற்கு அனுப்பிவைத்தல் என்பனவற்றிற்காக வர்த்தக வங்கிகள் பல மிகச்சிறந்த நடைமுறைகளைப் பின்பற்றி வருவதனாலும் இலங்கை மத்திய வங்கி 2003 ஏப்பிறல் 25ஆம் நாளிலிருந்து வெளிநாட்டு நாணயங்களின் கொள்வனவினை நிறுத்திக் கொண்டது.

## சட்டம்

சட்டத் திணைக்களத்தின் முக்கிய தொழிற்பாடுகள் சட்ட விடயங்களில் வங்கிக்கு மதியுரைகளை வழங்குதல், நீதி மன்றங்களிலும் மற்றைய சட்டமன்றங்களிலும் வங்கியைப் பிரதிநிதித்துவப்படுத்தல் மற்றும் வங்கித் தொழில் மற்றும் நிதியியல் துறைகளின் சட்ட மறுசீரமைப்பிற்கான பங்களிப்பு என்பனவற்றை உள்ளடக்கியிருந்தது.

2003ஆம் ஆண்டில் சட்டத் திணைக்களம் சட்ட விடயங்களில் வங்கிக்கு தொடர்ந்தும் மதியுரைகளை வழங்கியது. குறிப்பாக, திணைக்களம் அதேநேர மொத்த தீர்ப்பனவுமுறை, பத்திரங்களற்ற பிணையங்கள் தீாப்பனவுமுறை மற்றும் வைப்புமுறை என்பனவற்றிற்கு உதவியளிக்கும் விதத்தில் சட்டங்கள், விதிகள், ஒழுங்குவிதிகள் மற்றும் ஏனைய சட்டரீதியான ஆவணங்கள் என்பனவற்றில் திருத்தங்களை மேற்கொள்வதற்காக தொடர்பான தொழிற்பாட்டுத் திணைக்களங்களுடன் நெருக்கமாகத் தொழிற்பட்டது. உத்தேசப் பத்திரங்களற்ற பிணையங்கள் தீர்ப்பனவு முறைக்கு வசதியளிக்கும் பொருட்டு உள்நாட்டுத் திறைசேரி உண்டியல் கட்டளைச் சட்டம் மற்றும் பதிவு செய்யப்பட்ட பங்குத் தொகுதிகள் பிணையங்கள் கட்டளைச் சட்டம் என்பனவற்றிற்கு திருத்தங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன.

புதிய மத்திய வங்கித் தொழில் மற்றும் வங்கித் தொழில் சட்டவாக்கத்தினை வரைவதற்காக உலக வங்கி மற்றும் ப.நா.நிதியம் என்பனவற்றின் தொழில்நுட்ப உதவியுடன் மத்திய வங்கியினால் பொறுப்பேற்கப்பட்ட செயற்றிட்டத்திலும் திணைக்களம் ஈடுபட்டிருந்தது.

## முகாமைக் கணக்காய்வு

வங்கியின் மூலோபாயக் குறிக்கோள்களை எய்துவதற்கு பங்களிப்புச் செய்யும் வகையில் முகாமைக் கணக்காய்வுத் திணைக்களம் சுதந்திரமான கணக்காய்வினை வழங்குவதுடன் வங்கியின் தொழிற்பாட்டினதும் கட்டுப்பாட்டு முறையினதும் பெறுமதியைக் கூட்டி முன்னேற்றுவதற்கு ஆலோசனையையும் வழங்கியது.

முகாமைக் கணக்காய்வுத் திணைக்களத்தின் மீளமைப்பு நடவடிக்கைகளின்கீழ், திணைக்களத்தின் தொழிற்பாட்டினை ஒழுங்குமுறைப்படுத்துவதற்கு இவ்வாண்டுக் காலத்தில் பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. வருடாந்தக் கணக்காய்வுத் திட்டம் இடர்நேர்வினை அடிப்படையாகக் கொண்ட கணக்காய்வு அணுகுமுறையில் தயாரிக்கப்பட்டது. கணக்காய்வு அலுவலர்களுக்கு, தனிப்பட்ட தேர்ச்சி இடைவெளி மற்றும் பயிற்சித் தேவைப்பாடுகளின் அடிப்படையில் வடிவமைக்கப்பட்ட பயிற்சித் திட்டத்தின் அடிப்படையில் பயிற்சியளிக்கப்பட்டது. கணக்காய்வுக் கைநூலில் புதிய கணக்காய்வு பயிற்சிகளையும் நடைமுறைகளையும் உள்ளடக்கும் விதத்தில் திருத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. புதிய கணக்காய்வுப் பட்டயத்திற்கிணங்க முன் கணக்காய்வு நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டதுடன் இது பின் கணக்காய்வுகளின் மூலம் அகற்றப்பட்டது. பின் தொடர் கணக்கு ஆய்வுகள் பொறுப்பேற்கப்பட்டன.

மற்றைய பல விடயங்களுடன் 2001ஆம் ஆண்டுப் பகுதியில் நிறுவப்பட்ட நாணயச்சபையின் கணக்காய்வுக்குழு கணக்காய்வுச் செயற்பாடு, இலங்கை மத்திய வங்கியின் நிதியியல் கூற்றுக்கள், தொடர்பான நிதியியல் அறிக்கையிடும் நடவடிக்கைகள் மற்றும் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைகள் என்பனவற்றை மேற்பார்வை செய்தது.

இடர்நேர்வினை அடிப்படையாகக் கொண்ட கணக்காய்வு அணுகுமுறையின் மீது தயாரிக்கப்பட்ட வருடாந்தக் கணக்காய்வுத் திட்டம் – 2003 இவ்வாண்டில் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்பட்டது. உயர்வானதும் மிதமானதுமான இடர்நேர்வுத் தொழிற்பாடுகளின்மீது மிகக்கூடியளவு கணக்காய்வு மூலவளங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. விரிவான கணக்காய்வு முறைகள் சில தெரிந்தெடுக்கப்பட்ட தொழிற்பாடுகளில் மேற்கொள்ளப்பட்ட வேளையில் நன்கு நிறுவப்பட்ட உள்ளகக் கணக்காய்வுகளைப் பேணுவதற்கு இணங்குவிப்புக் கணக்காய்வுகளும் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டன.

மேற்கொள்ளப்பட்ட முக்கியமான கணக்காய்வு நடவடிக்கைகள் இலங்கை மத்திய வங்கியின் தகவல் தொழில்நுட்ப முறைகளின் பொதுவான கட்டுப்பாட்டு ஆய்வு(எர்னஸ்ட் அன்ட யங்குடனான இணை மூலத்துடன்), நாணயத் திணைக்களத்தின் செயற்பாடு பற்றிய அனைத்தையுமுள்ளடக்கிய ஆய்வு, கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களம், அச்சகம், மத்திய வங்கியின் நூலகம், நலன்புரித் திணைக்களத்தின் முக்கிய கொடுப்பனவுகளின் செயற்பாடு, பணிமனைத் திணைக்களம், செயலகத் திணைக்களம் மற்றும் நிதித் திணைக்களம் என்பனவற்றின் செயற்பாடு பற்றிய ஆய்வு என்பனவற்றை உள்ளடக்கியிருந்தன.

முன்னைய ஆண்டுகளைப் போன்றே, தொழிற்பாட்டு மற்றும் துணைப்பணித் திணைக்களங்கள் மற்றும் நிதித் திணைக்களம் என்பனவற்றில் பல்வேறு இணங்குவிப்பு கணக்காய்வுகள் கிரமமான அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டன. மத்திய வங்கித் தொழிற்பாடுகளின் வினைத்திறன், சிக்கனம் மற்றும் பயனுறுதன்மை என்பனவற்றை முன்னேற்றுகின்ற குறிக்கோளுடன் முகாமைக் கணக்காய்வுத் திணைக்களமும் பல முகாமைத்துவ மதிப்பீட்டு ஆய்வுகளை மேற்கொண்டது.

இவ்வாண்டுப் பகுதியில் திணைக்களம் பாவிக்கமுடியாத மற்றும் பழுதடைந்த பல்வேறு இன நாணயங்களையும் கொண்ட ரூ.33 பில்லியன் பெறுமதியான நாணயத் தாள்களை அவை அழிக்கப் படுவதற்கு முன்னர் கணக்காய்வு செய்ததுடன் நாணய சரிபார்ப்பு, எண்ணிக்கணக்கிடல் மற்றும் தரம் பிரித்தல் பிரிவின் வேலைகளையும் அவதானித்தது. திணைக்களம் தங்கம், நாணயத்தாள் மற்றும் குத்திகளினது இருப்புக்களின் ஆண்டுச் சரிபார்த்தலையும் மேற்கொண்டது. பெறுகைகள் மற்றும் வழங்கல்கள் மீள் இணக்கம் செய்யப்பட்ட பின்னர் நாணயத்தின் இருப்புப் பதிவேடுகள் கணக்காய்வு அலுவலர்களினால் சரிபார்க்கப்பட்டு உறுதிப்படுத்தப்பட்டன. தளபாடங்கள் மற்றும் பொருத்துக்கள், அலுவலக கருவிகள், கணனிகள் போன்ற மற்றும் நுகரத்தக்க இருப்புக்கள் என்பன வற்றைச் சரி பார்ப்பதற்காக பல திணைக்களங்களில் நிலையான சொத்துக்கள் மற்றும் சரிபார்ப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

மேற்குறிப்பிடப்பட்டவற்றிற்குப் புறம்பாக, முகாமைக் கணக்காய்வுத் திணைக்களம் செயற்றிட்டங்களின் முன் நடைமுறைப்படுத்தல்களிலும் அதேநேரம் மொத்தத் தீர்ப்பனவுமுறை/ பத்திரங் களற்ற பிணையங்களின் தீர்ப்பனவுமுறை/ பொதுப் பேரேட்டுமுறை மற்றும் திறைசேரி மாதிரிமுறை என்பனவற்றின் முறைகள் மீளாய்வு நடவடிக்கைகளிலும் பங்குபற்றியுள்ளது.

## முகாமை அபிவிருத்தி நிலையம்

தொழில்சார் தேர்ச்சிகளை மேம்படுத்து வதனையும் மத்திய வங்கியின் மூத்த அலுவலர்களது அறிவினைப் பூரணப்படுத்துவதனையும் குறிக்கோளாகக் கொண்டு ஏற்படுத்தப்பட்ட முகாமை அபிவிருத்தி நிலையம் அதன் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை 2003இல் தொடர்ந்தும் மேற்கொண்டது. இந்தப் பயிற்சி வாய்ப்புக்களை ஏனைய அமைப்புக்களுக்கும் கிடைக்கச் செய்ததன் மூலம் பயிற்சியினை மேலும் தெளிவான வளப்படுத்துதல் மூலம் கூடிய சக்தி வாய்ந்ததாகச் செய்யப்பட்டது. மூலவள ஆட்கள் தொடர்பான அவர்களது துறைகளில் உலகப்புகழ் பெற்ற சிறந்த கல்விமான்களாக விளங்கினர்.

2003இல் 13 உயர்மட்ட பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் முக்கியமாக நிதிநெருக்கடி மத்திய வங்கித்தொழில், காலத்தொடர்கள் பற்றிய பகுப்பாய்வுகள், செலாவணி வீதங்கள், முதலீட்டு பகுப்பாய்வுகள், நிறுவனப்படுத்தப்பட்ட பொருளியல், வரி விதிப்புப் பொருளியல் மற்றும் முகாமைத்துவ அபிவிருத்தி போன்றவற்றில் 388 பங்கேற்பாளர்களுக்காக நடாத்தப்பட்டது. (அட்டவணை II-9)

இதற்கு மேலாக முகாமைத்துவ அபிவிருத்தி நிலையம் வங்கியின் மூத்த அலுவலர்களின் முகாமைத்துவ தேர்ச்சியினை மேம்படுத்துவதற்கான சந்தர்ப்பத்தை வழங்கும் நோக்குடன் திணைக்களத் தலைவர்களுக்காகத் 03 முகாமைத்துவ அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை 2003 ஆம் ஆண்டுக் காலத்தில் நடாத்தியது. இத்தொடர்களின் தொடர்ச்சியாக, கல்வியூட்டும் நிறுவனங்களை கட்டியெழுப்பல், என்ற ஒரு சிறப்பு கருத்தரங்கு 2003 திசெம்பரில் நடாத்தப்பட்டு எதிர்காலத்திற்காக அலுவலர்களின் தேர்ச்சியை அபிவிருத்தி செய்யும் ஒரு நீடித்திருக்கக்கூடிய வழிமுறையாக வங்கியில் புதிய கற்கும் கலாச்சாரம் உருவாக்கப்பட்டது.

## கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு

நாட்டின் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறையின் பாதுகாப்பு, வினைத்திறன், நம்பகத்தன்மை மற்றும் உறுதிப்பாடு ஆகியவற்றினை உறுதிசெய்யும் குறிக்கோளுடன் 2002இல் நிறுவப்பட்ட கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களம் 2003ஆம் ஆண்டில் பரந்தளவிலான கடமைகளையும், தொழிற்பாடுகளையும் மேற்கொண்டது. அவற்றுள் பின்வருவனவும் உள்ளடங்கும்.

- அதேநேர மொத்த தீர்ப்பனவு முறையினை தொழிற்படுத்தல்;
- அதேநேர மொத்த தீர்ப்பனவு முறைத் தொழிற்பாடுகளை கண்காணித்தல்;
- இலங்கை மத்திய வங்கியின் சொந்தக் கொடுக்கல்வாங்கல்களினது கொடுப்பனவின் புகுவழியினைக் கண்காணித்தல் மற்றும் தொழிற்படுத்தல்;
- கொடுப்பனவு முறையினை மேற் பார்வையிடல்;
- ஒரு நாளுக்குள்ளேயான திரவவசதியினை செயல்முறைப்படுத்தி மேற்கொள்ளுதல்;
- வெளிநாட்டுச் செலாவணி முகாமைத்துவம் மற்றும் திறந்த சந்தைத் தொழிற்பாடுகள் தொடர்பான இலங்கை மத்திய வங்கியின் சொந்தக் கொடுக்கல்வாங்கல்களின் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு அறிவுறுத்தல்களை செய்முறைப்படுத்தி நடைமுறைப்படுத்தும்வேளையில் நடைமுறைகளுக்கும் வழிகாட்டல் நெறிகளுக்கும் இணங்கி ஒழுகுவதனை உறுதிப்படுத்தல்;
- ஆசியத்தீர்ப்பனவு ஒன்றியத்தின் கீழான கொடுக்கல்வாங்கல்களை நடைமுறைப் படுத்தல்; அத்துடன்

**அட்டவணை II-9**
2003 இல் நடத்தப்பட்ட உயர்மட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்

| | பாடநெறித் தலைப்பு | காலப்பகுதி | மூலவள ஆட்கள் |
|---|---|---|---|
| 1. | பகுதி-I "வெளிநாட்டு படுகடன் முகாமைத்துவத்தின் அண்மைய அபிவிருத்திகளும் வழங்கல்களும் -விசேட குறிப்பாக உயர் வர்த்தகத்தில் தங்கியிருக்கும் நாடுகள்" மீதான கொள்கை கலந்துரையாடல்<br>பகுதி-II "மூலதனப்பாய்ச்சல், நிதி நெருக்கடி மற்றும் சிறிய திறந்த பொருளாதாரத் திற்கான கொள்கைகள்" தொடர்பான பாடநெறி | 13-14 சனவரி 2003<br>(2 நாட்கள்)<br>16-24 சனவரி 2003<br>(6 நாட்கள்) | பேராசிரியர் கென்னத் மைல்ஸ். கிளெட்சர் ஜுனியர்<br>பொருளியல் திணைக்களம்<br>கலிபோனியா பல்கலைக்கழகம்<br>சாந்த குரூஸ், ஐ.அ.நாடுகள். |
| 2. | பகுதி-I "வங்கி மேற்பார்வையின் அமைப்புகள் அமைப்பு- மீதான கொள்கை" கலந்துரையாடல்<br>பகுதி-II "மத்திய வங்கித் தொழில்" பற்றிய பாடநெறி | 31 சனவரி<br>(அரை நாள் காலை)<br>29 சனவரி (அரை நாள்)<br>30 சன, 5 பெப்<br>(2 1/2 நாட்கள்) | பேராசிரியர் சாள்ஸ் ஏ.ஈ குட்காட், மதியுரையாளர் -நிதி ஒழுங்கமைப்பு வங்கி, இங்கிலாந்து. |
| 3. | "காலத்தொடர் பகுப்பாய்வுகள்" மீதான பாடநெறி | 17-28 பெப்.(10 நாட்கள்) | பேராசிரியர்.நீல் டயஸ் கருணாரத்ன<br>பொருளியல் கல்லூரி, குவீனஸ்லாந்து பல்கலைக்கழகம், பிரிஸ்பேன், அவுத்திரேலியா. |
| 4. | பகுதி-I "செயலாற்றுகை முகாமைத்துவம்" தொடர்பான செயலமர்வு<br>பகுதி-II<br>"முகாமைத்துவ அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்- அமைப்பு ரீதியான செயற்றிறனும் கட்டுப்பாடும் செயலாற்றமும்" மீதான பாடநெறி. | 8 மாச்சு 2003<br>(01 நாள்)<br>10-13 மாச்சு 2003<br>4 நாட்கள் | பேராசிரியர். டி.எஸ். வித்தான<br>திணைக்களத் தலைவர்<br>முகாமைத்துவமும் தொழில் ஆய்வும்.<br>ஒடேற் வணிக கல்லூரி பீடம்,<br>வின்சர் பல்கலைக்கழகம் கனடா.<br>கலாநிதி. ஐக்டிஸ் பதக்<br>உதவிப் பேராசிரியர்<br>கணக்கீட்டு முறைகளும், தகவல் தொழில்நுட்ப கணக்காய்வும்,<br>லூயிஸ், எட்மன்ட் ஒடற்றே பிஸ்னஸ்<br>வின்சர் பல்கலைக்கழகம், கனடா. |
| 5. | நிறைவேற்று அபிவிருத்தி செயலமர்வு - "இன்றைய தலைமை வகித்தலின் ஆற்றலும் தலைமைத்துவத்திலான இன்றைய சவால்களும்: ஒன்று சேர்ந்த கூற்றொன்று" | 22-23 மாச்சு 2003<br>(2 நாட்கள்) | கலாநிதி. ஐக்டிஸ் பதக்<br>உதவிப் பேராசிரியர்<br>கணக்கியல் அமைப்புக்களும், தகவல் தொழில்நுட்ப கணக்காய்வும்,<br>லூயிஸ், எட்மன்ட் ஒடற்றே பிஸ்னஸ்<br>வின்சர் பல்கலைக்கழகம், கனடா. |
| 6. | பகுதி-I "ஆசிய நெருக்கடியில் இந்தோனேசியா" 1997-2000 - ஒரு கொள்கை வகுப்பாளரின் கருத்து" தொடர்பான கொள்கை கலந்துரையாடல்<br>பகுதி-II "மூலதன அசைவும் செலாவணி வீதங்களும் பொருளாதார நெருக்கடியும்" - பாடநெறி | 19-20 மே 2003<br>(8 நாட்கள்)<br>21-30 மே 2003<br>(8 நாட்கள்) | பேராசிரியர். சார்ள்ஸ் ஜேன்ஜ் பேன்<br>அவுத்திரேலியா தேசிய பல்கலைக்கழகம், அவுத்திரேலியா. |
| 7. | "முதலீட்டு பகுப்பாய்வு" பற்றிய பாடநெறி | 30 யூன்-11 யூலை 2003<br>(10 நாட்கள்)<br>பிற்பகல் | பேராசிரியர். லலித் பி. சமரக்கோன்<br>இணைப் பேராசிரியர்<br>கொலிஜ் ஒவ் பிஸ்னஸ்,<br>தோமஸ் பல்கலைக்கழகம்<br>மின்னிபொலிஸ், ஐ.அ.நாடுகள். |
| 8. | "ஒரு அபிவிருத்திப் பொருளாதாரத்திற்கான நிறுவன ரீதியான பொருளியல்" - பாடநெறி | 04-08 ஆகத்து 2003<br>(5 நாட்கள்) | பேராசிரியர். பிரணாப்குமார் பார்தன்<br>பொருளியல் பேராசிரியர்<br>பன்னாட்டு ஆய்வு நிறுவனம்<br>கலிபோர்னியா பல்கலைக்கழகம்<br>பேக்கெலி, ஐ.அ.நாடுகள். |
| 9. | "வரிவிதிப்புப் பொருளியல்" - பாடநெறி | 08-16செத்தெம்பர் 2003<br>(7 நாட்கள்) | பேராசிரியர். ராகபேந்திரா ஜா<br>அவுத்திரேலியா தேசிய பல்கலைக்கழகம்<br>கன்பரா, அவுத்திரேலியா. |
| 10. | "ஆய்வு முறைமையும் கையாளக்கூடிய பொருளியற் கணிதவியலும்" பற்றிய செயலமர்வு | 13-14செத்தெம்பர் 2003<br>(2 நாட்கள்) | கலாநிதி. ஜெயசிங்க விக்கிரமநாயக்க<br>கணக்கியலும் நிதியும் திணைக்களம்<br>மொனாஸ் பல்கலைக்கழகம்<br>அவுத்திரேலியா. |
| 11. | "நிலையான வருமான பிணையங்கள் செயலமர்வுகள்<br>1வது நிகழ்ச்சித்திட்டம்<br>"நிலையான வருமானக் கணிதத்திற்கு ஒரு அறிமுகம்" | 22-24செத்தெம்பர் 2003<br>(3 நாட்கள்) | திரு. ஸ்ரீபன் பேற் மற்றும்<br>திரு. போல் சிற்சிங்,<br>யூரோ பினான்ஸ், இலண்டன், |
| 12. | 2வது நிகழ்ச்சித்திட்டம்<br>"முன்னேற்றங்கண்ட நிலையான வருமான யுக்திகளும், இடர்முகாமைத்துவமும்" | 25-28செத்தெம்பர்2003<br>(4 நாட்கள்) | திரு. போல் கிற்சிங்<br>யூரோ பினான்ஸ், இலண்டன். |
| 13. | "கற்கும் அமைப்பினைக் கட்டியெழுப்புதல்" ஆய்வரங்கு | 10-11 திசெம்பர் 2003<br>2 நாட்கள் | பேராசிரியர். மைக்கல் மார்குலாட்ற்<br>ஜோர்க் வோசிங்டன் பல்கலைக்கழகம், ஐ.அ.நாடுகள். |

- "சுவிப்ற்" தொடர்பூட்டல்களை கையாளல்
- கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறையுடன் தொடர்பான தரவுகளை சேகரித்தல், தொகுத்தல் மற்றும் தீர்ப்பனவு முறை பற்றி பொதுமக்களின் விளக்கங்களையும் விழிப்புணர்வுகளையும் அதிகரிப்பதற்காக கொடுப்பனவு செய்தித் திரட்டொன்றினைத் தயாரித்தல்.

## அதேநேர மொத்த தீர்ப்பனவு முறையினைத் தொழிற்படுத்தல்

2003ஆம் ஆண்டுப்பகுதியில், கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களம் லங்கா செட்டில் முறை மற்றும் தன்னியக்கப்படுத்தப்பட்ட பொதுப்பேரேட்டு முறை என்பனவற்றை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக பெரும்பாலும் அனைத்து நடவடிக்கைகளிலும் தீவிரமாகப் பங்கேற்றது. இவை பண்புகளை விளங்கிக்கொள்ளுதல், பிரச்சனைகளை மற்றும் உள்ளார்ந்து காணப்படக்கூடிய இடர்நேர்வுகளை இனங்காணுதல் என்பனவற்றுக்காக செயற்றிட்ட ஆவணங்கள், ஆய்வு செய்தல் முறை பற்றிய ஒழுங்குவிதிகளை வடிவமைப்பதற்கு உதவுதல்; லங்கா செட்டில் முறையினைப் பரிசோதிப்பதில் பங்கேற்பு; மற்றும் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு திணைக்கள அலுவலர்களுக்குப் பயிற்சி என்பனவற்றுடன் தொடர்புபட்டனவாக இருந்தன. கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களம், லங்கா செட்டில் முறையினை அறிமுகப்படுத்துவதற்காக பங்கேற்கும் நிறுவனங்களுடனும், அதேபோன்று இலங்கை மத்திய வங்கியின் தொடர்பான திணைக்களங்களுடனும் தொடர்ந்தும் கலந்துரையாடல்களை மேற்கொண்டிருந்தது. புதிய அதேநேர மொத்த தீர்ப்பனவு முறைக்கு சுமுகமாக மாறிச்செல்லும் தன்மையினை உறுதிப்படுத்துவதற்காக கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு திணைக்களத்திற்குள்ளே அதேநேர மொத்த தீர்ப்பனவு முறைத் தொழிற்பாட்டுப் பிரிவொன்று ஏற்படுத்தப்பட்டது. இப்பிரிவு, அதேநேர மொத்த தீர்ப்பனவு முறையினை வேலை நேரமான 0800 மணியிலிருந்து முறை மூடப்படும் நேரமான 1600 மணிவரை ஒவ்வொரு வேலை நாளன்றும் திறந்திருக்கும்.

கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களத்தின் அதேநேர மொத்த தீர்ப்பனவு முறையின் தொழிற்பாட்டுப்பிரிவு அதேநேர மொத்த தீர்ப்பனவு முறையின் நாளாந்த தொழிற்பாடுகளுக்குப் பொறுப்பாக இருப்பதுடன் முறை தொழிற்படுகின்ற முழுநேரமும் பங்கேற்பாளர்களுக்கு உதவிப்பீடப் பணிகளையும் வழங்குகின்றது. இப்பிரிவானது, முறை ஆரம்பமாவதற்கு முன்னான நடவடிக்கைகள், லங்கா கிளியர் பிறைவேட் லிமிட்டெட்டினால் பரிமாற்றப்பட்ட தனித்தனி தீர்ப்பனவு நிலுவைகளை உள்ளடக்கிய கணக்கு மாற்றல் கோவைகளை சமர்ப்பித்தல் மற்றும் அதேநேர மொத்த தீர்ப்பனவு முறையின் நிலையான தரவுகளைப் பேணுதல் என்பனவற்றில் ஈடுபட்டுள்ளது. 2003ஆம் ஆண்டில், பிரிவானது, எதிர்பாராத தொழில்நுட்பத் தடங்கல்களின் போது (குறிப்பாக சுவிப்ற் தொடர்பூட்டலில்) பங்கேற்பாளர்களுக்கு உதவுவதற்காக 31 நேரடி கணக்கு மாற்றல்களை மேற்கொண்டது, இலங்கை மத்திய வங்கியின் மூத்த முகாமைக்கு நாளாந்த தகவல்களை தயாரித்தது. தீர்ப்பனவு நிலுவைகள், இலங்கை மத்திய வங்கியின் வெளிச்செல்லும் கொடுப்பனவுகள், பங்கேற்பாளர்களின் தீர்ப்பனவுக்காக வரிசையான கொடுப்பனவுகள், நிராகரிக்கப்பட்ட கொடுப்பனவு அறிவுறுத்தல்கள், குறித்துரைக்கப்பட்ட வெட்டு நேரங்களில் வேறுபட்ட கொடுப்பனவு வகைகளின் நிலை மற்றும் ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதி போன்றவற்றின் தொடக்கம் நேர்மாற்றம் என்பனவற்றை சுமுகமாகத் தீர்ப்பனவு செய்வதனை உறுதிப்படுத்துவதற்காக தீர்ப்பனவுக் கணக்குகளில் கிடைக்கத்தக்கதாகவுள்ள நிதியினை மிக நெருக்கமாகக் கண்காணித்தது.

## அதேநேர மொத்த தீர்ப்பனவு முறைத் தொழிற்பாடுகளைக் கண்காணித்தல்

பங்கேற்பாளர்கள் விதிகள், ஒழுங்குவிதிகள் மற்றும் வழிகாட்டல்நெறிகளுக்கு இணங்கி ஒழுகுவதனை உறுதிப்படுத்துவதற்காகவும், முறையியல் பிரச்சனைகள் ஏற்படுவதற்கான சாத்தியங்களைக் கண்டறிவதற்காகவும் மொத்த தீர்ப்பனவு முறையின் தலக்கண்காணிப்பிலும் பங்கேற்பாளர்களின் எதிர்பாரா நிகழ்வுகளின் போதான பதிவிடல் தொடர்பான தலத்திற்கு வெளியேயான கண்காணிப்பிலும் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு திணைக்களம் ஈடுபட்டது.

## இலங்கை மத்திய வங்கியின் சொந்தக் கொடுக்கல் வாங்கல்களின் கொடுப்பனவுப் பரிமாற்றல்களை கண்காணித்தல் மற்றும் தொழிற்படுத்தல்

அதேநேர மொத்த தீர்ப்பனவு முறையினூடாகச் செய்யப்படும் மத்திய வங்கியின் சொந்தக் கொடுப்பனவுகள் தொடர்பாக நெருங்கிய கட்டுப்பாட்டையும், பாதுகாப்பினையும் கொண்டிருக்கும் முயற்சியாக இலங்கை மத்திய வங்கியின் உள்வரும் மற்றும் வெளிச்செல்லும் அதேநேர மொத்த தீர்ப்பனவு முறைக் கொடுப்பனவுகளை கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களம் நெருக்கமாகக் கண்காணித்தது. கோவைகளை கைகளினால் மாற்றம் செய்தது.

## கொடுப்பனவு முறையினை மேற்பார்வை செய்தல்

கொடுப்பனவு முறையின் மேற்பார்வையானது, பன்னாட்டு தீர்ப்பனவிற்கான வங்கியின் கொடுப்பனவு

மற்றும் தீர்ப்பனவு முறை மற்றும் பன்னாட்டு ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட தொழில்நுட்ப நியமங்கள் என்பன தொடர்பான குழுவினால் வெளியிடப்பட்ட பத்து மையக் குறிக்கோள்கள் என்பனவற்றுடன் இணைந்து செல்லும் விதத்தில் பொதுவாக கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவின் சுமுகமான, பாதுகாப்பான வினைத்திறன் மிக்க தொழிற்பாடுகளை உறுதிப்படுத்துவதனையே முக்கிய கவனத்தைக் கொண்டிருந்தது.

மேற்பார்வை நடவடிக்கைகள் லங்கா கிளியர் பிறைவேட் லிமிட்டெட்டினால் தொழிற்படுத்தப்பட்ட தீர்ப்பனவுமுறை மற்றும் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைகளின் மீதான கிரமமான தகவல் சேகரிப்பு என்பனவற்றின் தலத்திற்கு வெளியேயான கண்காணிப்பு, மற்றும் லங்கா கிளியர் பிறைவேட் லிமிட்டெட், உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள், முதனிலை வணிகர்கள் மற்றும் ஏனைய கொடுப்பனவுப் பணிகளை வழங்குவோர் என்போருடனான நெருங்கிய கலந்துரையாடல்கள் என்பனவற்றை உள்ளடக்கியிருந்தன. 2003ஆம் ஆண்டில் லங்கா செட்டிலின் நாளாந்த தொழிற்பாட்டு அட்டவணையுடன் இசைந்துசெல்லும் விதத்தில் சுமுகமான தீர்ப்பனவுத் தொழிற்பாட்டினை உறுதி செய்யவும் ஏதேனும் தொழிற்பாட்டுப் பிரச்சனைகளையும், இடர்நேர்வுகளையும் இனங்காணும் விதத்தில் அதன் தொழிற்பாடுகளைக் கண்காணிக்கவும்; லங்கா கிளியர் பிறைவேட் லிமிட்டெட்டின் தீர்ப்பனவு நடவடிக்கைகளை மேற்பார்வை செய்யும் அதன் தொழிற்பாட்டினைக் கொடுப்பனவு தீர்ப்பனவு திணைக்களங்களில் தொடர்ந்தது. அத்துடன், கொள்கை தொடர்பான பிரச்சனைகளை இனங்காணவும், காலாண்டு கொடுப்பனவு செய்தித்திரட்டினைத் தயாரிப்பதற்குமாக லங்கா கிளியர் பிறைவேட் லிமிட்டெட்டிடமிருந்து காலத்திற்குக்காலம் அறிக்கைகள் பெற்றுக் கொள்ளப்பட்டன.

### ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதியினை செய்முறைப்படுத்தி நடைமுறைப்படுத்துதல்

அரச பிணையங்களுக்கு அதாவது திறைசேரி உண்டியல் மற்றும் திறைசேரி முறிகள் என்பனவற்றுக்கெதிராக அதேநேர மொத்த தீர்ப்பனவு முறையின் பங்கேற்பாளர்களுக்கு ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதியினை வழங்குவதுடன் தொடர்பான வேலைகளிலும், கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களம் ஈடுபட்டிருந்தது. இப்பின்னணியில் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களம் அரச பிணையங்களை ஏற்று, குறிப்பிடப்பட்ட பிணையங்களுக் கெதிரான ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதித் தொகையைக் கணித்து, கணக்கீட்டு பதிவுகளுக்கு வசதியளிப்பதற்காக தொடர்பான மூல ஆவணங்களைத் தயாரித்து, பொறுப்பேற்ற பிணையங்களின் பாதுகாவலனாகத் தொழிற்படுகிறது.

செத்தெம்பர் 8ஆம் நாளிலிருந்து 2003 திசெம்பர் இறுதி வரையான காலப்பகுதியில், 17 பங்கேற்கும் நிறுவனங்கள் ரூ.500 பில்லியன் தொகை கொண்ட ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதிகளைப் பெற்றுக்கொண்டதுடன் மிக உயர்ந்த நாளாந்தப் பெறுமதி ரூ.13.3 பில்லியனாகவும் நாளாந்த சராசரி ரூ.6.5 பில்லியனாகவும் காணப்பட்டன. அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறை தொடங்கப்பட்ட வேளையில் முக்கியமாக முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக மிக உயர்வாகக் காணப்பட்ட ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதிக்கான கோரிக்கைகள் ஆண்டின் இறுதியில் படிப்படியாகக் குறைவடைந்தன.

### வெளிநாட்டுச் செலாவணி ஒதுக்கு முகாமைத்துவத்தின் கீழான வணிகத் தீர்ப்பனவுகள்

கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களத்தின் வெளிநாட்டுச் செலாவணி, தங்கம் மற்றும் வெளிநாட்டுப் பிணையங்கள் தீர்ப்பனவுப் பிரிவு கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களத் திற்கான பின்னரங்க அலுவலகம் மாதிரி மற்றும் பன்னாட்டு தொழிற்பாட்டு திணைக்களத்திற்கான முன்னரங்க அலுவலக மாதிரி ஆகியனவற்றை உள்ளடக்கிய வணிகமுறை திறைசேரிக் கையாளல் அறை முகாமைத்துவ முறையொன்றினை உருவாக்கி நடைமுறைப்படுத்துவதில் தீவிரமாகப் பங்கேற்றது. இது வெளிநாட்டுச் செலாவணி ஒதுக்கு முகாமைத்துவத்தின் கீழ் பன்னாட்டு தொழிற்பாட்டுத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொழிற்பாடுகளின் பின்னரங்க அலுவலகத் தொழிற்பாடுகளை தன்னியக்கப்படுத்தலில் ஈடுபட்டது. வணிக முறை திறைசேரி கையாளல் அறை முகாமைத்துவ முறையின் பின்னரங்க அலுவலக மாதிரியினால் உள்ளடக்கப்பட்ட பிரதான விடயங்களாக கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு அறிவுறுத்தல்களின் நடைமுறைப்படுத்தல்; சுவிப்ற் மூலமாக இணைக்கிணை நிறுவனங்களிடையேயான தொடர்பூட்டல் இலங்கை மத்திய வங்கியின் பொதுப்பேரேட்டில் கொடுக்கல் வாங்கல்களை பதிதல் என்பன காணப்பட்டன. வணிக முறை திறைசேரி கையாளல் அறை முகாமைத்துவ முறையின் பின்னரங்க அலுவலக மாதிரியானது கையால் செய்யப்படும் தீர்ப்பனவு அறிவுறுத்தல்களை மாற்றியதுடன் சரியான பயன்படுத்துனர் அணுகும் உரிமைகளுடன் மின்னியல் சரிபார்ப்பும் உறுதிப் படுத்தலும் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களத்தினால் அறிமுகப் படுத்தப்பட்டது. இது தீர்ப்பனவு இடர்நேர்வுகளை மிகவும் குறைப்பதற்கு கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு திணைக்களத்திற்கு உதவியது.

2003இல் வெளிநாட்டுச் செலாவணி, தங்கம் மற்றும் வெளிநாட்டுப் பிணையங்கள் தீர்ப்பனவுப் பிரிவு தீர்ப்பனவு அறிவுறுத்தல்களை நடைமுறைப்படுத்தி, தீர்ப்பனவுப் பிரச்சனைகளுக்குத் தீர்வுகண்டு வெளிநாட்டு நாணயக்கணக்குகளின் நொஸ்ரோ நிலுவைகளையும் வெளிநாட்டிலுள்ள இணைக்கிணை நிறுவனங்களினால் வைத்திருக்கப்பட்ட பிணைய உடமைகளின் பாதுகாப்பு நிலுவைகளையும் கண்காணித்தது. கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களம் வெளிநாட்டு இணைக்கிணை நிறுவனங்களுடன் வெளிநாட்டுச் செலாவணி, தங்கம் நிலையான வைப்புக்கள் என்பன தொடர்பாக ஐ.அ.டொலர் 12,365 மில்லியன் தொகை கொண்ட 2,295 வணிக கையாளல்களைத் தீர்ப்பனவு செய்தது. வெளிநாட்டுச் செலாவணிக் கையாளலின் மொத்த எண்ணிக்கை 2002இன் 7,423 இலிருந்து 2003இல் 548 இற்கு வீழ்ச்சியடைந்தது. வெளிநாட்டுப் பிணையங்கள் மற்றும் தங்கம் தொடர்பான கொடுக்கல்வாங்கல்களின் மொத்த எண்ணிக்கை வீழ்ச்சியைப் பதிவு செய்தவேளையில் நிலையான வைப்புக்கள் 2002 உடன் ஒப்பிடுகையில் 2003இல் 60 சதவீத அதிகரிப்பினைப் பதிவு செய்தது.

நாளின் முடிவில் தேறிய அடிப்படையில் தீர்ப்பனவு செய்யப்பட்டது. அதேநேர மொத்த தீர்ப்பனவு முறையின் நடைமுறைப்படுத்தலுடன் பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்கள் மீள்கொள்வனவுக் கொடுக்கல்வாங்கல்களைப் பொறுத்தவரையில், குறித்துரைக்கப்பட்ட நேரத்தில் அவற்றின் அதேநேர மொத்த தீர்ப்பனவு முறையினூடாக கொடுப்பனவுகளை கொடுத்து தீர்த்தனர். இலங்கை மத்திய வங்கி, மீள்கொள்வனவின் முதிர்ச்சிப் பெறுகைகளை உரிய முதிர்ச்சி நாளின் தொடக்கத்தில் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளினதும், முதனிலை வணிகர்களினதும் தீர்ப்பனவுக் கணக்குகளில் வரவு வைத்தது.

2003இல், திறந்த சந்தைத் தொழிற்பாட்டுத் தீர்ப்பனவுப்பிரிவு மீள்கொள்வனவு கொடுக்கல் வாங்கல்களின் மீது ரூ.2,446 பில்லியன் தொகை கொண்ட 6,292 தீர்ப்பனவு அறிவுறுத்தல்களையும், ரூ.3 பில்லியன் தொகை கொண்ட 21 இரண்டாந்தர (உடனடி) விற்பனைகளையும், ரூ.7.5 பில்லியன் தொகை கொண்ட 9 நேர்மாற்று மீள்கொள்வனவுக் கொடுக்கல்வாங்கல்களையும் மேற்கொண்டது.

**அட்டவணை II-10**

வெளிநாட்டுச் செலாவணி, தங்கம் மற்றும் வெளிநாட்டுப் பிணையங்கள்

| மாதம் | வெளிநாட்டுச் செலாவணி | | தங்கம் | | வெளிநாட்டுப் பிணையங்கள் | | நிலையான வைப்புக்கள் | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | வணிகத்தின் எண்ணிக்கை | பெறுமதி (ஐ.அ.டொ.மில்) | வணிகத்தின் எண்ணிக்கை | பெறுமதி (ஐ.அ.டொ.மில்) | வணிகத்தின் எண்ணிக்கை | பெறுமதி (ஐ.அ.டொ.மில்) | வணிகத்தின் எண்ணிக்கை | பெறுமதி (ஐ.அ.டொ.மில்) |
| சனவரி | 122 | 226.1 | 13 | 35.1 | 56 | 310.1 | 62 | 468.1 |
| பெப்புருவரி | 31 | 33.1 | 4 | 9.1 | 78 | 535.0 | 83 | 465.6 |
| மார்ச்சு | 27 | 114.4 | - | - | 91 | 630.0 | 74 | 916.6 |
| ஏப்பிறல் | 34 | 141.2 | - | - | 77 | 357.0 | 65 | 719.4 |
| மே | 17 | 20.1 | - | - | 107 | 665.9 | 57 | 631.4 |
| யூன் | 38 | 85.5 | - | - | 101 | 752.2 | 57 | 701.8 |
| யூலை | 68 | 149.0 | - | - | 82 | 449.0 | 56 | 668.8 |
| ஓகத்து | 44 | 78.5 | - | - | 104 | 46.8 | 38 | 477.9 |
| செத்தெம்பர் | 52 | 101.0 | - | - | 92 | 67.1 | 51 | 576.8 |
| ஒத்தோபர் | 52 | 150.6 | 2 | 18.3 | 133 | 248.6 | 50 | 428.3 |
| நவெம்பர் | 19 | 64.6 | - | - | 47 | 66.9 | 43 | 371.7 |
| திசெம்பர் | 44 | 72.7 | 1 | 10.3 | 65 | 47.4 | 58 | 453.4 |
| மொத்தம் | 548 | 1,236.8 | 20 | 72.8 | 1,033 | 4,176.0 | 694 | 6,879.8 |

*மூலம்: இலங்கை மத்திய வங்கி.*

## திறந்த சந்தை தொழிற்பாடுகளின் கீழ் இலங்கை மத்திய வங்கியின் கொடுக்கல் வாங்கல்களை தீர்ப்பனவு செய்தல்

2003ஆம் ஆண்டில் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு திணைக்களத்தின் திறந்த சந்தை தொழிற்பாட்டுப் பிரிவு உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் முதனிலை வணிகர்களுடன் இலங்கை மத்திய வங்கி செய்து கொண்ட திறந்த சந்தைத் தொழிற்பாடுகளை தொடர்ந்தும் தீர்ப்பனவு செய்தது. அதேநேர மொத்த தீர்ப்பனவு முறை நடைமுறைக்கிடப்படுவதற்கு முன்னர் திறந்த சந்தைக் கொடுக்கல்வாங்கல்களின் தீர்ப்பனவு பிற்போடப்பட்டு

## ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியத்தின் கீழான கொடுக்கல்வாங்கல்கள்

ஆசியத் தீர்ப்பனவு ஒன்றிய பொறிமுறையினூடாக மேற்கொள்ளப்பட்ட இலங்கைக் கொடுக்கல் வாங்கல்களின் மொத்தப் பெறுமதி 2002இன் ரூ.77 பில்லியனிலிருந்து 2003இல் ரூ.100 பில்லியனுக்கு 30 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு அதிகரித்த இறக்குமதி, குறிப்பாக, இந்தியாவிலிருந்தும் ரூ.21 மில்லியன், ஈரான் இஸ்லாமிய குடியரசிலிருந்தும் ரூ. 25 மில்லியன் மசகெண்ணெய் மற்றும் ஏனைய பெற்றோலிய இறக்குமதிகள் அதிகரித்தமையே முக்கிய காரணமாகும். ஏனைய ஆசியத் தீர்ப்பனவு ஒன்றிய நாடுகளிலிருந்தான

**அட்டவணை** II-11
2003இல் திறந்த சந்தைத் தொழிற்பாட்டுக் கொடுக்கல் வாங்கல்கள்

| மாதம் | மீள் கொள்வனவு கொடுக்கல் வாங்கல்கள் | | இரண்டாந்தர விற்பனை | | நேர்மாற்று மீள் கொள்வனவு கொடுக்கல் வாங்கல்கள் | |
|---|---|---|---|---|---|---|
| | கொடுக்கல் வாங்கல்களின் எண்ணிக்கை | பெறுமதி (ரூ. மில்லியன்) | கொடுக்கல் வாங்கல்களின் எண்ணிக்கை | பெறுமதி (ரூ. மில்லியன்) | கொடுக்கல் வாங்கல்களின் எண்ணிக்கை | பெறுமதி (ரூ. மில்லியன்) |
| சனவரி | 422 | 270.8 | 7 | 0.4 | - | - |
| பெப்புருவரி | 344 | 201.1 | 4 | 0.2 | - | - |
| மார்ச்சு | 524 | 195.1 | - | - | 1 | 0.05 |
| ஏப்பிறல் | 484 | 125.3 | - | - | 2 | 3.35 |
| மே | 452 | 189.6 | - | - | 6 | 4.06 |
| யூன் | 604 | 280.7 | - | - | - | - |
| யூலை | 744 | 284.5 | 6 | 1.5 | - | - |
| ஓகத்து | 637 | 218.6 | 2 | 0.1 | - | - |
| செத்தெம்பர் | 664 | 241.3 | 2 | 0.7 | - | - |
| ஒத்தோபர் | 525 | 145.2 | - | - | - | - |
| நவெம்பர் | 428 | 129.2 | - | - | - | - |
| திசெம்பர் | 464 | 163.2 | - | - | - | - |
| மொத்தம் | 6292 | 2445.5 | 21 | 3.0 | 9 | 7.46 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

**அட்டவணை** II-12
ஏனைய ஆ.தீ. ஒன்றிய நாடுகளுடான இலங்கையின் வர்த்தகமும் ஆ.தீ. ஒன்றிய கொடுக்கல் வாங்கல்களும்

(ரூ.பில்லியன்)

| விடயம் | 2002 | 2003 (அ) | மாற்றம் % |
|---|---|---|---|
| ஆ.தீ. ஒன்றியத்தினூடாக வழிநடத்தப்பட்ட மொத்தக் கொடுக்கல் வாங்கல்கள் | 77.1 | 100.3 | 30 |
| ஏனைய ஆ.தீ. ஒன்றிய நாடுகளுக்கான இலங்கையின் ஏற்றுமதி | 23.5 | 31.8 | 35 |
| ஏனைய ஆ.தீ. ஒன்றிய நாடுகளுளிலிருந்தான இலங்கையின் இறக்குமதி | 104.2 | 135.5 | 30 |
| ஏனைய ஆ.தீ. ஒன்றிய நாடுகளுடனான இலங்கையின் மொத்த வர்த்தகம் | 127.7 | 167.4 | 31 |
| தேறிய ஆ.தீ. ஒன்றிய தீர்ப்பனவுகள் | 67.5 | 88.6 | 33 |

(அ) தற்காலிகமானவை.

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

இலங்கை இறக்குமதிகளின் மொத்தப் பெறுமதி முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2003இல் ரூ.136 பில்லியனுக்கு உயர்ந்து 30 சதவீத அதிகரிப்பினைப் பதிவு செய்தது. மற்றைய ஆசியத் தீர்ப்பனவு ஒன்றிய நாடுகளிலிருந்து பெறப்பட்ட மொத்த ஏற்றுமதி வருவாய்கள் 2002 உடன் ஒப்பிடுகையில் 2003இல் 35 சதவீதமான அதிகரிப்பினைப் பதிவு செய்தமைக்கு இந்தியா மற்றும் பாகித்தானுக்கான ஏற்றுமதிகள் அதிகரித்தமையே முக்கிய காரணமாகும். 2003ஆம் ஆண்டில் ஆசியத் தீர்ப்பனவு ஒன்றிய பொறிமுறையின் கீழ் செய்யப்பட்ட தேறிய தீர்ப்பனவுகளின் ரூபாப் பெறுமதி ரூ.90 பில்லியனாக விளங்கி 2002ஆம் ஆண்டினை விட 33 சதவீதம் கொண்ட அதிகரிப்பினைப் பதிவு செய்தது.

## ஆசிய தீர்ப்பனவு ஒன்றிய தொழில்நுட்ப குழுக்கூட்டம் - 2003

2002ஆம் ஆண்டு கொழும்பில் நடாத்தப்பட்ட ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியத்தின் பணிப்பாளர்சபைக் கூட்டத்தில் ஆசியா மற்றும் பசுபிக் பொருளாதார சமூக ஆணைக்குழு/ வர்த்தகம் மற்றும் அபிவிருத்தி மீதான ஐக்கிய நாடுகள் மாநாடு இன் உதவியுடன் ஆசிய தீர்ப்பனவு ஒன்றியத்தின் எதிர்காலப் பங்களிப்பினை ஆராய்வதற்காக ஆசிய தீர்ப்பனவு ஒன்றியத்தின் தொழில்நுட்பக் குழுவினை கூட்டுவதற்கு தீர்மானிக்கப்பட்டது. இப்பிராந்தியத்தில் இடம்பெற்று வருகின்ற அபிவிருத்திகளின் பின்னணியில் வர்த்தக மேம்பாடு மற்றும் பொருளாதார ஒத்துழைப்பு என்பனவற்றிற்கான பல குழுக்களின் உருவாக்கத்தினை உள்ளடக்கி ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியத்தின் அதிகரித்த பங்கு அவசியமானதாகிறது.

இதன்படி, தொழில்நுட்பக் குழு உறுப்பினர்களது கூட்டம் 2003 ஏப்பிறல் 9ஆம் நாள் நடாத்தப்பட்டதுடன் தொழில்நுட்பக் குழு அதன் விதந்துரைப்புக்களை ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியத்தினது பணிப்பாளர் சபையின் 32 ஆவது கூட்டத்தில் சமர்ப்பித்தது.

## ஆசியத் தீர்ப்பனவு ஒன்றிய பணிப்பாளர்சபையின் முப்பத்தியிரண்டாவது கூட்டம்

ஆசியத் தீர்ப்பனவு ஒன்றிய பணிப்பாளர் சபையின் 32ஆவது கூட்டம் 2003 யூன் 16-17 வரை இந்தியாவில் பெங்களூரில் நடத்தப்பட்டது. 2003/2004 ஆம் ஆண்டிற்கான ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியத்தின் தலைவரான இந்திய றிசேர்வ் வங்கியின் ஆளுநர், கூட்டத்திற்கு தலைமை தாங்கினார். வங்காளதேசம், பூட்டான், இந்தியா, ஈரான், மியன்மார், நேபாளம்,

பாகித்தான் மற்றும் இலங்கை ஆகிய எட்டு உறுப்பு நாடுகளின் மத்திய வங்கி/ நாணய அதிகார சபைகளிலிருந்து வந்த பணிப்பாளர்கள்/ மாற்றுப் பணிப்பாளர்கள் மற்றும் ஏனைய பிரதிநிதிகள் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர். ஈரானிலுள்ள ஆசியத் தீர்ப்பனவு ஒன்றிய செயலகத்திலுள்ள அலுவலகர்கள் மற்றும் தாய்லாந்து வங்கி மற்றும் ஆசிய மற்றும் பசுபிக் பொருளாதார சமூக ஆணைக்குழு என்பனவற்றிலிருந்தான அவதானிப்பாளர்களும் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

"ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியத்தின் எதிர்காலத் தொழிற்பாடு" பற்றி ஆசியத் தீர்ப்பனவு ஒன்றிய தொழில்நுட்பக் குழுவினால் செய்யப்பட்ட பின்வரும் விதந்துரைப்புக்களை பணிப்பாளர் சபை மீளாய்வு செய்தது.

(i) ஆசியத்தீர்ப்பனவு ஒன்றியத்தின் பொறுப்பாணையில் குறிப்பிடப்பட்டவாறு அதன் பொறிமுறையானது எல்லை கடந்த கொடுக்கல்வாங்கல்களின் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு மீது தொடர்ந்தும் கவனம் செலுத்த வேண்டியிருப்பதுடன் தற்கால நடவடிக்கைக்காக ஆசிய தீர்ப்பனவு ஒன்றியத்திற்கு வழங்கப்பட்ட பொறுப்பாணையில் எந்த ஒரு மாற்றத்தையும் உடனடியாக செய்ய வேண்டிய அவசியமில்லை. எனவே, ஆசியத் தீர்ப்பனவு பொறிமுறையானது பல்புடை அடிப்படையில் உறுப்பினர் நாடுகளிடையே நடைமுறை பன்னாட்டு கொடுக்கல்வாங்கல்களுக்கான கொடுப்பனவினை தீர்ப்பனவு செய்வதற்கான வசதியை தொடர்ந்தும் வழங்கியது. இதன் மூலம் வெளிநாட்டுச் செலாவணி ஒதுக்குகளின் பயன்பாடு சிக்கனப் படுத்தப்படும்;

(ii) தூண்டுதலினூடாகவும், அதேநேரம் குறிப்பிட்ட துறைகளின் மீதான இருபுடை உடன்படிக்கைகளை உற்சாகம் குன்றச் செய்ததனூடாகவும் அயல் நாடுகளை ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியத்தில் இணைந்து கொள்ளுமாறு அழைக்கமுடியும்;

(iii) கொடுக்கல்வாங்கல்கள் மீதான அனுப்புத் தகவல்களுக்கான சுவிப்ற் முறையின் அறிமுகப்படுத்தலை ஆரம்பிக்காத மற்றைய அனைத்து உறுப்பினர் நாடுகளும் விரைவான கொடுப்பனவுத் தீர்ப்பனவிற்கு வசதியளிக்க இதனை விரைவாகச் செய்ய வேண்டும்;

(iv) நடுத்தர காலத்திலிருந்து நீண்டகாலத்தில், ஆசிய தீர்ப்பனவு ஒன்றிய உறுப்பினர் நாடுகள் விரைவான, இடர்நேர்வு அற்ற ஆசியத் தீர்ப்பனவு ஒன்றிய கொடுக்கல் வாங்கல்களின் தீர்ப்பனவிற்கு, விரைவாக வசதியளிப்பதற்கு, தொழிற்பாட்டுச் செலவுகளை பகிர்ந்து கொள்ளும் அடிப்படையில் மத்திய தீர்வகம் ஒன்றினை ஏற்படுத்த முயற்சிக்க வேண்டும்;

(v) கணக்கீடு, தகவல் மற்றும் தரவு நிலையம், அத்துடன் நாணய ஆய்வு ஆகியவற்றை உள்ளடக்கிய மூன்று முக்கிய துறைகளின் நடவடிக்கைகளை மேலும் விரிவாக்குவதற்கான ஆசிய தீர்ப்பனவு ஒன்றிய செயலகத்தின் முன்மொழிவு, எதிர்காலத்தில் சரியான நேரத்தில் பணிப்பாளர் சபையின் இணக்கப்பாட்டுடன் பரிசீலிக்கப் படும்;

(vi) ஆலோசனைகளை ஊக்குவித்தல், உறுப்பினர்களாக மற்றைய நாடுகளைச் சேர்த்துக்கொள்வதற்கான முன்னைய முயற்சிகளை தொடர்வதற்காக இலக்கிடப்பட்ட நாடுகளுக்கு நிபுணர்களை அனுப்புவது போன்ற நடவடிக்கைகள் தொடர்பான செலவுகளை ஈடு செய்வதற்காக ஆசியத் தீர்ப்பனவு ஒன்றிய செயலகத்திற்கு உதவும் விதத்தில் நிதியமொன்றினை உருவாக்குவதற்கான முன்மொழிவு ஆசிய தீர்ப்பனவு ஒன்றிய பணிப்பாளர் சபையின் எதிர்வரும் கூட்டத்தில் ஆராயப்பட முடியும்;

(vii) ஆசியத் தீர்ப்பனவு ஒன்றிய பொறிமுறையின் கீழ் தொடர்ச்சியாக இருந்துவரும் ஏற்றுமதியாளர்களுக்கான கொடுப்பனவில் காணப்படும் தாமதத்தினை உறுப்பினர் நாடுகளிலுள்ள வங்கிகள் உருவாக்கப்பட்டுள்ள நடைமுறைகளை கடுமையாகப் பின்பற்றுவதன் மூலமாக தவிர்த்துக் கொள்ளலாம். மத்திய வங்கிகள் இவை தொடர்பான நிலைமையை மிகத்தீவிரமாக கண்காணிக்க வேண்டும்;

(viii) ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியத்தின் விஞ்ஞாபனத்தின் அத்தியாயம் V இன் பிரிவு IIஇன் கீழ் கிடைக்கத்தக்கதாகவுள்ள ஏற்பாடுகளின்படி ஐ.அ.டொலர்கள் தவிர்ந்த மற்றைய நாணயங்களின் பயன்பாட்டை ஆசியத் தீர்ப்பனவு ஒன்றிய பொறிமுறை

யின் கீழ் தீர்ப்பனவிற்காக ஊக்குவிக்கப் படலாம்;

(ix) அத்துடன் இப்பிராந்தியத்தின் கொடுப் பனவுகளைத் தீர்ப்பனவு செய்வதற்கான ஆசியத் தீர்ப்பனவு ஒன்றிய பொறி முறையினை முன்னுரிமை வாய்ந்த ஒழுங்குமுறையாகச் செய்வதற்கு, ஆசியத் தீர்ப்பனவு ஒன்றிய பொறிமுறையின் தொழிற்பாட்டில் முன்னேற்றம், கால வரையறையைக் குறித்துரைத்தல், தற்போதுள்ள தடைகளை அகற்றுதல், பிராந்தியத்திற்கான ஒருங்கிணைக்கப்பட்ட அதேநேர மொத்த தீர்ப்பனவு முறையுடன் இணைந்த மத்திய தீர்வகமொன்றை உருவாக்குதல் என்பனவற்றை ஏற்படுத்து வதற்கான உபாயங்களைக் கண்டறியும் தேவையும் காணப்படுகிறது;

குறுங்காலத்திலோ அல்லது நடுத்தரக் காலத்திலோ குழுவின் விதந்துரைப்புக்களை நடைமுறைப்படுத்துவதற்கான வழிமுறைகளை எடுப்பதற்காக தலைவர் பின்வரும் மூன்று முக்கிய துறைகளை ஆசியத் தீர்ப்பனவு ஒன்றிய செயலகத்திற்கு முன்மொழிந்துள்ளார்.

(i) ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியத்தின் சுமுகமான தொழிற்பாட்டிற்கு முட்டுக் கட்டையாக விளங்கும் தடைகளை அகற்று வதுடன் இணைந்த விதத்தில் தொழில் நுட்பங்களை மேம்படுத்துதல்.

(ii) ஆசியத் தீர்ப்பனவு ஒன்றிய உறுப்பு ரிமையை அதிகரித்தல்.

(iii) உறுப்பு வங்கிகளுக்கிடையே பாரிய அளவில் தகவல்களைப் பரிமாறிக் கொள்ளுதல்.

ஆசியத் தீர்ப்பனவு ஒன்றிய செயலகத்தினால் நடைமுறைப்படுத்துவதற்காக பணிப்பாளர் சபையினால் இம்முன்மொழிவுகள் ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டன.

ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியத்தின் 2004/ 2005 ஆம் ஆண்டிற்கான தலைவராக ஈரான் இஸ்லாமியக் குடியரசினது மத்திய வங்கியின் ஆளுநரும், துணைத்தலைவராக பாகித்தான் அரச வங்கியின் ஆளுநரும் சபையினால் தேர்ந்தெடுக்கப்பட்டனர். ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியத்தின் பணிப்பாளர் சபையின் 33ஆவது கூட்டம் 2004 இல் ஈரானில் நடைபெறும்.

### "சுவிப்ற்" தொடர்பூட்டல்கள்

2003இல் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு திணைக்களத்தின் சுவிப்ற் தொடர்பூட்டல் பிரிவானது வெளிச்செல்லும் செய்திகளை பதிதல், உள்வரும் செய்திகளை வாசித்தல் மற்றும் பிரித்தல், அதற்கான நடவடிக்கைகளை எடுத்தல் அத்துடன் அல்லது தேவையான நடவடிக்கைக்காக இலங்கை மத்திய வங்கியின் தொடர்பான பிரிவுகளுக்கு அல்லது திணைக்களங்களுக்கு உள்வரும் செய்திகளை அனுப்பி வைத்தல் மற்றும் லங்கா செட்டில் முறை மற்றும் வணிக முறை திறைசேரிக் கையாளல் அளவு முகாமைத்துவ முறைகளைப் பரிசோதித்து நடைமுறைப்படுத்துவதற்கான தொழிற்பாட்டு சூழலை உருவாக்குவதுடன் தொடர்பான பின்வரும் வேலைகள் என்பனவற்றை உள்ளடக்கிய சுவிப்ற் உடன் தொடர்பான பரந்தளவு வேலைகளைப் கையாண்டது.

- லங்கா செட்டில் சுவிப்ற்றுடன் நடை முறைப்படுத்துவதற்காக சுவிப்ற்றுடன் இணைந்து நுழைவு உடன்படிக்கை கையெழுத்திடல்.
- 2003 யூலையில் வின்டோ என்.ரி தளத்தி லிருந்து ஏஐஎக்ஸ் பதிப்பு 5.0 இற்கு சுவிப்ற் இணைந்த வழிக்கு நகருதல். இலங்கை மத்திய வங்கியினது சுவிற்ப் தொழில் படுத்துனர்களுக்கும் லங்கா செட்டில் பங்கேற்பவர்களுக்கும் பயிற்சியளித்தல்.
- சோதனை, பயிற்சி மற்றும் நேரடி தொழிற்பாடுகளுக்கான முக்கிய இருபுடை தொடர்பான பரிமாற்றம்.
- சுவிப்ற் எம்ரி 100 இற்குப் பதிலாக எம்.ரி 103 இனை (தனியொரு வாடிக்கையாளர் கொடுகடன் மாற்றல் செய்தி) அறிமுகப் படுத்துவதன் மூலம் 2003 இன் செய்தி நியமங்களைப் பயன்படுத்தும் விதத்தில் சுவிப்ற் இணைந்த செய்திப் பங்காளரினைத் தரமுயர்த்தல்.
- இலங்கை மத்திய வங்கிக்கும் சுவிப்ற் வாடிக்கையாளர் பணிகள் நிலையத்திற்கு மிடையிலான தொலைபேசி உறுதிப் படுத்தல் நடைமுறையினைப் பரிசோதனை செய்வதற்கான பயிற்சி தொடரினை நடத்துதல்.

சுவிப்ற் தொடர்பூட்டல் பிரிவு 2003இல் 79,165 உள்வருகின்ற சுவிப்ற் செய்திகளைக் கையாண்டதுடன், 2002 உடன் ஒப்பிடுகையில் இது 89 சதவீத அதிகரிப் பினைக் காட்டியமைக்கு லங்கா செட்டில் முறையின் செய்திகளை பரிசோதித்தமையும் அதேநேர மொத்த தீர்ப்பனவு முறையில் கொடுக்கல்வாங்கல்கள் மேற் கொள்ளப்பட்டமையுமே முக்கிய காரணமாகும். எனினும் இலங்கை மத்திய வங்கியின் வெளிச்செல்லும் சுவிப்ற் செய்திகளின் மொத்த எண்ணிக்கை 20,210 இற்கு 37

சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமைக்கு வெளிநாட்டுச் செலாவணி ஒதுக்கு முகாமைத்துவத்தின் கீழ் வணிகக் கையாளல் தொடர்பான தீர்ப்பனவு செய்திகள் குறைவடைந்தமையே முக்கிய காரணமாகும். 2003 இல் சுவிப்ற் தொடர்பூட்டல் பிரிவு 395 பரிசோதிக்கப்பட்ட தொலைநகல் செய்திகளை மேற்கொண்டது.

**அட்டவணை II-13**
இலங்கை மத்திய வங்கி கொடுக்கல் வாங்கல்களுடன் தொடர்பான சுவீப்ட் செய்திகளின் பாய்ச்சல்

| மாதம் | வெளிசெல்லும் சுவீப்ட் செய்திகளின் எண்ணிக்கை | | உட்வரும் சுவீப்ட் செய்திகளின் எண்ணிக்கை | |
|---|---|---|---|---|
| | 2002 | 2003 | 2002 | 2003 |
| சனவரி | 3,175 | 1,573 | 3,708 | 2,668 |
| பெப்புருவரி | 3,680 | 889 | 4,349 | 2,357 |
| மாச்சு | 2,709 | 966 | 3,952 | 2,338 |
| ஏப்பிரல் | 3,438 | 916 | 3,863 | 2,447 |
| மே | 2,498 | 1,179 | 3,701 | 2,527 |
| யூன் | 3,009 | 1,831 | 3,820 | 2,304 |
| யூலை | 4,709 | 1,869 | 5,537 | 3,168 |
| ஓகத்து | 4,219 | 1,462 | 4,802 | 6,865 |
| செத்தெம்பர் | 991 | 2,437 | 1,944 | 6,141 |
| ஒத்தோபர் | 1,166 | 2,378 | 2,065 | 14,685 |
| நவெம்பர் | 1,251 | 2,043 | 2,179 | 13,780 |
| திசெம்பர் | 1,227 | 2,667 | 2,054 | 19,885 |
| மொத்தம் | 32,072 | 20,210 | 41,974 | 79,165 |

*மூலம்: இலங்கை மத்திய வங்கி*

## கொடுப்பனவு முறைகளின் தொழிற்பாடு பற்றி பொதுமக்களுக்கு விழிப்புணர்வளித்தல்

பொதுமக்களின் விழிப்புணர்வினை அதிகரிப்பதற்காகவும், கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு ஒழுங்குகளில் மேலும் அபிவிருத்தி, ஆராய்ச்சி மற்றும் கொள்கைத் தீர்மானங்களுக்கு வசதியளிக்கும் விதத்திலும், நாட்டின் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைகளின் மீதான தகவல்களை சேகரித்து, தொகுத்துப் பரப்பும் நடவடிக்கைகளில் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களம் தொடர்ந்தும் ஈடுபட்டது. 2003இல் காலாண்டு வெளியீடாக "கொடுப்பனவு செய்தித்திரட்டு" வெளியிடப்பட்டதுடன் இவ்வெளியீடு நாட்டின் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறை, ஒவ்வொரு கொடுப்பனவு மாதிரி மற்றும் முறை மீதான புள்ளி விபரம் மற்றும் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுகள் தொடர்பான சமகால விடயங்களைத் தாங்கிய கட்டுரைகள் பற்றிய விபரங்களையும் பகுப்பாய்வு களையும் உள்ளடக்கியிருந்தன.

மேலும், கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களம் பன்னாட்டு தீர்ப்பனவிற்கான வங்கியினால் வெளியிடப்படுவதற்காக "இலங்கையின் கொடுப்பனவு முறை" பற்றிய சிவப்பு நூல் என்ற பெயர் கொண்ட ஆவணத்தினைத் தயாரிப்பதற்குத் தேவையான தகவல்களையும் சேகரித்தது. அதேநேர கொடுப்பனவு முறையினை ஆரம்பித்தல் தொடர்பாக கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களம் அதேநேர மொத்த தீர்ப்பனவு முறை பற்றி தொழில்நுட்பவியல், தொழிற்பாடு மற்றும் நிருவாகப் பண்புகளை விபரிக்கின்ற "லங்கா செட்டில்-அதேநேர மொத்த தீர்ப்பனவு முறை" என்ற நூலைத் தயாரித்து வெளியிட்டது.

## பணிமனை

வங்கியின் அலுவலர்களுக்கு போக்குவரத்து, தொடர்பூட்டல் வசதிகள் போன்ற துணைப் பணிகளை வழங்குவதற்குப் புறம்பாக 2003இல் பணிமனைத் திணைக்களம் வங்கிப் பணிமனையினை பேணு வதனையும் சுத்தமாக வைத்திருப்பதனையும் தொடர்ந் தும் மேற்கொண்டது.

மிகப்பயனுறு முறையிலும் குறைந்தசெலவிலும் பணிகளைப் பெற்றுக் கொள்ளும் பொருட்டு பெரும் பாலான பேணல் வேலைகளும், போக்குவரத்துப் பணியில் ஒரு பகுதியும் வெளி மூலங்களின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

2003 இறுதியில், வங்கியின் அனைத்துத் திணைக்களங்களுக்கும் நவீன தளபாடங்கள் வழங்கப் பட்டிருந்தன. இதன் காரணமாக ஊழியர் களுக்கு மேலும் வசதிகளும் வேலைகக்கான சூழலுக்கு மேலும் தூண்டுதலும் வழங்கப்பட்டன.

வதிவிட வசதிகளுடன் கூடிய வதிவிட பிரதேச அபிவிருத்தி பயிற்சிக் கட்டடத் தொகுதிக்கான அத்திவாரக்கல் 20.திசெம்பர்.2003 அன்று மாத்தளை யிலுள்ள மன்டன்டாவல என்னுமிடத்தில் நாட்டப்பட்டது. இக் கட்டடத் தொகுதியில் மத்திய வங்கியின் பிரதேச அலுவலகமும் அமைந்திருக்கும்.

திணைக்களம், மத்திய வங்கியின் தலைமை அலுவலகத்தின் அருகில் அமைந்துள்ள வெளிச்சவீட்டு மணிக்கூட்டுக் கோபுரத்தினை தொடர்ந்தும் பேணி வருகின்றது.

## பொதுப்படுகடன்

2003ஆம் ஆண்டு, பொதுப்படுகடன் முகாமைத் துவம் மற்றும் படுகடன் சந்தை அபிவிருத்தி ஆகிய துறைகளில் பல முக்கியமான சாதனைகள் அவதானிக்கப்பட்டது. தாங்கக்கூடிய படுகடன் மட்டம், கடன்பாட்டுச்செலவு, இறைக்கடன் தீராற்றல் மற்றும் படுகடன் தோற்றப்பாட்டில் இடர்நேர்வு உணர்திறன் போன்ற முக்கிய குறிகாட்டிகளின் நியதிகளில் அளவிடப்பட்டவாறு பொதுப்படுகடன் முகாமைத் துவத்தில் முன்னேற்றமொன்று தெளிவாகக் காணப்பட்டது. விளைவு வளைகோட்டினை 20 ஆண்டுகள் வரையில் நீடிக்கப்பட்டமை, நீண்டகால படுகடன் கருவிகளின் வர்த்தகப்படுத்தலும்

திரவத்தன்மையும் அதிகரிக்கப்பட்டமை, ரூபாக்கடன் திட்டம் மேலும் படிப்படியாக அகற்றப்படல், உயர்ந்த செலவினைக் கொண்ட அழைக்கத்தக்க ரூபாக்கடன்கள் உரிய காலத்திற்கு முன்பே தீர்க்கப்பட்டமை, பத்திரங்களற்ற பிணையங்களை வழங்குவதற்கும் வர்த்தகப்படுத்துவதற்குமாக நிறுவன ரீதியான சட்டம் மற்றும் சந்தைக்கட்டமைப்பினை வலுப்படுத்தியமை, அரசமுறிகளுக்காக திரையை அடிப்படையாகக் கொண்ட வர்த்தகப்படுத்தல் தளமொன்றை அறிமுகப்படுத்தியமை, முதனிலை வணிகர்களுக்காக ஒழுக்கக்கோவையொன்றை உருவாக்கியமை மற்றும் சுதந்திரமான தரமிடல் தொடர்பான முன்முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டமை என்பன இவை தொடர்பாக எடுக்கப்பட்ட முக்கிய நடவடிக்கைகளாகும்.

நாணயவிதிச் சட்டத்தின் 106(1)ஆம் பிரிவின் நியதிகளுக்கிணங்க "மத்திய வங்கி அரசிற்கான அல்லது எழுதப்பட்ட எந்த ஒரு சட்டத்தின்படியோ அல்லது வேறுவகையில் நிறுவப்பட்ட அரசின் சார்பாக தொழிற்படுகின்ற முகவருக்கான அல்லது நிறுவனத்திற்கான இறைமுகவராகவும் வங்கி யாளராகவும் தொழிற்படும்". மேலும் நாணயவிதிச் சட்டத்தின் 113ஆம் பிரிவின்படி நாணயச்சபையிடமும் மத்திய வங்கியிடமும் படுகடன் முகாமைத்துவ தொழிற்பாடு ஒப்படைக்கப்பட்டிருக்கின்றது. இப்பிரிவு "அரசின் முகவரான மத்திய வங்கி பொதுப்படுகடனின் முகாமைத்துவத்திற்கும் பொறுப்பாக இருக்கும்" எனக் குறிப்பிடுகின்றது. நாணயவிதிச் சட்டத்தின் 114ஆவது பிரிவின்படி இலங்கையில் அரசினால் திரட்டப்படும் படுகடன்கள் நாணயச்சபையின் நுண்ணாய்தலை தேவைப்படுத்துகின்றன. இப்பிரிவானது "உத்தேசக் கடன்கள் அல்லது வழங்கல்களின் நாணய உள்விளைவுகள் தொடர்பாக நாணயச்சபையின் மதியுரையை முதலில் பெற்றிருந்தாலொழிய எந்த ஒரு எழுத்திலான சட்டம் அல்லது வேறு விதமாக இருப்பினும் 106ஆம் பிரிவின் (1)ஆம் உட்பிரிவின்படி அரசாங்கத்தினாலோ அல்லது எந்த ஒரு முகவரினாலோ அல்லது எந்த நிறுவத்தினாலோ புதிய கடன்களைத் திரட்டவோ பங்குகளை அல்லது தொகுதிக்கடன்களை புதிதாக வழங்கவோ முடியாது" எனக் குறிப்பிடுகின்றது.

வருடாந்த ஒதுக்கீட்டுச்சட்டம் அரசாங்கத்தின் வருடாந்த செலவினத்திற்கு வழங்குவதற்காக இலங்கைக்கு "உள்ளோ அல்லது வெளியிலோ" அரசாங்கத்தின் சார்பில் கடன்களைத் திரட்டுவதற்கு அங்கீகாரமளிக்கின்றது. அத்தகைய கடன்பாடுகளின் மொத்த தொகையினை இது நிர்ணயிக்கின்றபோதும் குறைநிரப்புச் சட்டவாக்கத்தின் மூலம் இது ஆண்டுப்பகுதியில் சீராக்கம் செய்யப்படலாம். பொதுப்படுகடன் திணைக்களம் திறைசேரிமுறிகள், திறைசேரி உண்டியல்கள், ரூபாக்கடன்கள் மற்றும் இலங்கை அபிவிருத்திமுறிகள் என்பனவற்றினூடாக உள்நாட்டு கடன்பாடுகளைத் திரட்டுவதற்கான அரச முகவராக தொழிற்படுகின்றது. பதிவு செய்யப்பட்ட பங்குத்தொகுதிகள் பிணையங்கள் கட்டளைச்சட்டம், உள்நாட்டு திறைசேரி உண்டியல் கட்டளைச்சட்டம், திறைசேரி வைப்புச் சான்றிதழ் சட்டம், வரி ஒதுக்குச் சான்றிதழ் சட்டம் என்பனவற்றின் ஏற்பாடுகளின் கீழ் பொதுப்படுகடன் திணைக்களம் உள்நாட்டுப் படுகடனைத் திரட்டுகிறது. உள்நாட்டுப் படுகடனாகக் கருதப்படுகின்ற இலங்கை அபிவிருத்தி முறிகள் வெளிநாட்டுக்கடன் சட்டத்தின் நியதிகளுக்கிணங்கவே வழங்கப்பட்டன. கடந்த சில ஆண்டுகளாக பொதுப்படுகடன் திணைக்களம் திறைசேரி வைப்புச் சான்றிதழ்களையோ அல்லது வரி ஒதுக்குச் சான்றிதழ்களையோ வழங்கவில்லை. பொதுப்படுகடன் திணைக்களம் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுக் கடன்களின் வட்டி மற்றும் மீள்கொடுப்பனவுகளை மேற்கொள்கின்றது. பொதுப்படுகடன் திணைக்களத் திற்குப் புறம்பாக, திறைசேரியும் பொதுப்படுகடனைத் திரட்டுகின்றது. வெளிநாட்டுப் படுகடனானது வெளிநாட்டு மூலவளங்கள் திணைக்களத்தினூடாக திறைசேரியினால் திரட்டப்படுகின்றது.

பொதுப்படுகடன் திணைக்களத்தின் முக்கிய குறிக்கோள் யாதெனில் இடர்நேர்வுகளின் முன்மதியுடைய அளவுகளுடன் ஒத்துச்செல்லும் விதத்தில் நடுத்தர காலத்திலிருந்து நீண்டகாலம் வரையில் சாத்தியமான அளவிற்கு குறைந்த செலவில் அரசின் நிதியிடல் தேவைகளும் அதன் கொடுப்பனவுக் கடப்பாடுகளும் ஈடுசெய்யப்படுவதனை உறுதிப்படுத்தும் விதத்தில் அரசபடுகடனை முகாமை செய்வதேயாகும். இந்நோக்கத்திற்காக ஏற்படுத்தப்பட்ட துணைக்குழுவான உள்நாட்டுப்படுகடன் முகாமைத்துவக்குழு உடனடுத்து வரும் எதிர்காலத்தில் கடன்பாட்டு நிகழ்ச்சித் திட்டங்களைத் தீர்மானிப்பதற்காக அவசியமாயின் மாதாந்தம் அல்லது அடிக்கடியும் கூடுகின்ற வேளையில் திறைசேரியின் காசுப்பாய்ச்சல் தேவைப்பாடுகளையும் ஈடுசெய்வதுடன் வரவுசெலவுத் திட்ட வரையறை களையும் பேணுகின்றது. அரச காசுப்பாய்ச்சலினதும், அரசபடுகடனினதும் வினைத்திறன் மிக்க முகாமைத்துவத்தினை உறுதிப்படுத்துவதற்காக திறைசேரியின் அரச கணக்குகள் திணைக்களத்திற்கும் பொதுப்படுகடன் திணைக்களத்திற்குமிடையில் நெருங்கியதொரு இணைப்புப் பேணப்பட்டு வருகிறது.

## 2003ஆம் ஆண்டின் நிகழ்வுகள்

### படுகடன் வழங்கலும் அதன்செலவும்

2002ஆம் ஆண்டின் 31ஆம் இலக்க ஒதுக்கீட்டு சட்டத்தின் நியதிகளின்படி, 2003ஆம் ஆண்டிற்காக நாடாளுமன்றத்தினால் ஒப்புதல் வழங்கப்பட்ட அரசின் மொத்தக் கடன்பாட்டு வரையறை ரூ.316 பில்லியனாகக் காணப்பட்டது. ரூ.33.4 பில்லியன் கொண்ட அழைக்கத்தக்க ரூபாக்கடன்களின் உரிய காலத்திற்கு முன்னரான தீர்ப்பனவிற்கு இடமளிக்கும் பொருட்டு 2003 இறுதியில் இவ்வெல்லை ரூ.375.7 பில்லியனிற்கு உயர்த்தப்பட்டது. 2003இல் கடன்பாடுகளின் செலவினைக் குறைப்பதற்காக, பொதுப்படுகடன் திணைக்களம் மற்றைய பல விடயங்களுடன் நன்கு திட்டமிடப்பட்ட கடன்பாட்டுத் திட்டங்களையும் குறுங்கால மற்றும் நீண்டகால கருவிகளை பொருத்தமான முறையில் கலந்து நடைமுறைப் படுத்துவதனையும் பின்பற்றியது. இம்முயற்சிக்கு குறைந்த பணவீக்க எதிர்பார்ப்புக்கள் மற்றும் 2002இன் பின்னரைப்பகுதியிலிருந்து நிலவிய குறைந்த வட்டி வீதங்கள் போன்ற சாதகமான பேரண்டப் பொருளாதார நிலைமைகளினால் மேலும் வசதியளிக்கப்பட்டது.

2003ஆம் ஆண்டு இறுதியில், வெளிநின்ற மொத்த அரசபடுகடன் ரூ.1,833.4 பில்லியனாக இருந்தது. அட்டவணை II.I இல் காட்டப்பட்டவாறு, ரூபாக்கடன்கள் போன்ற வர்த்தகப்படுத்தலற்ற படுகடனின் பங்கு மிகக் கூடுதலாக வீழ்ச்சியடைந்தமைக்கு வர்த்தகப்படுத்தத்தக்க படுகடன் கருவிகளை மேம்படுத்துவதற்கு எடுக்கப்பட்ட உளப்பூர்வமான முயற்சிகளும் சந்தையின் போட்டித்தன்மையுமே காரணமாகும். இதன் விளைவாக அதிகரித்த பொதுப்படுகடனானது திறைசேரி உண்டியல்களினாலும், திறைசேரி முறிகளினாலும் பிரதிபலிக்கப்பட்டதுடன் 2003 இறுதியில் வெளிநின்ற பொதுப்படுகடன் உள்ளடக்கியிருந்த இவ்விரு கருவிகளும் முறையே ரூ.219.3 பில்லியனாகவும், ரூ.487.5 பில்லியனாகவும் காணப்பட்டன. முன்னைய ஆண்டின் தொகையுடன் ஒப்பிடுகையில் இவை முறையே ரூ.8.3

**அட்டவணை II-14**

பொதுப்படுகடன் உள்ளடக்கம்(அ)

| வகை | 2002 முடிவில் ரூ.மில். | % | 2003 முடிவில் ரூ.மில். | % |
|---|---|---|---|---|
| உள்நாட்டு படுகடன் | **899,040** | 55.9 | **993,104** | 54.2 |
| திறைசேரிஉண்டியல்கள் | 210,995 | | 219,295 | |
| திறைசேரி முறிகள் | 287,700 | | 248,414 | |
| ரூபாக் கடன்கள் | 347,128 | | 487,504 | |
| இலங்கைஅபிவிருத்தி முறிகள் | 24,181 | | 8,852 | |
| வெ.நா.வ.தொ. | 29,018 | | 29,021 | |
| பிரிவுகளிலிருந்தான கடன்பாடு | 11 | | 11 | |
| திறைசேரிவைப்புச்சான்றிதழ்கள் | 7 | | 7 | |
| திறைசேரிஒதுக்குச்சான்றிதழ்கள் | **710,495** | 44.1 | **840,256** | 45.8 |
| வெளிநாட்டுக் கடன்பாடு(ஆ) | 1,609,535 | 100 | 1,833,360 | 100 |
| மொத்தம் | 1,342,106 | 100 | 1,608,557 | 100 |

தற்காலிகமானவை

மூலம்: இலங்கை மத்திய வங்கி

(அ) பொதுப்படுகடன் திணைக்களத்தினால் முகாமைப்படுத்தப்பட்டு தீர்ப்பனவு செய்யப்பட்ட படுகடன்.

(ஆ) தற்காலிகமானவை.

**அட்டவணை II-15**

2003 இல் உள்நாட்டுப்படுகடனின் வழங்கலும் முதிர்ச்சியும்

ரூ.மில்லியன்

| | முதிர்ச்சி | வழங்கல் | மீள் கொடுப்பனவு | தேறிய வழங்கல் |
|---|---|---|---|---|
| திறைசேரி உண்டியல் | 91நாள் | 122,466 | 125,071 | (2,605) |
| | 182நாள் | 40,232 | 40,425 | (193) |
| | 364நாள் | 144,273 | 146,369 | (2,096) |
| | மற்றையது | 35,876 | 22,682 | 13,194 |
| | **மொத்தம்** | 342,847 | 334,547 | 8,300 |
| திறைசேரி முறிகள் | 2 வருடம் | 3,000 | 27,566 | (24,566) |
| | 3 வருடம் | 20,250 | 27,951 | (7,701) |
| | 4 வருடம் | 35,600 | 18,904 | 16,696 |
| | 5 வருடம் | 43,700 | - | 43,700 |
| | 6 வருடம | 68,000 | - | 68,000 |
| | 10 வருடம் | 33,950 | - | 33,950 |
| | 13 வருடம் | 4,397 | - | 4,397 |
| | 15 வருடம் | 4,900 | - | 4,900 |
| | 20 வருடம் | 1,000 | - | 1,000 |
| | **மொத்தம்** | 214,797 | 74,421 | 140,376 |
| ரூபாக் கடன்கள் | 2 வருடம் | - | 19,500 | (19,500) |
| | 2/ 5வருடம் | 44,372 | 27,000 | 17,372 |
| | 2/ 6வருடம | 3,741 | - | 3,741 |
| | 4/ 5வருடம் | - | 5,500 | (5,500) |
| | 5 வருடம் | - | 10,000 | (10,000) |
| | 5/ 7வருடம | - | 19,000 | (19,000) |
| | 7/ 8வருடம் | - | 5,400 | (5,400) |
| | 8/10வருடம் | - | 1,000 | (1,000) |
| | **மொத்தம்** | 48,113 | 87,400 | (39,287) |
| இலங்கை அபிவிருத்தி முறிகள் (ஐ.அ.டொலர்91.5மில்) | 2 வருடம் | - | 15,179 | (15,179) |
| | **மொத்தம்** | - | 15,179 | (15,179) |
| வெ.நா.வ.தொ. பிரிவுகளிலிருந்தான கடன்கள் | | - | - | - |
| | **மொத்தம்** | | | |
| **மொத்தம்** | | 605,757 | 511,547 | 94,210 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

**அட்டவணை II-16**

ரூபாக்கடன்களின் வழங்கலும் மீள்கொடுப்பனவும்–2003

| | வட்டிவீதம் ஆண்டுக்கு% | முதிர்ச்சிக்காலம் (ஆண்டுகள்) | தொகை ரூ.மில் |
|---|---|---|---|
| மிதக்கவிடப்பட்டவை | 8.00 | 2/6 | 2,538.3 |
| | 9.25 | 2/6 | 1,200.0 |
| | 11.00 | 2/5 | 23,700.0 |
| | 13.00 | 2/5 | 20,675.0 |
| **மொத்தம்** | | | **48,113.3** |
| மீளச்செலுத்தப்பட்டவை | 11.00 | 5 | 10,000.0 |
| | 12.00 | 4-5 | 5,500.0 |
| | 13.00 | 2-5 | 13,100.0 |
| | 13.00 | 7-8 | 5,400.0 |
| | 14.00 | 5-7 | 19,000.0 |
| | 15.00 | 2 | 19,500.0 |
| | 15.00 | 2-5 | 13,900.0 |
| | 15.50 | 8-10 | 1,000.0 |
| **மொத்தம்** | | | **87,400.0** |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

பில்லியன் மற்றும் ரூ.140.4 பில்லியன் கொண்ட அதிகரிப்புக்களைக் காட்டின. மொத்தப்படுகடன் உள்ளமைப்பு வெளிநாட்டுப்படுகடனின் பங்கில் அதிகரிப்பினைக் காட்டியது. இதன் விளைவாக, மொத்தப் படுகடனில் உள்நாட்டுப் படுகடனின் பங்கு 2002இன் 56 சதவீதத்திலிருந்து 2003இல் 54 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தவேளையில் வெளிநாட்டுப்படுகடன் 44 சதவீதத்திலிருந்து 46 சதவீதத்திற்கு அதிகரித்தது. எனினும், உள்நாட்டுச்சந்தை அரச கடன்பாடுகளின் முக்கிய மூலமாகத் தொடர்ந்தும் விளங்கி 2003இன் மொத்தக் கடன்பாட்டில் நான்கில் மூன்று பங்கிற்கும் கூடுதலான அளவிற்கு வகைகூறியது.

அட்டவணை II.15இல் உள்ள தரவுகள், முன்மதியுடைய படுகடன் முகாமைத்துவக் கொள்கைகளுக்கு இணங்கிச்செல்லும் வகையில், திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரிமுறிகள் போன்ற வர்த்தகப்படுத்தத்தக்க கருவிகளினூடாக தேறிய புதிய படுகடன் வழங்கல்கள் மேற்கொள்ளப் பட்டிருப்பதனைக் காட்டுகின்றன. இதன்படி 2003இல் ரூபாக்கடன்கள் போன்ற வர்த்தகப்படுத்தலற்ற கருவிகளின் மீதான ஏற்கனவேயுள்ள படுகடன் குறைக்கப்பட்டதுடன் இது ரூ.39.3 பில்லியன் கொண்ட ரூபாக்கடன்களின் தேறிய மீள்கொடுப்பனவினையும் உள்ளடக்கியிருந்தது. 2003இல் படுகடன் முகாமைத்துவத்தில் பின்பற்றப்பட்ட ஒரு உத்தி யாதெனில் நடுத்தரத்திலிருந்து நீண்டகால திறைசேரி முறிகள் வழங்கப்பட்டமையும் 10 ஆண்டுகள், 15 ஆண்டுகள் மற்றும் 20 ஆண்டுகளுக்கான திறைசேரி முறிகள் போன்ற வர்த்தகப்படுத்தத்தக்க நீண்டகால முறிகளுக்கான விளைவு வளைகோடு படிப்படியாக நிறுவப்பட்டமையுமேயாகும். இது மாறிச்செல்லும் இடர்நேர்வுகளை குறைக்க உதவியதுடன், படுகடன் சந்தையிலும் உறுதிப்பாட்டினை வழங்கியது. திறைசேரி முறிகளின் முதிர்ச்சிக்காலம் 2003 சனவரியில் 10 ஆண்டு திறைசேரிமுறிகளின் வழங்கல் தொடங்கப்பட்டதிலிருந்து அதிகரித்ததுடன் இதனைத் தொடர்ந்து 15 ஆண்டு மற்றும் 20 ஆண்டு திறைசேரிமுறிகள் முறையே 2003 பெப்புருவரியிலும், ஒத்தோபரிலும் வழங்கப்பட்டன. இரண்டாண்டு முதிர்ச்சிகளைக் கொண்ட குறுங்கால திறைசேரிமுறிகளின் வழங்கல் 2003 இல் ரூ.3.0 பில்லியனுக்கு மட்டுப்படுத்தப்பட்டது.

2003 இல் அரசபடுகடன் பிணையங்கள் சந்தையில் நீண்டகால விளைவு வளைகோடு 20 ஆண்டுகள் வரையில் நீடிக்கப்பட்ட நிகழ்வானது மிக முக்கியமானதொரு சாதனையாகும். மற்றைய விடயங்களுடன் அரச படுகடன் சந்தை விளைவு வளைகோடு கம்பனி முறிகள் மற்றும் ஏனைய நீண்டகால தனியார் பிணையங்கள் என்பனவற்றின் விலையிடலுக்கான அடிப்படைத்தள குறியீட்டினை வழங்குகிறது. இதற்கு முன்னர் எப்பொழுதுமில்லாதவாறு மிக நீண்ட முதிர்ச்சி அமைப்பொன்றுடன் 2003இல் திறைசேரிமுறிகள் கிரமமாக வழங்கப்பட்டமையானது அதிகரித்த வர்த்தகப்படுத்தக்கூடிய தன்மை, நீண்டகாலப்படுகடன் கருவிகளின் திரவத்தன்மை என்பனவற்றுடன் படுகடன் சந்தையை வலுப்படுத்தியது.

2003 நவெம்பர் 14ஆம் நாளன்று, கூட்டுறவு மொத்த விற்பனவு நிலையத்தின் தனியார் மயமாக்கல் செயல்முறைக்கு வசதியளிக்கும் பொருட்டு ஆறு வர்த்தக வங்கிகளுக்கு பூஜ்யவீத வட்டியில் ரூ.4,397 மில்லியனுக்கு 13 ஆண்டு முதிர்ச்சிகளைக் கொண்ட திறைசேரிமுறிகள் வழங்கப்பட்டன.

ஏற்கனவேயுள்ள படுகடன்களின் வட்டிச் செலவினைக் குறைக்கின்ற 2003ஆம் ஆண்டிற்கான வரவுசெலவுத்திட்ட முன்மொழிவுகளுக்கு காத்திரமான தன்மையொன்றை வழங்கும் விதத்தில் 13 சதவீதமானதும் அதற்குக் கூடுதலானதுமான வட்டி வீதங்களைக் கொண்ட ரூ.33.4 பில்லியன் தொகை

அட்டவணை II-17
**திறைசேரி உண்டியல்கள், திறைசேரி முறிகள் மற்றும் ரூபாக்கடன்களின் நிறையேற்றப்பட்ட ஆண்டு சராசரி விளைவுவீதங்கள்**

ஆண்டொன்றுக்கான சதவீதம்

| கருவி | 1998 | 1999 | 2000 | 2001 | 2002 | 2003(அ) |
|---|---|---|---|---|---|---|
| திறைசேரி உண்டியல் (நாட்கள்) (ஆ) | | | | | | |
| 91 | 11.78 | 11.69 | 12.80 | 16.09 | 12.69 | 9.13 |
| 182 | 12.12 | 12.03 | 12.94 | 17.32 | 12.90 | 9.04 |
| 364 | 12.22 | 12.55 | 14.14 | 18.34 | 13.84 | 9.02 |
| மொத்த சராசரி | 11.09 | 12.06 | 13.62 | 17.37 | 13.23 | 9.07 |
| திறைசேரி முறி (ஆண்டுகள்) | | | | | | |
| 2 | 12.84 | 13.01 | 16.71 | 19.82 | 14.88 | 10.75 |
| 3 | 13.43 | 13.31 | 15.00 | 15.60 | 14.29 | 9.69 |
| 4 | 13.72 | 13.53 | 12.52 | | 14.54 | 9.97 |
| 5 | | 13.78 | 12.78 | | 14.69 | 10.97 |
| 6 | | 13.65 | 12.88 | | 14.83 | 9.56 |
| 10 | | | | | | 8.72 |
| 13 | | | | | | 0.00 |
| 15 | | | | | | 9.01 |
| 20 | | | | | | 6.66 |
| மொத்த சராசரி | 13.08 | 13.37 | 15.10 | 18.07 | 14.57 | 9.59 |
| ரூபாக்கடன்கள் (ஆண்டுகள்) (இ) | | | | | | |
| 2 | | | | 15.00 | | |
| 5 | 11.35 | | | 14.03 | 13.00 | 11.93 |
| 6 | 12.00 | | 11.00 | | | 8.40 |
| 7 | 11.25 | | | | | |
| 8 | 12.25 | 12.25 | | | | |
| 10 | 11.50 | 12.50 | 12.00 | 13.00 | | |
| மொத்த சராசரி | 11.61 | 12.36 | 11.68 | 14.31 | 13.00 | 11.66 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

(அ) 10% பிடித்துவைத்தல் வரியையும் உள்ளடக்குகிறது. 2002 மே 3ஆம் நாள் தொடக்கம் அரசாங்கம் அரச பிணையங்கள் வட்டி மீது பிடித்துவைத்தல் வரியினை விதித்தது

(ஆ) 3,6,12 மாத முதிர்ச்சிகளுக்குப்பதிலாக முறையே 91நாள், 182நாள், 364 நாள் முதிர்ச்சிகளைக் கொண்ட திறைசேரி உண்டியல்களின் வழங்கல் 1999 ஒத்தோபரில் தொடங்கியது.

(இ) அழைக்கத்தக்க ரூபாக்கடன்களின் மீள்கொடுப்பனவின் கட்டாய நாள் (ஆகக் கூடிய நாள்) பரிசலீக்கப்பட்டது.

கொண்ட அழைக்கத்தக்க ரூபாக்கடன்களைத் தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இந்த ரூபாக்கடன்களைத் தீர்ப்பனவு செய்வதற்கு தேவையான நிதிகள் திறைசேரிமுறிகளின் வழங்கல் மூலம் முக்கியமாக திரட்டப்பட்டதுடன் இந்நடவடிக்கையின் மூலம் அரசாங்கத்திற்கு கிடைத்த வட்டிச்சேமிப்பு ஏறத்தாழ ரூ.4.6 பில்லியனாக இருக்கும் என மதிப்பிடப்பட்டது.

அட்டவணைகள் II.16 மற்றும் II.17 இல் காட்டப்பட்டவாறு, அரச பிணையங்களின் சராசரி விளைவு வீதங்கள் மிகக்கூடுதலாக வீழ்ச்சியடைந்தன. இலங்கை மத்திய வங்கியின் கொள்கை வட்டி வீதங்களில் செய்யப்பட்ட படிப்படியான குறைப்பினைத் தொடர்ந்து சந்தை வட்டி வீதங்களில் மிகக்கூடுதலான வீழ்ச்சி, அவதானிக்கப்பட்டது. பாதிப்பினைக் குறைக்கின்ற, நெகிழ்ச்சித்தன்மை வழங்கிய பெருமளவு சாதகமான பேரண்டப் பொருளாதார நிலைமைகளின் கட்டமைப்பொன்றில் அரச காசுப்பாய்ச்சலின் தொடர்ச்சியான கண்காணிப்பின் மூலம் ஆதரவு வழங்கப்பட்ட கடன்பாட்டு நிகழ்ச்சித்திட்டங்களின் காத்திரமான திட்டமிடல் மற்றும் நிறைவேற்றம் என்பன படுகடன் முகாமைத்துவ செயற்பாட்டின் சாதனைகளுக்கு வசதியளித்தன. 2003இல் அரசு ரூ.87.3 பில்லியன் தொகை கொண்ட வெளிநாட்டு கடன்பாடுகளை பெற்றுக்கொண்டதன் காரணமாக உள்நாட்டுக் கடன்பாட்டின் வட்டி வீதம் மேலும் குறைவடைந்தது. முதலாந்தரச்சந்தையில் உருவான போக்குகளைத் தொடர்ந்து இரண்டாந்தரச் சந்தையிலும் வட்டி வீதங்கள் வீழ்ச்சியடைந்தன. 2003ஆம் ஆண்டு நவெம்பரிலும், திசெம்பரிலும் முதிர்ச்சியடைந்த ஐ.அ.டொலர் 158.5 மில்லியன் (ரூ.15.2 பில்லியன்) தொகையான இலங்கை அபிவிருத்தி முறிகள் திட்டமிடப்பட்டவாறு மீட்கப்பட்டன.

**வரைபடம் II-7**
**இரண்டாந்தரச் சந்தை விளைவு வளைகோடு**




வரைபடம் II-7 அரச பிணையங்களுக்கான இரண்டாந்தர சந்தை விளைவு வளைகோட்டினை எடுத்துக்காட்டுகிறது. படுகடன் சந்தைக்கு தொடர்பில்லாத வெளிக்காரணிகளின் காரணமாக முதலீட்டாளர்களினால் உயர்ந்த இடர்நேர்வுக் கட்டணங்கள் வலியுறுத்தப்பட்டமையைத் தொடர்ந்து வட்டி வீதங்கள் உயரத்தொடங்கிய 2003ஆம் ஆண்டின் நவெம்பர் தொடக்கப்பகுதி வரை விளைவு வளைகோடானது, கீழ்நோக்கிப் பெயர்ந்தது. 2003 திசெம்பரில் விளைவு வீதங்களில் காணப்பட்ட இவ்வதிகரிப்பானது குறுகிய முதிர்ச்சிகளுடன் பிணையங்களை வழங்க பொதுப்படுகடன் திணைக்களத்தினை தூண்டியது. எனினும், பொதுவாக ஆண்டின் இறுதிப்பகுதியில் நிலவிய அரசபடுகடன் பிணையங்கள் மீதான விளைவு வீதங்கள் அவை ஆண்டின் தொடக்கத்திலிருந்ததை விட மிகக் குறைந்தவையாகக் காணப்பட்டன.

2003 யூன் தொடக்கம் அரச பிணையங்கள் மீதான விளைவுகளின் கீழ்நோக்கிய போக்குடன் இசைந்த விதத்தில் ரூபாக்கடன்களின் வட்டி வீதமும் திறைசேரி முறிகளின் நறுக்கு வீதங்களும் அட்டவணை II.18 இல் காட்டப்பட்டவாறு கீழ்நோக்கித் திருத்தியமைக்கப்பட்டன.

**அட்டவணை II-18**

**2003இல் ரூபாக் கடன்களின் வட்டி வீதங்களும் திறைசேரி முறிகளின் நறுக்கு வீதங்களும்**

| மாதம் | | சன.03 | பெப்.03 | யூலை.03 | ஒகத்.03 |
|---|---|---|---|---|---|
| ரூபாக்கடன்* | | 13.00 | 11.00 | 9.25 | 8.00 |
| திறைசேரி முறிகளின் நறுக்கு வீதங்கள் | 2 ஆண்டு | 12.50 | 12.50 | 12.50 | 8.00 |
| | 3 ஆண்டு | 10.25 | 10.25 | 10.25 | 7.90 |
| | 4 ஆண்டு | 10.00 | 10.00 | 10.00 | 7.80 |
| | 5 ஆண்டு | 9.75 | 9.75 | 9.75 | 7.70 |
| | 6 ஆண்டு | 9.50 | 9.50 | 9.50 | 7.60 |
| | 10 ஆண்டு | 8.50 | 8.50 | 8.50 | 7.50 |
| | 15 ஆண்டு | - | 8.50 | 8.50 | 7.50 |
| | 20 ஆண்டு | - | - | - | 7.00 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

* ரூபாக் கடன்களின் வட்டிவீதம் 2003 நவெம்பரில் 6.50% இற்கு கீழ் நோக்கித் திருத்தப்பட்டது

இவ்வாண்டுப்பகுதியில் வழங்கப்பட்ட திறைசேரி முறிகள் மீதான விபரமான தகவல்களைத் அட்டவணை II.19 தருகின்றது. 2003இல் வழங்கப்பட்ட திறைசேரி முறிகளின் தொடர்களது எண்ணிக்கை 2002இல் வழங்கப்பட்ட 51 உடன் ஒப்பிடுகையில் 26 ஆக மிகக் குறைவடைந்து காணப்பட்டது. இக்குறைப்பானது சில அடித்தளமாகக் கொள்ளப்பட்ட குறியீட்டு முதிர்ச்சிகளை அபிவிருத்தி செய்தமையின் மூலம் இரண்டாந்தர சந்தை நடவடிக்கைகளுக்கு வசதியளிக்கும் பொருட்டு வழங்கப்பட்ட திறைசேரி முறிகளின் தொடர் எண்ணிக்கைகளை குறைப்பதற்கு எடுக்கப்பட்ட உளமார்ந்த முயற்சிகளினூடாக அடையப்பட்டது.

**அட்டவணை II-19**
திறைசேரி முறிகளின் முதலாந்தர வழங்கல் மீதான தகவல்கள் - 2003

| முறிதலைப்பு | முதிர்ச்சி (ஆண்டுகள்) | பெறப்பட்ட விலைக் குறிப்பீடுகள் (ரூ.மில்.) | ஏற்றுக்கொள்ளப் பட்ட விலைக் குறிப்பீடுகள் (ரூ.மில்.) | நி.ஆ.ச.வீதம் முதிர்ச்சி வீச்சு (ஆண்டிற்கு சதவீதம்) | நறுக்கு வீதம் (ஆண்டிற்கு சதவீதம்) |
|---|---|---|---|---|---|
| 08.00%2005A எ | 2 | 500 | 500 | 8.31 - 8.31 | 08.00 |
| 12.50%2005A எ | 2 | 7,780 | 2,500 | 11.24 - 11.24 | 12.50 |
| 07.90%2006A எ | 3 | 14,145 | 7,500 | 8.25 - 8.27 | 07.90 |
| 10.25%2006A எ | 3 | 25,357 | 12,750 | 10.05 - 11.49 | 10.25 |
| 07.80%2007A எ | 4 | 17,665 | 7,000 | 8.20 - 8.60 | 07.80 |
| 07.80%2007B பி | 4 | 2,500 | 2,500 | 7.38 - 8.30 | 07.80 |
| 10.00%2007A எ | 4 | 46,370 | 20,600 | 10.12 - 11.53 | 10.00 |
| 10.00%2007B பி | 4 | 9,715 | 5,500 | 9.71 - 10.11 | 10.00 |
| 07.70%2008A எ | 5 | 10,715 | 3,500 | 7.85 - 8.50 | 07.70 |
| 09.75%2008A எ | 5 | 37,203 | 20,000 | 10.96 - 11.26 | 09.75 |
| 09.75%2008B பி | 5 | 17,675 | 8,200 | 9.91 - 10.89 | 09.75 |
| 11.75%2008A எ | 5 | 25,959 | 12,000 | 11.18 - 12.24 | 11.75 |
| 07.60%2009A எ | 6 | 47,569 | 18,000 | 7.43 - 8.92 | 07.60 |
| 07.60%2009B பி | 6 | 30,920 | 14,250 | 7.41 - 8.61 | 07.60 |
| 09.50%2009A எ | 6 | 18,382 | 9,750 | 11.04 - 11.28 | 09.50 |
| 09.50%2009B பி | 6 | 40,302 | 14,000 | 9.51 - 10.05 | 09.50 |
| 11.50%2009A எ | 6 | 23,760 | 12,000 | 11.23 - 12.31 | 11.50 |
| 07.50%2013A எ | 10 | 35,959 | 17,700 | 7.61 - 8.99 | 07.50 |
| 07.50%2013B பி | 10 | 6,935 | 4,250 | 7.39 - 7.39 | 07.50 |
| 08.50%2013A எ | 10 | 25,340 | 10,000 | 9.50 - 10.11 | 08.50 |
| 08.50%2013B பி | 10 | 7,545 | 2,000 | 9.45 - 9.45 | 08.50 |
| 00.00%2016A எ | 13 | 4,397 | 4,397 | 0.00 - 0.00 | 00.00 |
| 07.50%2018A எ | 15 | 6,690 | 3,000 | 8.48 - 8.48 | 07.50 |
| 08.50%2018A எ | 15 | 3,405 | 1,500 | 10.09 - 10.09 | 08.50 |
| 08.50%2018B பி | 15 | 400 | 400 | 8.89 - 8.89 | 08.50 |
| 07.00%2023A எ | 20 | 4,240 | 1,000 | 6.75 - 6.75 | 07.00 |
| **மொத்தம்** | | 471,428 | 214,797 | | |

*மூலம்: இலங்கை மத்திய வங்கி.*




வரைபடம் II-8
உள்நாட்டு படுகடன் கடப்பாடுகள்

*2003 இறுதியில் வெளிநின்ற மொத்தப்படுகடன் அடிப்படையில் மதிப்பிடப்பட்ட எதிர்கால உள்நாட்டுப் படுகடன் கடப்பாடுகளின் தொகுப்பினை வரைபடம் 2.8 தருகின்றது. 2003 திசெம்பர் 31இல் உள்ளவாறு உள்நாட்டுப் படுகடன் இருப்பின் சராசரி கால அளவானது 2002ஆம் ஆண்டின் 1.97 ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் 2.32 ஆண்டுகளாகக் காணப்பட்டது. உள்நாட்டுக் கடன்பாடுகளின் கால அளவானது உள்நாட்டுப்படுகடனின் நிறையேற்றப்பட்ட சராசரி முதிர்ச்சியாகக் கணிக்கப்பட்டது. இங்கே கொடுப்பனவுக் கடப்பாடுகளின் நிகழ்காலப் பெறுமதி (காசு வெளிப்பாய்ச்சல்) நிறையாகப் பயன்படுத்தப்பட்டது. 2003ஆம் ஆண்டு இறுதியில் உள்நாட்டுப் படுகடனின் சராசரி வட்டி பெறுமதி 2002ஆம் ஆண்டு இறுதியின் 13.13 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 11.44 சதவீதமாகக் காணப்பட்டது.*

*பொதுப்படுகடன் திணைக்களம் திறைசேரி உண்டியல், திறைசேரிமுறி ஒவ்வொன்றிற்கும் 53 ஏலங்களை நடத்தியதுடன் இவை வழங்கல்களைக்*

**அட்டவணை II-20**
2003இல் வழங்கப்பட்டு தீர்ப்பனவு செய்யப்பட்ட பத்திரங்களின் எண்ணிக்கை

| கருவி | பத்திரங்களின் எண்ணிக்கை | தொகை (ரூ.மில்) |
|---|---|---|
| **திறைசேரி உண்டியல்** | | |
| வழங்கப்பட்டது | 152,554 | 342,847 |
| முதிர்ச்சியடைந்தது | 137,771 | 334,547 |
| **முறிகள்** | | |
| வழங்கப்பட்டது | 9,507 | 214,797 |
| முதிர்ச்சியடைந்தது | 9,446 | 74,421 |
| வட்டி நறுக்கு | 220,056 | 44,838 |
| **ரூபாக்கடன்கள்** | | |
| வழங்கப்பட்டது | 119 | 48,113 |
| முதிர்ச்சியடைந்தது | 268 | 87,400 |
| உத்தரவாதப்படுத்தப்பட்ட வட்டி | 1,250 | 35,574 |

*மூலம்: இலங்கை மத்திய வங்கி*

காட்டிலும் பெருமளவு கோரல்களைக் கொண்டிருந்தன. இந்த ஏலங்கள் 2000ஆம் ஆண்டில் அறிமுகப் படுத்தப்பட்ட அதேநேர கணனி அடிப்படையாகக் கொண்ட முறையினைப் பயன்படுத்தி மின்னியல் ரீதியாக நடாத்தப்பட்டன. 2003இல் திறைசேரி உண்டியல் களினதும், திறைசேரி முறிகளினதும் மொத்த வழங்கல்கள் முறையே ரூ.342.8 பில்லியனாகவும், ரூ.214.8 பில்லியனாகவும் காணப்பட்டன. திறைசேரி உண்டியல்கள் தொடர்பாக ரூ.279.0 பில்லியன் கொண்ட வழங்கலுக்கெதிராக ஏலங்களில் ரூ.690.1 பில்லியன் கொண்ட விலைக்கோரல்கள் கிடைக்கப்பெற்றன. திறைசேரிமுறிகளைப் பொறுத்தவரை ரூ.79.7 பில்லியன் கொண்ட வழங்கல்களுக்கெதிராக ரூ.322.3 பில்லியன் கொண்ட விலைக்கோரல்கள் கிடைக்கப்பெற்றன. பாரிய நிறுவனமயப்படுத்தப்பட்ட முதலீட்டாளர்களுக்காக வழங்கப்பட்ட திறைசேரிமுறிகள் ரூ.135.1 பில்லியனாக விளங்கியதன் மூலம் 2003 இல் வழங்கப்பட்ட மொத்த திறைசேரிமுறிகள் ரூ.214.8 பில்லியனாகக் காணப்பட்டது.

2003ஆம் ஆண்டுப்பகுதியில் திறைசேரி உண்டியல்களும், திறைசேரிமுறிகளும் பத்திர வடிவிலேயே வழங்கப்பட்டன. வழங்கப்பட்ட மற்றும் தீர்ப்பனவு செய்யப்பட்ட திறைசேரி உண்டியல்கள், திறைசேரிமுறிகள் மற்றும் ரூபாக்கடன்கள் தொடர்பான அத்தகைய பத்திரச்சான்றிதழ்கள் மீதான விபரமான தகவல்களை அட்டவணை II.20 தருகின்றது.

## வெளிநாட்டுப் படுகடன்

இலங்கையின் வெளிநாட்டுப்படுகடன் மீதான விபரமான தரவுகளை அட்டவணை II.21 மற்றும் II.22 தருகின்றது.

2003 இறுதியில் அரசாங்கத்தின் வெளிநின்ற மொத்த வெளிநாட்டுப்படுகடன் ரூ.840.3 பில்லியனாக விளங்கி ரூ.129.8 பில்லியன் (18 சதவீதம்) கொண்ட அதிகரிப்பினைக் காட்டியது. 2002 இன் இறுதியைக் காட்டிலும் 2003 இறுதியில் காணப்பட்ட மொத்த வெளிநின்ற வெளிநாட்டுப்படுகடனில் இருபுடைக் கடன்களும், பல்புடைக்கடன்களும் முறையே ரூ.398.8 பில்லியனாகவும் (47 சதவீதம்), ரூ.405.0 பில்லியனாகவும் (48 சதவீதம்) விளங்கியவேளையில், வர்த்தகக்கடன்களும் ஏற்றுமதிக்கொடுகடன்களும் ரூ.36.4 பில்லியன்களாக (4 சதவீதம்) காணப்பட்டன. இருபுடைப்படுகடன் வகையில் யப்பான், ஐக்கியஅமெரிக்கா மற்றும் சேர்மனி என்பன முக்கிய கொடுகடன் வழங்குனர்களாகக் காணப்பட்டன. இம்மூலங்கள் ரூ.373.6 பில்லியனுக்கு அல்லது மொத்த இருபுடைக்கடன்களில் 94 சதவீதத்திற்கு வகைகூறின. பல்புடைப்படுகடன் வகையில் மிகப்பெரும் கொடுகடன் வழங்குனராக பன்னாட்டு அபிவிருத்தி அமைப்பு

அட்டவணை II-21
2002இல் வெளிநாட்டுப்படுகடன் பகிர்ந்தளிப்புக்களும், முதல் தொகை மீள்கொடுப்பனவுகளும், 2002 இறுதியில் வெளிநின்ற தொகையும் (அ) (ஆ)

| வகை | பகிர்ந் தளிப்புக்கள் | | முதல் தொகை மீள்கொடுப் பனவுகள் | | வெளி நின்றவை | |
|---|---|---|---|---|---|---|
| | 2002 | 2003(இ) | 2002 | 2003(இ) | 2002 | 2003(இ) |
| **1. கொடைகள்** | 47,623 | 87,536 | 22,686 | 25,433 | 710,495 | 840,256 |
| இருபுடை | 18,835 | 29,786 | 15,122 | 16,344 | 348,627 | 398,797 |
| பல்புடை | 23,787 | 41,119 | 5,839 | 7,066 | 341,327 | 405,006 |
| வர்த்தகம் | - | 10,082 | 597 | 646 | 7,849 | 17,566 |
| ஏற்றுமதிக் கொடுகடன்கள் | 5,001 | 6,549 | 1,128 | 1,377 | 12,692 | 18,887 |
| **2. நிதிகளின் பயன்பாடு** | 47,623 | 87,536 | 22,686 | 25,433 | 710,495 | 840,256 |
| காசு | - | - | 212 | 213 | 1,354 | 1,220 |
| பண்டம் | 317 | - | 3,091 | 3,018 | 30,157 | 30,659 |
| உணவு | - | - | 1,645 | 1,715 | 36,928 | 35,069 |
| பொருட்களும் பணிகளும் | 905 | 2,321 | - | - | 916 | 3,232 |
| இராணுவம் | - | - | - | - | 875 | 873 |
| நிகழ்ச்சித்திட்டம் | 6,389 | 33,012 | 1,620 | 1,394 | 56,648 | 94,666 |
| செயற்றிட்டம் | 40,012 | 52,118 | 16,107 | 19,088 | 583,435 | 674,272 |
| தொழிநுட்ப உதவி | - | 85 | 11 | 5 | 182 | 265 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

(அ) புகைவண்டித் திணைக்களத்திற்கான ப.நா.நிதியத்தின் நிதிஉதவிகளும், கடன்களும் நீங்கலாக
(ஆ) உண்மையான மீள்கொடுப்பனவுத்தரவுகளிலுள்ள வேறுபாடுகளுக்கு குறுக்கு செலாவணிவீத வேறுபாடுகளே காரணமாகும்.
(இ) தற்காலிகமானவை

விளங்கி ரூ.199.8 பில்லியனுக்கு அல்லது மொத்த பல்புடைக்கடன்களில் 49 சதவீதத்திற்கு பொறுப்பாக இருந்தது.

நிதியங்களின் பயன்பாட்டின்படி வகைப் படுத்தும்பொழுது செயற்றிட்ட, நிகழ்ச்சித்திட்ட மற்றும் பண்டக்கடன்கள் முறையே ரூ.674.3 பில்லியனாகவும் (80 சதவீதம்), ரூ.94.7 பில்லியனாகவும் (11 சதவீதம்), ரூ.30.7 பில்லியனாகவும் (4 சதவீதம்) விளங்கின.

2003 இல் வெளிநாட்டு அரசபடுகடன் மீதான முதற்தொகையின் மீள்கொடுப்பனவு, வட்டி மற்றும் மற்றைய கட்டணங்களின் (மூலதன மயமாக்கப்பட்ட வட்டி உட்பட) கொடுப்பனவு என்பன முறையே ரூ.25.4 பில்லியனாகவும், ரூ.13.8 பில்லியனாகவும் காணப்பட்டன. 2003ஆம் ஆண்டுப் பகுதியில் மொத்தப் பகிர்ந்தளிப்புக்கள் ரூ.87.5 பில்லியனாக விளங்கியதுடன் இது பல்புடை மூலங்களிலிருந்தான ரூ.41.1 பில்லியனையும் (47 சதவீதம்), இருபுடை மூலங்களிலிருந்தான ரூ.29.8 பில்லியனையும் (34 சதவீதம்) உள்ளடக்கியிருந்தது. வர்த்தகக்கடன்களும் ஏற்றுமதிக் கொடுகடனும் ரூ.16.6 பில்லியனாகக் காணப்பட்டன. செயற்றிட்ட மற்றும் நிகழ்ச்சித்திட்டக் கடன்கள் 2003ஆம் ஆண்டின் மொத்தப் பகிர்ந்தளிப்பில் 97 சதவீதத்திற்கு வகைகூறின.

**அட்டவணை II-22**
**வெளிநாட்டுப் படுகடனின் முதிர்ச்சி, வட்டிவீதங்கள், கொடை மூலம்**

| கொடை வகை | முதிர்ச்சிக் காலம் (ஆண்டுகள்) சலுகைக் காலம் | மீள் கொடுப்பனவு காலம் | வட்டிவீதம்/ பணிக் கட்டணம் (ஆண்டுக்கு %) | கொடை மூலம் (%) |
|---|---|---|---|---|
| இருபுடை | 1 – 16 | 2 - 40 | 0.00 - 5.68 | 10 – 91 |
| பல்புடை | 1 – 11 | 1– 40 | 0.75 - 2.50 | 5 – 94 |
| வர்த்தகம் | 0 – 11 | 2 – 30 | 1.42 - 7.70 | 1 – 43 |
| ஏற்றுமதிக் கொடுகடன் | 1 – 13 | 4 – 14 | 0.00 - 7.39 | 11– 74 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

இவ்வாண்டுக் காலத்தில் 23 புதிய வெளிநாட்டுக்கடன்கள் தொடர்பாக ஒப்பந்தம் செய்யப்பட்டமையின் விளைவாக தொழிற்படு கடன்களின் எண்ணிக்கை 2003 இறுதியில் 564 இற்கு அதிகரித்தது. அட்டவணை II.22 இல் காட்டப்பட்டவாறு இவ்வெளிநாட்டுக்கடன்கள் 1-16 ஆண்டுகள் வரையிலான சலுகைக் காலத்தையும், 1-40 ஆண்டுகள் வரையிலான மீள்கொடுப்பனவுக் காலத்தையும் கொண்டிருந்தன. இக்கடன்களுக்கான வட்டி வீதம் ஆண்டிற்கு 0 இலிருந்து 7.7 சதவீதம் வரை வேறுபட்டன. கொடை மூலங்கள் 1 இலிருந்து 94 சதவீதம் வரை வேறுபட்டன.

## உள்கட்டமைப்பு அபிவிருத்தியும் தொழில்நுட்ப உதவியும்

அரச படுகடன் பிணையங்கள் சந்தையை மேலும் அபிவிருத்தி செய்வதற்காக பொதுப்படுகடன் திணைக்களம் 2003 இல் பல முன்னோடி நடவடிக்கைகளை மேற்கொண்டது. இந்நடவடிக்கைகள் திறைசேரி உண்டியல் மற்றும் திறைசேரி முறிகளுக்கான உத்தேச பத்திரங்களற்ற பிணையங்கள் தீர்ப்பனவு முறை, மத்திய வைப்பக முறை என்பனவற்றை நிறுவுதலுடன் தொடர்பான வேலைகள், அரச படுகடன் பிணையங்கள் சந்தை தொடர்பாக, ஆய்வரங்குகள் மற்றும் செயலமர்வுகள் பொதுமக்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் என்பனவற்றை நடத்துதல், முதனிலை வணிகர்களுக்கான ஒழுக்கக் கோவையினை உருவாக்கியமை, புளும்பேர்க் வர்த்தகப்படுத்தல் வசதியினை அறிமுகப்படுத்தல், சுதந்திரமான கொடுகடன் தரமிடலைப் பெற்றுக் கொள்வதற்கும் நீண்டகால விளைவு வளைகோட்டினை விருத்தி செய்வதற்குமான செயற்பாட்டு முயற்சிகள் என்பனவற்றை உள்ளடக்கியிருந்தன. முதனிலை வணிகர்களுக்கான ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பினை வலுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன.

## பத்திரங்களற்ற பிணையங்கள் தீர்ப்பனவு முறையும் மத்திய வைப்பக முறையும்

2003ஆம் ஆண்டில் பத்திரங்களற்ற பிணையங்கள் தீர்ப்பனவு முறையையும், மத்திய வைப்பக முறையையும் நிறுவுகின்ற வேலையினை நிறைவு செய்ய பொதுப்படுகடன் திணைக்களம் தொடர்ந்தும் பணியாற்றியது. இதன் விளைவாக, இது காலவரை சான்றிதழ் பத்திரங்களின் வடிவில் வழங்கப்பட்டு வந்த திறைசேரி உண்டியல்களும், திறைசேரிமுறிகளும் பத்திரங்களற்ற வடிவத்தில் வழங்கப்படவுள்ளன. இரண்டாந்தரச் சந்தை வர்த்தகப்படுத்தலை அதிகரிப்பதன் மூலமும் பத்திரங்களை அடிப்படையாகக் கொண்ட பிணையங்களுடன் இணைந்து காணப்படும் இடர்நேர்வுகளை ஒழித்து விடுவதன் மூலமும் அரசபடுகடன் பிணையங்கள் சந்தையின் வினைத்திறனை பத்திரங்களற்ற பிணையங்கள் தீர்ப்பனவு முறை மேம்படுத்தும். பத்திரங்களற்ற பிணையங்கள் தீர்ப்பனவு முறை மின்னியல் முறையில் அதேநேரத்தில் தொழிற்படுத்தப்படுவதனால், வர்த்தகப்படுத்தல் அனைத்து சந்தைப்படுத்தல் பங்கேற்பாளர்களுக்கும் இலகுவானதாக இருக்கும். பிணையங்கள் கொடுக்கல்வாங்கல்களின் பேரிலான நிதிய மாற்றல்கள் அதேநேர மொத்த தீர்ப்பனவு முறைமையை அடிப்படையாகக் கொண்டிருப்பதுடன் இம்முறையினூடாக அதேநேர அடிப்படையில் உடனடியாகவே மேற்கொள்ளப்படும்.

உத்தேச பத்திரங்களற்ற பிணையங்கள் தீர்ப்பனவு முறையின் முக்கியமானதொரு கூறாக அரச பிணையங்களுக்கான மத்திய வைப்பக முறை விளங்கும். மத்திய வைப்பக முறையானது ஒரு மின்னியல் தரவுத்தளமாகவுள்ளதுடன் இது அரச பிணையங்களின் உடமைகளைப் பதிவு செய்துகொள்ளும். மத்திய வைப்பக முறையானது பதிவகமாகவும் அரச பிணையங்களுக்கான பாதுகாவலனாகவும் செயற்படும். பத்திரங்களற்ற பிணையங்கள் தீர்ப்பனவு முறையும் மத்திய வைப்பக முறையும் சேர்ந்து “லங்கா செகுயர்” எனப் பெயரிடப்படும்.

2004 இன் தொடக்கப்பகுதியில் உத்தேச பத்திரங்களற்ற பிணையங்கள் தீர்ப்பனவு முறையினதும், மத்திய வைப்பக முறையினதும் நிறுவலுடன் பொதுப்படுகடன் திணைக்களம் பத்திரப் பிணையிலிருந்து பத்திரங்களற்ற பிணையங்களுக்கு மாறிச்செல்வதனை முகாமை செய்யும். பத்திரங்களற்ற பிணையங்களை வழங்குவதனையும் வர்த்தகம் செய்வதனையும் அதேபோன்று ஏற்கனவேயுள்ள பத்திரப் பிணையங்களை இல்லாதொழிப்பதனையும் இயலச்செய்யும் விதத்தில் தொடர்பான சட்டவாக்கங்

களுக்கு தேவையான திருத்தங்கள் 2003இல் இயற்றப்பட்டன.

## ஆய்வரங்குகளும் செயலமர்வுகளும்

கடந்த சில ஆண்டுகளாக அரச படுகடன் பிணையங்கள் சந்தை பல விடயங்களில் வளர்ச்சி கண்டிருக்கிறது. வட்டி வீத பரிமாற்றங்கள் மற்றும் முன்னோக்கியவீத உடன்படிக்கைகள், மேம்பட்ட தொழில்நுட்பத்தினை அடிப்படையாகக் கொண்ட பன்னாட்டு ரீதியான சிறந்த நடைமுறைகள் போன்ற பெறுதிகளை உள்ளடக்கிய புதிய நிதியியல் கருவிகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. இந்த அபிவிருத்திகளைக் கருத்திற்கொள்கையில் இலங்கை மத்திய வங்கி அலுவலர்களினதும் சந்தை பங்கேற்பாளர்களுடைய அலுவலர்களினதும் தேர்ச்சியை அபிவிருத்தி செய்வது முக்கியமானது எனக் கருதப்பட்டது. இதன்படி, 2003இல் இலங்கை மத்திய வங்கி, முதனிலை வணிகர்களின் அமைப்புடன் இணைந்து ஐக்கிய இராச்சியத்தின் யூரோ மணி இன்ஸ்ரியூட்டின் ஒத்துழைப்புடன் நிலையான வருமானப் பிணையங்கள் என்பதன் மீது இரு செயலமர்வுகளை ஒழுங்கு செய்தது.

பொதுப்படுகடன் திணைக்களம் முதனிலை வணிகர்களுக்கான ஒழுக்கக்கோவையை இறுதிப்படுத்துவதற்காக முதனிலை வணிகர்களுக் காகவும், படுகடன் சந்தையின் மற்றைய பங்குடமையாளர்களுக்குமாக தொடர்ச்சியாக ஆய்வரங்குகளை நடத்தியது. பொதுப்படுகடன் திணைக்களம் உத்தேச பத்திரங்களற்ற பிணையங்கள் தீர்ப்பனவு முறை தொடர்பாக பொதுமக்கள் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் பலவற்றை முதனிலை வணிகர்களின் உதவியுடன் நடத்தியது.

## முதனிலை வணிகர்களுக்கான ஒழுக்கக்கோவை

2003 யூலையில் வெளியிடப்பட்ட“முதனிலை வணிகர்களுக்கான ஒழுக்கக்கோவை” மற்றைய விடயங்களுடன் முதனிலை வணிகர்களின் பணிப்பாளர்கள் மற்றும் ஊழியர்களின் தனிப்பட்ட வாணிபம், இரகசியத்தன்மை, நேர்மை மற்றும் நியாயம், கவனம், நலவுரித்துப் போன்றவற்றில் முரண்பாடு போன்ற துறைகளில் பேணப்பட வேண்டிய சிறந்த நடைமுறைகளின் மீதான வழிகாட்டல்களை எடுத்துக்காட்டியது. இவ்வொழுக்கக்கோவை 2003 செத்தெம்பர் 1ஆம் நாளிலிருந்து நடைமுறைக்கு வந்தது. இவ்வொழுக்கக்கோவையின் ஏற்பாடுகளுக்கு இணங்கி ஒழுகுவது பற்றி அறிக்கையிடுவதற்காக முதனிலை வணிகர் கம்பனிகளிலும் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் தொழிற்படுத்துகின்ற முதனிலை வணிகர் பிரிவுகளிலும் இணங்குவிப்பு அலுவலர்கள் நியமிக்கப்பட்டனர்.

## முதனிலை வணிகர்களுக்கான இடர்நேர்வினை அடிப்படையாகக் கொண்ட மூலதனப்போதுமை

உலக வங்கியின் தொழில்நுட்ப உதவி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ், முதனிலை வணிகர்களின் நிதியியல் ஆற்றலை மேம்படுத்துவதற்கும் நிதியியல் முறையின் உறுதிப்பாட்டினைப் பாதுகாப்பதற்குமாக இடர்நேர்வு உணர்வுடைய மூலதனப்போதுமை கட்டமைப்பொன்றினை அபிவிருத்தி செய்வதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டன. உத்தேச இடர்நேர்வினை அடிப்படையாகக் கொண்ட மூலதனப்போதுமைக் கட்டமைப்பு, பொதுப்படுகடன் திணைக்களத்தினால் தற்போது பயன்படுத்தப்படும் முதனிலை வணிகர்களின் இடர்நேர்வு மதிப்பீடுகளுக்கான அனைத்தையு முள்ளடக்கிய அணுகுமுறையை அகற்றிவிடும்.

## புளும்பேர்க் முறி வர்த்தகப்படுத்தும் முறை

அரச பிணையங்களின் வர்த்தகப்படுத்தலுக்கு அவசியமான அடிப்படைச் சந்தை உட்கட்டமைப்பினை வழங்கும் பொருட்டு முதனிலை வணிகர்களுக்கு புளும்பேர்க் முறி வர்த்தகப்படுத்தல் முறையினை அறிமுகப்படுத்துவதற்கு பொதுப்படுகடன் திணைக்களம் முயற்சிகளை மேற்கொண்டது. இம்முறையானது அரச பிணையங்களில் அதேநேர வர்த்தகப்படுத்தலை வழங்குவதன் மூலம் வர்த்தகத்தினை நிறைவேற்றுகின்ற நேரத்தையும், கொடுக்கல்வாங்கல் செலவினையும் குறைக்க முடிவதுடன், வர்த்தகப்படுத்தல் அளவையும் திரவத்தன்மையினையும் அதிகரிக்கும். இம்முறையானது முதனிலை வணிகர்களிடமிருந்தான போட்டித் தன்மை வாய்ந்த உறுதியான இருவழி விலைக்கோரல்களை எடுத்துக்காட்டுவதனால் வாங்கும் மற்றும் விற்கும் விலைகளுக்கிடையேயான இலாப அளவு மிகக் குறைவாக இருப்பதுடன் இது ஒளிவு மறைவற்ற தன்மைக்கும், விலைகளைக் கண்டறியும் வினைத்திறனுக்கும் வசதியளிக்கும். இம்முறையானது மத்திய வங்கியினால் தொழிற்படுத்தப்படும் அதேநேர மொத்த தீர்ப்பனவு முறையுடனும், பத்திரங்களற்ற தீர்ப்பனவு முறையுடனும் நேரடியாக இணைக்கப்படும்.

## இலங்கைக்கான சுதந்தரமான கொடுகடன் தரமிடல்

அரசாங்கத்தின் சார்பில் இலங்கை மத்திய வங்கியானது, பன்னாட்டு மூலதனச் சந்தையில் அடித்தளமாகக் கொள்ளக்கூடிய அளவொன்றினை நிறுவும்பொருட்டு இலங்கைக்கு சுதந்திரமான கொடுகடன் தரமிடலொன்றைப் பெற்றுக் கொள்வதற் கான செயல்முறையொன்றைத் தொடங்கியது. சுதந்திரமான கொடுகடன் தரமிடல் என்பது அரசின் கொடுகடன் நன்மதிப்பினை சுதந்திரமாக மதிப்பிடுமொரு முறையாகும். ஆரம்ப நடவடிக்கையாக, கொடுகடன் தரமிடல் மதியுரைப்பணிகளுடன்

இலங்கையில் தொழிற்படுகின்ற முதலீட்டு வங்கிகள் தரமிடல் மதியுரையாளராக நியமனம் செய்யப் படுவதற்குப் பரிசீலிப்பதற்காக முன்மொழிவுகளைச் செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டன. ஒன்று அல்லது அதற்குக் கூடுதலான பன்னாட்டு தரமிடல் முகவர்களிடமிருந்து தரமிடலினை பெற்றுக்கொள்வதற்கான தரமிடல் செய்முறையில் தரமிடல் மதியுரையாளர் அரசாங்கத்திற்கு உதவிபுரிவார்.

### முதனிலை வணிகர் முறையினை ஒழுங்குமுறைப்படுத்தலும் மேற்பார்வை செய்தலும்

2000ஆம் ஆண்டு மாச்சில் நிறுவப்பட்ட தற்போதைய முதனிலை வணிகர் முறை 2002இல் விரிவுபடுத்தப்பட்டது. இவ்விரிவாக்கத்தினை இயலச்செய்யும் விதத்தில் உள்நாட்டு திறைசேரி உண்டியல் கட்டளைச்சட்டம் மற்றும் பதிவு செய்யப்பட்ட பங்குத்தொகுதிகள் பிணையங்கள் கட்டளைச்சட்டம் என்பனவற்றின் கீழ் வழங்கப்பட்ட ஒழுங்குவிதிகள் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளை முதனிலை வணிகர்களாக நியமிப்பதனை அனுமதிக்கும் விதத்தில் திருத்தப்பட்டன. இவ்விரிவாக்கமானது, முதனிலை வணிகர்களிடையே பாரிய போட்டியையும் சந்தைக்கு உயர்ந்தளவு திரவத்தன்மையினை விடுவிப்பதனையும் ஊக்குவிப்பதற்காக மேற்கொள்ளப்பட்டதாகும். 2003 இறுதியில் பதினொரு முதனிலை வணிகர்கள் தொழிற்பட்டதுடன் இது எட்டு முதனிலை வணிகர் கம்பனிகளையும் மூன்று உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளையும் உள்ளடக்கியிருந்தது.

முதனிலை வணிகர்களை, குறிப்பாக மூலதனக் தேவைப்பாடுகள் தொடர்பில் மேற்பார்வை செய்தல் மற்றும் நம்பிக்கைப்பொறுப்பாண்மை மற்றும் கட்டுக்காப்பு ஒழுங்குகள் போன்ற முன்மதியுடைய தேவைப்பாடுகள், பணிப்பாளர் சபை மற்றும் மூத்த முகாமை அலுவலர்களுக்கான நியம தகுதிகள், இடர்நேர்வு முகாமைத்துவ முறைகள் மற்றும் உட்கட்டமைப்பு போன்ற பரந்த துறைகளில் கட்டமைப்பினை வலுப்படுத்துவதற்காக உள்நாட்டு திறைசேரி உண்டியல் கட்டளைச்சட்டம் மற்றும் பதிவு செய்யப்பட்ட பங்குத்தொகுதிகள் பிணையங்கள் கட்டளைச்சட்டம் என்பனவற்றின் கீழ் வழங்கப்பட்ட பணிப்புரைகள் குறித்துரைக்கப்பட்டு நடைமுறைக்கிடக் கூடியதாயிருக்கும்.

முதனிலை வணிகர்களுக்கு வழங்கப்பட்ட பணிப்புரைகளாக குறைந்த மூலதனத் தேவைப்பாடுகள், முன்னோக்கியவீத உடன்படிக்கை மற்றும் வட்டிவீத பரிமாற்றங்கள், அடித்தளமாகக் கொள்ளப்பட்ட அளவுக்குறிகளுக்கான முதிர்ச்சிகளுக்கான உறுதியான இருவழி விலைக்கோரல்கள் (விலைக்குறிப்பீடும் விலைகளை முன்வைத்தலும்), சிறப்பு இடர்நேர்வு ஒதுக்கங்கள், பத்திரப் பிணையங்களின் கட்டுக்காப்பும் நம்பிக்கை பொறுப்பாண்மை உடமைகளும், திறைசேரி உண்டியல் மற்றும் திறைசேரிமுறி ஏலங்களுக்கான ஆகக்குறைந்த உதவுதொகை மட்டங்கள் மற்றும் மீள்கொள்வனவு கொடுக்கல்வாங்கல்களுக்கான கணக்கீடு என்பன காணப்பட்டன. ஆகக்குறைந்த மூலதனத் தேவைப்பாடுகள் மீதான பணிப்புரைகளின் நியதிகளில் முதனிலை வணிகர்கள் அவர்களது ஆகக்குறைந்த மூலதனத்தினை 2004 மாச்சு 31ஆம் நாளிலிருந்து ரூ.350 மில்லியனுக்கும், 2005 யூலை 1ஆம் நாளிலிருந்து ரூ.400 மில்லியனுக்கும் அதிகரிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டனர். இப்பணிப்புரைகளின் நியதிகளின்படி முன்னர் 3 சதவீதமாக இருந்த மூலதனப்போதுமை விகிதத்தினை 2003 ஏப்பிறல் 1ஆம் நாளிலிருந்து 5 சதவீதமாகப் பேணுமாறு முதனிலை வணிகர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டனர்.

முன்னோக்கியவீத உடன்படிக்கை மற்றும் வட்டி வீத பரிமாற்றம் என்பன மீதான பணிப்புரை 2003 ஏப்பிறலில் விடுக்கப்பட்டது. முன்னோக்கியவீத உடன்படிக்கை மற்றும் வட்டி வீத பரிமாற்றம் போன்ற நிதியியல் பெறுமதிகள் வட்டிவீத இடர்நேர்வுகளை முகாமைப்படுத்த பயனுள்ளவையாகும். இப் பணிப்புரையின் நியதிகளின்படி, இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட சொத்தின் 12 சதவீதத்தில் மேலதிக மூலதனமொன்றை பேணுமாறு முதனிலை வணிகர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டனர்.

நடுத்தர மற்றும் நீண்டகால கருவிகளின் திரவத்தன்மையினை அதிகரிக்கும் பொருட்டு அடித்தளமாகக் கொள்ளப்பட்ட அளவுக்குறிக்கான உறுதியான இருவழி விலைக்கோரல்கள் (விலைக்குறிப்பீடும் முன்வைக்கப்பட்ட விலைகளும்) மீதான பணிப்புரை 2003 யூலையில் வழங்கப்பட்டது. முதனிலை வணிகர் முறையின் பாதுகாப்பு, ஆற்றல் தன்மை மற்றும் உறுதிப்பாடு என்பனவற்றை மேம்படுத்துவதற்காகவும், முதனிலை வணிகர்களின் மூலதனத் தளத்தினைக் கட்டியெழுப்புவதற்குமாக பொதுப்படுகடன் திணைக்களம் சிறப்பு இடர்நேர்வு ஒதுக்கின் மீதும் பணிப்புரையொன்றை வழங்கியது. இப்பணிப்புரை 2004 யூலை 1ஆம் நாளன்று நடைமுறைக்குவரும்.

### முதனிலை வணிகர்களின் இரண்டாந்தரச் சந்தைத் தொழிற்பாடுகள்

திறைசேரி உண்டியல் மற்றும் திறைசேரி முறிகளின் முழுமையான உடனடிக் கொள்வனவுகள் மற்றும் விற்பனைகள், மீள்கொள்வனவுகள் மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவுகள் என்பனவற்றுடன்

தொடர்பான இரண்டாந்தரச்சந்தைக் கொடுக்கல் வாங்கல்கள் 2003இல் பெறுமதி, அளவு ஆகிய இரண்டிலும் குறிப்பிடத்தக்க அதிகரிப்பினைக் காட்டின. முதனிலை வணிகரின் வாராந்த அறிக்கையிடல் முறையினூடாக திரட்டப்பட்ட தகவல்களின் அடிப்படையில், இரண்டாந்தரச்சந்தையில் முதனிலை வணிகர்களின் திறைசேரி உண்டியலின் மொத்த முழுமையான உடனடி விற்பனை மற்றும் கொள்வனவு என்பன முறையே ரூ.265,757 மில்லியனாகவும், ரூ.37,408 மில்லியனாகவும் விளங்கியவேளையில் முதனிலை வணிகரின் திறைசேரிமுறிகளின் முழுமையான உடனடி விற்பனையும், கொள்வனவும் முறையே ரூ.426,865 மில்லியனாவும், ரூ.349,801 மில்லியனாகவும் விளங்கியது. திறைசேரி உண்டியல்களின் மீள்கொள்வனவு, நேர்மாற்று மீள்கொள்வனவு கொடுக்கல்வாங்கல்கள் முறையே ரூ.1,058,459 மில்லியனாகவும், ரூ.240,911 மில்லியனாகவும் விளங்கியவேளையில் திறைசேரிமுறிகளின் மீள்கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவு என்பனவற்றின் கொடுக்கல்வாங்கல்கள் முறையே ரூ.1,938,581 மில்லியனாகவும், ரூ.304,995 மில்லியனாகவும் காணப்பட்டன.

முதனிலை வணிகர்களினால் சமர்ப்பிக்கப்பட்ட கூற்றுக்களின் அடிப்படையில் இரண்டாந்தரச்சந்தை நடவடிக்கைகளின் நாளாந்த மற்றும் வாராந்த சந்தை அறிக்கைகளைப் பொதுப்படுகடன் திணைக்களம் திரட்டியது. அறிக்கைகள், முழுமையான உடனடி மற்றும் மீள்கொள்வனவுக் கொடுக்கல்வாங்கல் பற்றி முதிர்ச்சி அடிப்படையில் வர்த்தகம் செய்யப்பட்ட, அளவுகள் மற்றும் விளைவு வீதங்கள் மீதான ஒன்று சேர்ந்த தரவுகளைத் தருகின்றன. இவ்வறிக்கைகள் வேறுபட்ட முதிர்ச்சிகளைக் கொண்ட திறைசேரி உண்டியல்கள் மற்றும் முறிகளுக்கான நிறையேற்றப்பட்ட சராசரி சந்தை விலைகளையும், சராசரி இருவழி விலைக் குறிப்பீடுகளையும் உள்ளடக்கியிருக்கின்றன.

## பிரதேச அபிவிருத்தி

பிரதேச அபிவிருத்தித் திணைக்களமானது நாட்டின் சிறிய, நடுத்தர நுண்பாக நிதித்துறையினை பலப்படுத்தும் நோக்குடன் கொள்கைகளையும், நிகழ்ச்சித்திட்டங்களையும் அபிவிருத்தி செய்து அமுலாக்கம் செய்வதில் முக்கிய பங்கினை வகித்தது. இது பல்வேறு கொடையாளிகளினால் நிதியிடப்பட்ட கொடுகடன் நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் மீள்நிதியிடல் வழங்கலைத் தொடர்ந்ததுடன் சில கொடுகடன் நிகழ்ச்சித்திட்டங்களுக்குப் ஏற்புடையதான கொடுகடன் உத்தரவாதத் திட்டங்களையும் நிருவகித்தது. மேலும் பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் பத்து தெரிந்தெடுக்கப்பட்ட மாவட்டங்களில் வறுமை ஒழிப்பினை நோக்கமாகக்கொண்டு சிறு வேளாண்மையாளர் மற்றும் நிலமற்றோர் கொடுகடன் செயற்றிட்டம், வறுமை ஒழிப்பு நுண்பாக நிதிச் செயற்றிட்டம் போன்றவற்றைத் தொடர்ந்தும் அமுல் நடாத்தியது. அத்துடன் திணைக்களமானது நடைமுறையிலிருக்கும் மற்றும் முற்றுப்பெற்ற கொடுகடன் செயற்றிட்டங்கள் தொடர்பான செயற்றிட்டப் பரிசோதனைகளிலும், பின்தொடர்தல் வேலைகளிலும் ஈடுபட்டது. திணைக்களம் பிரதேச அபிவிருத்தி வங்கிகளின் நடவடிக்கைகளை கண்காணிப்பு செய்வதில் ஈடுபட்டதுடன் கிராமிய நிதியிடல் நிறுவனங்களாக அவற்றின் இயலளவினை கட்டியெழுப்பும் நோக்கில் வழிகாட்டுதலையும் வழங்கியது. கொள்கைச் சீராக்கங்களின் ஊடாகவும் கிராமிய நிதிநிறுவனங்களின் இயலளவினையும், தொழிற்பாடுகளையும் முன்னேற்றுவதன் மூலமும் நீண்டு நிலைத்திருக்கக் கூடியதொரு கிராமிய நிதிமுறைமையை நிறுவுவதன் வாயிலாக பொருளாதார வளர்ச்சிக்கும் வறுமைக்குறைப்பிற்கும் பங்களிப்புச் செய்வதற்கானகிராமிய நிதித்துறை அபிவிருத்தி செயற்றிட்டத்தினை தயாரிப்பதற்கு இத்திணைக்களம் உதவியளித்தது. இந்தச் செயற்றிட்டம் ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதியிடப்பட்டு 2004 இல் அமுலாக்கப்படும்.

### கொடுகடன் செயற்றிட்டங்களின் முன்னேற்றம்

நிதியிடலின் மூலங்களைப் பொறுத்து திணைக்களத்தால் கையாளப்படுகின்ற கொடுகடன் திட்டங்களை பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

**அ. கொடையாளர்களினால் நிதியிடப்பட்ட செயற்றிட்டங்கள்**

**(அ) ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதியிடப்பட்ட செயற்றிட்டங்கள்**

(i) தேயிலை அபிவிருத்தி செயற்றிட்டம்

(ii) இரண்டாவது நிரந்தரப் பயிர்கள் அபிவிருத்தி செயற்றிட்டம்

(iii) தேர்ச்சி அபிவிருத்திச் செயற்றிட்டம்

(iv) நகர அபிவிருத்தி மற்றும் குறைந்த வருமான வீடமைப்புத்துறைச் செயற்றிட்டம்

(v) வட மத்திய மாகாண கிராமிய அபிவிருத்திச் செயற்றிட்டம்

**(ஆ) ஏனைய கொடையாளர்களினால் நிதியிடப்பட்ட செயற்றிட்டங்கள்**

(i) வட மத்திய மாகாண பங்கேற்பு கிராமிய அபிவிருத்தி செயற்றிட்டம் (வேளாண்மை

அபிவிருத்திக்கான பன்னாட்டு நிதியம், சுவீடன் பன்னாட்டு அபிவிருத்தி முகவர், உலக உணவு நிகழ்ச்சித்திட்டம்)

(ii) வறுமை ஒழிப்பு நுண்பாக நிதிச் செயற்றிட்டம் (பன்னாட்டு ஒத்துழைப்பிற் கான யப்பானிய வங்கி)

(iii) மாத்தளைப் பிரதேச பொருளாதார முற்போக்கு நிகழ்ச்சித்திட்டம் (வேளாண்மை அபிவிருத்திக்கான பன்னாட்டு நிதியம்)

**ஆ. அரசின் அனுசரணையுடனான நிகழ்ச்சித்திட்டங்கள்**

**வட்டி உதவு தொகை**

(i) முன்னோக்கிய விற்பனை ஒப்பந்த முறையினை உள்ளடக்கிய புதிய அனைத்தையும் உள்ளடக்கிய கிராமிய கொடுகடன் திட்டம்

(ii) சுறதுற கொடுகடன் திட்டம்

**சுழல் நிதியங்கள்**

(i) சிறிய வேளாண்மையாளர்கள் மற்றும் நிலமற்றோர் கொடுகடன் செயற்றிட்டம்

(ii) சப்பிரகமுவ மாகாண ஒருங்கிணைக்கப் பட்ட கிராமிய அபிவிருத்திச் செயற்றிட்டம்

(iii) நகரச்சுழல் உட்கட்டமைப்பு அபிவிருத்திச் செற்றிட்டம் (சுழல் நிதியம்) கொடுகடன்திட்டம்

(iv) தென்மாகாண கிராமிய அபிவிருத்தி (சூழல் நிதியம்) கொடுகடன் செயற்றிட்டம்.

## தேயிலை அபிவிருத்திச் செயற்றிட்டம்

தேயிலை அபிவிருத்திச் செயற்றிட்டமானது 1997இல் முடிவு பெற்ற சிறு உடமையாளர் தேயிலை அபிவிருத்திச் செயற்றிட்டத்தின் பின் தொடராக 1999இல் அதன் தொழிற்பாடுகளை தொடங்கி 2003 இல் அதன் தொழிற்பாடுகளின் நான்காவது ஆண்டினைப் பூர்த்தி செய்தது. இந்தச் செயற்றிட்டமானது அனைத்து தேயிலை வளரும் மாவட்டங்களையும் உள்ளடக்கியிருப்பதுடன் 2005 அளவில் பூர்த்தியாகும் என அட்டவணை யிடப்பட்டுள்ளது. இச்செயற்றிட்டத்தின் குறிக்கோள்களாக தேயிலை சிறு உடமையாளர்களின் வருமானத்தை ஒரு உறுதியான அடிப்படையில் அதிகரித்தல், செயற்றிட்டப் பகுதிகளில் இயற்கைச் சூழலை மேம்படுத்தல் என்பன விளங்கின. இந்தச் செயற்றிட்டத்தின் கொடுகடன் கூறின் நிறைவேற்று முகவராக மத்திய வங்கி விளங்கியது. இச்செயற்றிட்டத்தின் கீழ் தேயிலை மீள்நடுகை தேயிலை நாற்று மேடைகளை அமைத்தல், தேயிலைத் தொழில்சாலைகளை புத்தாக்கம் செய்து நவீனமயப்படுத்தல், ஊர்திகளின் கொள்வனவு, தேயிலைக் கொழுந்து சேகரிப்பு நிலையங்களை நிருமாணித்தல் என்பனவற்றிற்க கொடுகடன் வழங்கப்பட்டது.

கொடுகடன் கூறிற்கு ஒதுக்கப்பட்ட தொகை ஐ.அ.டொலர் 28.1 மில்லியனுக்கு (கிட்டத்தட்ட ரூ.2,600 மில்லியன்) சமமாக விளங்கியது. 2003 இறுதியில் கொடுகடனுக்கு ஒதுக்கப்பட்ட மொத்த தொகையில் 4,162 தகைமை பெற்ற துணைச்செயற்றிட்டங்களின் பொருட்டு ரூ.2,373 மில்லியன் கொண்ட தொகைக்கு ஒப்புதலளிக்கப்பட்டதுடன் அனைத்து பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களினாலும் 3,974 துணைச் செயற்றிட்டங்களுக்கு ரூ.2,059 மில்லியன் தொகை பகிர்ந்தளிக்கப்பட்டது. 2003 இன் இறுதிவரை மத்திய வங்கி பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கு 3,388 துணைக்கடன்கள் சம்பந்தமாக ரூ.1,560 மில்லியன் கொண்ட தொகையினை மீள நிதியிடல் வசதிகளுக்காக வழங்கியது.

ஆண்டின் முதலரைக் காலப்பகுதியில் தேயிலை விளையும் மாவட்டங்களில் சாதகமற்ற வானிலை நிலைமைகளினாலும், தாழ்நிலத் தேயிலை விளையும் பகுதிகளில் ஏற்பட்ட பாரிய வெள்ளப்பெருக்குகளினாலும், தேயிலை சிறு உடமையாளரிடமிருந்து கடன்களுக்கான கேள்வி குறைவாகவே இருந்தது. ஆண்டின் பிற்பகுதியில் கடனுக்கான கேள்வி மேம்பட்டிருந்த போதிலும் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களினால் இலக்கிடப்பட்ட ஆண்டுக்கான கடன் பகிர்ந்தளிப்பு இலக்குகளை அடைய முடியாமல் போனது. அவை 2003 இல் ரூ.434.0 மில்லியன் கொண்ட மொத்த தொகையினை பகிர்ந்தளித்ததுடன் இது இவ்வாண்டிற்கான இலக்கின் 73 சதவீதத்திற்கு வகைகூறியது.

## இரண்டாவது நிரந்தரப் பயிர்கள் அபிவிருத்தி செயற்றிட்டம்

இத்திட்டத்தின் குறிக்கோள்களாக நிரந்தரப் பயிர்கள் துறையின் அபிவிருத்திக்கும், வர்த்தக மயமாக்கலுக்கும் உதவுவதுடன் (பழப்பயிர்கள், வாசனைத் திரவிய பயிர்வகை, பூக்களும், இலை வகைகளும்) கொடுகடன் வசதிகளையும், ஆதரவுப் பணிகளையும் நிரந்தரப் பயிர்த்துறைக்கு வழங்குவதன்

மூலமாக கொடுகடன் வசதிகளும், விரிவாக்கப் பணிகளும் இத்துறைக்கு தொடர்ந்து கிடைப்பதனை உறுதிப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளலும் விளங்கின. இச்செயற்றிட்டம் 2003 இல் அதன் ஐந்தாவது ஆண்டுத் தொழிற்பாட்டினை நிறைவு செய்ததுடன் 2005 ஆம் ஆண்டில் நிறைவு பெறும் என அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளது. மத்திய வங்கி இச்செயற்றிட்டத்தின் கொடுகடன் கூறின் நிறைவேற்று முகவராக விளங்குவதுடன், செயற்றிட்ட முகாமைத்துவ அலுவலகம் ஆராய்ச்சி, விதை மற்றும் பயிரிடல் பொருட்கள், பண்ணை மதியுரை, சந்தைப்படுத்தல் மற்றும் தொழில்நுட்பப் பணிகள், நிறுவன ரீதியான வலுப்படுத்தல் போன்ற ஏனைய கூறுகளை வேளாண்மை அமைச்சின் சார்பில் அமுல்படுத்துவதற்கு பொறுப்பாகவிருந்தது.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் சிஎஉ 14.743 மில்லியன் கொண்ட ஒதுக்கில் சிஎஉ 11.562 மில்லியன் கொண்ட தொகை பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களால் வழங்கப்பட்ட கடன்களின் மீள நிதியிடலுக்கான கொடுகடன் கூறாக ஒதுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களில் தேசிய அபிவிருத்தி வங்கி, அபிவிருத்தி டி.எவ்.சி.சி வங்கி, அட்டன் நசனல் வங்கி, கொமர்சல் வங்கி, சம்பத் வங்கி, இலங்கை வங்கி, கந்துரட்ட அபிவிருத்தி வங்கி மற்றும் றுகுணு அபிவிருத்தி வங்கி என்பனவும் உள்ளடங்கும். இந்தச் செயற்றிட்டம் பதினேழு மாவட்டங்களில் தொழிற்படுகின்றது. 2003 இறுதியில் அனைத்து பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களாலும் ரூ.1,497 மில்லியன் கொண்ட தொகை 4,390 தகுதி வாய்ந்த துணைச்செயற்றிட்டங்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தது. இவ்வாண்டில் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களினால் பகிர்ந்தளிக்கப்பட்ட தொகை ரூ.571 மில்லியனாக விளங்கி இத்தொகை இவ்வாண்டிற்கென இலக்கிடப்பட்ட தொகைக்குச் சமமானதாக விளங்கியது. மத்திய வங்கி பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களினால் சமர்ப்பிக்கப்பட்ட கோரல்கள் மீள்நிதியிடலாக ரூ.353 மில்லியன் கொண்ட தொகையினை வழங்கியது.

## தேர்ச்சி அபிவிருத்திச் செயற்றிட்டம்

ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதியிடப்பட்ட தேர்ச்சி அபிவிருத்திச் செயற்றிட்டமானது 1999ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்பட்டது. இச்செயற்றிட்ட உடன்படிக்கையின் கீழ் செயற்றிட்ட நிதியிடலுக்காக சிஎஉ 13.7 மில்லியன் கடன்தொகை ஆசிய அபிவிருத்தி வங்கியால் வழங்கப்பட்டது. மொத்த ஒதுக்கில் ஐ.அ.டொலர் 675,000 சிறிய அளவு தொழில் முயற்சி அல்லது சுயதொழில் நடவடிக்கைகளுக்கு நிறுவுவதற்கு வழங்கப்பட்ட கடன்களுக்கு எதிராக மீள் நிதியிடலை வழங்குவதற்காக கொடுகடன் கூறுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் பயிற்சி அமைச்சு மாச்சு 2000 இலிருந்து ஒகத்து 2006 வரையிலான ஆறு வருட காலத்தில் இந்த முழு செயற்றிட்டத்தினையும் அமுல் நடத்துவதற்குப் பொறுப்பாகவிருக்கும். மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் பயிற்சி அமைச்சினது வேண்டுகோளுக்கிணங்க அமைச்சினால் நடாத்தப்படுகின்ற தேர்ச்சி நிகழ்ச்சித்திட்டத்தினை அபிவிருத்தி செயற்றிட்டம் வெற்றிகரமாக பூர்த்தி செய்யுமாறு வேண்டப்படும் தகைமை பெற்ற கடன்பாட்டாளர்களுக்கான துணைக்கடன்களுக்கு எதிரான மீளநிதி வழங்கும் பொறுப்பினை மத்திய வங்கி ஏற்றுக்கொண்டது. தெரிவு செய்யப்படும் பயிற்சியாளர்கள் கடன்கள் வழங்குவதற்காக பரிசீலனை செய்யப்படும் முன்பாக அமைச்சினால் நடாத்தப்படும் தொழில்முனைவோர் பயிற்சி நெறியில் பங்குபற்றல் வேண்டும். கடன்பாட்டாளர் ஒருவருக்கான ஆகக் கூடுதலான கடனின் அளவு ரூ.250,000 ஆகும். 2003இன் இறுதியில் கடன் வழங்கல் தொழிற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டன.

ஆறு பிரதேச அபிவிருத்தி வங்கிகள், இலங்கை வங்கி, மக்கள் வங்கி, அட்டன் நசனல் வங்கி மற்றும் செலான் வங்கி என்பன கொடுகடன் கூறினை அமுல் படுத்தும் பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்களாகும். கடன் வழங்கும் வீதம் ஆண்டொன்றிகு 10 சதவீதமாகும். 2003இன் இறுதியில் றுகுணு அபிவிருத்தி வங்கி இச்செயற்றிட்டத்தின் கீழ் 18 கடன்களைப் பகிர்ந்தளித்திருந்தது.

## நகர அபிவிருத்தி மற்றும் குறைந்த வருமான வீடமைப்புத்துறைச் செயற்றிட்டம்

நகர அபிவிருத்தி மற்றும் குறைந்த வருமான வீடமைப்புத்துறைச் செயற்றிட்டம் ஆசிய அபிவிருத்தி வங்கியிலிருந்து கிடைத்த ஐ.அ.டொலர் 20 மில்லியன் கொண்ட கடன் வடிவிலான நிதி உதவியைக் கொண்டு 1999 இல் அதன் தொழிற்பாடுகளைத் தொடங்கியது. 2004 இல் இச்செயற்றிட்டம் நிறைவுபெறும் என அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளது. இச்செயற்றிட்டத்தின் கடன் ஒப்புதல்களும், மீள நிதியிடல் பகிர்ந்தளிப்புக்களும் 2002ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2003ஆம் ஆண்டில் சிறிதளவு குறைவடைந்தமைக்குரிய காரணமாக, 2003இன் முதலரைப்பகுதியில் சந்தை வீதங்களுடன் ஒப்பிடுகையில் இச்செயற்றிட்டத்தின் கீழான கடன் வட்டி வீதங்கள் சார்புரீதியில் உயர்வானதாக இருந்ததுடன், நான்கு பங்கேற்பு கொடுகடன் நிறுவனங்கள் (வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபனம், ரஜரட்ட அபிவிருத்தி வங்கி, ருகுணு அபிவிருத்தி வங்கி, கந்துரட்ட அபிவிருத்தி வங்கி) 2002இல் அவற்றின் நிதியியல்

விகிதங்களில் குறைந்த மோசமான செயலாற்றத்தினைக் காட்டியதன் விளைவாக ஆசிய அபிவிருத்தி வங்கியினால் இடைநிறுத்தி வைக்கப்பட்டமை என்பன விளங்கின. எனினும் 2003 பிற்பகுதியில் கடன் திட்டத்தின் செயற்பாடு பங்கேற்புக் கொடுகடன் நிறுவனத்தினால் கடன்வழங்கல் வட்டி வீதங்கள் 2003 யூலை 1 இலிருந்து, ஏறத்தாழ 2 இலிருந்து 3 சதவீதம் வரையில் குறைக்கப்பட்டமை மற்றும் தற்காலிகமாக இடைநிறுத்தி வைக்கப்பட்டிருந்த நான்கு பங்கேற்புக் கொடுகடன் நிறுவனங்கள் மீள அனுமதிக்கப்பட்டமை என்பன மேம்பாடடைந்தது.

இச்செயற்றிட்டத்தின் கீழான மொத்தக்கடன் ஒப்புதல்கள் இவ்வாண்டில் ரூ.576.1 மில்லியனாகவும் மொத்த மீளநிதியிடல் பகிர்ந்தளிப்புக்கள் ரூ.358.0 மில்லியனாகவும் விளங்கின. கடன்கள் தவணை அடிப்படையில் விடுவிக்கப்பட்டமை மற்றும், மீள நிதியிடல், கடன்கள் விடுவிக்கப்படும் அடிப்படையில் விடுவிக்கப்பட்டமை என்பன காரணமாக கடன் ஒப்புதல்களுக்கேற்ப மொத்த மீள்நிதியிடல் பகிர்ந்தளிப்புக்கள் அதிகரிக்கவில்லை. இக்கடன் திட்டத்தின் முக்கிய பங்குதாரரான வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபனம் ஒப்புதலளிக்கப்பட்ட ரூ.344.7 மில்லியன் கடன்களின் 60 சதவீதத்திற்கு வகைகூறியது.

துணைக்கடன்பாட்டாளருக்கு வழங்கப்பட்டுள்ள மொத்த எண்ணிக்கையான 7,659 கடன்களுள் 92 சதவீதத்திற்கு மேலானவை, புதிய வீடுகளின் நிருமாணம் மற்றும் ஏற்கனவேயுள்ள வீடுகளின் விரிவாக்கம் ஆகிய நோக்கங்களுக்காக வழங்கப்பட்டன. எஞ்சியவை காணி வாங்குதல் மற்றும் ஏற்கனவேயுள்ள வீடுகளை கொள்வனவு செய்தல் போன்ற நோக்கங்களுக் குரியனவாக இருந்தன.

## வட மத்திய மாகாணம்– கிராமிய அபிவிருத்தி செயற்றிட்டம்

வட மத்திய மாகாணத்தில் வறுமையைக் குறைப்பதனை நோக்காகக் கொண்டு உருவாக்கப்பட்டு ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதியிடப்பட்ட வட மத்திய மாகாண கிராமிய அபிவிருத்தி செயற்றிட்டம் ஒருங்கிணைக்கப்பட்டவொரு கிராமிய அபிவிருத்திச் செயற்றிட்டமாகும். இச்செயற்றிட்டப் பிரதேசம் அநுராதபுர மாவட்டத்திலுள்ள மகாவலி குடியேற்ற ங்களையும், முழு பொலநறுவை மாவட்டத்தையும் உள்ளடக்கியதாக காணப்படுகிறது. 1997 இல் தொடங்கிய இச்செயற்றிட்டம் 2003 இறுதியில் நிறைவு செய்யப்படுவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. எனினும் செயற்றிட்ட நடவடிக்கைகளின் மீதான செலவுகளின் தீர்ப்பனவுகள் 2003 இறுதிக்குள் பூர்த்தி செய்யப் படாமையினால் செயற்றிட்ட காலப்பகுதி 2004 யூன் 30 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

இச்செயற்றிட்டத்தின் கொடுகடன் கூறுகளுக்கான நிறைவேற்று முகவராக மத்திய வங்கி உள்ளது. பண்ணை மற்றும் பண்ணை சாராத தொழில் முயற்சிகளுக்கு பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங் களினூடாக பாரியளவில் உதவுவதே இச்செயற் றிட்டக்கடன் கூறின் நோக்கமாகும். இலங்கை வங்கி, மக்கள் வங்கி, அட்டன் நசனல் வங்கி மற்றும் செலான் வங்கி ஆகியன நான்கு பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்களாக விளங்குகின்றன. ஆசிய அபிவிருத்தி வங்கி பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்களுக்கு மீள்நிதியிடல் வசதிகளை வழங்குவதற்காக 2001இல் ஐ.அ.டொலர் 500,000 இனை (கிட்டத்தட்ட ரூ.40 மில்லியன்) ஒதுக்கியிருந்தது. தனிக்கடன்பாட்டாளர் ஒருவருக்கான உச்ச கொடுகடன் எல்லை ரூ.250,000 ஆகும்.

இச்செயற்றிட்டத்தின் கீழ், கைத்தொழில் பணிகள் பணியகம், சேவா லங்கா மன்றம் போன்ற இரு தனியார்துறை வழங்குநர்கள் ஆதரவுப் பணிகளை வழங்குவதற்காக ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்தனர். இவ்வாண்டில் பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்களால் ரூ.19.2 மில்லியன் கொண்ட கடன்கள் பகிர்ந் தளிக்கப்பட்டதுடன் 2003 இறுதியில் பகிர்ந்தளிக் கப்பட்டிருந்த மொத்த தொகை ரூ.21 மில்லியனுக்கு உயர்வடைந்தது. 2003 இறுதியில் பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்களுக்கான மொத்த மீள்நிதியிடல்கள் ரூ.15.9 மில்லியனாக விளங்கி இச்செயற்றிட்டத்தின் கீழான மொத்த மீள்நிதியிடலின் ஒதுக்கில் 40 சதவீதமாக வகைகூறியது.

## வடமத்திய மாகாண கிராமிய அபிவிருத்தி பங்கேற்பு செயற்றிட்டம்

வேளாண்மை அபிவிருத்திக்கான பன்னாட்டு நிதியம் வட மத்திய மாகாண– கிராமிய அபிவிருத்திச் பங்கேற்புச் செயற்றிட்டத்திற்கு நிதி வழங்கியது. இந்தச் செயற்றிட்டமானது வறுமைக்குறைப்பையும் நிலையான பிரதேச அபிவிருத்தியினையும் நோக்காக கொண்ட ஒரு ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்தி செயற்றிட்டமாகும். அநுராதபுர மாவட்டத்தின் மகாவலி குடியேற்றப் பகுதிகள் தவிர்ந்த ஏனைய பிரதேசங்களை இச்செயற்றிட்டம் உள்ளடக்குகின்றது. 1996 இல் தொடங்கப்பட்ட இச்செயற்றிட்டம் 2002 இறுதியில் நிறைவு செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், எஞ்சியுள்ள நடவடிக்கைகளை நிறைவு

செய்வதற்காக இந்தக் காலப்பகுதி ஓராண்டினால் நீடிக்கப்பட்டுள்ளது. இச்செயற்றிட்டம் 2003 இறுதியில் வெற்றிகரமாக நிறைவு செய்யப்பட்டுள்ளது.

இச்செயற்றிட்டத்தின் கொடுகடன் கூறிற்கான நிறைவேற்று முகவராக மத்திய வங்கி விளங்கியது. 2003இல் பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்களுக்கு வங்கி ரூ.14.1 மில்லியன் தொகையை மீள்நிதியிடல் கடன்களாக விடுவித்ததுடன் மொத்த மீளநிதியிடல் தொகை ரூ.19 மில்லியனுக்கு உயர்வடைந்தது. 2003 இறுதியில் மீள்நிதியிடலுக்கு ஒதுக்கப்பட்ட மொத்த தொகை முழுமையாக பயன்படுத்தப்பட்டது.

## வறுமை ஒழிப்பு நுண்பாக நிதிச்செயற்றிட்டம் - ப.ஒ.ய.வங்கி

பன்னாட்டு ஒத்துழைப்பிற்கான யப்பானிய வங்கியினால் நிதியிடப்பட்ட வறுமை ஒழிப்பு நுண்பாக நிதிச் செயற்றிட்டமானது சிறு வேளாண்மையாளர் மற்றும் நிலமற்றோர் கொடுகடன் செயற்றிட்டத்தினை ஒத்ததாகும். நிலமற்றோர் கொடுகடன் செயற்றிட்டத்தின் திருப்திகரமான சாதனைகளை இனங் கண்ட யப்பானிய அரசாங்கம் வறுமையை ஒழிப்பதற்கான நுண்பாக நிதியிடல் தலையீடாக களுத்துறை, அம்பாந்தோட்டை, பதுளை, நுவெரலியா, மாத்தளை, குருநாகல் போன்ற ஏனைய ஆறு மாவட்டங்களில் வறுமை ஒழிப்பு நுண்பாக நிதியிடல் செயற்றிட்டத்திற்கு நிதியிடுவற்கு தீர்மானம் எடுத்தது. செலவுச் சிக்கனமானதும், வலுவானதுமான நுண்பாக கொடுகடன் வழங்கல் முறையொன்றினை நிறுவுதல், பெண்களின் உயர் பங்களிப்பு, வறிய மக்களிடையே சேமிப்பு பழக்கத்தினையும், சிக்கனத்தையும் புகட்டுதல், கிராமிய மக்களின் கல்வியறிவு மட்டத்தினை மேம்படுத்தி தன்னம்பிக்கையை கட்டியெழுப்புதல் மற்றும் மற்றவர்கள் மீது தங்கியிருக்கும் மனோபாவத்தை அவர்களிடமிருந்து அகற்றுதல் என்பனவற்றை இச் செயற்றிட்டத்தின் திறனான தொழிற்பாடுகள் வலியுறுத்துகின்றன.

பன்னாட்டு ஒத்துழைப்பிற்கான யப்பானிய வங்கியிலிருந்தான வெளிநாட்டு நிதியிடல் 2006 ஆம் ஆண்டினிறுதியில் நிறுத்தப்பட்டதும் கடன் மீள் பெறுகைகளிலிருந்தும் நிலுவைகளை முதலீடு செய்வதன் மூலம் கிடைத்த வட்டி வருமானத்திலிருந்தும் உருவாக்கப்படுகின்ற சுழலும் நிதியினைப் பயன்படுத்தி மேலும் 20 ஆண்டுக் காலப்பகுதிக்கு இச்செயற்றிட்டத்தினை தொடர்ந்தும் மேற்கொள்ள முடியும்.

2003இல் இச்செயற்றிட்டம் திருப்திகரமான செயற்பாடு 46,536 நன்மை பெறுநர்களுடன் 8,597 சுய உதவிக் குழுக்களை இனங்கண்டுள்ளது. குழுச்சேமிப்பு வடிவில் ரூ.54.5 மில்லியன் அளவு சேமிப்புக்கள் சேகரிக்கப்பட்டதுடன் இச்செயற்றிட்டத்தின் கீழ் ரூ.290.7 மில்லியன் நுண்பாக கடன்களாக வழங்கப்பட்டிருந்தது. 3,541 கிராமங்களை இச்செயற்றிட்டம் உள்ளடக்கியிருந்ததுடன் இதில் பெண்களில் பங்கேற்பு 76 சதவீதமாக இருந்தது. இக்கடன்களின் ஒன்றுதிரண்ட மீளஅறவிடல் வீதமானது 98 சதவீதமாகவிருந்தது. 2003இல் வடக்கு கிழக்கு மாவட்டங்களுக்கு இச்செயற்றிட்டத்தினை விரிவுபடுத்துவதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டன. இம்மாவட்டங்களில் இச்செயற்றிட்டத்தின் அமுலாக்கம் 2004இல் தொடங்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. இவ்வாண்டுக் காலத்தில் மாவட்ட மட்டத்திலான இச்செயற்றிட்டக் கணக்குகளின் கணனி மயப்படுத்தல் நிறைவு பெற்றுள்ளன.

## மாத்தளை பிரதேச பொருளாதார முன்னேற்றச் செயற்றிட்டம்

மாத்தளை பிரதேச பொருளாதார முன்னேற்றச் செயற்றிட்டம் 1999 இல் நடைமுறைக்கு வந்தது. இச் செயற்றிட்டமானது செயற்றிட்டப் பகுதிகளிலுள்ள கிராமியக் குடும்பங்களின் தமது வருமான மட்டங்களை நீடித்திருக்கக்கூடிய வகையில் நிரந்தரமாக உயர்த்துவதனை நோக்கமாகக் கொண்டுள்ளது. இச்செயற்றிட்டத்தின் கொடுகடன் கூறின் அமுலாக்கமானது இரு ஆண்டுகளுக்குப் பின் 2001இல் தொடங்கியது. இச்செயற்றிட்டத்தின் கிராமிய நிதியிடல் கூறின் நிறைவேற்றும் முகவராக மத்திய வங்கி செயலாற்றுகின்றது. வேளாண்மை அபிவிருத்திக்கான பன்னாட்டு நிதியம் சிஎஉ 8.35 மில்லியனை இச்செயற்றிட்டம் முழுவதற்கும் ஒதுக்கியுள்ளதுடன் அவற்றில் பயன்தரக்கூடிய வருமானம் உருவாக்கும் செயற்பாடுகளுக்கு செயற்றிட்டங்களின் கீழ் வழங்கப்பட்ட கடன்களுக்கெதிரான மீளநிதியிடல் வசதிகளை பங்கேற்பு கொடுகடன் நிறுவனங்களுக்கு வழங்குவதற்கென சிஎஉ 2 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது.

இச்செயற்றிட்டத்தின் குறிப்பிடத்தக்கவொரு அம்சமாக தனியார் துறையினரின் ஈடுபாடு விளங்குகிறது. அரச சார்பற்ற நிறுவனங்களினூடாக இச்செயற்றிட்டத்தில் பொதுமக்கள் அமைப்புக்களை சம்பந்தப்படுத்துவதன் மூலம் தனியார்துறையின் பங்களிப்பு ஊக்குவிக்கப்படுகிறது. கொடுகடனுக்கான கேள்வியினை அதிகரிக்கும் முகமாக பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்கள் சந்தை வட்டி வீதங்களின் போக்கிற்கு இசைவாக கடன் வட்டி வீதங்களை ஆண்டொன்றுக்கு 14 சதவீதத்திலிருந்து 12 சதவீதத்திற்கு குறைத்தன.

ஆய்வுக்குரிய ஆண்டில் பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்கள் இலக்கிட்டவாறு ரூ.49.8 மில்லியனைப்

பகிர்ந்தளித்ததுடன் 2003இன் இறுதியில் ஒன்று திரண்ட கடன் பகிர்ந்தளிப்புக்கள் ரூ.122 மில்லியனாகவிருந்தன. மத்திய வங்கி பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்களின் மீள்நிதியிடலுக்கென ரூ.98.5 மில்லியனை செயற்றிட்ட நிதியத்திலிருந்து வழங்கியது

## புதிய அனைத்தையும் உள்ளடக்கிய கிராமிய கொடுகடன் திட்டம்

மீளாய்வுக்குரிய ஆண்டில் நெல்லிற்கும், ஏனைய துணை உணவுப் பயிர்களுக்கும் குறுங்காலப் பயிர்ச்செய்கைக் கடன்களை வழங்குகின்ற விதத்தில் புதிய அனைத்தையும் உள்ளடக்கிய கிராமிய கொடுகடன் திட்டம் நாடு முழுவதிலும் அமுல் செய்யப்பட்டது. முன்னோக்கிய விற்பனை ஒப்பந்த முறையின் கீழ் இப்பயிர்களின் கொள்வனவிற்காக கடன்களும் வழங்கப்பட்டன. இக்கடன்களுக்கான வட்டி வீதம் 2003இல் ஆண்டொன்றிற்கு 12 சதவீதத்திலிருந்து ஆண்டொன்றுக்கு 8 சதவீதமாகக் குறைக்கப்பட்டுள்ளது. பயிர்ச்செய்கை நோக்கங்களுக்காக வழங்கப்பட்ட மொத்த கடன்கள் 2002/2003 பெரும்போகத்தில் ரூ.443 மில்லியனாகவும் 2003 சிறுபோகத்தில் ரூ.492.6 மில்லியனாவும் விளங்கின. இத்திட்டத்தின் கீழ் வேளாண்மை உற்பத்திகளின் கொள்வனவுக்காக வழங்கப்பட்ட கடன்கள் தொகை தொடர்பான பருவகாலங்களில் முறையே ரூ.335.8 மில்லியனாகவும், ரூ.377.3 மில்லியனாகவும் விளங்கின. அரசாங்கம் புதிய அனைத்தையும் உள்ளடக்கிய கிராமிய கொடுகடன் திட்டத்தின் கீழ் ரூ.63.5 மில்லியன் கொண்ட வட்டி உதவு தொகையை மத்திய வங்கிக்குச் செலுத்தியது. 1994-1998 காலப்பகுதியில் செலுத்தத்தவறிய பயிர்ச்செய்கைக் கடன்களுக்காக ரூ.77.8 மில்லியன் தொகை கொடுகடன் உத்தரவாத இழப்பீடாக செலுத்தப்பட்டது.

## சுறதுற நிகழ்ச்சித்திட்டம்-நுண்பாக தொழில் முயற்சி கொடுகடனூடாக சுயதொழிலை ஊக்குவித்தல்

சுறதுற நிகழ்ச்சித் திட்டத்தின் மூன்று பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்களான இலங்கை வங்கி, மக்கள் வங்கி மற்றும் அட்டன் நசனல் வங்கி என்பன அவற்றின் சொந்த நிதியத்திலிருந்து ஆண்டொன்றுக்கு 10 சதவீத உதவுதொகையளிக்கப்பட்ட வட்டியில் நிகழ்ச்சித் திட்டத்தின் இரண்டாவது கட்டத்தில் கீழ் தொடர்ந்தும் கடன்வழங்கலைத் மேற்கொண்டன. பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்களுக்கு அரசாங்கம் தொடர்ந்து 10 சதவீத வட்டி உதவுதொகையினைச் செலுத்தியது.

1997ஆம் ஆண்டில் தொடங்கிய இச்செயற்றிட்டத்தின் கட்டம் II இன் கீழ் தகைமை பெற்ற கடன்பாட்டாளர்கள் வருமானம் உருவாக்கும் சுய வேலைவாய்ப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்கள் ரூ.1,300 மில்லியன் பெறுமதி கொண்ட 30,000 கடன்களை பகிர்ந்தளிக்க இலக்கிட்டன. இத்திட்டம் தொழிலற்றவர்களுக்கு குறிப்பாக படித்த இளைஞர்களுக்கு புதிய செயற்றிட்டங்களைத் தொடங்க அல்லது ஏற்கனவேயுள்ள செயற்றிட்டங்களை விரிவாக்குவதற்கு கடன்களை வழங்கியது. மத்திய வங்கி வட்டி உதவித்தொகை கூறினை தொழிற்படுத்தும் பொறுப்பினை ஏற்று மீளளிப்புக்களையும் கண்காணித்தது. அரசாங்கம் 2003இல் பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்களுக்கு ரூ.18 மில்லியன் கொண்ட வட்டி உதவுதொகையைச் செலுத்தியது.

## சிறு வேளாண்மையாளர்கள் மற்றும் நிலமற்றோர் கொடுகடன் செயற்றிட்டம்

1990 இல் அறிமுகப்படுத்தப்பட்ட சிறு வேளாண்மை மற்றும் நிலமற்றோர் கொடுகடன் செயற்றிட்டமானது வேளாண்மை அபிவிருத்திக்கான பன்னாட்டு நிதியத்தின் ஐ.அ.டொலர் 6.7 மில்லியன் கொண்ட கடன், கனேடியன் பன்னாட்டு அபிவிருத்தி முகவரின் ஐ.அ.டொலர் 6.6 மில்லியன் கொண்ட கொடை மற்றும் அரசின் (மத்திய வங்கி) பங்களிப்பான ஐ.அ.டொலர் 4.1 மில்லியன் கொண்ட உதவுதொகை என்பன மூலம் கூட்டாக நிதியிடப்பட்டது. முறைசார்ந்த வங்கித்தொழில் நிறுவனங்களிடமிருந்து நிதி வசதிகளைப் பெறமுடியாமலிருக்கும், மாதத்திற்கு ரூ.3,000 இற்கு குறைவான வருமானம் பெறும் குடும்பங்களைச் சேர்ந்த ஏழை ஆட்களே இச்செயற்றிட்டத்தின் இலக்காக விருந்தனர். இச்செயற்றிட்டம் காலி, மாத்தறை, புத்தளம், கண்டி போன்ற மாவட்டங்களில் அமுல் நடத்தப்பட்டது.

இச்செயற்றிட்டத்தின் கீழ் கொடுகடன் வழங்கலில் கடன்வழங்கலுடன் சேர்ந்து பணிகளையும் வழங்குவதில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. நிதியியல் பணிகள் பிரதேச அபிவிருத்தி வங்கிகளால் வழங்கப்பட்டதுடன் இச்செயற்றிட்டத்தின் கீழ் அடிமட்டத்தைச் சார்ந்த அமைப்புக்களிலிருந்து பங்கேற்கும் முகவர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். இந்தச் செயற்றட்டத்தின் தொழிற்பாட்டில் குழு அணுகுமுறை மேற்கொள்ளப் பட்டமையானது கடன் கண்காணிப்பு பின்தொடரல், மீளஅறவிடல் புதிய தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்தல் போன்றவற்றிற்கு உதவியாகவிருந்தது. மேலும் “இசுறு” என்று அழைக்கப்படும் சிறு வேளாண்மை மற்றும் நிலமற்றோர் கொடுகடன் செயற்றிட்டம் கிராமிய மட்டத்தில் சிக்கன செலவில் கொடுகடன் வழங்கும் முறையாகும். மத்திய வங்கி தலைமையகத்தில் அமைந்துள்ள மத்திய செயற்றிட்ட

அலுவலகம் மற்றும் சம்பந்தப்பட்ட செயற்றிட்ட மாவட்டங்களில் அமைந்துள்ள மாவட்ட செயற்றிட்ட அலுவலகங்கள் ஊடாக மத்திய வங்கி செயற்றிட்டங்களை அமுல் நடாத்துகின்றது. பிரதேச அபிவிருத்தி வங்கிகள் இச்செயற்றிட்டத்தின் வங்கியாளர்களாக தொழிற்படுகின்றன. செயற்றிட்டத்திற்கான வெளிநாட்டு நிதியிடல் ஆரம்பத்தில் அட்டவணையிடப்பட்டவாறு 1997 திசெம்பரில முடிவுறுத்தப்பட்டதுடன், இச்செயற்றிட்டம் தொடர்ந்து சுழலும் நிதியத்தின் ஒன்றுதிரண்ட நிதியங்களை பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்டது.

2003 இறுதியில் இச்செயற்றிட்டமானது நான்கு மாவட்டங்களிலுள்ள 4,123 கிராமங்களில் தொழிற்பாட்டிலிருந்தது. 89,189 நன்மை பெறுநர்களைக் கொண்ட 15,175 சுய உதவிக்குழுக்கள் காணப்பட்டன. மேற்குறிப்பிட்ட செயற்றிட்ட எண்ணிக்கை ஆரம்ப செயற்றிட்ட வடிவமைப்பில் நிர்ணயிக்கப்பட்ட இலக்கான 32,000 இனைப் பார்க்க மிக உயர்வாகவிருந்தது. செயற்றிட்டத்தின் மிகுந்த கவனத்திற்குரியதொரு பண்பாக செயற்றிட்ட நடவடிக்கைகளில் பெண்களின் பங்கேற்பு மிக உயர்வாகவிருந்தமை விளங்கியதுடன் இவர்களின் எண்ணிக்கை 64,077 பெண்களாக அல்லது மொத்த நன்மை பெறுநர்களின் எண்ணிக்கையில் 72 சதவீதத்திற்கு வகைகூறியது. கடன்பெறுநர்கள் வருவாய் உருவாக்கல் சுயவேலைவாய்ப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக 2003 இறுதியில் நுண்பாக கடனாக கடன்பாட்டாளர்களுக்கு ரூ.1,109.6 மில்லியன் கொண்ட தொகை முற்பணமாக வழங்கப்பட்டது. கடன்களின் சராசரி அளவு ரூ.12,606 ஆகக் காணப்பட்டது. செயற்றிட்டம் 97 சதவீதத்திற்கு மேற்பட்ட உயர்ந்த மீளப்பெறல் வீதத்தினைத் தொடர்ச்சியாகப் பேணியது. மேலும் நன்மை பெறுநர்கள் கட்டாய மற்றும் சுயவிருப்புக் சேமிப்புக்கள் குழுக்களினூடாக 2003 இறுதியில் ரூ.193.1 மில்லியனைச் சேமித்திருந்தனர்.

சுய உதவிக்குழுக்கள் நிதித்தளத்தினை வலுப்படுத்தல், பேச்சுவார்த்தை இயலளவினை மேம்படுத்தல், இணைந்த இயலாற்றல் வலுவினை உயர்த்துதல் என்பனவற்றிற்காக முறைசார்ந்த கூட்டுச்சபைகளாக "இசுறு" அபிவிருத்திச் சங்கங்களை உருவாக்குவதற்காக 1997இல் சுயஉதவிக்குழுக்கள் ஒன்றிணைக்கப்பட்டன. இக்கிராமிய மட்ட "இசுறு" அபிவிருத்திச் சங்கங்கள் நான்கு மாவட்ட மட்ட "இசுறு" அபிவிருத்திச் சங்கங்களாக ஒன்றிணைக்கப்பட்டன. 2003இல் மாவட்ட மட்ட "இசுறு" அபிவிருத்திச் சங்கங்களை ஒன்றிணைத்து தேசிய இசுறு சம்மேளனமொன்றினை உருவாக்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

தேசிய இசுறு சம்மேளனம் மாவட்ட மட்ட இசுறு அபிவிருத்திச் சங்கங்களின் பிரதிநிதிகளை உள்ளடக்கியுள்ள இந்தச் சம்மேளனம் இசுறு நன்மை பெறுவோரின் ஒரு வலிமைமிக்க தேசிய மட்ட மன்றமாக விளங்கி இச்செயற்றிட்டத்தின் நீண்டகால உறுதிப்பாட்டினை சாத்தியமாகும். இச்சம்மேளனம் இசுறு செயற்றிட்ட மாவட்ட அலுவர்களினதும், மத்திய செயற்றிட்ட அலுவலகத்தினதும் வழி காட்டுதல் களுடனும், மேற்பார்வையுடனும் தமது முதல் தேசிய மாநாட்டினையும் இசுறு உற்பத்திகளை ஒரு வர்த்தக கண்காட்சியையும் நடாத்தியது. இந்த வர்த்தக கண்காட்சியினை நடாத்துவதற்கான குறிக்கோளாக இசுறு உற்பத்திகளை முறை சார்ந்த சந்தைகளுக்கு அறிமுகம் செய்து அவசியமான இணைப்பினை விருத்தி செய்வதாக விளங்கியது.

## சப்பிரகமுக மாகாண ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்திச் (சுழல் நிதியம்) செயற்றிட்டம்

சப்பிரகமுவ மாகாண ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்திச் செயற்றிட்டமானது, வேளாண்மை அபிவிருத்திக்கான பன்னாட்டு நிதியத்திலிருந்து நிதியுதவிகளைப் பெற்று கேகாலை மாவட்டத்தில் 1986 இலிருந்து 1996 வரை நடைமுறைப்படுத்தப்பட்ட கேகாலை மாவட்ட ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்திச் செயற்றிட்டத்தின் விரிவாக்கமொன்றாகும். இச்செயற்றிட்டத்தின் கொடுகடன் கூறானது மக்கள் வங்கி, இலங்கை வங்கி கேகாலை பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கி என்பனவற்றினூடாக நடைமுறைப்படுத்தப்பட்டது. பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்களால் கேகாலை மாவட்டத்தின் குறைந்த வருமானம் கொண்ட மக்கள் குழுக்கள், தொழில் நிறுவனங்கள் மற்றும் இளைஞர்களுக்கு வழங்கப்பட்ட அபிவிருத்திக் கடன்களுக்கெதிரான மீள்நிதியிடல் வழங்கல்களுக்கு மத்திய வங்கி பொறுப்பாகவிருந்தது. இச்செயற்றிட்டத்தின் முடிவில், இக்கொடுகடன் நிகழ்ச்சித்திட்டங்களை தொடர்வதற்காக மத்திய வங்கி இந்த மீள்நிதியிடல் கடன்களின் மீளப்பெறுகைகள் மூலம் சுழலும் நிதியம் ஒன்றை நிறுவி பேணிவருகின்றது.

செயற்றிட்ட முகாமைத்துவ பிரிவின் கீழ் செயற்படும் வியாபார அபிவிருத்தி அலுவலர்களினால் பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்களின் உதவியுடன் அடிமட்டத்தில் உள்ளவர்களுக்கு கொடுகடன் வழங்கப்படுகிறது. அவர்கள் தகுதி வாய்ந்த கடன்பாட்டாளர்களை இனங்கண்டு வியாபார அபிவிருத்தி திட்டங்களைத் தயாரித்து இறுதியாக பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்களிடம் கொடுகடன் பெறுவதற்கு வழிகாட்டுவர். இந்த ஏற்பாடுகள்

பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்களின் திறன்வாய்ந்த கொடுகடன் வழங்கலுக்கும் மீளப்பெறுவதற்கும் உதவிபுரிந்தன.

கொடுகடனுக்கு காணப்பட்ட உயர்ந்த கேள்வியை கவனத்திற்கொண்டு சப்பிரகமுவ மாகாணம் முழுவதையும் உள்ளடக்கும் நோக்குடன் கேகாலை மாவட்ட ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்திச் செயற்றிட்ட சுழலும் நிதி 2002 இல் இரத்தினபுரி மாவட்டத்திற்கும் விரிவாக்கப்பட்டது. இச்செயற்றிட்டம் சப்பிரகமுவ மாகாண ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்திச் செயற்றிட்ட சுழலும் நிதி கொடுகடன் திட்டம் எனப்பெயர் மாற்றம் செய்யப்பட்டது. இரத்தினபுரி மாவட்டத்தில் மீள்நிதியிடலை வழங்குவதற்காக ஆரம்பத்தில் ரூ.25 மில்லியன் ஒதுக்கப்பட்டது.

2003 இறுதியில் இச்செயற்றிட்டம் ரூ.327.91 மில்லியன் பெறுமதி கொண்ட 8,112 துணைச் செயற்றிட்டங்களுக்கு நிதியிட்டது. 2003 இல் பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்களினால் ரூ.82.71 மில்லியன் பெறுமதியான கடன்கள் வழங்கப்பட்டன. 2003 ஆண்டுக் காலப்பகுதியில் இச்செயற்றிட்டம் 1,925 துணைச் செயற்றிட்டங்களுக்கும் 4,789 சுயதொழில் வாய்ப்பு சந்தை செயற்றிட்டங்களுக்கும் நிதியிடப்பட்டது. ஆய்வுக்குரிய ஆண்டுக்காலத்தில் செயற்றிட்டத்தின் பொதுவான மீளப்பெறுகை வீதம் 94 சதவீதமாகக் காணப்பட்டது.

## நகரச்சுற்றாடல் உட்கட்டமைப்பு அபிவிருத்திச் செயற்றிட்டம் (கட்டம் II –சுழலும் நிதி கொடுகடன் திட்டம்)

நகரச்சுற்றாடல் உட்கட்டமைப்பு அபிவிருத்திச் செயற்றிட்டம் கட்டம் II–சுழலும் நிதிக்கொடுகடன் திட்டம் 2002 மேயில் அறிமுகப்படுத்தப்பட்டு நகரச்சுற்றாடல் உட்கட்டமைப்பு அபிவிருத்திச் செயற்றிட்டத்தின் (கட்டம் I) கொடுகடன் நடவடிக்கைகளைத் தொடர்ந்தது. சுழலும் நிதி கட்டம் II இற்கான நிதியங்களின் மொத்த ஒதுக்கு ரூ.100 மில்லியனாக விளங்கியதுடன் வகைகூறியதுடன் கொடுகடன் நிகழ்ச்சித்திட்டம் 2003 மாச்சில் வெற்றிகரமாக நிறைவு செய்யப்பட்டது. இச்செயற்றிட்டத்தின் கீழாக வழங்கப்பட்ட கடன்களின் எண்ணிக்கை 875 ஆக விளங்கியதுடன் இக்கடன்கள் நீர் விநியோகமும், சுகாதாரமும், கழிவு அகற்றுதல், கழிவு நீர் முகாமைத்துவம் மற்றும் வடிகாலமைப்பு போன்ற நோக்கங்களுக்காக வழங்கப்பட்டிருந்தன.

## தென்மாகாண கிராமிய அபிவிருத்திச் செயற்றிட்ட (சுழலும் நிதியம்) கொடுகடன் திட்டம்

தென்மாகாண கிராமிய அபிவிருத்திச் செயற்றிட்டத்தின் இரண்டாவது சுழலும் நிதிய கொடுகடன் திட்டத்தின் நடவடிக்கைகள் 2003இல் ரூ.200 மில்லியன் ஒதுக்குடன் றுகுணு அபிவிருத்தி வங்கி, டி.எவ்.சி.சி, தேசிய அபிவிருத்தி வங்கி போன்ற பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்களுக்கு மீள்நிதியிடுவதற்காகத் தொடங்கப்பட்டது. ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதியிடப்பட்டு 2000 யூனில் நிறைவு செய்யப்பட்ட தென்மாகாண கிராமிய அபிவிருத்தி செயற்றிட்டத்தினதும் 2002இல் நிறைவு செய்யப்பட்ட முதலாவது தென்மாகாண கிராமிய அபிவிருத்திச் செயற்றிட்டத்தின் சுழலும் நிதியக் கொடுகடன் திட்டத்தினதும் கொடுகடன் நடவடிக்கைகளைத் தொடர்வதே சுழலும் நிதிய கொடுகடன் திட்டத்தின் நோக்கமாகும். இந்த நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் மக்களின் பொருளாதார நிலைகளை மேம்படுத்தி தொழில் வாய்ப்புக்களை உருவாக்குவதற்காக தென்மாகாணத்தில் கிராமிய நுண்பாக மற்றும் சிறிய மற்றும் நடுத்தர அளவு கைத்தொழில்களுக்கு பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்களின் ஊடாக கொடுகடன் வசதிகள் கிடைக்கச்செய்யப்பட்டது.

ஆய்வுக்குரிய ஆண்டில் பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்களுக்கு முதலாவது சுழலும் நிதியக் கொடுகடன் திட்டத்தின் கீழ் அவற்றினால் வழங்கப்பட்ட கடன்களுக்காக மீள்நிதியிடலுக்காக மத்திய வங்கி இந் நிகழ்ச்சித் திட்டத்தின் இறுதியில் மீள்நிதியிடுவதற்கான வைத்திருந்த ரூ.41 மில்லியனை வழங்கியது.

## சிறிய மற்றும் நடுத்தர அளவு தொழில் முயற்சிகளின் கீழான கொடுகடன் உத்தரவாதத் திட்டங்கள்

### கொடுகடன் உத்தரவாத திட்டங்கள்

இலங்கை மத்திய வங்கி, நாணயவிதிச்சட்டத்தின் 108(1) ஆம் பிரிவுக்கிணங்க சிறப்புக்கடன் திட்டங்களின் கீழ் உத்தரவாதங்கள் பெற தகுதிபெற்ற வங்கி நிறுவனங்களால் வழங்கப்பட்ட கடன்களுக்கு உத்தரவாதம் வழங்குவதில் அரசாங்கத்தின் முகவராக அல்லதுஅரசாங்கத்தின் சார்பாக தொழிற்படுகின்றது. இலங்கையில் தொழிற்படும் கொடுகடன் நிறுவனங்களினால் சிறு அளவு தொழில் முயற்சிகளுக்கு வழங்கப்படும் கடன்கள் முற்பணங்கள் மற்றும் ஏனைய வசதிகளுக்கு உத்தரவாதங்களை வழங்குவதற்காக 1974இல் நாணயவிதிச் சட்டத்தின் பிரிவு 108 இற்கு திருத்தம் மேற்கொள்ளப்பட்டு 108 அ கொண்டு வரப்பட்டது. இதன் மூலம் பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்களினால் சிறுதொழில் முயற்சிகளுக்கும் வேளாண்மை நடவடிக்கைகளுக்கும் முழுமையாக கடன்களை வழங்குவதற்காக உத்தரவாதத் திட்டங்களை தொழிற்படுத்தும் வசதியினை இலங்கை மத்திய வங்கிக்கு வழங்கியுள்ளது.

## அட்டவணை II.23
## 2002 இல் பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தினால் தொழிற்படுத்தப்பட்ட கொடுகடன் திட்டங்கள்

| | செயற்றிட்டத்தின் பெயர் | நிதியிடல் முகவர் | பணித் திட்டங்கள் | ஆரம்ப ஒதுக்கு | கடன்படுநர்களுக்கான ஆண்டு வட்டிவீதம் | 2003.12.31 வரைக்குமான கொடுகடன் பகிர்ந்தளிப்பு (ரூ.மில.) | மீளப்பெறல் % ரூ.மி. |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | தேயிலை அபிவிருத்தி செயற்றிட்டம் (1999 - 2005) | ஆ.அ.வ | சிறு தேயிலை உடமையாளர்களின் வருமானத்தினை உறுதியான அடிப்படையில் உயர்த்துதல் செயற்றிட்டப் பிரதேசத்தின் இயற்கைச் சூழலை மேம்படுத்தல். | ஐ.அ.டொ 24.45 மில். | ஆண்டொன்றுக்கு ச.நிலை.வீதம் 8.5% இலிருந்து 10.5% (வெளிக்கள அபிவிருத்திக்கு) ச.நிலை.வீதம்+6% (தொழிற்சாலை அபிவிருத்திக்கு) | 2,059 | 91% |
| 2. | இரண்டாவது நிரந்தரப் பயிர்கள் அபிவிருத்திச் செயற்றிட்டம் (1998-2004) | ஆ.அ.வ | நிரந்தரப்பயிர்களின் உற்பத்தியையும் வர்த்தகமயப் படுத்தலையும் அதிகரித்தல் நாற்று மேடையை அபிவிருத்தி செய்தல் அறுவடைக்குப் பின்னைய கையாளல் பதனிடல் நடவடிக்கைகள் மற்றும் சந்தைப்படுத்தல் | சி.எ.உ 11.562 மில். | ஆண்டொன்றுக்கு ச.நிலை.வீதம் 8.5% இலிருந்து 10.5% | 1,497 | 92% |
| 3. | தேர்ச்சி அபிவிருத்திச் செயற்றிட்டம் (2000ஆம் ஆண்டில் தொடங்கியது) | ஆ.அ.வ | உயர்ந்த தகைமைபெற்ற தொழிற்படையை உருவாக்குவதற்காகவும், தேர்ச்சிப் பொருத்தப்பாடின்மை, கிராமிய மற்றும் நகர் இளைஞர்களிடையேயான வேலைவாய்ப்பின்மையினையும் கருத்திற்கொண்டு தரத்தினையும் தொடர்பான தேர்ச்சிப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களையும் மேம்படுத்துவது. | சி.எ.உ. 0.657 | 10 சதவீதம் | - | இன்னும் தொடங்கப்படவில்லை |
| 4. | வடமத்திய மாகாணத்தின் பங்கேற்பு கிராமிய அபிவிருத்திச் செயற்றிட்டம் (1996 - 2002) | ஆ.அ.வ, வே.அ.ப.நி | குறைந்த வருமானமுடைய மக்களின் வறுமை ஒழிப்பு, உணவுப்பாதுகாப்பு ஊட்டச்சத்தை மேம்படுத்தல் மற்றும் தொழில் வாய்ப்புக்களை அதிகரித்தல் | இல.ரூ.153மி | ச.நிலை.வீதம் அல்லது10% இதில் எது | 19 | 90% |
| | வட மத்திய மாகாண கிராமிய அபிவிருத்தி செயற்றிட்டம் (1997 - 2003) | சு.ச.அ.க, உ.நி.தி | | இல.ரூ.43மி | குறைந்ததோ அதில் 6 % புள்ளி | 21 | |
| 5. | நகர சூழல் உட்கட்டமைப்பு அபிவிருத்திச் செயற்றிட்டம் கட்டம் II (சுழலும் நிதி) | ஐ.அ.ப.அ முகவர் | நகர மற்றும் நகரம்சார் பகுதிகளில் வாழும் மக்களின் சுற்றாடல் வசதிகள், சுகாதாரம், நலம் என்பனவற்றை மேம்படுத்தல் | ரூ.100மி | 16 சதவீதம் | 4 | 100% |
| 6. | வறுமை ஒழிப்பு, நுண்பாக நிதிச் செயற்றிட்டம் (தொடங்கப்பட்ட ஆண்டு 2000) | ப.ஒ.அ. யப்பானிய வங்கி | செலவுச் சிக்கனமானதும் வலுவானதுமான நுண்பாக கடன்வழங்கல் முறைமையினை நிறுவுவதன் மூலம் தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்தலும் சேமிப்புப்பழக்கத்தை மேம்படுத்தலும். | யப்பானிய யென் 1,368 மில். | 18 சதவீதம் | 290.7 | 98% |
| 7. | மாத்தளை பிரதேச பொருளாதார முற்போக்கு நிகழ்ச்சித் திட்டம் (2000 - 2006) | வே.அ.ப.நி | கிராமப் புறங்களிலுள்ள சிறிய தொழில் முயற்சியாளர்களினதும் செயற்றிட்டப் பிரதேசங்களிலுள்ள வேளாண்மைக் குடும்பங்களினதும் வருமானத்தை நிரந்தரமாக உயர்த்தி வலுவாக்கல் | சிஎஉ 2 மில். | 12 சதவீதம் | 122 | 95% |
| 8. | புதிய அனைத்தையும் உள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டம் | அ.வ.உ.தொ.ப.கொ.நி | குறுங்கால உணவுப்பயிர்களைப் பயிரிடும் கிராமிய வேளாண்மையாளர்களை உயர்த்துதல் | - | 8 சதவீதம் | 935.6 | வி.கி |
| 9. | சிறிய வேளாண்மையாளர் மற்றும் நிலமற்றோர் கொடுகடன் செயற்றிட்டம் (1990-2000) | வே.ப.நி க.ப.அ.சு இலங்கை அரசு | செலவுச் சிக்கனமானதும் வலுவானதுமான நுண்பாகக் கடன் வழங்கல் முறைமையினைத் தாபிப்பதன் மூலம் தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்தலும் சேமிப்புப் பழக்கத்தை மேம்படுத்தலும். | சி.எ.உ 4.85 மில். | சந்தை வீதங்கள் வேளாண்மை-16 நோக்கங்கள்-20 | 1,109.6 | 97% |
| 10. | கேகாலை மாவட்ட ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்தி (சுழலும் நிதி) செயற்றிட்டம் (1997 - 2007) | இலங்கை அரசு | வருமான உருவாக்க நடவடிக்கைகளை மேம்படுத்துவதன் மூலம் செயற்றிட்டப் பிரதேசத்திலுள்ள மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல். | இல.ரூபா 100 மில். | 10 சதவீதம் | 327.9 | 94% |
| 11. | சுறதுற நிகழ்ச்சித்திட்டம் கட்டம் 11 (1998 இலிருந்து) | அ.வ.உ.தொ.ப. கொ.நி | படித்த வேலையற்ற இளைஞர்களிடையே சுயதொழில் வாய்ப்பினை மேம்படுத்தவதன் மூலம் அவர்களின் வருமானத்தையும் வாழ்க்கைத் தரத்தினையும் அதிகரித்தல். | இல. ரூபா 1300 மில். | 10 சதவீதம் | 21 | 50% |
| 12. | தென்மாகாண கிராமிய அபிவிருத்திச் செயற்றிட்டம் (சுழலும் நிதி) (2000ஆம் ஆண்டிலிருந்து) | அ.வ.உ.தொ.ப. கொ.நி | தென் மாகாணத்திலுள்ள மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தல் | ஐ.அ.டொ 8.1 மில். | 12 சதவீதம் | 41 | 90% |
| 13. | நகர அபிவிருத்தி மற்றும் குறைந்த வருமான வீடமைப்புச் செயற்றிட்டம் (கொடுகடன்கூறு) | ஆ.அ.வ | குறைந்த வருமானமுடைய குடும்பஅலகுகளுக்கு வீடமைப்பு மேம்பாடுகளுக்காகக் கடனை வழங்குவதற்கு. | ஐ.அ.டொ. 20மி. | 11.91 சதவீதம் | 1,668 | வி.கி |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

அட்டவணை II.24

2003.12.31 இல் உள்ளவாறு கொடுகடன் உத்தரவாதத் திட்டங்களினதும் கோரல்தீர்ப்பனவுகளினதும் நிலைமை

| கொடுகடன் திட்டத்தின் பெயர் | வழங்கப்பட்ட கடன்களின் எண்ணிக்கை | கடன் தொகை (ரூ.மில்) | இவ்வாண்டில் சேகரிக்கப்பட்ட கட்டணம் | பெறப்பட்ட கோரல்களின் எண்ணிக்கை | தீர்ப்பனவு செய்யப்பட்ட கோரல்களின் எண்ணிக்கை | தீர்ப்பனவு செய்யப்பட்ட தொகை | கோரலுக்குப் பின்னர் மீளப்பெறல் |
|---|---|---|---|---|---|---|---|
| புதிய அனைத்தையுமுள்ளடக்கிய கிராமிய கொடுகடன் திட்டம் (அ) | 43,862 | 722 | 5,871 | வி.கி | வி.கி | 146,225 | 442 |
| தேயிலை அபிவிருத்தி செயற்றிட்டம் (ஆ) | 1,647 | 639 | 11,913 | 1 | 0 | 0 | 0 |
| இரண்டாவது நிரந்தரப்பயிர் அபிவிருத்தி செயற்றிட்ட கொடுகடன் திட்டம் (இ) | 1,510 | 860 | 12,991 | 3 | 1 | 634 | 0 |
| சிறு உடமையாளர் தேயிலை அபிவிருத்தி செயற்றிட்டம் | 6,638 | 609 | 493 | 19 | 19 | 225 | 53 |
| மத்திய மலை நாட்டு நிரந்தரப்பயிர் அபிவிருத்தி செயற்றிட்டம் | 5,734 | 737 | 656 | 478 | 478 | 16,633 | 0 |
| வேளாண்மை புனரமைப்புச் செயற்றிட்டம் | 12,896 | 710 | 320 | 715 | 447 | 8,456 | 30 |
| பெருந்தோட்டத்துறை சீர்திருத்தசெயற்றிட்டம் | 224 | 4,953 | 75,511 | 1 | 0 | 0 | |
| பேரூந்து கொள்வனவுக்கடன் உத்தரவாதத் திட்டம் | 1,932 | 1,099 | 0 | 20 | 11 | 2,185 | 1,887 |
| சிறிய நடுத்தர அளவுத் தொழில் முயற்சிகள் கொடுகடன்உத்தரவாதத்திட்டம் (அ) | 1,894 | 2,742 | 3,719 | 102 | 16 | 12,483 | 1,732 |
| சிறிய நடுத்தர கைத்தொழில் கொடுகடன் உத்தர வாதத்திட்டம் | | | | | | | |
| சி.ந.கை.I | 1,970 | 286 | | 335 | 261 | 22,207 | 8,830 |
| சி.ந.கை II | 2,351 | 1,397 | | 228 | 131 | 29,435 | 18,758 |
| சி.ந.கை III | 3,130 | 1,956 | | 172 | 92 | 24,066 | 19,222 |
| சி.நா.கை IV | 9,072 | 7,666 | | 311 | 96 | 39,810 | 13,827 |
| உப மொத்தம் (சி.நா.கை I,II,III,IV திட்டங்கள்) | 16,523 | 11,305 | 2,211 | 1046 | 580 | 115,518 | 60,637 |
| மொத்தம் | 92,860 | 24,376 | 113,685 | 2,385 | 1,552 | 302,359 | 64,781 |

மூலம் : பிரதேச அபிவிருத்தி திணைக்களம்

(அ) 94 சிறுபோகத்திலிருந்து 1997/98 பெரும்போகம் வரை (அட்டன் நசனல் வங்கி தவிர்ந்தவற்றின் கடன் தொகை)

(ஆ) தற்போது இடம்பெற்றுவரும் செயற்றிட்டத்தில் மீள்நடுகை மற்றும் நாற்றுமேடை தொழிற்பாடுகளுக்கு மட்டும் வழங்கப்பட்ட கடன்கள்

(இ) தற்பொழுது நடைபெற்று வரும் செயற்றிட்டம்

பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் அட்டவணை 24இல் தரப்பட்டுள்ளவாறு தற்பொழுது பத்து கொடுகடன் உத்தரவாதத் திட்டங்களை நடைமுறைப்படுத்துகிறது. அனைத்து கொடுகடன் திட்டங்கள் தொடர்பாக வேறுபட்ட வீதங்களில் கட்டுப்பணம் வருடாந்தம் சேகரிக்கப்பட்டது. பத்து கொடுகடன் திட்டங்களில், மத்திய வங்கி ஏழு கொடுகடன் திட்டங்கள் தொடர்பான தீர்ப்பனவுகளுக்கான கோரல்களுக்கு நேரடியான பொறுப்பினைக் கொண்டுள்ளது. ஏனைய மூன்று திட்டங்களுக்கு (புதிய அனைத்தையும் உள்ளடக்கிய கிராமிய கொடுகடன் திட்டம், தேயிலை அபிவிருத்தி செயற்றிட்ட கொடுகடன் திட்டம் இரண்டாவது நிலையான பயிர்களின் அபிவிருத்தி கொடுகடன் திட்டம்) அரசாங்கம் நிதியை வழங்கியது. இந்தத் திட்டங்களின் கீழ் வழங்கப்பட்ட கடன்கள் மீதான கொடுகடன் உத்தரவாதப் பொறுப்புக்கள் இலங்கை மத்திய வங்கியினால் அரசாங்க வரவுசெலவுத்திட்ட ஒதுக்குகைகளின் மூலம் காலத்திற்குக்காலம் கிடைக்கப்பெறும் நிதி, கட்டணங்களின் சேகரிப்புக்கள் மற்றும் முதலீட்டு வருவாய் என்பன வாயிலாக உருவாக்கப்பட்ட நிதி என்பவற்றிலிருந்து கிடைக்கப் பெற்ற கோரல்களை பெற்று கொடுப்பனவு செய்யப்பட்டு திருப்பிச் செலுத்தப்படாத கடன்கள் தொடர்பான பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்களின் கொடுகடன் உத்தரவாதக் கோரல்கள் பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்கள் கடனை திரும்பப்பெறுவதற்கு கடன்பாட்டாளருக்கு எதிராக சட்ட நடவடிக்கையை ஆரம்பித்ததன் பின்னரே இலங்கை மத்திய வங்கியினால் ஏற்றுக்கொள்ளப்படும். கோரல்கள் தீர்ப்பனவு செய்யப்பட்ட பின்னர் பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்களினால் மீள அற விடப்படுமானால் ஏதாவது பணம் அத்தகைய தொகை கிடைக்கப்பெற்ற உடனேயே இலங்கை மத்திய வங்கியுடன் பகிர்ந்து கொள்ளப்படல் வேண்டும்.

**கொடுகடன் உத்தரவாத திட்டங்களின் நிதியங்களுக்கான மூன்று முக்கிய மூலங்கள்**

(அ) கட்டண சேகரிப்புக்கள்

(ஆ) மத்திய வங்கி அல்லது அரச உதவுதொகைகள்

(இ) நிதியங்களின் முதலீட்டிலிருந்தான வருமானம்

எட்டு கொடுகடன் உத்தரவாதத் திட்டங்களின் கீழான மத்திய வங்கியின் மொத்த கொடுகடன் உத்தரவாத பொறுப்புக்கள் 31.12.2003 இல் ரூ.4,014.6 மில்லியனாவிருந்தது.

## பிரதேச அலுவலகங்கள்

### பிரதேச அலுவலகம் – மாத்தறை

மாத்தறை பிரதேச அலுவலகமானது முன்னைய காலங்களைப் போன்று பிராந்தியத்தின் கிராமிய பொருளாதார அபிவிருத்தியை, வேளாண்மை மற்றும் கிராமிய கொடுகடன் தொழிற்பாடுகள் போன்றவற்றின் நடைமுறைப்படுத்தலை மேற்பார்வை செய்வதற்கான நிகழ்ச்சித்திட்டங்களைத் தொடர்ந்து நடைமுறைப் படுத்தியது. இந்த கொடுகடன் நடவடிக்கைகளுக்குப் புறம்பாக பிரதேச அலுவலகமானது பிரதேச மட்டத்தில் கொள்கை வகுத்தல் தொடர்பான புள்ளிவிபரங்களையும், தகவல்களையும் சேகரிப்பதில் இலங்கை மத்திய வங்கிக்கு உதவி புரிந்தது. ஏனைய மத்திய வங்கித் தொழிற்பாடுகளான பிரதேச தீர்ப்பனவு வசதிகளை வழங்குதல், அமைப்புக்களினதும் அபிவிருத்திக்கான கடன்வழங்கல், தொழில்முயற்சியாண்மை அபிவிருத்தி, கல்வியூட்டல் பயிற்சி, வங்கித்தொழில் மற்றும் தொடர்பான துறைகள் தொடர்பில் நிதிநிறுவனங்கள், அரசாங்கத் திணைக்களங்கள், அரச சார்பற்ற அமைப்புக்களுக்கு உதவியளித்தல் என்பனவும் ஆய்வுக்குரிய ஆண்டில் மேற்கொள்ளப்பட்டன.

அபிவிருத்தி வங்கித்தொழில் நடவடிக்கைகள் காலி, மாத்தறை மாவட்டங்களின் சிறு வேளாண்மையாளர்கள் நிலமற்றோர் கொடுகடன் செயற்றிட்டம் மற்றும் அம்பாந்தோட்டை மாவட்டத்தின் வறுமை ஒழிப்பு நுண்பாக நிதிச்செயற்றிட்டம் ஆகிய அபிவிருத்தி கொடுகடன் திட்டங்கள் மற்றும் நுண்பாக நிதியிடலின் ஒருங்கிணைப்பு என்பற்றை உள்ளடக்குகின்றன. முன்னோக்கிய விற்பனை ஒப்பந்த முறை, அருணலு கிராமிய கையேற்புத் நிகழ்ச்சித்திட்டம், சிறு உடமையாளர் தேயிலை அபிவிருத்தி செயற்றிட்டம் கொடுகடன் திட்டம், தொழில்தேர்ச்சி அபிவிருத்திக் கொடுகடன் திட்டம், தென்மாகாண பிராந்திய அபிவிருத்தி செயற்றிட்ட கொடுகடன் திட்டம், தென்மாகாண பிராந்திய பொருளாதார மேம்பாட்டு செயற்றிட்ட கொடுகடன் திட்டம் தேயிலை அபிவிருத்தி செயற்றிட்டம் போன்ற நுண்பாக நிதிய அபிவிருத்தி கொடுகடன் திட்டங்களையும் உள்ளடக்கியிருந்தன. வேளாண்மையாளர்களின் சந்தைப்படுத்தல் பிரச்சனைக்கு நிலைத்திருக்கக்கூடிய தீர்வு ஒன்றைக் காணும் நோக்குடன் 1999இல் மத்திய வங்கியால் முன்னோக்கிய விற்பனை ஒப்பந்த முறை அறிமுகப்படுத்தப்பட்டது. பிரதேச அலுவலகமானது, ஆய்வுக்குரிய ஆண்டில் காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை மாவட்டங்களில் 16 அறிவூட்டல் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதன் மூலம் இத்திட்டத்தினை தீவிரமாக ஊக்குவித்தது.

இவற்றிற்கு மேலாக பிரதேச அலுவலகம், தென்மாகாண சபை மற்றும் தேசிய அபிவிருத்தி வங்கியின் உதவியுடன் தென்மாகாண கிராமிய பொருளாதார முன்னேற்றச் செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்தியது. பிரதேச அலுவலகமானது இச்செயற்றிட்டத்தின் மாகாண மதியுரைக்குழுவில் பிரதிநிதித்துவத்தைக் கொண்டிருந்தது. கைத்தொழில் அபிவிருத்தி சபையின் உதவியுடன் டிஎவ்சிசி யினால் மீள்நிதியிடப்பட்ட "சகனய" கொடுகடன் திட்டத்திற்கு பிரதேச அலுவலகம் உதவியளித்தது.

றுகுணு பல்கலைக்கழகத்தினால் அறிமுகப் படுத்தப்பட்ட புதிய கொள்கைத் திட்டத்தின் கீழ் வரையறுக்கப்பட்ட றுகுணு வியாபார இன்கியூபேற்றர் (தனியார்) நிறுவனம், கம்புறுப்பிட்டியவில் திறந்து வைக்கப்பட்டது. பிரதேச அலுவலகம் தொடர்ந்தும் றுகுணு வியாபார இன்கியூபேற்றர் நிறுவனத்திற்கு தொழில் முனைவோர்களைத் தெரிவு செய்வதற்கு உதவிபுரிந்ததுடன் 2003 ஆம் ஆண்டில் அத்தகைய தொழில் முனைவோர்களின் முதல் தொகுதியினர் அவர்களது வியாபாரத்தை கம்புறுப்பிட்டியவில் ஆரம்பித்தனர்.

பிரதேச அலுவலகம், புள்ளிவிபரத் திணைக் களத்திற்கு நாடளாவிய தரவுச் சேகரிப்பு நிகழ்ச்சித் திட்டத்திற்கும், வாராந்த தரவுச்சேகரிப்பு நிகழ்ச்சித் திட்டத்திற்கும் 2003/04 நுகர்வோர் நிதி அளவீட்டினை நடாத்துவதற்கும் உதவியது.

2003ஆம் ஆண்டில் பிரதேச அலுவலகத்தினால் ஏனைய மத்திய வங்கித்தொழில் தொழிற்பாடுகளான பிரதேச தீர்ப்பனவு வசதிகள், கல்வி சார்ந்த பயிற்சிகள், மத்திய வங்கி வெளியீடுகளின் விற்பனை உட்பட்ட தொழிற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டன.

இந்த அலுவலகத்தில் தொழிற்படுத்தப்படும் பிரதேச தீர்ப்பகம் அப்பிரதேசத்திலுள்ள 10 வங்கிகளுக்கு தீர்ப்பனவு வசதிகளை வழங்கியது. இவ்வாண்டில் இந்த தொழிற்பாட்டின் மூலம் ரூ.27,543.9 மில்லியன் பெறுமதியுடைய 1,235,673 காசோலைகள் தீர்ப்பனவு செய்யப்பட்டன. முழு பிராந்தியத்திற்கும் தீர்ப்பனவு வசதிகளை விரிவாக்குவதற்கான சாத்தியத்தினைக் கண்டறிவதற்கான செயலமர்வு ஒன்று இலங்கை மத்திய வங்கி, வரையறுக்கப்பட்ட லங்கா கிளியர்ஸ் (தனியார்), வர்த்தக வங்கிகள் என்பவற்றின் வழிகாட்டலுடன் 2003 திசெம்பரில் நடாத்தப்பட்டது.

பிரதேச அலுவலகம் இவ்வாண்டில் ரூ.108,077.50 பெறுமதியான மத்திய வங்கி வெளியீடுகளை விற்பனை செய்தது. பிரதேச அலுவலகம் பாடசாலை மாணவர்களுக்காக நடாத்திய மத்திய வங்கித்தொழில் பற்றிய 18 கல்வி ஆய்வரங்குகளில் 675 மாணவர்களும் ஆசிரியர்களும் பங்குபற்றினர்.

மத்திய வங்கியின் ஆதரவு வழங்கப்பட்ட பல்வேறு கொடுகடன் நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் செயற்றிட்ட உடமையாளர்களின் உற்பத்திகளை சந்தைப்படுத்தலை ஊக்குவிக்கும் நோக்குடன் கைத்தொழில்கள் அமைச்சினால் மாத்தறையில் ஒழுங்கு செய்யப்பட்ட "யுக தெக்ம" கைத்தொழில் பொருட்காட்சிக்கு பிரதேச அலுவலகம் தீவிரமாக உதவி புரிந்தது.

### பிரதேச அலுவலகம் - அனுராதபுரம்

ஆய்வுக்குரிய ஆண்டில் அநுராதபுரம் பிரதேச அலுவலகம் அப்பிரதேசத்தின் பொருளாதார, சமூக அபிவிருத்திகளை நோக்காகக் கொண்டு பல நிகழ்ச்சித்திட்டங்களை தொடர்ந்தும் நடைமுறைப் படுத்தியது. பிரதேச அலுவலகத்தினால் மேற்கொள்ளப் பட்ட நடவடிக்கைகள் நிதியியல் முறையின் ஊடாக கிராமிய துறையில் வாழ்க்கைத்தரங்களை உயர்த்துவதில் கவனம் செலுத்தின. பிரதேச அலுவலகமானது, வட மத்திய மாகாண கிராமிய அபிவிருத்தி செயற்றிட்டம் மற்றும் வடமத்திய மாகாண பங்கேற்பு கிராமிய அபிவிருத்திச் செயற்றிட்டம் என்பவற்றை நடைமுறைப்படுத்துவதில் முனைப்பாக ஈடுபட்டிருந்தது. பிரதேச அலுவலகமானது அநுராதபுர மாவட்டத்திற் கென ஒரு மாவட்ட தரவுக்குறிப்பினைத் தயாரித்துள்ளது. இதற்கு மேலாக வேளாண்மை மற்றும் தொழிற் முயற்சியாண்மையை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள், நுகர்வோர் விலைச்சுட்டெண்ணிற்கான பரிசோதனைத் தரவுகளைச் சேகரித்தல் என்பனவும் பிரதேச அலுவலகத்தால் மேற்கொள்ளப்பட்டது. பிரதேச தீர்ப்பனவக நடவடிக்கைகள் 2003 இலும் தொடர்ந்தன. பிரதேச அலுவலகம் பின்தங்கிய பகுதிகளில் உள்ள பாடசாலை மாணவர்களின் நன்மைக்காக கல்வி ஆய்வரங்குகளையும் நடாத்தியது.

இவ்வாண்டில் முன்னோக்கிய விற்பனை ஒப்பந்த முறை மீதான 99 அறிவூட்டும் நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டதுடன் இந்நிகழ்ச்சித் திட்டங்களில் 11,000 இற்கு மேற்பட்டோர் கலந்து கொண்டனர். இந்தச் சூழ்நிலையில், நெல், சோயா அவரை, சோளம், வாழைப்பழம் போன்ற முக்கிய வேளாண்மை உற்பத்திகளுக்காக கிட்டத்தட்ட பற்றி ரூ.488 மில்லியன் பெறுமதிகள் உள்ளடக்கியதாக சம்பந்தப்பட்ட தரப்பினால் 8,858 விற்பனை உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டன. அநுராதபுரம், பொலநறுவை மாவட்டங்களுக்கு மேலதிகமாக குருநாகல், திருகோணமலை, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங் களிலும் புதிய அனைத்தையும் உள்ளடக்கிய கிராமிய கொடுகடன் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட கொடுகடன் வசதிகளுடன் முன்னோக்கிய விற்பனை ஒப்பந்த முறை விருத்தி செய்யப்பட்டது. இதற்கு மேலும் வேளாண் மையை அடிப்படையாகக் கொண்ட தொழில்முயற்சிகள் மீதான மேற்கொள்ளப்பட்டதுடன் 1,100 வேளாண்மை யாளர்கள் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் தொழில் முயற சியாளர்கள், வீட்டுப்பெண்கள் போன்றோர் இந் நிகழ்ச்சித் திட்டங்களில் பங்கேற்றனர்.

அநுராதபுரம், பொலநறுவை மாவட்டங்களில் வர்த்தகம், பொருளியல் துறைகளில் உயர்தர வகுப்பு மாணவர்களினதும், ஆசிரியர்களினதும் நன்மையை முன்னிட்டு ஆய்வரங்குகள் நடைமுறைப்படுத்தப் பட்டதுடன் ஆய்வுக்குரிய ஆண்டில் 800இற்கும் மேற்பட்ட ஆசிரியர்களும், மாணவர்களும் பங்குபற்றினர்.

மத்திய வங்கியின், புள்ளிவிபரவியல் திணைக்களத்தின் பயன்பாட்டிற்காக பிரதேச அலுவலகம் தொடர்ந்தும் அநுராதபுர மையத்தின் முக்கிய உணவு விடயங்களின் சில்லறை, மொத்த விலைகள் பற்றிய தரவுகளையும், தகவல்களையும் வழங்கியது. பிரதேச அலுவலகம் ரூ.50,295 பெறுமதி யுடைய மத்திய வங்கியின் வெளியீடுகளை விற்பனை செய்தது. ஊழியர் சேமநிதியத்தின் நிலுவையை சரி பார்த்தல் மற்றும் உறுப்பினர்களுக்கு விபரக்கூற்றுக்களை வழங்குதலும் பணிகள் தொடர்ந்தன. பிரதேச அலுவலகத்தினால் அநுராதபுர மாவட்டத்திற்கான மாவட்ட தரவுக குறிப்புக்களும் தொகுக்கப்பட்டன. அதேவேளை பிரதேச தீர்ப்பனவகம் ரூ.8,086 மில்லியன் கொண்ட 224,681 காசோலைகளைத் தீர்ப்பனவு செய்தது.

வடமத்திய மாகாண பங்கேற்பு கிராமிய அபிவிருத்தி செயற்றிட்டத்திலும், வடமத்திய மாகாண கிராமிய அபிவிருத்தி செயற்றிட்டத்தினதும் கீழ் தோல்வியடைந்த செயற்றிட்டங்கள் அடையாளம் காணப்பட்டு, அச்செயற்றிட்டங்களை புனருத்தாரணம் செய்வதற்காக உதவிபுரிவதற்கு செயற்றிட்டங்களின் உடமையாளர்களுக்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. 2003 இறுதியில் இரு செயற்றிட்டங்களினாலும் (வடமத்திய மாகாண கிராமிய அபிவிருத்தி செயற் றிட்டமும், வடமத்திய மாகாண பங்குபற்றுவோர் கிராமிய அபிவிருத்தி செயற்றிட்டம்) ரூ.47.53 மில்லியன் பெறுமதி கொண்ட கடன்களை 719 கடன்பாட்டாளருக்கு வழங்கக்கூடியதாகவிருந்தது.

வடமத்திய மாகாண சபையினாலும், மத்திய அரசாங்கத்தினாலும் நடாத்தப்பட்ட பொருளாதார,

சமூக, பண்பாட்டு அபிவிருத்தி நடவடிக்கைகளிலும் பிரதேச அலுவலகம் தீவிரமாக பங்குபற்றியது.

### பிரதேச அலுவலகம் – மாத்தளை

மத்திய வங்கியின் பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தை பிரதிநிதித்துவப்படுத்தி மாத்தளை பிரதேச அலுவலகம் மீளநிதியிடல் திட்டங்களை நடைமுறைப்படுத்தல், ஏனைய பிரதேச மட்டத்திலான நிகழ்ச்சித்திட்டங்கள், முன்னோக்கிய விற்பனை ஒப்பந்தங்கள் முறையினை பொதுமக்கள் அறியும்படி செய்தல், தொழில் முனைவோரின் நன்மைக்காக பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல், இலக்குக் குழுவினருக்கு கல்வி ஆய்வரங்குகளையும் செயலமர்வு களையும் நடாத்துதல் போன்ற கிராமிய அபிவிருத்தித்துறை நடவடிக்கைகளில் ஈடுபட்டது. இதற்கு மேலாக கந்துரட்ட அபிவிருத்தி வங்கியுடன் இணைந்து வேளாண்மையாளருக்கும், வாங்குநர்களுக்கும் இடையில் பல சந்திப்புக்கள் ஒழுங்குபடுத்தப்பட்டன. மத்திய மாகாணத்தையும் கேகாலை மாவட்டத்தையும் உள்ளடக்கிய பிரதேச தீர்ப்பனவு முறையை மேம்படுத்துவதற்கான ஆய்வரங்கு ஒன்றும் நடாத்தப்பட்டது. அந்தப் பிரதேசத்தினுள்ள வர்த்தக வங்கிகளின் அலுவலர்களுக்காக அதேநேர மொத்த தீர்ப்பனவு முறை பற்றி அறிவுறுத்துவதற்காக நிகழ்ச்சித்திட்டமொன்றும் நடாத்தப்பட்டது.

இதற்கு மேலதிகமாக, சட்டரீதியான நாணயத்தாள்களை அடையாளம் காணுதல், தூய நாணயத்தாள்களின் பயன்பாடு, பதிவு செய்யப்பட்ட நிதிக்கம்பனிகள் பற்றிய அறிவூட்டல் சந்திப்புக்கள் போன்றன நடாத்தப்பட்டன. இலங்கை மத்திய வங்கியினால் ஆரம்பிக்கப்பட்ட மரம்நடும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ், ஆய்வுக்குரிய ஆண்டுக் காலத்தில் சுற்றாடல் பாதுகாப்பினை முன்னேற்றுவதற்கு பாடசாலைகளுக்கு மரக்கன்றுகள் பகிர்ந்தளிக்கப்பட்டன.

இவ்வாண்டில் பிரதேச அலுவலகம் 18 ஆய்வரங்குகளையும், செயலமர்வுகளையும் ஏற்பாடு செய்ததுடன் சிறு உற்பத்தியாளர்களின் உற்பத்திகளின் விற்பனையை மேம்படுத்துவதற்கென வர்த்தக கண்காட்சிகளையும் ஒழுங்கு செய்தது. 2003ஆம் ஆண்டில் பிரதேச அலுவலகம் மத்திய வங்கி புள்ளி விபரவியல் திணைக்களத்திற்கு தரவுச் சேகரிப்புக்களுக்கு உதவு புரிந்ததுடன் காசோலை தீர்ப்பனவு செயல்பாட்டினையும், மத்திய வங்கி வெளியீடுகளை விற்பனை செய்வதையும் தொடர்ந்தது.

பிரதேச அலுவலகம், நெல், பெரிய வெங்காயம், சோயா, குரக்கன், நிலக்கடலை, மஞ்சள், சோளம், காய்கறி, பழவகை பால் போன்றவை தொடர்பாக 2,807 முன்னோக்கிய விற்பனை உடன்படிக்கைகளில் செய்வதற்கு வசதியளித்தது. இந்த உடன்படிக்கைகளை 4.31 மில்லியன் கிலோகிறாம் நெல், 2.75 மில்லியன் கிலோகிறாம் பெரிய வெங்காயம், 0.39 மில்லியன் கிலோகிறாம் ஏனைய உற்பத்திகள் என்பனவற்றை உள்ளடக்கின. முன்னோக்கிய விற்பனை உடன்படிக்கையின் கீழ் உள்ளடக்கப்பட்ட வேளாண்மை உற்பத்திகளின் மொத்த அளவு 7.45 மில்லியன் கிலோகிறாம்களாக விளங்கியது.

மாத்தளை பிரதேச அலுவலகமானது, மாத்தளை பிரதேச பொருளாதார முன்னேற்ற செயற்றிட்டத்தினை நடைமுறைப்படுத்துவதில் தீவிரமாக ஈடுபட்டதுடன் 2003ஆம் ஆண்டுக்காலத்தில் 1,316 நன்மை பெறுவோர் இச்செயற்றிட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டு மீளநிதியிடல் வசதிகளுக்காக ரூ.67.72 மில்லியன் பெறுமதியான கடன்களுக்கு சிபாரிசு செய்யப்பட்டது. பிரதேச அலுவலகமானது வறுமை ஒழிப்பு நுண்பாக நிதியிடல் செயற்றிட்டம், சிறுவேளாண்மை, நிலமற்றோர் கொடுகடன் செயற்றிட்டம் போன்ற செயற்றிட்ட அலுவலகங்களுக்கு இந்தச் செயற்றிட்ட நடவடிக்கை களை மாத்தளை, கண்டி, நுவெரலியா போன்ற மாவட்டங்களில் நடைமுறைப்படுத்துவதற்கு உதவிபுரிந்தது.

பிரதேச அலுவலகமானது இவ்வாண்டில் ரூ.35,508 மில்லியன் பெறுமதி கொண்ட 803,747 காசோலைகளை கண்டி தீர்ப்பகத்தின் ஊடாக தீர்ப்பனவு செய்தவேளையில் மாத்தளை தீர்ப்பகம் ரூ.2,161 மில்லியன் கொண்ட 109,541 காசோலைகளை தீர்ப்பனவு செய்தது.

### பிரதேச அபிவிருத்தி வங்கிகள்

பிரதேச அபிவிருத்தி வங்கிகள் சட்டத்தில் குறித்துரைக்கப்பட்டுள்ளவாறு அவற்றின் குறிக்கோள்களை எய்துவதற்காக நிதி மற்றும் தொழிற்பாட்டு ஆற்றலை உறுதிப்படுத்தி அவற்றின் இயலளவை கட்டியெழுப்புவதற்கு அவற்றுக்கு உதவும் நோக்கத்துடன் பிரதேச அபிவிருத்தி வங்கிகளின் செயற்பாடுகளை பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் தொடர்ந்தது கண்காணித்தது.

பிரதேச அபிவிருத்தி வங்கிகள், 1997இன் பிரதேச அபிவிருத்தி வங்கிகள் சட்டத்தின் கீழ் வேளாண்மை, கைத்தொழில், வர்த்தகம், வாணிபம், மீன்பிடி மற்றும் ஏனைய அபிவிருத்தி நடவடிக்கைகளுகளை விருத்தி செய்வதற்காக அவற்றின் தொடர்பான பிரதேசங்களினுள் நிதி உதவி களை வழங்குவதை நோக்கமாகக் கொண்டும் வறுமை ஒழிப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் வறியவர்களுக்கு

நிதியுதவி அளிக்கும் நோக்குடனும் நிறுவப்பட்டன. றுகுணு, கந்துரட்ட, ராஜரட்ட, வயம்பா, சப்பிரகமுவ, ஊவா ஆகிய ஆறு பிரதேசஅபிவிருத்தி வங்கிகள் ஆய்வுக்குரிய ஆண்டில் நாட்டின் 18 நிர்வாக மாவட்டங்களை உள்ளடக்கியதாக தொடர்ந்தும் செயற்பட்டன. இவ் ஆறு பிரதேச அபிவிருத்தி வங்கிகளினதும் முக்கிய பங்குதாரராக இலங்கை மத்திய வங்கி விளங்குவதுடன் ஒவ்வொரு பிரதேச அபிவிருத்தி வங்கியினதும் வழங்கப்பட்ட மொத்த பங்கு மூலதனத்தின் 50 சதவீதத்திற்கு மேலானவற்றைக் கொண்டிருந்தது. மத்திய வங்கியின் நவீனமயமாக்கல் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் இலங்கை மத்திய வங்கி 2002 நவெம்பரில் பிரதேச அபிவிருத்தி வங்கிகளிலுள்ள அதன் பங்குடமையைக் குறைத்து அவற்றை அரசாங்கத்திற்கு மாற்றல் செய்யத் தீர்மானித்தது. இதற்கேற்ப மத்திய வங்கியினால் வைத்திருக்கப்பட்ட ருகுணு, கந்துரட்ட, வயம்பா, சப்பிரகமுவா என்பவற்றின் வழங்கப்பட்ட மூலதனத்தில் 48 சதவீதமும் மற்றும் ரஜரட்ட ஊவா என்பவற்றின் 32 சதவீதமும் நிதியமைச்சுக்கு மாற்றல் செய்யப்பட்டது. இலங்கை மத்திய வங்கி தற்பொழுது ஒவ்வொரு பிரதேச அபிவிருத்தி வங்கியினதும் வழங்கப்பட்ட பங்கு மூலதனத்தில் 20 சதவீதத்தினைக் கொண்டிருக்கிறது.

நிதியமைச்சின் கீழ் இருந்த பிரதேச அபிவிருத்தி வங்கி பற்றிய விடயங்கள் 2003 பெப்புருவரி 28 இலிருந்து கிராமிய பொருளாதார அமைச்சிற்கு மாற்றப்பட்டன. நுண்பாக நிதிப்பணிகளின் கிடைப்பனவை கிராமிய மற்றும் குறைந்தவருமான குடியிருப்பாளர்கள் பெற்றுக் கொள்வதனை மேம்படுத்தும் பொருட்டு அத்தமாறு, திரியாலந்த, செமிர மற்றும் சிப்ஸ்ரான சேமிப்புத்திட்டம் போன்ற பல கொடுகடன் திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. அமைச்சு தெரிவு செய்யப்பட்ட கிராமங்களில், கிடைக்கப் பெறும் மூலவளங்களின் அதிகரித்த பயன்பாட்டின் மூலம் அக்கிராம மக்களின் உற்பத்தி இயலாற்றலை உயர்த்துவதன் பொருட்டு சிறப்பியல்பு வாய்ந்த உற்பத்தி கிராமிய நிழ்ச்சித்திட்டத்தினையும் அறிமுகப்படுத்தியது.

குறைந்த நடுத்தர வருமானம் பெறுவோரில் பெரும்பங்கினர் கொழும்பு மாவட்டத்தின் நகர்சார் மற்றும் கிராமிய பகுதிகளில் வாழ்ந்து வருவதுடன் கிராமிய அபிவிருத்தி வங்கிகள் வழங்கும் வசதிகளை பெறுவதற்கு அவர்களுக்கு வாய்ப்பிருக்கவில்லை. எனவே 1997ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க கிராமிய அபிவிருத்தி வங்கிகள் சட்டத்தின் பிரிவு 2 இன் நியதிகளுக்கிணங்க கொழும்பு நிருவாக மாவட்டம் 2003 செத்தெம்பர் 15 இலிருந்து சப்பிரகமுவ அபிவிருத்தி வங்கிப் பிரதேசத்தின் உள்ளடக்கப்பட்டு கிராமிய அபிவிருத்தி வங்கிகளினால் பணியாற்றப்படும் மாவட்டங்களின் மொத்த எண்ணிக்கை 18 ஆக அதிகரித்தது. கிராமிய அபிவிருத்தி வங்கிகள் தொடர்பான விடயங்களில் பிரதேச அபிவிருத்தி திணைக்களம் கிராமிய பொருளாதார அமைச்சிற்கு உதவிபுரிந்தது.

## ஆராய்ச்சி நடவடிக்கைகள்

பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம், நாணயக்கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்கும் அரசாங்கத்திற்கான பொருளாதார மதியுரையாளராக சபையின் பங்கை நிறைவேற்றுவதற்குமென உதவும்வகையில் நாணயச்சபைக்கு தகவல்கள் பகுப்பாய்வுகள், மதியுரை என்பவற்றை வழங்குதல் மற்றும் பொருளாதார விடயங்கள் சம்பந்தமாக பொது மக்களுக்கு தகவலை வெளிப்படுத்துதல் போன்ற அதன் நியதி ரீதியிலான பொறுப்புக்களை நிறைவேற்றியது.

தனது பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்காக பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் உள்நாட்டிலிருந்தும், பன்னாட்டு மூலங்களிலிருந்தும் பொருளாதார தரவைச் சேகரித்து, திரட்டி பகுப்பாய்வு செய்தது. தகவல்களை பரப்புவதில் அதன் உள்ளடக்கம் மற்றும் நேரம் பிந்தாமை ஆகிய நியதிகளை மேம்படுத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டன. பொருளாதார ஆராய்ச்சி திணைக்களத்தின் ஊழியர்களின் தொழில்நுட்ப தேர்ச்சிகள் வங்கியினுள் உள்ள ஏனைய திணைக்களங்களாலும், வெளிமுகவர் களாலும் பரந்தளவில் பயன்படுத்தப் பட்டன. அலுவலர்கள் மூலவள ஆளணியினராகவும் தொழில் நுட்ப மதியுரையாளர்களாகவும் பணியாற்றுமாறு அடிக்கடி வேண்டப்பட்டனர். திணைக்களம் வங்கியினுள்ளே ஏனைய திணைக்களங்களுக்கும் ஏனைய அரச நிறுவனங்களுக்கும் குறிப்பாக நிதியமைச்சுக்கும் பல விடயங்கள் சார்பாக கொள்கை மதியுரைகளை வழங்கியது.

நாணயக்கொள்கைகளைத் தீர்மானிப்பதற்கான பகுப்பாய்வையும், தகவல்களையும் வழங்கல் இத்திணைக்களத்தின் முக்கிய பணியாக விளங்கியது. இத்திணைக்களம் நாணயக்கொள்கை குழுவின் தொழிற்பாட்டில் முக்கிய பங்கினை ஆற்றியது. இத்திணைக்களம் சந்தைத் தொழிற்பாடுகள் குழு, உள்நாட்டு படுகடன் முகாமைத்துவக்குழு, வெளிநாட்டு ஒதுக்குகள் முகாமைத்துவக்குழு, பணவீக்க எதிர்வுகூறல் போன்றவற்றிற்கு உள்ளீடுகளை வழங்கி கலந்துரை யாடல்களிலும் பங்குபற்றியது. வங்கியின் தொழிற் பாடுகளில் ஒளிவுமறைவற்ற தன்மையை அதிகரிக்கும் வங்கியின் கொள்கைக்கு இணங்கி நாணய

நிகழ்ச்சித்திட்டத்தின் கீழான நாணயக்கொள்கை கட்டமைப்பின் விபரங்களும், எறிவுகளும் வங்கியின் இணையத்தளத்தில் வெளியிடப்பட்டன. வங்கியின் நாணயக் கொள்கைக் குறிக்கோள்கள் மற்றும் எறிவுகளை சந்தைப் பங்கேற்பாளர்களுக்கு அறிவிக்கும் பொருட்டு அவர்களுடன் கூட்டங்கள் நடத்தப்பட்டதன் மூலம் நடைமுறை பொருளாதார அபிவிருத்தி பற்றிய சந்தையறிவு அதிகரிக்கப்பட்டது. தொடர்ந்து நடைபெறும் கலந்துரையாடல்கள் சந்தை பற்றிய அறிவு மற்றும் விளக்கத்தை அதிகரிக்க உதவியதுடன் நாணயக் கொள்கையின் செயற்றினையும் முன்னேற்ற உதவியது. சுவீடன் றிக்ஸ் பாங்க் உதவியுடன் பணவீக்கத்தை இலக்கிடும் கட்டமைப்பிற்கு நடுத்தர காலத்தில் நகர்ந்துசெல்லும் வங்கியின் திட்டம் தொடர்பான கலந்துரையாடல் வேலை தொடர்ந்தது.

நாணயக்கொள்கை குழுவின் வேலைகளின் சுமூகமான செயற்பாட்டிற்கு திணைக்களம் முக்கிய உள்ளீடுகளை வழங்கியது. முன்னராக 2001 ஆரம்பத்தில் நிறுவப்பட்ட நாணயக்கொள்கைக்குழு நாணயக்கொள்கை மீது ஆய்வு நடாத்தி ஆளுநர் ஊடாக நாணயச்சபையின் பரிசீலனைக்காகத் தமது பரிந்துரைகளைச் செய்யும். நாட்டின் நிதித்துறை அதிகரித்த சிக்கல்கள் ஆழமானதாகவும், பெருமளவு அபிவிருத்தியுற்றதனையும் தொடர்ந்து மத்திய வங்கியின் முதன்மைச் தொழிற்பாடான நாணயக்கொள்கையின் நிர்ணயமும் அமுலாக்கமும் ஆளுநர் ஊடாக செய்யப்பட வேண்டியதன் காரணத்தினால் அத்தகைய முறையான ஒரு குழுவின் தேவை எழுந்துள்ளது. நாணயக் கொள்கையினை உருவாக்குவதற்காக ஏனைய தொடர்பான திணைக்களங்களின் பங்கேற்றலை விரிவுபடுத்துவதற்கும் இது பெரிதும் உதவியது. நாணயக்கொள்கை குழு ஆகக்குறைந்தது மாதம் ஒரு முறை கூடி பொருளாதார அபிவிருத்திகள் பற்றியும் நாணயக்கொள்கையின் நிலை பற்றியும் மதிப்பீடு செய்து நாணயக்கொள்கை பற்றி பரிந்துரை செய்து ஆளுநர் ஊடாக நாணயச்சபையின் பரிசீலனைக்கு வழங்குகின்றது. நாணயக்கொள்கைக் குழுவில் பொருளாதார ஆராய்ச்சி அலுவலர்கள் திணைக்களத்தில் பணியாற்றவதற்கு மேலதிகமாக இந்தக் கூட்டங்களுக்கான முக்கியஆவணங்களும், தகவல்களும் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தினால் வழங்கப்படுகிறது. நாணயச்சபைக் கூட்டத்தினைத் தொடர்ந்து மத்திய வங்கி அதனது நாணயக்கொள்கை நிலை பற்றிய ஒரு மாதாந்த அறிக்கையினை வழங்கும். மத்திய வங்கியின் கொள்கைகளில் பெருமளவு ஒளிவுமறைவற்ற தன்மையை எய்துவதற்கும் சந்தை பற்றிய அறிவினை அதிகரிக்கவும் மத்திய வங்கி மாதாந்த நாணயக்கொள்கை அறிக்கைகள் எப்பொழுது வெளியாகும் என்பதனைக் குறித்துக்காட்டும். நாணயச்சபையினால் ஒப்புதலளிக்கப்பட்ட முன்னோக்கிய தகவல் வெளியிடப்படும் நாட்காட்டி ஒன்றினை வெளியிட்டு வைத்தது. இந்த அறிக்கைகள் நடைமுறை பொருளாதார அபிவிருத்திகள் பற்றிய விபரமான தகவல்களையும், நாணயக்கொள்கை நிலைப்பாட்டினையும் அந்த நிலைப்பாட்டிற்கான காரணங்களையும் கொண்டிருக்கும். இந்த மாதாந்த பத்திரிகைச் செய்திகள் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தினால் நாணயச்சபையின் அனுமதிக்காகத் தயாரிக்கப்படும். நாணயக்கொள்கை கட்டமைப்பின் விபரங்கள், மதிப்பீட்டு செய்முறை உட்பட்ட நாணய எறிவுகள், மாதாந்த நாணயக்கொள்கை நிலைப்பாட்டின் அறிவித்தல்களுக்கான முன்னோக்கிய நாட்காட்டி தகவல் வெளியிடப்படல் என்பன வங்கியினை இணையத்தளத்தில் (www.centrelbank.org) வெளியிடப் பட்டுள்ளன.

பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் பன்னாட்டு நாணயநிதியம் அரசாங்கங்களுக் கிடையிலான "ஜி"24 நாடுகள் குழு, தென்கிழக்காசிய நாடுகளின் மத்திய வங்கிகளுக்கான பயிற்சிக்கும் ஆய்வுக்குமான நிலையம், தென்கிழக்காசிய, நியூசிலாந்து, அவுத்திரேலியா மத்திய வங்கி குழு, தென்கிழக்கு ஆசிய நாடுகளின் பிராந்திய ஒத்துழைப்பு நிதிப்பிரிவு அமைப்பின் மத்திய வங்கி ஆளுநர்கள் மற்றும் நிதிச்செயலாளர்கள் என்பவற்றுடனான இலங்கையின் தொடர்புகளை ஒருங்கிணைத்த வேளையில் உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் ஏனைய பல்புடை, மற்றும் இருபுடை கொடையாளர்களுடனான வேளைகளில் திட்டமிடலுக்கும் ஒருங்கிணைப்பிற்கும் நிதியமைச்சிற்கு உதவியது. பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் வறுமைக்குறைப்பு மற்றும் வளர்ச்சி வசதிகள் நிகழ்ச்சித்திட்டம் தொடர்பான இறுதிப்படுத்தலுடன் தொடர்பான பன்னாட்டு நாணய நிதியம் மற்றும் உலகவங்கியுடனான கலந்துரையாடல் களுக்கும் முதன்மைப் பொறுப்பாக விளங்கியது. வறுமைக்குறைப்பு வளர்ச்சி வசதி நிகழ்ச்சித்திட்டம் 2003 ஏப்பிறலில் தொடங்கியது. பன்னாட்டு நாணய நிதியம் சிஎஉ 413.7 மில்லியன் (பன்னாட்டு நாணய நிதியத்திலுள்ள இலங்கையின் அனுமதிப்பங்கின் 100 சதவீதம்) தொகையினை நான்கு ஆண்டு காலத்திற்கு மேலாக வறுமைக்குறைப்பு வளர்ச்சி வசதிகளின் கீழும் இதனோடிணைந்த விரிவாக்கப்பட்ட நிதிய வசதி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழும் வழங்குவதற்கு இணக்கம் தெரிவித்தது. இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழான சிஎஉ 59.1 மில்லியன் கொடை முதல் தொகுதி நிதியம் 2003 ஏப்பிறலில் இலங்கைக்கு வழங்கப்பட்டது. பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் ரிக்ஸ் வங்கியுடன் சுவீடிஷ்

பரிமாற்ற நிகழ்ச்சித்திட்டம் II இன் கீழான வேலைகளையும் ஒருங்கிணைப்புச் செய்தது. பன்னாட்டு நிறுவனங்களுக்கான பொருளாதார தகவலை வழங்கல் கிரமமான அடிப்படையில் தொடர்ந்தது.

பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் தொடர்ந்தும் பிராந்திய ஒத்துழைப்புக்கான தென்னாசிய நாடுகள் அமைப்பின் (சார்க்) நிதிப்பிரிவின் கருமப்பீடத்தினை கொண்டு நடாத்தியது. இலங்கையில் சார்க் நிதிப்பிரிவு என்பது மத்திய வங்கி ஆளுநர்கள் மற்றும் நிதிச்செயலாளர்கள் என்போரை உள்ளடக்கிய குழுவான பிராந்திய ஒத்துழைப்பு தென்னாசிய நாடுகளின் அமைப்பின் நிதிப்பிரிவானது 2002 இல் பிராந்திய ஒத்துழைப்புக்கு தென்னாசிய நாடுகளின் அமைப்பின் கீழான ஒரு அமைப்பாக அங்கீகரிக்கப் பட்டது. பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தின் பிரதிநிதியொருவர் வெளிநாட்டு அமைச்சினால் ஒழுங்கு செய்யப்பட்ட சார்க்தின நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டனர்.

இலங்கை மத்திய வங்கி தென்கிழக்காசிய மத்திய வங்கிகள் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிலையத்தின் தீவிரமான ஆரம்பநிலை உறுப்பினராக இருந்து வருவதுடன் தென்கிழக்காசிய மத்திய வங்கியின் வேலையிலான ஈடுபாட்டின் ஒரு பகுதியாக வங்கியானது 3ஆவது தென்னாசிய மத்திய வங்கிகளின் "நாணயக் கொள்கைகளும் அதன் யுக்திகளும்" என்ற தலைப்பில் 2003 செத்தெம்பர் 21-ஒத்தோபர் 3 வரை ஒரு கற்கை நெறியை நடாத்தியது. பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் இந்த கற்கைநெறியின் ஒழுங்கமைப்பிற்கு முக்கிய பொறுப்பாகவிருந்தது. வங்கியானது தொடர்ந்தும் தென்கிழக்காசிய மத்திய வங்கிகளின் நிபுணத்துவக்குழுவில் பங்கேற்றதுடன் அதனுடைய தரவு தளத்திற்கான தகவல்களையும் வழங்கியதுடன் இந்த வேலையும் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தினாலேயே ஒருங்கிணைக்கப் பட்டது. மத்திய வங்கியினால் 2004 பெப்புருவரியில் நடாத்தப்படவுள்ள 39ஆவது தென்கிழக்காசிய மத்திய வங்கிகளின் ஆளுநர்கள் மாநாடு மற்றும் 23ஆவது ஆளுநர் சபை கூட்டம் என்பவற்றுக்கான ஆரம்ப ஆயத்தங்களையும் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் செய்தது.

இத்திணைக்களத்தின் தொழிற்பாடுகளுள் மிக முக்கியமான பகுதி பொருளாதார விடயங்கள் பற்றிய தகவல்களை பொதுமக்களுக்குப் பரப்புவதாகும். நாளாந்தத்திலிருந்து வருடாந்தம் வரை காலாந்தரத் தகவல்கள் மத்திய வங்கியின் இணையத்தளம், வெளியீடுகள் என்பவற்றினூடாக வழங்கப்பட்டது. அத்தகவல்களின் உள்ளடக்கத்தையும், சரியான நேரத்தில் கிடைப்பதனையும் பெற்றுக்கொள்ளக்கூடிய தன்மையும் முன்னேற்றுவதற்கான நிகழ்ச்சித்திட்டம் ஒன்று நடைமுறையில் இருக்கிறது. மின்னியல்களூடாகத் தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கான கேள்வி அதிகரித்துக் காணப்படுவதுடன் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தினால் பேணப்படும் மத்திய வங்கியின் இணையத்தளம் தற்போது நாளொன்றுக்கு 1500 பயன்படுத்துநர்களைப் பதிவு செய்கிறது. தகவல் பரப்புவதில் முக்கிய அபிவிருத்தியாக பொதுமக்களுக்கு வெளியிடப்பட்ட சமகாலத்தில் 2002இன் ஆண்டு அறிக்கை வெளியீடு முழுவதும் இணையத்தளத்தில் வெளியிடப்பட்டதுடன் ஆண்டறிக்கை இறுவட்டுக்களிலும் வழங்கப்பட்டது. இத்திணைக்களம் தொடர்ந்தும், நாணயம் மற்றும் வெளிநாட்டுத்துறைகள் பற்றிய அடிப்படை தகவல்களையும், இலங்கை வங்கிகளுக் கிடையிலான நாளாந்த வழங்கல் வீதங்கள் நிறையேற்றப்பட்ட வாராந்த சராசரி முதன்மை கடன்வீதம், சராசரி நிறையேற்றப்பட்ட மாதாந்த வைப்புவீதம் போன்ற முக்கிய வட்டி வீதங்களையும் தொகுத்து வெளியிடுகின்றது. இவை சந்தை யாளர்களினால் அடிப்படை அடித்தளக் குறியீட்டு வீதமாக பயன்படுத்தப்படுகிறது. திணைக்களம் மாதாந்த வர்த்தக சுட்டெண்களையும், தனியார்துறைக் கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்களையும் தொகுத்து வெளியிடுகிறது. விபரமான அரையாண்டு கைத்தொழில் உற்பத்தி அளவீடுகள் தொடர்ந்தும் இடம்பெறும் வேளையில் கைத்தொழில் துறைக்கான உள்ளீட்டு விலைச்சுட்டெண்ணும் கணிப்பீடு செய்யப்பட்டது. அரசின்அனைத்து மட்டங்களிலுமான செயலாற்றங் களை மதிப்பிடுவதற்காக உள்ளூராட்சி மன்றங்களின் வரவு செலவுத்திட்ட செயலாற்றுகை மீதான அளவீட்டினை திணைக்களம் தொடங்கியது. புதிய அரசு நிதி புள்ளிவிபரவியல் கையேடு 2001இன் அடிப்படையில் இறைத் தரவுகளை திரட்டி அறிக்கையிடுவதற்கான நடவடிக்கைகளையும் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் ஆரம்பித்துள்ளது.

தரவைப் பரப்புகின்ற கால ஒழுங்குகளை வங்கியின் இணையத்தளத்தில் வெளியிட்டு பொதுமக்கள் முக்கிய பொருளாதார தகவல்கள் வெளியிடப்படும் காலத்தை நன்கு தெரிந்துகொள்வதற்கு வழியேற்பப் படுத்திக் கொடுக்கப்பட்டது. இந்த முக்கிய பொருளாதார தரவுகளைப் பெற்றுக்கொள்வதற்கான திட்டமிடலை மேற்கொள்வதற்கான பொதுமக்களுக்கான பெறுமதி மிக்க வழிகாட்டியாக இது விளங்குகின்றது.

திணைக்களம் ஏனைய திணைக்களங்களின் ஒத்துழைப்புடன் 2002ஆம் ஆண்டிற்கான வங்கியின்

ஆண்டறிக்கையை பிரசுரிப்பதற்கான ஒருங்கிணைப்புக்கு வங்கியின் பொறுப்பாக இருந்தது. திணைக்களம் அண்மைய பொருளாதார அபிவிருத்திகள் 2003இல் முக்கிய பண்புகளும் 2004 இற்கான வாய்ப்புக்களும் அறிக்கையினை நவம்பரில் ஏனைய திணைக்களங்களின் ஒத்துழைப்புடன் விசேடமாக புள்ளிவிபரவியல் திணைக்களத்தின் ஒத்துழைப்புடன் வெளியிட்டது. செறிவான புள்ளிவிபர விளக்கங்களை உள்ளடக்கிய மாதாந்தச் செய்தித்திரட்டு இத்திணைக்களத்தினால் தொடர்ந்தும் வெளியிடப்படுகிறது. இந்த மாதாந்த செய்தித்திரட்டினை வாசகர் மனதைக்கவரக்கூடிய விதத்திலும் அதை அளிக்கும் முறையை முன்னேற்றும் விதத்திலும், வடிவமைப்பைத் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. திணைக்களம், நிதியமைச்சுக்கு அவ்வப்போது தேவையான அறிக்கைகளை வழங்குவதற்கு மேலதிகமாக 2004ஆம் ஆண்டின் வரவுசெலவுத்திட்ட அறிக்கையைத் தயாரிப்பதற்கு உதவியளிக்கும் வகையில் நாணயச்சட்டத்தின் 116ஆம் பிரிவின் கீழ விசேட அறிக்கையைத் தயாரித்து நிதியமைச்சுக்குச் சமர்ப்பித்தது. நாணயவிதிச் சட்டத்தால் வேண்டப்பட்டவாறு பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் அரசால் பெற்றுக்கொள்ளப்படும் சகல வெளிநாட்டுக் கடன்களை மதிப்பிடுவதற்கும் இக்கடன்கள் மீதான அதன் கருத்தினை நாணயச்சபை வழங்குவதற்காக அக்கடன்கள் விளைவிக்கக்கூடிய நாணயத்தாக்கங்களை மதிப்பிடுவதற்கும் பொறுப்பாக இருந்தது.

பொருளாதார ஆராய்ச்சித் திணைக்கள அலுவலர்கள் வங்கியின் தேவையை நிறைவேற்று வதற்காகவும் அவர்களது சொந்த ஆர்வம் காரணமாகவும் பல ஆராய்ச்சி ஆய்வுகளை மேற்கொண்டனர். பல ஆய்வுகள் வங்கியின் "உயர் அலுவலர் ஆய்வு" களில் வெளியிடுவதற்காகத் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

பொருளாதார ஆராய்ச்சித் திணைக்கள அலுவலர்கள் அரசாங்கத்தினாலும், தனியார் துறையினராலும் மற்றும் தென்கிழக்காசிய நாடுகளின் மத்திய வங்கிகள் நிலையம் போன்ற வெளிநாட்டு நிறுவனங்களினதும் ஆய்வரங்குகளிலும் செயலமர்வுகளிலும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களிலும் மூலவள ஆட்களாக செயற்பட்டனர். அவர்கள் பிராந்திய வர்த்தக ஒத்துழைப்புக்களிலும் (தென்னாசிய சுதந்திர வர்த்தக உடன்படிக்கை, பங்களாதேசம், இந்தியா, மியன்மார், இலங்கை, தாய்லாந்து, பொருளாதார ஒத்துழைப்பு, இந்து சமுத்திர பிராந்திய ஒத்துழைப்புக்கான கழகம், பாகித்தான், எகிப்து, தாய்லாந்து போன்ற நாடுகளுடனான இருபுடை வர்த்தக உடன்படிக்கைகள் போன்ற உலக வர்த்தக அமைப்பு சம்பந்தப்பட்ட விடயங்களிலும் ஈடுபட்ட பல இலங்கை குழுக்களில் மூலவள ஆட்களாகவும், உறுப்பினர்களாகவும் செயற்பட்டனர். பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் உலக வர்த்தக அமைப்பின் இரண்டாவது வர்த்தக கொள்கை மீளாய்வு பொறிமுறைக்கான ஒரு வரைவு அறிக்கையினைத் தயாரித்தது. இலங்கை இந்திய அனைத்தையும் உள்ளடக்கிய பொருளாதாரக்கூட்டு உடன்படிக்கை மீதான ஆய்வுகுழு, இலங்கைக்கும், சிங்கப்பூருக்கும் இடையிலான அனைத்தையுமுள்ளடக்கிய பொருளாதார கூட்டு உடன்படிக்கை மற்றும் அமெரிக்காவுடனான பொருளாதார கூட்டு உடன்படிக்கை என்பன தொடர்பான ஆரம்ப பேச்சுவார்த்தைகளில் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தின் அலுவலர்கள் பங்குபற்றினர்.

இத்திணைக்களத்தின் மூத்த உயர் பதவியாளர்கள் பலர் வங்கியினுள்ளும், வங்கிக்கு வெளியேயுமான பல முக்கியமான குழுக்களில் பணியாற்றினர். அவற்றிடையே பேரண்ட மற்றும் வர்த்தக கொள்கை அமைப்பு மீதான வழிகாட்டல்குழு தீர்வை மதியுரைசபை, நிதித்துறை சீர் திருத்தக்குழு, நெல்சந்தைப்படுத்தலிலான தந்திரோபாய தலையீடு, நீர்ப்பாசன நீர் முகாமைத்துவ அமைச்சின் ஆலோசனைக்குழு, வளமாக்கி விலைக்கோரல் குழு, இலங்கைக்கான உணவு, ஊட்டச்சத்து கொள்கையை உருவாக்கும் வறுமைக் குறைப்பு மற்றும் வளர்ச்சி வசதிக் கண்காணிப்பு செயலணிக்குழு, நலிவுற்ற கைத்தொழில்களுக்கான அமைச்சு மட்டத்திலான உபகுழு, அரச உடமை பேருந்து கம்பனிகளின் மீளவமைப்பு தொடர்பான வழிகாட்டல்குழு, இலங்கையில் அரிசி உற்பத்தியிலான இலாபத்தன்மைகளும் அதன் நீடித்திருக்கக்கூடிய தன்மை என்பன மீதான செயலணிக்குழு, இலங்கையில் நெற்கொள்வனவு பதனிடல், சந்தைப்படுத்தல், இருப்பு வைத்திருத்தல் என்பனவற்றின் ஒழுங்குபடுத்தலுக்கான செயலணி, சந்தைத் தொழிற்பாட்டுக்குழு, வெளிநாட்டு ஒதுக்குகள் முகாமைத்துவக்குழு, பயிற்சிக்குழு, உள்நாட்டுப்படுகடன் முகாமைத்துவக்குழு, திறைசேரி உண்டியல்கள் மற்றும் முறிகள் விலைக்கோரல் குழுக்கள் என்பன காணப்பட்டன. இத்திணைக்களத்தின் அலுவலர்கள் தேசிய அபிவிருத்தி வங்கி, முதலீட்டுச்சபை, இலங்கை ஏற்றுமதிக் கொடுகடன், காப்புறுதிக் கூட்டுத்தாபனம் மற்றும் வரையறுக்கப்பட்ட தொலைக்கல்வி நிலையம் போன்ற நிறுவனங்களின் பணிப்பாளர் சபைகளில் பணிபுரிந்தனர்.

அலுவலர்களின் தொழில்நுட்ப தேர்ச்சிகளை மேம்படுத்தும் பொருட்டு பொருளாதார ஆராய்ச்சித்

திணைக்களம் அலுவலர்களுக்கு தொடர்ந்து உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் பயிற்சியளித்தது.

## செயலகம்

செயலகத் திணைக்களம் வங்கிக்கான பொருட்கள் மற்றும் பணிகளின் கொள்வனவு, வங்கி அலுவலர்களுக்கான வெளிநாட்டு மற்றும் உள்ளூர் பயணங்கள், பொது நிருவாகம், உபசார தொழிற்பாடு, விடுப்பு கொள்கை நிர்வாகம் மற்றும் ஏனைய பல்வகைப்பட்ட பணிகள் தொடர்பான வேலைகளைக் தொடர்ந்தும் கையாள்கின்றது. இதற்கு மேலாக இத்திணைக்களம் வங்கியில் சமூக, பண்பாட்டு நடவடிக்கைகளை முன்னேற்றும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளது. இந்த சமூக மற்றும் நடவடிக்கைகள் ஏனையவற்றுக்கிடையே தொழில் தருவோர்/தொழில் புரிவோருடனான உறவுகளையும் அத்துடன் ஊழியர்களிடையேயான உறவுகளையும் மேம்படுத்து வதற்கு உதவின.

வங்கியில் அஞ்சல் நடவடிக்கைகளைக் கையாளல், மற்றும் செயலகத் திணைக்களத்தின் தரவுப்பதிவுத் தொழிற்பாடுகள் என்பன செலவைக்குறைக்கும் நிமித்தம் தொடர்ந்தும் வெளிமுகவர்களிடம் கையளிக்கப்பட்ட திறமையாக பணி வழங்கப்படுகிறது. கணனி மயப்படுத்தப்பட்ட பொதுப்பேரேட்டு முறைக்கான பயணங்கள், பொருட்கள் மற்றும் பணிகள் போன்ற வற்றின் கொள்வனவு தொடர்பான கொடுப்பனவுகளும், முற்பணங்களின் தீர்ப்பனவும் இவை தொடர்பான கொடுப்பனவுகளை நிதித் திணைக்களம் செலுத்துகின்ற போதிலும்கூட இத் திணைக்களததின் வசமேயிருந்தன. கணனி மயப்படுத்தப்பட்ட சூழலில் கையாளப் படுவதற்காக இத்திணைக்களத்தினால் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

## பாதுகாப்புப் பணிகள்

பாதுகாப்புப் பணிகள் திணைக்களத்திடம் வங்கி ஊழியர்கள், கட்டடங்கள், கருவிகள் மற்றும் சொத்து என்பனவற்றைப் பாதுகாக்கும் பணிகளும் வங்கியின் சொத்துக்கள் மற்றும் நாணயங்களைக் கொண்டு செல்வதற்கான பாதுகாப்பினை வழங்கும் பணிகளும் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

மத்திய வங்கி பங்கேற்ற பின்வரும் கண்காட்சிகளுக்கு திணைக்களம் பாதுகாப்பு வழங்கியது. பெறுமதிமிக்க பண்டைய நாணயங்கள் உட்பட, தாள்கள் மற்றும் குத்திகளும் மத்திய வங்கியின் கண்காட்சியில் இடம் பெற்றிருந்தன.

(அ) 2003ஆம் ஆண்டு யூலை 04-06 ஆம் நாள்வரை எம்பிலிப்பிட்டியவில் நடத்தப்பட்ட திறிகமண கண்காட்சி.

(ஆ) 2003ஆம் ஆண்டு செத்தெம்பர் 05-11ஆம் நாள்வரை மாத்தறையில் நடைபெற்ற யுகதெக்ம கண்காட்சி.

(இ) 2003ஆம் ஆண்டு ஒத்தோபர் 06-10ஆம் நாள்வரை கம்பகாவில் நடைபெற்ற யுகதெக்ம கண்காட்சி.

(ஈ) 2003ஆம் ஆண்டு ஒத்தோபர் 24-26 ஆம் நாள்வரை களுத்துறையில் நடத்தப்பட்ட திருச்சிலுவை வர்த்தக கண்காட்சி.

(உ) 2003 திசெம்பர் 12-22 ஆம் நாள்வரை கொழும்பில் நடைபெற்ற யுகதெக்ம கண்காட்சி.

தீ அணைப்பு கவனிப்பாளர்கள் மற்றும் பாதுகாப்பு அலுவலர்கள் அவர்களின் கடமைகளைச் சிறப்பாக ஆற்றுவதற்கு அவர்களுக்கு ஆற்றலளிக்கும் பொருட்டு பின்வரும் பயிற்சிகள் அவர்களுக்கு வழங்கப்பட்டன.

(அ) அனைத்து திணைக்களங்களிலுமுள்ள தீ அணைப்பு கவனிப்பாளர்களுக்கு தீ அணைப்பு வகுப்புக்கள் நடத்தப்பட்டன. இந்தப் பயிற்சி கொழும்பு தீயணைப்பு படையின் ஒத்துழைப்புடன் நடத்தப்பட்டது. மேலும், பாதுகாப்பு அலுவலர்களின் பங்கேற்புடன் இலங்கை மத்திய வங்கியின் அனைத்து ஊழியர்களுக்கு தீ விபத்தின்போது வெளியேறும் பயிற்சி வழங்கப்பட்டது. இந்த தீ விபத்து வெளியேறல் தொடர்பான பயிற்சிக்கு தீயணைப்பு வண்டியும், கருவிகளும் தீயணைப்புப் படையினரால் கொண்டு வரப்பட்டிருந்தன.

(ஆ) வருடாந்த ஆயுதப் பயிற்சியும், சுடுபடைக்கல பயிற்சியும் 2003 நவெம்பர் 22, 23 மற்றும் 29ஆம் நாள்களில் பாதுகாப்பு அலுவலர்களுக்கு நடத்தப்பட்டன.

## புள்ளி விபரங்களும் கள அளவீடுகளும்

புள்ளிவிபரவியல் திணைக்களம் 2003இல் அதன் அளவீடுகளூடாக (அ) தேசிய கணக்குகள், விலைகள், மற்றும் கூலிகள், தொழிற்படை, தொழில்நிலை மற்றும் சமூகப் பொருளாதாரக் குறிகாட்டிகள் மற்றும் (ஆ) குடும்ப அலகுகள் மற்றும் வியாபாரத்துறை மீதான நுண்பாக மட்டத்தரவுகள் என்பனவற்றை தொடர்ந்தும் திரட்டி, பகுப்பாய்வு செய்து பரப்பியது. திணைக்களம் அது பரப்பும் பொருளாதாரப் புள்ளி விபரங்களின் தரத்தை உயர்த்துதல், நேரம் பிந்தாமை மற்றும் உள்ளடக்கங்களை அதிகரித்தல் ஆகியவற்றின் நோக்கில் அதன் குறிப்பிட்டதுறைகளில் ஏற்கனவேயுள்ள புள்ளி

விபரங்களை பூரணப்படுத்துவதற்காக புதிய புள்ளிவிபர வியல் நடவடிக்கைகளை அபிவிருத்தி செய்வதில் தொடர்ந்தும் ஈடுபட்டிருந்தது.

குறிப்பாக, தேசிய வருமான மதிப்பீடுகளைத் திரட்டுவதிலும் பரப்புவதிலும் பலமுறையியல் சார்ந்த முன்னேற்றங்கள் மேற்கொள்ளப்பட்டன. அதேவேளை, காலாண்டு மொ.உ.உற்பத்தித் தரவுகள் ஆண்டின் தொடக்கத்தில் முன்கூட்டியே வெளியிடப்பட்ட கலண்டர் நாளை மிகக் கடுமையாகப் பின்பற்றி ஊடக மாநாடுகளூடாக பொதுமக்களுக்குத் தொடர்ந்தும் பரப்பப்பட்டு வருகின்றன.

2003ஆம் ஆண்டின் சனவரி ஆரம்பத்தில் நாணயச்சபையின் தீர்மானத்தில் குறித்துரைக்கப் பட்டவாறு நுகர்வோர்நிதி மற்றும் சமூகப் பொருளாதார அளவீட்டுத் தொடரில் எட்டாவது அளவீட்டினை 2003 ஒத்தோபரில் ஆரம்பித்து நடத்துவதற்கான அனைத்துத் திட்டமிட்ட நடவடிக்கை களையும் இறுதிப்படுத்தியது. அளவீட்டு வினாக் கொத்துக்களை தயாரித்து அச்சிடல், மாதிரித் தெரிவு மற்றும் களத்திட்டங்களைத் தயாரித்தல், கள அலுவலர்களின் ஆட்சேர்ப்பு மற்றும் பயிற்சி, அரச அதிகாரிகளுடனான கடிதத்தொடர்புகள், பிரபல்யப்படுத்தல், முன்னோடி அளவீடுகளை மேற்கொள்ளல் மற்றும் தரவு செய்முறைப்படுத்தல் திட்டங்களை அபிவிருத்தி செய்தல் என்பனவற்றை உள்ளடக்கிய அனைத்து முக்கிய பணிகளும் 2002இல் தயாரிக்கப்பட்ட திட்டமிடப்பட்ட கால ஒழுங்கின்படி முற்றுப்பெற்றன. அளவீடு ஒத்தோபர் தொடக்கத்தில் ஆரம்பித்ததுடன் கலண்டர் காலாண்டின்படியான முதலாவது சுற்று 2003 திசெம்பர் இறுதியில் வெற்றிகரமாக நிறைவடைந்தது.

இவ்வாண்டில் இடம்பெற்ற இன்னொரு முக்கியமான சம்பவம் யாதெனில் 1978ஆம் ஆண்டில் தொடங்கிய நாடளாவிய தரவு சேகரிப்புமுறை அல்லது "தீபடற்ர" எனச் சிங்களத்தில் அழைக்கப்படுவதன் 25அவது ஆண்டு நிறைவினைக் கொண்டாடும் விதத்தில் சிறப்பு ஆய்வரங்கு ஒன்று நடத்தப்பட்டதேயாகும். ஆய்வரங்கும் நாடு முழுவதிலுமுள்ள ஏறத்தாழ 100 நிலையங்களில் புள்ளிவிபர பரீட்சிப்பாளர்களாகப் பணியாற்றிய ஆசிரியர்களுக்கான பரிசளிப்பும் வங்கித் தொழில் கற்கைகளுக்கான ஆய்வு நிலையத்தில் செத்தெம்பர் மாதம் 27ஆம் நாளன்று நடத்தப்பட்டது. மத்திய வங்கியின் ஆளுநர் பிரதம விருந்தினராகவும் குடிமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களத்தின் பணிப்பாயர் நாயகம் கௌரவ விருந்தினராகவும் இவ்வைபவத்தில் கலந்து கொண்டனர்.

நாடு முழுவதிலுமுள்ள சில்லறை மற்றும் விற்பனைச் சந்தைகளின் விலை மாற்றங்களை ஒழுங்காகவும் நெருக்கமாகவும் கண்காணித்தவருதல் திணைக்களத்தின் மிக முக்கியமான பொறுப்பாகும். பேரண்டப் பொருளாதார முகாமைத்துவத்திற்கு வசதியளிக்கும் நோக்குடன் கொள்கை வகுப்போருக்காக விலை அசைவுகளின் மீது திணைக்களம் தொடர்ந்தும் கிரமமானதும் நேரந்தவறாததுமான பகுப்பாய்வு அறிக்கைகளைத் தொடர்ந்தும் தயாரித்தது. அதேவேளை, அச்சு மற்றும் மின்னியல் ஊடகங்களூடாக சில்லறை மற்றும் மொத்தவிற்பனைச் சந்தைவிலைகள் தொடர்பான விலைகளைப் பரப்பும் நடவடிக்கைகள் வழமைபோன்று தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டன.

கிரமமான வெளியீடுகளான இலங்கை சமூகப் பொருளாதார தரவு – 2003, மற்றும் இலங்கை பொருளாதார சமூகப் புள்ளிவிபரம் –2003 என்பன வற்றிற்கு கூடியளவிற்கு பிரதேசவாரியாக பகுக்கப்பட்ட பொருளாதார புள்ளிவிபரங்களை வழங்கும் புதிய அட்டவணைகளை அறிமுகப்படுத்துவதன் மூலமும் இவ்விரண்டு வெளியீடுகளும் உள்ளடக்கும் விடயத்தினையும் உள்ளடக்கத்தினையும் முன்னேற்றுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. முன்னையது அச்சிலும், மின்னியல் ஊடகத்திலும் பொதுமக்களுக்கு கிடைக்கத்தக்கதாக உள்ளது.

2002ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் ஆய்விற்குரிய ஆண்டில் இத்திணைக்களத்தின் அலுவலர் களுக்கு கூடியளவு பயிற்சி வசதிகள் கிடைக்கச் செய்யப் பட்டமையானது அவர்களது தொழில்சார் இயலாற்றல்களை வளர்த்துக் கொள்ள உதவியது. இதன்படி, வங்கித் தொழில் கற்கைகளுக்கான ஆய்வு நிலையத்திலும் முகாமைத்துவ அபிவிருத்தி நிலையம் மற்றும் ஏனைய உள்நாட்டு முகவர்களினாலும் நடத்தப்பட்ட இப்பயிற்சிகளில் 17 உயர்பதவி அலுவலர்களும் 20 உயர்பதவியல்லா அலுவலர்களும் கலந்து கொண்டவேளையில் குறிப்பாக தொடர்பான வெளிநாட்டு பயிற்சியினை ஐந்து உயர்பதவி அலுவலர்கள் பெற்றுக் கொண்டனர்.

2002ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டதனைப் போன்று கொழும்புப் பல்கலைக் கழகத்தின் புள்ளி விபரவியல் திணைக்களத்தினால் விடுக்கப்பட்ட வேண்டுகோளின்படி, திணைக்களம் அதன் இரண்டு பட்டதாரி மாணவர்களுக்கு 2003 யூலையிலிருந்து 8 வாரக் காலக் கைத்தொழில் பயிற்சியினை வழங்கியது. மேலும் திணைக்களத்தின் மூத்த அலுவலர்கள் தேசிய மட்டத்தில் பல திணைக்கள குழுக்களிலும் மன்றங்களிலும் பணியாற்றினர்.

## அளவீடுகள்

### நுகர்வோர் நிதி மற்றும் சமூகப் பொருளாதார அளவீடு 2003/ 2004

மேற்குறிப்பிட்ட அளவீட்டினை நடத்தும் பொருட்டு புள்ளிவிபரத் திணைக்களம் அனைத்துத் தொடர்பான நடவடிக்கைகளையும் இறுதிப் படுத்தியுள்ளதுடன் 2003 ஒத்தோபர் தொடக்கத்தில் மாதிரி குடும்ப அலகுகளிலிருந்தும் தரவுகள் சேகரிக்கப்படத் தொடங்கின. இது 2004 செத்தெம்பர்வரை தொடரவுள்ளதுடன் இதன் மூலம் ஒரு கலண்டர் ஆண்டு முழுவதும் உள்ளடக்கப்படும். இக்காலப்பகுதியில் தரவுச் சேகரிப்புக்கள் ஒவ்வொன்றும் மூன்று மாதங்களைக் கொண்ட நான்கு சுற்றுக்களுக்குத் தொடரும். இது தொடர்களில் 8ஆவது அளவீடாகும். 7ஆவது அளவீடு 1996/97 இல் நடத்தப்பட்டது. அளவீட்டிற்கான வடிவமைத்தல், திட்டமிடல் மற்றும் தயாரிப்பு என்பனவெல்லாம் முன்னைய ஆண்டில் தயாரிக்கப்பட்ட முன்கூட்டிய கலண்டர் நிகழ்ச்சித் திட்டத்திற்கேற்ப மேற்கொள்ளப்பட்டது.

குடித்தொகை மற்றும் வீடமைப்பு (குடிமதிப்பு) தொகை மதிப்பீடு - 2001 நடத்தப்பட்டதனைத் தொடர்ந்து அளவீட்டிற்கான மாதிரி குடும்ப அலகுகளை தெரிவு செய்வதற்கு நாளதுவரை பூரணப்படுத்தப்பட்ட குடித்தொகை கணிப்பீடு கிடைக்கத்தக்கதாக இருந்தது. குடிமதிப்பு- 2001, வடமாகாணத்திலுள்ள மூன்று மாவட்டங்களான மன்னார், முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சியில் பூரணப்படுத்தப்படவில்லை. எனவே மாதிரிகள் தெரிவு செய்யப்பட தேவையான குடித்தொகை விபரங்கள் குடிமதிப்பு - 2001 இல் கிடைக்காமையின் காரணமாக இம்மாவட்டங்களை அளவீட்டிலிருந்தும் நீக்கவேண்டி ஏற்பட்டது. இதனால் இத்தொடர்களில் முன்னைய இரு அளவீடுகளான 1986/ 87 மற்றும் 1996/ 97 ஆண்டு அளவீடுகளில் வடக்கு மற றும் கிழக்கு மாகாணங்கள் உள்ளடக்கப்படாதது போலன்றி, இவ்வளவீட்டில் மேலே குறிப்பிடப்பட்ட 3 மாவட்டங்கள் மட்டும் நீங்கலாக நாட்டிலுள்ள மற்றைய 22 மாவட்டங்களும் உள்ளடக்கப்பட்டன. தரவுகள், 1509 மாதிரி குடியிருப்பு பிரிவுகளிலிருந்து தெரிவு செய்யப்பட்ட 11,768 மாதிரி குடும்ப அலகுகளிலிருந்து சேகரிப்பதற்கு எதிர்பார்க்கப் பட்டுள்ளது. 2797 மாதிரி குடும்ப அலகுகளை உள்ளடக்கிய அளவீட்டின் 1ஆம் சுற்றின் தரவுச் சேகரிப்புக்கள் ஏற்கனவே முடிவடைந்துள்ளதுடன் தர வுகளைச் செய்முறைப்படுத்தும் செயல்பாடு நடைபெற்று வருகின்றது.

இவ்வளவீட்டினை நடாத்துகின்றதன் முக்கிய குறிக்கோள் குடும்ப அலகுகளின் வருமானம், செலவினம் நுகர்வு, சேமிப்பு மற்றும் முதலீடு என்பன மீதான அனைத்தையுமுள்ளடக்கிய தரவுகளைச் சேகரிப்பதே யாகும். மேலும், குடித்தொகைப் பண்புகள், வீடமைப்பு நிலைமைகள், சமூகப் பொருளாதார நிலைமைகள் தொழிற்படைத்தரவு மற்றும் தொழில்நிலைப்புள்ளி விபரங்கள் என்பனவற்றை உள்ளடக்கிய மற்றைய முக்கிய தரவுகளும் இவ்வளவீட்டில் சேகரிக்கப்படும். கடந்த ஐந்து சகாப்தங்களுக்கு மேலாக நுகர்வோர் நிதி மற்றும் சமூகப் பொருளாதார அளவீடானது நாட்டின் சமூக பொருளாதார நிலைமைகளில் ஏற்படும் மாற்றங்கள் பற்றிய தகவல்களின் முக்கிய மூலமாக விளங்கி வருகின்றது. இத்தரவுகள் அரசதுறை தனியார்துறை இரண்டிலுமுள்ள கொள்கை வகுப்போர், திட்டமிடுவோர், ஆராய்ச்சியாளர்கள், மாணவர்கள், சமூகப் பணியாளர்கள், பன்னாட்டு உதவு முகவர்கள் மற்றும் பொது மக்களால் பரந்தளவில் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. மேலும் இவ்வளவீட்டுத் தொடர்கள் தொடர்ச்சியான அடிப்படையில் வறுமை மற்றும் பொருளாதார முன்னேற்றம் என்பன தொடர்பாக எழுகின்ற தரவுகளுக்கான தேவையை பூர்த்தி செய்கின்ற பொதிமுறையொன்றினை வழங்குகின்றன.

இந் நுகர்வோர் நிதி மற்றும் சமூகப் பொருளாதார அளவீட்டினை நடாத்துவதன் இன்னொரு முக்கியமான அம்சம் நுகர்வோர் செலவினம் மீதான ஆகப் பிந்திய தரவுகள் கிடைக்கத்தக்கதாக இருப்பதும் 1993ஆம் ஆண்டின் தேசிய கணக்குகள் முறையின் விதந்துரைப்புக்களுடன் இணைந்து செல்லும் விதத்தில் 1968ஆம் ஆண்டின் தற்போதைய தேசிய கணக்குகள் முறையிலிருந்தான திரட்டல் நடைமுறைகளையும் வரைவிலக்கணங்கயைும் திருத்துவதற்கான திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகையில் இது தேசிய கணக்குகளின் திரட்டல் நடைமுறைகளை வலுப்படுத்துவ தாயிருக்கும். மேலும் இவ்வளவீட்டின் திருத்தப்பட்ட செலவின அட்டவணைகள், தொகை மதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களத்தின் புதிதாகத் திரட்டப்பட்ட இலங்கை நுகர்வோர் விலைச்சுட்டெண்ணில் பயன் படுத்தப்பட்டுள்ள, தற்போதைய விதந்துரைக்கப்பட்ட பன்னாட்டு நியமமான 1993இன் தேசிய கணக்குகள் முறையின் நோக்க அடிப்படையிலான தனிப்பட்டவர்கள் நுகர்வின் பகுப்பாய்வுகளினது அடிப்படையில், செலவினத் தரவுகளைத் தயாரித்து வழங்குவதனை இயலச் செய்யும். இவ்வளவீட்டுத் தரவுகள், புள்ளிவிபர வியல் திணைக்களத்தினால் திரட்டப்பட்ட அனைத்து பிராந்திய விலைச் சுட்டெண்களினதும் அடிப்படை நிறை களை திருத்தவும், பூரணப்படுத்தவும், முன்னேற்று

வதற்கும் பயனுறு முறையில் பயனபடுத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அளவீடுகளில் கண்டறியப்பட்ட விடயங்களின் அடிப்படையில், சுற்றுக்களின்படியான அறிக்கைகள் அளவீட்டின் ஒவ்வொரு சுற்றும் முடிவடைந்ததும் வெளியிடப்படவுள்ளது. முக்கிய அளவீட்டின் புள்ளிவிபர வியல் ரீதியாக கண்டறியப்பட்டனவிற்குப் புறம்பாக, கலண்டர் ஆண்டின் வேறுபட்ட காலப்பகுதிகளில், நாட்டின் வேறுபட்ட பிரதேசங்கள் முழுவதிலுமுள்ள பொருளாதார நிலைமைகளை மதிப்பிடும் நோக்குடன் திணைக்களத்தின் பொதுவான மேற்பார்வைக் குழுவானது களத்திலுள்ள குறித்துரைக்கப்பட்ட தகவல் களையும் திரட்டியது. இதனைப் பொறுத்தவரையில், வடக்குக் கிழக்கு மாகாணங்கள் 20 ஆண்டுகளுக்குப் பின்னர் நுகர்வோர் நிதி மற்றும் சமூகப் பொருளாதார அளவீட்டில் உள்ளடக்கப்பட்டிருப்பதனால் அப்பிர தேசங்களின் உள்ளடக்கலானது குறிப்பிடத்தக்க தகவல்களைக் கொண்டனவாக இருக்கும் என நம்பப்படுகிறது.

### நாடளாவிய தரவுச் சேகரிப்புமுறை

1978இல் ஆரம்பிக்கப்பட்ட புள்ளிவிபரத் திணைக்களத்தின் நாடளாவிய தரவுச் சேகரிப்பு முறை 2003இல் அதன் தொழிற்பாட்டில் 25ஆண்டுகளைப் பூர்த்தி செய்துள்ளது. இந்நிகழ்ச்சித் திட்டத்தின்கீழ் நுகர்வுப் பொருட்களின் சில்லறை விலைகள், வேளாண்மைப் பண்டங்களின் உற்பத்தி விலைகள் மற்றும் முறைசாராத் துறையோடு தொடர்புடைய கூலி வீதங்கள் ஆகியவற்றுடன் தொடர்பான தகவல்கள் கிரமமாகச் சேகரிக்கப்பட்டன. தரவுச் சேகரிப்பானது இந்நிகழ்ச்சித்திட்டம் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து நிறுவப்பட்ட ஏறத்தாழ 100 நிலையங்களில் 93இல் புள்ளிவிபர பரீட்சிப்பாளர்களைத் தொழிற்படுத்துகின்ற பள்ளிக்கூட ஆசிரியர்களைக் கொண்ட நாடு பூராவிலுமுள்ள வலையமைப்பினூடாக நிறைவேற்றப் படுகின்றது. இவ்வாறு சேகரிக்கப்பட்ட தகவல்கள் கிரமமான முறையில் அச்சு மற்றும் மின்னியல் ஊடகங்களூடாக வெளியிடப்படுகின்றன. இம்முறை யானது, நுகர்வோர் விடயங்களின் நிருவகிக்கப்பட்ட விலைகளிலும் அதேபோன்று முக்கிய உற்பத்திப் பிரதேசங்களில் வேளாண்மை உள்ளீடுகளுக்கான விலைகளை கண்காணிக்கவும் பயன்படுத்தப் படுகின்றது. இத்திட்டத்தினால் உள்ளடக்கப்பட்ட துணைத்துறைகள் நெல், தேயிலை, இறப்பர் மற்றும் தெங்குப் பயிர்ச்செய்கையையும், சிறிய அளவிலான கட்டுமான வேலைகளையும் உள்ளடக்கியுள்ளது. தர வுச் சேகரிப்பாளர்கள் அவர்களது தரவுச் சேகரிப்பின் தரம், வினைத்திறன் மற்றும் நேரம் தவறாமை என்பனவற்றை முன்னேற்றும் பொருட்டும், பிரதேச வாரியான நுகர்வோர் விலைச் சுட்டெண்களின் கணிப்பீட்டில் அடையாளம் காணப்பட்ட பிரதேசம் முழுவதிலுமான விலை அபிவிருத்திகளில் காணப்பட்ட வேறுபாடுகளுக்கான காரணங்களையிட்டு அவர்களது அபிப்பிராயங்களையும் பெற்றுக் கொள்ளும்பொருட்டு தரவுச் சேகரிப்பாளர்களுக்கு மேலும் பயிற்சிகளை வழங்குவதற்காக 2003இல் மாத்தறை, கொழும்பு, அநுராதபுரம் மற்றும் கண்டி ஆகிய இடங்களில் ஆய்வரங்குகள் நடத்தப்பட்டன. தொடர்பான பிர தேசங்களில் விலைகள் தவிர்ந்த பொருளாதார நடவடிக்கைகள் மீதான தகவல் சேகரிக்கின்ற முறை யை அபிவிருத்தி செய்யும் தேவைக்காக ஆசிரிய பரீட்சிப்பாளர்களுக்கு கல்வியூட்டப்பட்டது. விலை அசைவுகள் மீதான பொதுமக்களின் எதிர்பார்ப்புக்கள் மீதான தகவல் சேகரிக்கின்ற முறையை நிறுவுவது பற றிய மத்திய வங்கியின் திட்டம் பற்றியும் பொருளாதார நடவடிக்கைகளின் மீதான பேரண்டப் பொருளா தாரக் கொள்கைகளின் தாக்கம் பற்றியும் அவர்களுக்கு அறிவூட்டப்பட்டது.

### விலைச் சுட்டெண்களின் கணிப்பீடு

#### நுகர்வோர் விலைச் சுட்டெண்

1998இல் அறிமுகப்படுத்தப்பட்ட கொழும்பு மாவட்ட நுகர்வோர் விலைச் சுட்டெண்ணானது, தொகை மதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்தினால் கணிக்கப்பட்ட கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண் மற்றும் இலங்கை நுகர்வோர் விலைச் சுட்டெண் ஆகிய சுட்டெண்களை பூரணப்படுத்தும் சுட்டெண்ணாக திணைக்களத்தினால் தொடர்ந்தும் கணிக்கப்பட்டு வருகின்றது. இச்சுட்டெண்ணில் பயன்படுத்தப்பட்டுள்ள இலக்கிடப்பட்ட குடித்தொகை, வருமான அடிப்படையில் நிரற்படுத்தப்பட்ட மாவட்டக் குடித்தொகையில் ஆகக் குறைந்த வருமானத்தைக் கொண்ட 40 சதவீதத் தினரானவர். கொழும்பு மாவட்ட நுகர்வோர் விலைச்சுட்டெண் பொருட்களின் எண்ணிக்கை நியதிகளிலும் அதேபோன்று, புவியியற் பிரிவு அடிப்படையிலும் கொழும்பு நுகர்வோர் விலைச் சுடடெண்ணினைவிட பரந்த உள்ளடக்கத்தினைக் கொண்டுள்ளது. சுட்டெண்ணினைக் கணிப்பதற்கான தகவல்கள் கொழும்பு மாவட்டத்திலுள்ள 11 நிலையங்களில் பெறப்பட்டன. இப் 11 நிலையங்களில் புறக்கோட்டைச்சந்தை, கன்வெல, கோமாகம, மொரட்டுவ மற்றும் அவிசாவளை ஆகிய ஐந்து நிலையங்கள் நாடளாவிய தகவல் சேகரிப்பு முறையின் கீழும் ஏனைய நிலையங்களான கொலன்னாவ, நுகேகொட, தெகிவளை, பிலியந்தல, மகரகம மற்றும் பாதுக்கை என்பன 1999இல் புதிதாகவும் அறிமுகப்

படுத்தப்பட்டன. இந் நிலையங்களிலிருந்தான தகவல் சேகரிப்பு கம்பனி ஒன்றிடம் ஒப்படைக்கப்பட்டதனைத் தொடர்ந்து கம்பனியிலிருந்து வாடகைக்கு அமர்த்தப்பட்ட கள பரீட்சகர்களும், நியமிக்கப்பட்ட ஆசிரிய பரீட்சகர்களும் இந்நிலையங்களிலிருந்து ஆண்டு முழுவதும் கிரமமாகத் தகவல்களைச் சேகரிக்கின்றனர்.

1998இலிருந்து அநுராதபுரம், மாத்தளை மற்றும் மாத்தறை ஆகிய மாவட்டங்களுக்காக திணைக்களம் மூன்று பிரதேச நுகர்வோர் சுட்டெண்களைக் கணித்துள்ளது. கொழும்பு மாவட்ட நுகர்வோர் விலைச் சுட்டெண்ணிலுள்ளவாறு சுட்டெண்களுக்கான பொருட்களின் நிறைகள் மத்திய வங்கியினால் நடத்தப்பட்ட 1996/97 இன் நுகர்வோர் நிதி மற்றும் சமூகப் பொருளாதார அளவீட்டிலிருந்து பெறப்பட்ட தொடர்பான மாவட்டங்களின் செலவிடும் முறையை அடிப்படையாகக் கொண்டுள்ளது. இந் நிறைகள், வருமான அடிப்படையில் நிரற்படுத்தப்பட்ட மாவட்டங்களிலுள்ள குடும்ப அலகுகளில் ஆகக் குறைந்த வருமானத்தையுடைய 40 சதவீதமான இலக்கிடப்பட்ட குடித்தொகையை அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்பட்டனவாகும். இச் சுட்டெண்கள் பிரதேச விலை அசைவுகளை பகுப்பாய்வு செய்வதற்குப் பயனுள்ளதாகும். இவை வேளாண்மைப் பொருட்களின் முன்னோக்கிய விற்பனை ஒப்பந்தங்களில் பேரம் பேசுவதற்கும் சந்தைத் தொழற் பாட்டாளர்களினால் பயன்படுத்தப்பட்டது. ஆண்டு முழுவதும் மாதாந்த அடிப்படையில் விலை நடத்தையின் நுண்ணிய மாற்றங்களை கொள்கை வகுப்போர்க்கு மேலும் வழங்கும் பொருட்டு இம்மாவட்ட விலைச் சுட்டெண்களின் போக்குகள் பகுப்பாய்வு செய்யப்பட்டன.

உள்ளக நோக்கங்களுக்காக புள்ளிவிபரவியற் திணைக்களம் மேல் மாகாணத்தினை உள்ளடக்கிய நுகர்வோர் விலைச்சுட்டெண் ஒன்றை தொடர்ந்தும் திரட்டியது. இது கொழும்பு மாவட்ட நுகர்வோர் விலைச்சுட்டெண்ணிலும் பார்க்க, புவியியற் பிரதேசம் மற்றும் குடும்ப அலகுகளின் வருமான நியதி ஆகிய இரண்டு நியதிகளிலும் பரந்தளவு விடயங்களை உள்ளடக்கியிருக்கிறது. இச்சுட்டெண், 1996/97 இன் நுகர்வோர் நிதி மற்றும் சமூகப் பொருளாதார அளவீட்டிலிருந்து பெறப்பட்ட வருமான அடிப்படையில் நிரற்படுத்தப்பட்ட மேல் மாகாணத்திலுள்ள குடும்ப அலகுகளில் ஆகக் குறைந்தவருமானம் பெறும் 64 சதவீதத்தினரைப் பிரதிபலிக்கின்றது. நிறைகளானது பிரதிநிதித்துவப்படுத்துகின்ற குடும்பங்களின் செலவின் மாதிரியினை அடிப்படையாகக் கொண்டதாகும். தரவுச் சேகரிப்பு மையங்கள் உயர்ந்த வருமானமுடைய குடும்பங்களின் மாற்றமடைந்து செல்கின்ற நுகர்வு மாதிரிகளை உள்ளடக்கிக் கொள்வதற்காக, நகரிலுள்ள சிறப்பு அங்காடிகளை உள்ளடக்கும் வகையில் கொழும்பு மாவட்ட நுகர்வோர் விலைச் சுட்டெண்ணுக்காகப் பயன்படுத்தப்படும் முக்கிய வர்த்தக மையங்களுக்கு அப்பாலும் விரிவாக்கப்பட்டது.

மேற்குறிப்பிடப்பட்ட நுகர்வோர் விலைச் சுட்டெண்களுக்குப் புறம்பாக, புள்ளிவிபரவியற் திணைக்களம் மிகக் கூடியளவு பரந்த புவியியற் பரப்பையும் செலவினத் தொகுதிகளின் உள்ளடக் கத்தையும் கொண்ட தொகைமதிப்புப் புள்ளி விபரவியற் திணைக்களத்தினால் புதிதாக அறிமுகப் படுத்தப்பட்ட இலங்கை நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் அசைவுகளை அடிப்படையாகக் கொண்டு நுகர்வோர்விலை அசைவுகளையும் மத்திய வங்கியினால் கணிக்கப்பட்ட பிரதேச சுட்டெண்களையும் பகுப்பாய்வு செய்தது. இலங்கை நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் நுகர்வுக்கூடையானது, வடக்குக் கிழக்கு மாகாணங்கள் தவிர்ந்த முழு நாட்டிற்குமான 1995/96இல் நடத்தப்பட்ட அளவீட்டில் பிரதிபலிக்கப்பட்ட வாறான செலவினத்தின்படி நிரற்படுத்தப்பட்ட குடும்ப அலகுகளில் 80 சதவீதத்தினரையும் வடமாகாணம் தவிர்ந்த மற்றைய அனைத்து பிரதேசங்களிலுமிருந்தான விலைகளையும் உள்ளடக்கியிருந்தது. கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண் மற்றும் கொழும்பு மாவட்ட நுகர்வோர் விலைச்சுட்டெண் என்பனவற்றினால் அளவிடப்பட்டவாறான பணவீக்க அசைவுகள் பற்றி புள்ளிவிபரத் திணைக்களம் மாதாந்த பத்திரிகை வெளியீடுகளை தொடர்ந்தும் வெளியிட்டது.

## மொத்த விற்பனை விலைச் சுட்டெண்

திணைக்களம், முதலாந்தரச் சந்தை மட்டங்களில் விலை அசைவுகளைப் பிரதிபலிக்கும் மொத்த விற்பனை விலைச் சுட்டெண்ணை தொடர்ந்தும் கணித்தது. இது சில்லறைச் சந்தைகளின் எதிர்கால விலை அசைவுகளை எடுத்துக் காட்டும் பயனுள்ள ஒரு குறிகாட்டியாகும்.

## தேசிய கணக்குகள்

திணைக்களம் தேசிய கணக்குகளின் மதிப்பீடு தொடர்பான அதன் நடவடிக்கைகளை தொடர்ந்தும் மேற்கொண்டது. இவை முதலாந்தர மற்றும் இரண்டாந்தரத் தரவுச் சேகரிப்பு மற்றும் தொடர்பான புள்ளி விபரங்களின் திரட்டல் என்பனவற்றை உள்ளடக்கியிருந்தது.

முன்கூட்டியே வெளியிடப்பட்ட கலண் டருக்கிணங்க 2003இல் திணைக்களம் செய்தி மாநாடுகளூடாக காலாண்டு தேசிய கணக்குகளை வெளியிட்டது. இது பொருளாதார நடவடிக்கை

மற்றும் நடத்தை பற்றிய அண்மைக்காலப் போக்குகளில் பொதுமக்களின் விழிப்புணர்வினை உயர்வடையச் செய்தது. இத்தகவல்கள் மத்திய வங்கியின் வெப்தளமூடாகத் தொடர்ந்தும் பரப்பப்பட்டது. உரிய நேரத்தில் வெளியிடப்பட்ட காலாண்டு தேசிய கணக்குகள் பற்றிய தரவு இத்துறையில் அண்மைக் காலத்தில் பொது மக்களின் ஆர்வத்தினை அதிகரித்திருக்கிறது.

தேசிய கணக்குகள் மீதான காலாண்டு பத்திரிகை வெளியீடு உற்பத்தி முறை சார்ந்த பொருளாதாரத்தின் அபிவிருத்திகளை உள்ளடக்கியிருந்ததெனினும் செலவின முறையைப் பின்பற்றி பொருளாதாரம் இன்னமும் பகுப்பாய்வு செய்யப்படவில்லை. 2003இல், செலவின முறையின்படி காலாண்டு தேசிய கணக்குகள் மீதான தரவுத் தொடர்களைத் தயாரிக்கும் வேலைகளைத் திணைக்களம் தொடங்கியுள்ளது. இந் நடைமுறையானது தற்காலிக அடிப்படையில் அதன் முறைசார்ந்த தன்மையினையும் மதிப்பீடுகளையும் மேம்படுத்திக் கொள்ளத் திணைக்களத்திற்கு உதவியது. இத் தரவுத் தொடர்களும் கிட்டிய எதிர்காலத்தில் பொதுமக்களுக்கு பரப்பப்பட முடியும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## மாகாண ரீதியிலான தேசிய கணக்குகள்

2002ஆம் ஆண்டறிக்கையில் முதற்தடவையாக திணைக்களம் மாகாணரீதியிலான மொத்த உள்நாட்டு உற்பத்தி மீதான புள்ளி விபரங்களை வெளியிட்டதுடன் அத்தரவுத் தொடரில் 1996 இலிருந்து 2001 வரையான தரவுகளும் கிடைக்கத்தக்கதாக இருந்தன. மாகாண ரீதியிலான மொ.உ.உற்பத்தி தற்பொழுது நடைமுறைக் காரணிச் செலவு விலைகளில் திரட்டப்படுகின்றது. இத் தொடர்கள் மாகாண ரீதியிலான பொருளாதார நடவடிக்கைகளின் மீதான அனைத்தையுமுள்ளடக்கிய தரவுத் தளத்தையும் அதேபோன்று தேசிய பொருளாதார அபிவிருத்திக்கான மாகாண ரீதியிலான பங்களிப்பினையும் வழங்குவதுடன் இவை பொருளாதாரப்புள்ளி விபரங்களைப் பயன்படுத்துவோரால் நன்கு வரவேற்கப்படுகின்றன. 2002இற்கான மாகாண மொ.உ.உற்பத்தியை கணிப்பீடு செய்வதற்கான வேலை 2003 முழுவதும் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டது.

## தொழில்வாய்ப்பு புள்ளி விபரங்கள்

அரச அமைச்சுக்கள், திணைக்களங்கள், மாகாண சபைகள், உள்ளூராட்சி மன்றங்கள், கூட்டுத்தாபனங்கள் மற்றும் அரச சபைகள் என்பனவற்றில் காணப்படும் தொழில்நிலையின் போக்குகளைக் கண்டறியும் நோக்குடன் திணைக்களம் அரசதுறை தொழில் நிலை மீதான ஆண்டு அளவீட்டினை 2003இலும் தொடர்ந்தும் மேற்கொண்டது. மேலும் 2001இல் தொடங்கப்பட்ட காலாண்டு அரசதுறை தொழில்நிலை மீதான அளவீடு, கொள்கை வகுப்போரின் பயன்பாட்டிற்காகவும் மொ.உ.உற்பத்திக் கணக்குகளில் பொதுநிருவாகம் மற்றும் பாதுகாப்புத்துறையில் காணப்படும் பெறுமதி கூட்டல்களின் மதிப்பீட்டிற்காகவும் அரசதுறைத் தொழில் நிலையில் காணப்பட்ட காலாண்டுப் போக்கினைக் கண்டறிவதற்காகவும் 2003இலும் தொடர்ந்தது.

## ஸ்ராநெற் மற்றும் இணையத்தளம்

திணைக்களம் முக்கிய தரவு மற்றும் பத்திரிகை வெளியீடுகளை அடையும் வழிமுறைகளையும் அதேபோன்று திணைக்களத்தின் தொழிற்பாடு மற்றும் நடவடிக்கைகள் மீதான பிந்திய தகவல்களையும் மத்திய வங்கியின் உள்ளக வலையமைப்பிலுள்ள "ஸ்ராநெற்" இணையத்தளமூடாக தொடர்ந்தும் வழங்கியது. ஒருங்கிணைக்கப்பட்ட வலையமைப்பு முறையானது வங்கியின் பிரிவுகளுக்கிடையேயும் மற்றைய திணைக்களங்களுக்கிடையேயும் மற்றும் வங்கியின் இணையத்தளத்திலும் தரவுத்தளத்தினை அடையவும், பகிர்ந்து கொள்வதற்குமான வசதிகளை வழங்கியது.

## வெளியீடுகள்

ஆய்விற்குரிய காலப்பகுதியில் திணைக்களம் இரு ஆண்டு வெளியீடுகள் தொடர்பான அதன் நடவடிக்கைகளைத் தொடர்ந்தும் மேற்கொண்டது. யூன் இறுதியில் திணைக்களம் "இலங்கை சமூகப் பொருளாதார தரவு 2003 தொகுதி XXVI" இனை வெளியிட்ட வேளையில் "இலங்கையின் பொருளாதார சமூக புள்ளிவிபரங்கள் 2003- XXV "இனை இவ்வாண்டில் வெளியிடுவதற்கான அனைத்து ஒழுங்குகளும் முற்றுப் பெற்றுள்ளன.

இவ்விரு வெளியீடுகளும் குடித்தொகை, தொழிற்படையும் தொழில்நிலையும், தேசிய வருமானம் மற்றும் செலவு, வேளாண்மை, கைத்தொழில், வெளிநாட்டு வர்த்தகம் மற்றும் நிதி, விலைகளும் கூலிகளும், பணம், வங்கித் தொழில், மூலதனச் சந்தை, அரசநிதி மற்றும் சமூகப் பொருளாதாரப் பணிகள் என்பனவற்றை உள்ளடக்கிய சமூகப் பொருளாதார மாறிகள் மீதான அனைத்தையும் உள்ளடக்கிய காலத் தொடர்களையும், குறுக்குப் பிரிவு ரீதியிலான தரவுகளையும் கொண்டிருக்கின்றன. இவ்விரண்டு வெளியீடுகளும் தேசிய மற்றும் பிரதேசப் பொருளாதார தகவல்கள் இரண்டினையும் பரந்தளவில் உள்ளடக்கத்தக்க விதத்தில் மேலும் மேம்படுத்தப்பட்டன. மேலும் இவ்வாண்டில் மத்திய வங்கியின் மற்றையபல வெளியீடுகளுக்கும் திணைக்களம் பங்களிப்புக்களை வழங்கியுள்ளது.

## வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வை[1]

மத்திய வங்கியினால் குறித்துரைக்கப்பட்ட ஆகக் குறைந்த முன்மதித் தேவைப்பாடுகளுக்கு நிதிக்கம்பனிகள் இசைவாக நடந்து கொள்கின்றனவா என்பதனை உறுதிப்படுத்தும் குறிக்கோளுடன் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களமானது பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகள் தொடர்பாக அதன் ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வைத் தொழிற்பாடுகளைத் தொடர்ந்தும் மேற்கொண்டு வருகின்றது. இத் தொழிற்பாடுகள் தலத்திற்கு வெளியேயான கண்காணிப்பு மற்றும் தலத்திலான பரீட்சிப்புக்களினூடாக மேற்கொள்ளப்பட்டன. திணைக்களம் நிதி குத்தகைக்கிடல் நிறுவனங்களையும் பதிவு செய்து கண்காணித்து வருகின்றது.

இவ்வாண்டில் புதிய நிதிக் கம்பனிகள் எதுவும் பதிவு செய்யப்படவில்லை. இதன்படி, 2003 இறுதியில் நிதிக் கம்பனிகளின் மொத்த எண்ணிக்கை 26 ஆக மாற்றமுறாதிருந்தது. இதேநாளில் பதிவு செய்யப் பட்டிருந்த நிதிக் குத்தகை நிறுவனங்களின் மொத்த எண்ணிக்கை 56 ஆகக் காணப்பட்டது.

### தலத்திற்கு வெளியேயான கண்காணிப்பு

பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகளின் தலத்திற்கு வெளியேயான கண்காணிப்பினைத் திணைக்களம் தொடர்ந்தும் மேற்கொண்டது. இச் செயற்பாட்டின்போது, நிதிக் கம்பனிகளின் நிதியியல் நிலைமைகளைக் கண்டறிந்து கொள்ளும் நோக்குடனும் நிதிக் கம்பனிகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் சட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட பணிப்புரைகள் மற்றும் ஒழுங்கு விதிகளுக்கும் அவர்கள் இணங்கி ஒழுகுவதனைக் கண்காணிக்கும் பொருட்டு நிதிக் கம்பனிகளினால் காலத்திற்குக் காலம் சமர்ப்பிக்கப்பட்ட கூற்றுக்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டன. நிதிக் கம்பனிகளிலிருந்து பெறப்பட்ட அறிக்கைகள், திரவச் சொத்துக்களின் வாராந்தக் கூற்றுக்கள், பாரிய முற்பணங்கள் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், காசுப் பாய்ச்சல் என்பனவற்றின் மாதாந்தக் கூற்றுக்கள் மற்றும் கணக்காய்வு செய்யப்பட்ட ஆண்டு ஐந்தொகை மற்றும் இலாபநட்டக் கணக்குகள் என்பனவற்றை உள்ளடக்கியிருந்தன. சட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட பணிப்புரைகள், ஆகக்குறைந்த மூலதனம் மற்றும் திரவத் தேவைப்பாடுகள், அறவிடமுடியா மற்றும் ஐயக்கடன்களுக்கான ஏற்பாடுகள், தனியொரு கடன்பாட்டாளருக்கான வரையறை மற்றும் பங்கு முதலீடுகள் மீதானவரையறை என்பனவற்றை உள்ளடக்கியிருந்தன.

### தலப்பரீட்சிப்புக்கள்

இவ்வாண்டுக் காலத்தில் திணைக்களம் இரண்டு நிதிக் கம்பனிகளின் அனைத்தையும் உள்ளடக்கிய தலப்பரீட்சிப்புக்களை நடத்தியது. மூலதனப் போதுமை, சொத்துக்களின்தரம், முகாமைத்துவ வினைத்திறன், வருவாய்கள் மற்றும் திரவத்தன்மை, என்பனவற்றைப் பரீட்சிக்கும் பொருட்டு நிதிக் கம்பனிகளினால் பேணப்படும் கணக்கேடுகள் மற்றும் ஏனைய பதிவு களிலிருந்த திரட்டப்பட்ட தகவல்கள் என்பன திணைக்களத்தின் பரீட்சிப்பாளர்களினால் மதிப்பிடப்பட்டன. உள்ளகக் கட்டுப்பாடுகள் மற்றும் முறைகள், நியதித் தேவைப்பாடுகளுக்கு கம்பனிகள் இணங்கி ஒழுகுவது பற்றியும் பரீட்சிக்கப்பட்டன. பரீட்சிப்புக்களின்போது கண்டறியப்பட்ட விடயங்கள் தொடர்பாக கம்பனிகளின் முகாமையுடன் கலந்துரை யாடப்பட்டதுடன் தேவையானவிடத்து சரியான நடவடிக்கையும் எடுத்துக்கூறப்பட்டன. அதேவேளை 2004ஆம் ஆண்டிற்கான வருடாந்த உரிமங்கள் வழங்கப் படுவதற்கு முன்னர் மற்றைய பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகள் மீதும் உடன் பரீட்சிப்புக்கள் நடத்தப்பட்டன. இவ்வுடன் பரீட்சிப்புக்கள் தெரிந்தெடுக்கப்பட்ட முக்கிய விடயங்களை உள்ளடக்கியிருந்தன.

### நிதிக்குத்தகை வியாபாரங்களைப் பதிவு செய்தல்

2000ஆம் ஆண்டின் 56ஆம் இலக்க நிதிக் குத்தகைக்கிடல் சட்டத்தின் ஏற்பாட்டு நியதிகளின்படி, நிதிக் குத்தகை வியாபாரத்தினைக் கொண்டு நடத்துவதற்கு பதிவுச் சான்றிதழ் ஒன்று அவசியமானதாகும். இவ்வாண்டில் 2 வர்த்தக வங்கிகள், 2 நிதிக் கம்பனிகள், 3 பொதுக்கம்பனிகள் என்பன வற்றை உள்ளடக்கிய 7 நிறுவனங்கள் பதிவு செய்யப் பட்டன. 2003 இறுதியில், பதிவு செய்யப்பட்ட நிதிக் குத்தகைக்கிடல் நிறுவனங்களின் எண்ணிக்கை 56ஆகக் காணப்பட்டது.

### பணிப்புரைகள் வழங்கல்

2003ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் (மூலதன நிதியங்கள்) பணிப்புரை மற்றும் 2003ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் (இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட மூலதனப் போதுமை விகிதம்) பணிப்புரை ஆகிய பெயர் கொண்ட இரண்டு பணிப்புரைகள் 2003 யூலை 1ஆம் நாளிலிருந்து

1 1994 – 2003 ஆம் ஆண்டுகளுக்கான பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகளின் திரட்டிய ஐந்தொகை புள்ளி விபரப் பின்னிணைப்பு அட்டவணை 115 இல் தரப்பட்டுள்ளது

நடைமுறைக்குவரும் விதத்தில் வழங்கப்பட்ட வேளையில் 1991ஆம் ஆண்டின் 9ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் (மூலதன நிதியங்கள்) பணிப்புரை இரத்துச் செய்யப்பட்டது. இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட மூலதனப் போதுமை விகிதத்தின் மீதான பணிப்புரைகளின் நியதிகளின்படி, நிதிக்கம்பனிகள் 5 சதவீதத்திற்கு குறையாத மைய மூலதனப் போதுமை விகிதத்தினையும் இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட சொத்துக்களில் மொத்த மூலதனப் போதுமை விகிதமாக 10 சதவீதத்திற்குக் குறையாத தொகையையும் பேணுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டன. நிதிக் கம்பனிகள் (மூலதன நிதியங்கள்) பணிப்புரையின் நியதிகளின்படி, அனைத்து நிதிக் கம்பனிகளும் அவற்றின் வைப்புப் பொறுப்புக்களில் 10 சதவீதத்திற்கும் குறையாத மட்டத்தில் மூலதன நிதியத்தினைப் பேணுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டன. அதேவேளை, இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட மூலதனப் போதுமை விகிதம் மீது புதிதாக விதிக்கப்பட்ட பணிப்புரை ஐந்தொகையின் சொத்துக்கள் பக்கத்தின் பாதுகாப்பினை மேலும் அதிகரிக்கும்.

உரிமம் பெற்ற வங்கிகளாக அல்லது பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகளாக இல்லாதநிதிக் குத்தகை நிறுவனங்களிடமிருந்து கிரமமான அடிப்படையில் குறித்த தகவல்களை பெற்றுக் கொள்ளும் நோக்கத் திற்காக 2003 ஓகத்து 21ஆம் நாளன்று, 2003ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க நிதிக் குத்தகைக்கிடல் (அறிக்கையிடும் தேவைப்பாடுகள்) பணிப்புரை வழங்கப்பட்டது.

## முறிவடைந்த நிதிக் கம்பனிகள்

1999ஆம் ஆண்டு செத்தெம்பரிலிருந்து நிலுவையிலிருந்த யூனியன் றஸ்ட் அன்ட் இன்வெஸ்ட் மன்ட் லிமிடெட்டினை ஒடுக்கிவிடும் மனு தொடர்பாக, இவ்வாண்டில் ஒடுக்கிவிடுபவர் நியமிக்கப்பட்டார். இதன்படி, 1988ஆம் ஆண்டின் 78ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் சட்டத்தின் ஏற்பாடுகளின்படி நாணயச் சபைக்கு நிருவாகமும் முகாமைத்தவமும் முன்னர் கையளிக்கப்பட்ட முறிவடைந்த ஒன்பது நிதிக் கம்பனிகளில் ஆறு கம்பனிகள், 2003 இறுதியில் ஒடுக்கி விடுவதன்கீழ் இருந்தன. திணைக்களம் 2004இல் ஏனைய இரு கம்பனிகள் தொடர்பாக அவற்றை ஒடுக்கி விடுவதற்கான மனுவைச் சமர்ப்பிக்க திட்டமிட்டு வருகின்றது.

## பொதுமக்கள் விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டம்

கடந்த அண்மைக் காலத்தில் சட்டரீதியான அங்கீகாரமின்றி பொதுமக்களிடமிருந்து வைப்புக்களைத் திரட்டுகின்ற நிறுவனங்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றமையைக் கருத்திற்கொண்டு, இதுதொடர்பான விடயங்களில் பொதுமக்களுக்கு அறிவூட்ட திணைக்களம் நடவடிக்கைகளை மேற்கொண்டது. திணைக்களத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்ட பொதுமக்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டம் பின்வருவனவற்றை உள்ளடக்கியிருந்தது.

(அ) பின்வரும் விடயங்கள் செய்தித் தாள்களில் வெளியிடப்பட்டன.

(i) 2003 மார்ச்சில் பதிவு செய்யப்பட்ட நிதிக்கம்பனிகளின் பட்டியலொன்றும் 2003 யூலையில் பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகளினதும் உரிமம்பெற்ற வங்கிகளினதும் இரண்டு பட்டியல்கள்.

(ii) பொது மக்களிடமிருந்து கிடைக்கப் பெற்ற விசாரணைகளுக்கு பதிலிறுக்கும் விதத்தில் 2003 சனவரியிலும் யூலையிலும் பொது மக்களிடமிருந்து வைப்புக்களை ஏற்றுக் கொள்வதற்கு அங்கீகரிக்கப்படாத நிறுவனங்களின் பெயர்களைக் கொண்ட இரு பட்டியல்கள் வெளியிடப்பட்டன.

(iii) பொது மக்களிடமிருந்து வைப்புக்களை ஏற்றுக் கொள்வது தொடர்பாக, தெளிவுபடுத்துகின்ற விபரமான குறிப்பொன்று, 2003 யூலையில், அத்துடன்

(iv) நிதிக் கம்பனிகள் சட்டத்தின் ஏற்பாடு களுக்கு முரணாக நிதி வியாபாரத்தினை நடத்திக் கொண்டிருந்த மூன்று கம்பனி களின் பெயர்கள் 2003 செத்தெம்பரிலும் 2003 ஒத்தோபரிலும் வெளியிடப்பட்டன.

(ஆ) அங்கீகரிக்கப்படாத சாராரினால் வைப்புக்கள் ஏற்றுக் கொள்ளப்படுவது தொடர்பான விடயங்கள் பற்றி பொதுமக்களுக்கு அறிவூட்டுவதற்காக தொலைக்காட்சி மற்றும் வானொலி நிகழ்ச்சித் திட்டங்களில் பங்கேற்றமை.

மேலும், வைப்புக்களை ஏற்றுக் கொள்வதற்கு அங்கீகரிக்கப்படாத நிறுவனங்களினால் பொது மக்களிடமிருந்து நிதியங்களைப் பெற்றுக் கொள் வதற்காக பிரசுரிக்கும் விளம்பரங்கள் தொடர்பாக கவனமாக இருக்குமாறு ஊடக நிறுவனங்களின் தலைவர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டனர்.

## பொதுமக்களிடமிருந்து நிதிகளைத் திரட்டுகின்ற சாராரின் நடவடிக்கைகளைப் புலனாய்வு செய்தல்

வைப்புக்களாக அல்லது வைப்புக்களை ஒத்த விதத்தில் பொது மக்களிடமிருந்து பணத்தினைப் பெற்றுக் கொள்ளுகின்றன எனக் குற்றம் சாட்டப்பட்ட பல நிறுவனங்களின் விவகாரம் தொடர்பாக திணைக்களம் புலனாய்வுகளை மேற்கொண்டது. மூன்று

நிறுவனங்கள் தொடர்பாக நடத்தப்பட்ட புலனாய்வுகள் இவ்வாண்டில் முடிவுற்றன. அம்மூன்று நிறுவனங்கள் தொடர்பாகவும் நிதிக் கம்பனிகள் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. அதேவேளை நான்கு கம்பனிகள் அவை நிதி வியாபாரத்தினை மேற்கொள்ளுகின்றனவா என்பதனை கண்டறிவதற்காக புலனாய்வு செய்வதற்கான தகவல்களைத் தருவதற்கு தவறிய அத்தகைய கம்பனிகளுக்கெதிராக சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்ற பல நிறுவனங்களுக்கெதிராக சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படுவதனை இயலச்செய்யும் விதத்தில் திணைக்களம் பொலிசாருக்குத் தேவையான தகவல்களையும் வழங்கியது. திணைக்களமானது, சட்டரீதியான அங்கீகாரமின்றி வைப்புக்களைத் திரட்டும் நிறுவனங்களுக்கெதிராக பொலிசாரினால் பதிவு செய்யப்பட்ட வழக்குகளுக்கு குறிப்பாக சான்றுகளை வழங்குவதன் மூலம் பொலிசாருக்கு உதவியது.

## வங்கித் தொழில் ஆய்வுநிலையம்

2003இல் வங்கித் தொழில் ஆய்வு நிலையம் வங்கித் தொழிற் தொழிற்பாடுகள், வங்கி மேற்பார்வை, முகாமைத்துவம், நிதியியல்துறை அபிவிருத்திகள், மற்றும் பொருளாதார முகாமைத்துவம் என்பன வற்றில் பரந்தளவிலான குறுங்காலப் பயிற்சிகளையும் கிராமியத் துறைக்கான நிகழ்ச்சித் திட்டங்களையும் நடத்தியதன் மூலம் மத்திய வங்கியிலும் நிதியியற் துறையிலுமுள்ள அலுவலர்களின் இயலாற்றலையும் இயல்பான தேர்ச்சிகளையும் கட்டியெழுப்பவும் தொடர்ந்தும் உதவியது. வங்கித் தொழில் ஆய்வு நிலையம் தகவல் தொழில்நுட்பத்திலும், மொழித் தகைமை மற்றும் தொடர்பூட்டல் தேர்ச்சியிலும் நீண்டகாலப் பாட நெறிகளை நடத்தியது. வங்கிக்குள்ளும் நிதியியல் துறையிலிருந்தும் பயிற்சிக்காக ஏற்பட்ட அதிகரித்த கேள்வியை ஈடுசெய்யும் பொருட்டு 2002 இல் நடத்தப்பட்ட 55 நிகழ்ச்சித் திட்டங்களுக்கு எதிராக 2003இல் மொத்தமாக 71 பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் நடத்தப்பட்டன. பங்கேறறவர்களின் எண்ணிக்கைகூட 2002இன் 1009 இலிருந்து 2003இல் 1,474 இற்கு அதிகரித்தது. பயிற்சி யளிக்கப்பட்ட மொத்த எண்ணிக்கையினரில் 51 சதவீதத்தினர் மத்தியவங்கி அலுவலர்களாக இருந்தவேளையில் மீதி 49 சதவீதத்தினரும் முக்கியமாக வர்த்தக வங்கிகளையும் பிரதேச அபிவிருத்தி வங்கிகளையும் சேர்ந்தவர்களாக இருந்தனர். மேலும் வங்கித் தொழில் ஆய்வு நிலையம் தற்போதைக்கு ஆர்வமிக்கதான விடயங்களின்மீது அறிவினைப் பரப்புவதனையும் கலந்துரையாடல்களை ஊக்குவிப்பதனையும் நோக்கமாகக் கொண்ட பகிரங்க விரிவுரைத் தொடர்களை தொடர்ந்தும் மாதாந்தம் நடத்திவந்தது.

அட்டவணை II.25, 2003 இல் நடத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களின் பரந்ததுறைகள் மீதான தகவல்களைத் தருகின்றது. தகவல் தொழில்நுட்ப பாடநெறிகளைப் பயின்ற மத்திய வங்கி அலுவலர்களின் எண்ணிக்கை 2002இன் 240 இலிருந்து 2003இல் 314 இற்கு அதிகரித்தது. வங்கித்தொழில் ஆய்வு நிலையத்தினால் அறிமுகப்படுத்தப்பட்ட "தொடக்க நிலையிலுள்ளவர்களுக்கான உயர்தர வெப்தள வடிவமைப்பு" போன்றவற்றிற்கான அலுவலரின் வரவு சிறப்பாக இருந்தது. இப்பாட நெறிகள், திணைக்கள ரீதியான வெப்தளங்களை வடிவமைக்கவும் நாளதுவரையான தகவல்களைப் பூரணப்படுத்துவதற்கும் தேவையான தேர்ச்சிகளை வழங்கின. தொழில்சார் நோக்கங்களுக்கான ஆங்கிலம் தொடர்பான மொழிப்பாடநெறி மத்திய வங்கி அலுவலர்களிடையே பிரபல்யம் பெற்றிருந்தது. அலுவலர்கள் தமிழ் மொழியை பொதுவாக விளங்கிக் கொள்வதனை இயலச் செய்யவும் நன்முறையில் தொடர்பு கொள்வதனை இயலச் செய்வதற்குமாக வங்கித்தொழில் ஆய்வு நிலையம் முதற்தடவையாக அதன் பாடவிதானத்தில் அடிப்படைத் தமிழ் பாட நெறியினை அறிமுகப்படுத்தியது. இப்பாட நெறிக்கு நல்ல வரவேற்புக் காணப்பட்டதன் காரணமாக, சிறப்பு நிகழ்ச்சித் திட்டமொன்றும் இவ்வாண்டில் நடத்தப்பட்டது. பயிற்சித் திணைக்களம் மற்றும் மனிதவளத் திணைக்களம் என்பனவற்றின் வேண்டுகோளின்படி வங்கிக்குப் புதிதாக சேர்க்கப்பட்ட உயர்பதவி அலுவலர்களுக்கான அறிமுக நிகழ்ச்சித் திட்டமும் கணனி அறிவூட்டலின் மீதான 3 தகவல் பயிற்சி பாடநெறிகளும் நடத்தப்பட்டன.

அட்டவணை II-26

2003இல் வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வு நிலையத்தினால் நடத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்

| | பயிற்சி நிகழ் திட்ட. எண்ணிக்கை | பயிற்சி பெறுவோர் இ.ம.வ | ஏனையவை | மொத்தம் | மொத்தப் பயிற்சி மணித். |
|---|---|---|---|---|---|
| வங்கித்தொழில் தொழிற்பாடுகள் | 9 | 42 | 187 | 229 | 150 |
| வங்கிமேற்பார்வை | 7 | 18 | 199 | 217 | 108 |
| நிதியியல்துறை அபிவிருத்தி | 6 | 36 | 132 | 168 | 66 |
| தகவல் தொழில்நுட்பம் | 23 | 314 | 6 | 320 | 828 |
| மொழிகள் மற்றும் தொடர்பூட்டல் தேர்ச்சிகள் | 7 | 173 | 1 | 174 | 368 |
| முகாமை | 4 | 44 | 22 | 66 | 48 |
| கிராமியத்துறை | 5 | - | 123 | 123 | 84 |
| சிறப்பு நிகழ்ச்சித் திட்டங்கள் | 10 | 131 | 46 | 177 | 381 |
| **மொத்தம்** | **71** | **758** | **716** | **1,474** | **2,033** |

மூலம்: வ.தொ.ஆ.நிலையம், இலங்கை மத்திய வங்கி.

அட்டவணை II.25

## 2003இல் நடத்தப்பட்ட ஞாபகார்த்த விரிவுரைகளும் பொது ஆய்வரங்குகளும்

| நாள் | விடயம் | விரிவுரையாளர் |
|---|---|---|
| 14 சனவரி 2003 | தோற்றம் பெற்றுவரும் பொருளாதாரங்களில் பொருளாதாரச் சீர்திருத்தங்கள் | பேராசிரியர் ஜெவ்றி சாஷ்<br>பணிப்பாளர், ஏர்த் இன்ரிரியூட்<br>கொலம்பியா பல்கலைக்கழகம். |
| 30 சனவரி 2003 | போட்டிச்சூழலில் சிறிய திறந்த பொருளா தாரங்கள் எவ்வாறு தாக்குப்பிடிக்க முடியும் | திரு. வைவெஸ் மேர்ச்<br>தலைவர், இலச்சம்பேர்க் மத்திய வங்கி |
| 06 பெப். 2003 | மத்திய வங்கியொன்றின் யாப்பு ரீதியான நிலைமை<br>(சுதந்திரதின ஞாபகார்த்த விரிவுரை) | பேராசிரியர் சார்ள்ஸ் குட்கார்ட்<br>மதியுரையாளர், நிதி ஒழுங்குகள்<br>இங்கிலாந்து வங்கி |
| 21 மார்ச்சு 2003 | வியாபாரத்துடன் தொடர்பான சட்டங்களை சீரமைப்புச் செய்தல் | திரு.கே. கனக ஈஸ்வரன்<br>சட்டத்தரணி |
| 24 ஏப்பிறல் 2003 | திருத்தியமைக்கப்பட்ட முறைசாரா நிதி | முனைவர் நிமல் சந்தரத்ன<br>இடை வருகைதரும் உறுப்பினர்<br>வேளாண்மை பட்டப்பின்படிப்பு நிறுவனம்<br>பேராதனைப் பல்கலைக்கழகம் |
| 07 மே 2003 | அமைதியுடன் கூடிய வளர்ச்சியும் பொருளாதார சீர்திருத்தங்களும் | முனைவர் ஏ.ஜீ. கருணசேன<br>பணிப்பாளர், பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி |
| 29 மே 2003 | அபிவிருத்திக்கான நிதியிடலும் வடக்குத் தெற்குப் பேச்சுவார்த்தையும்<br>(குடியரசுத்தின ஞாபகார்த்த விரிவுரை) | முனைவர் பார்றி ஹேர்மன், முதல்வர் நிதி அபிவிருத்திக்கிளை/ டீபிஏடீ,<br>பொருளாதார சமூக அலுவல்கள்<br>ஐக்கிய நாடுகள், நியூயோர்க் |
| 07 யூலை 2003 | மீண்டெழும் இலங்கை / உலகவங்கி: அமைப்பியல் சீர்திருத்த கடன் வழங்கலிருந்தான பாடங்கள் | பேராசிரியர் வில்லியம் எச். பிறான்சன்<br>பொருளாதாரத் திணைக்களம்<br>பிறின்ஸ்டன் பல்கலைக்கழகம், ஐ.அமெரிக்கா. |
| 31 யூலை 2003 | அரசதுறை வங்கியின் புதுமையான உண்மைக் கதையினை மீளமைத்தலும் வெற்றி கொள்ளலும் | திருமதி றஞ்சன் குமார்<br>தலைவர், இந்தியன் வங்கி |
| 28 ஓகத்து 2003 | புலமைச் சொத்து உரிமைகள்: கோட்பாடு, வரலாறு, மற்றும் அபிவிருத்தி<br>(இலங்கை மத்திய வங்கியின் 53ஆவது ஆண்டு நிறைவு விரிவுரை) | பேராசிரியர் தீபக் நாயர்<br>பொருளியல் பேராசிரியர், துணை வேந்தர்<br>புதுடெல்லி பல்கலைக்கழகம் |
| 16 ஒத். 2003 | வங்கி ஒழுங்கு விதிகளுடன் தொடர்பான சட்டப் பிரச்சனைகள்<br>மற்றைய நாடுகளின் அனுபவங்கள் | முனைவர் ரோப்பியஸ். எம்.சி. அசார்<br>முன்னாள் இணைப் பேராசிரியர்<br>பன்னாட்டுநிதி, தனியார் பன்னாட்டுச் சட்டம்<br>ஜோர்ச் டவுண் பல்கலைக்கழகம்<br>ஐக்கிய அமெரிக்கா |
| 06 நவெ. 2003 | நவீன சுவீடனை உருவாக்குதல் சந்தை விலைகளூடாக நலன்புரி | முனைவர். லார்ஸ் ஹெக்ஸ்கன்ஸ்ரன்<br>ஆளுநர், றிஸ்க் வங்கி, சுவீடன் |
| 21 நவெம். 2003 | உலகளாவிய பின்னணியில் நாணயக் கொள்கைக்கான அறைகூவல்கள்<br>(இலங்கை மத்திய வங்கியின் வங்கித் தொழில் கல்வி ஆய்வு நிலையத்தின் 22ஆவது ஆண்டு நிறைவு விரிவுரை) | முனைவர். ராகேஸ் மோகன், துணை ஆளுநர்,<br>இந்தியன் றிசேவ் வங்கி |
| 19 திசெ. 2003 | அரசல்லா அமைப்புக்களை ஒழுங்குமுறைப் படுத்தப்பட்ட நிதியியல் நிறுவனங்களாக மாறறியமைத்தல் - எதிர் பார்ப்புக்களும் சாதனைகளும் | முனைவர். நிமால் ஏ பர்னாந்து<br>முன்னணி கிராமிய நிதிச் சிறப்பறிஞர்<br>ஆசிய அபிவிருத்தி வங்கி |

வங்கித் தொழில் தொழிற்பாடுகள், வங்கி மேற்பார்வை மற்றும் நிதியியல்துறை அபிவிருத்திகள், பொருளாதார முகாமைத்துவம் போன்ற பாடநெறிகள் வங்கிகளிலிருந்தும் ஏனைய நிதியியல் நிறுவனங் களிலிருந்தும் பங்கேற்றவர்களிடையே மிகப்பிரபல்யம் பெற்றிருந்தன. "கடன்வழங்கல் மற்றும் நிதியியல் கொடுக்கல் வாங்கல்களுடன் தொடர்பான சட்டம்" என்ற பாடநெறிக்கு உயர்ந்த கேள்வி காணப்பட்டதுடன் இப்பாடநெறிக்கு பெரும் எண்ணிக்கையிலான விண்ணப்பதாரிகளை அனுமதிப்பதற்காக இரண்டு மேலதிக நிகழ்ச்சித் திட்டங்களை சிறப்பு நிகழ்ச்சித் திட்டங்களாக வங்கித் தொழில் ஆய்வு நிலையம் நடத்தவேண்டியிருந்தது. 2002இல் இடம்பெற்ற "அரசபடுகடன் முகாமைத்துவம்", "நிதியியல் கூற்றின் பகுப்பாய்வு", "வட்டிவீதம் மற்றும் செலாவணி வீதங்களை நிர்ணயித்தல்" "தவணைக் கொள்வனவும் குத்தகை நிதியிடலும்" என்பன தொடர்பான நிகழ்ச்சித் திட்டங்கள் பிரபல்யம் பெற்றிருந்தமையின் விளைவாக 2003இல் வங்கித் தொழில் கல்வி ஆய்வு நிலையம் இப் பயிற்சி நெறிகள் ஒவ்வொன்றிலும் இரண்டு நிகழ்ச்சித் திட்டங்களை நடத்தியது. மேலும் "முற்பணங்களுக்கான ஆவணப்படுத்தல் மீதான சட்ட அம்சங்கள்" மற்றும் "நகைகளைப் பிணையாகக் கொண்டு கடன் வழங்கல்" என்பன மீது வங்கித் தொழில் கல்வி ஆய்வு நிலையம் 2003இல் மூன்று நிகழ்ச்சித் திட்டங்களை நடத்தியமைக்கு 2002இல் இப்பாட நெறிகள் பிரபல்ய மடைந்திருந் தமையே காரணமாகும். வங்கித்தொழில் கல்வி ஆய்வு நிலையம் சிறப்பாக கிராமிய நிதித்துறையிலுள்ள ஆளணியினருக்காக "கிராமியச் செயற்றிட்டங்களின் மதிப்பீடு", "அபிவிருத்தி கொடுகடனின் மதிப்பீடும் நிருவாகமும்" போன்ற பாடநெறிகளில் 5 பாட நெறி களை நடத்தியது. இந் நிகழ்ச்சித் திட்டங்களின் பங்கேற் பாளர்களில் பெரும்பாலானோர் பிரதேச அபிவிருத்தி வங்கிகளின் அலுவலர்களாக இருந்தனர். வங்கித் தொழில் ஆய்வு நிலையத்தில் வதிவிட வசதிகள் இருக்குமாயின் இப்பாடநெறிகள் பங்கேற்பாளர்களுக்கு அர்த்தம் பொதிந்ததாகவும் நன்மை பயப்பதாகவும் இருந்திருக்கும்.

தொடர்ந்து ஐந்தாவதாண்டாகவும் வங்கித் தொழில் கல்வி ஆய்வு நிலையம் மாதாந்த பகிரங்க ஆய்வரங்குகளையும், ஞாபகார்த்த விரிவுரைத் தொடர்களையும் தொடர்ந்தும் நடத்தியது. இது வங்கித் தொழில்நிதி, பொருளாதாரம் மற்றும் மற்றைய தொடர்பான விடயங்கள் பற்றிய புதிய சிந்தனை களின்மீது தொழில்சார் நிபுணர்கள், கல்விமான்கள் மற றும் பொதுமக்கள் தமது கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ளவும், அனுபவங் களைப் பகிர்ந்து கொள்ளவும் அரங்கொன்றினை வழங்கியது. அட்டவணை II.26 இத்திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட நல்ல வரவைக் கொண்டிருந்த 14 கருத்தரங்குகள்/விரிவுரைகள் (ஆர ம்பத்தில் திட்டமிட்டதைக்காட்டிலும் இரண்டு அதிகமான) தொடர்பான தகவல்களை தருகின்றது.

## பயிற்சி

மத்திய வங்கியின் புதிதாக வரையறுக்கப்பட்ட மையக் குறிக்கோள்களான பொருளாதாரம் மற்றும் விலை உறுதிப்பாடு, நிதித்துறை ஸ்திரத்தன்மை போன்றவற்றை எய்துவதற்காக, அலுவலர்களின் திறமையை கட்டியெழுப்புவதற்கு பயிற்சி ஒரு இன்றியமையாத அம்சமாக அடையாளம் காணப்பட்டுள்ளது. ஆகவே மத்திய வங்கியானது தொடர்ந்தும் தமது அலுவலர்களுக்கு தமது அறிவாற்றலையும் தொழில்ரீதியான தகுதியையும் உயர்த்துவதற்குரிய சந்தர்ப்பத்தை அவர்களுக்கு வழங்குவதற்காக உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பயிற்சி அளித்துவருகின்றது. எதிர்கால சவால்களுக்கு ஈடுகொடுப்பதற்காகவும், வங்கியின் தற்கால மற்றும் எதிர்காலத் தேவைப்பாடுகளை திருப்திப்படுத்தும் புதியதொரு கற்றல், பயிற்சியளித்தல் மற்றும் அபிவிருத்திக் கொள்கையை உருவாக்குவதற்கான நடவடிக்கைகளை 2003இல் பயிற்சித் திணைக்களம் ஆரம்பித்தது.

ஆய்வுக்குரிய ஆண்டுப்பகுதியில் 122 அலுவலர்கள் வெளிநாட்டு குறுங்கால பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களில் பயிற்சி பெற்றவேளையில் உள்ளூரில் பயிற்சி பெற்றவர்களின் எண்ணிக்கை 1,103 ஆகக் காணப்பட்டது. உள்ளூரில் பயிற்சி பெற்ற 1,103 அலுவலர்களில் 461 அலுவலர்கள் பிரித்தானிய சபை, இலங்கை நிர்வாக அபிவிருத்தி நிறுவனம், வர்த்தக முகாமைத்துவத் திற்கான தேசிய நிறுவனம், இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனம், முகாமைத்துவ கணக்காளர் களுக்கான பட்டய நிறுவனம் போன்ற உள்ளூர் நிறுவனங்களினால் நடாத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களில் பங்குபற்றியதுடன் 642 பேர் மத்திய வங்கியின் வங்கித்தொழில் ஆய்வு நிலையத்தினால் நடாத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களில் பங்குபற்றினர். இதற்கு மேலாக உயர்தர வகுப்பிற்கு ஆட்சேர்க்கப்பட்ட அலுவலர்களின் நன்மைக்காக வங்கியின் அனைத்து திணைக் களங்களிலும் கையாளப்படும் வேலைகளில் அவர்களுக்கு அறிமுகத்தினை வழங்கும் வகையில் ஒரு சிறப்பு பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் நடத்தப்பட்டது. கொழும்பு பங்குச்சந்தை, வரையறுக்கப்பட்ட லங்கா கிளியர் தனியார் நிறுவனம் போன்ற நிறுவனங்களுக்கு விஜயம் செய்ததன் மூலம் வங்கி சம்பந்தமான விடயங்களில் செயல்முறைப் பயிற்சியும் அளிக்கப்பட்டது.

அட்டவணை II-27
அலுவலர் பயிற்சி
பட்டப்பின்படிப்பு ஆய்வுகள் 2002/ 2003

| ஆண்டு | பட்டப்பின் படிப்பிற்கு அனுப்பப்பட்ட அலுவலர்களின் எண்ணிக்கை | பட்டப்பின்படிப்பினை முடித்துக்கொண்டு திரும்பிய அலுவலர்களின் எண்ணிக்கை | 2003 திசெம்பர் 31இல் உள்ளவாறு பட்டப்பின் படிப்பைத் தொடரும் அலுவலர்களின் எண்ணிக்கை | |
|---|---|---|---|---|
| | | | முனைவர் பட்டம் | முதுமாணி / பட்டப்பின்படிப்பு டிப்புளோமா |
| 2002 | 5 | 2 | 1 | 15/ 2 |
| 2003 | 6 | 10 | 1 | 10/ 3 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

இவ் அலுவலர்களுக்கு வர்த்தக வங்கித்தொழில் தொழிற்பாடுகள் பற்றிய அறிவினை ஏற்படுத்தும் வகையில் வர்ததக வங்கித்தொழில் சம்பந்தமான ஒரு சிறப்புப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டமொன்று மத்திய வங்கித் தொழில்ஆய்வு நிலையத்தில் நடாத்தப்பட்டது. ஊழியர்களின் மொழித்திறனை மேம்படுத்தும் முகமாக வர்த்தக ஆங்கிலமும், அறிக்கை எழுதுதல் என்பவற்றிலான பல நிகழ்ச்சித்திட்டங்களும் நடாத்தப்பட்டன. குறுகிய கால நிகழ்ச்சித்திட்டங்களிலும், பட்டப்பின்படிப்பு ஆய்வு, கற்கை நெறிகளிலும் பயிற்சி பெற்ற அலுவலர்களின் எண்ணிக்கை பற்றிய விபரம் அட்டவணை II.27 இலும் அட்டவணை II.28 இலும் தரப்பட்டுள்ளது.

அட்டவணை II-28
அலுவலர்களின் பயிற்சி
குறுகியகால பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்
ஆய்வரங்கு - 2003

பயிற்சி பெற்ற அலுவலர்களின் எண்ணிக்கை

| திணைக்களம் | வெளிநாடு | | உள்நாடு (வ.தொ.ஆ) | |
|---|---|---|---|---|
| | 2002 | 2003 | 2002 | 2003 |
| 1. பொருளாதார ஆராய்ச்சி | 24 | 23 | 27 | 57 |
| 2. வங்கி மேற்பார்வை | 24 | 19 | 54 | 48 |
| 3. தகவல் தொழில்நுட்பம் | 7 | 7 | 10 | 6 |
| 4. செயலகம் | 8 | 6 | 22 | 42 |
| 5. ஊ.சே.நிதியம் | 1 | 5 | 61 | 60 |
| 6. பொதுப்படுகடன் | 14 | 10 | 17 | 22 |
| 7. பிரதேச அபிவிருத்தி | 13 | 9 | 28 | 40 |
| 8. வங்கித்தொழில் கல்வி ஆய்வு நிலையம் | 2 | | 12 | 19 |
| 9. நாணயம் | 3 | 3 | 31 | 28 |
| 10. மனித மூலவள அபிவிருத்தி | 6 | | 14 | 26 |
| 11. செலாவணிக் கட்டுப்பாடு | 6 | 4 | 23 | 24 |
| 12. முகாமைக் கணக்காய்வு | 2 | 3 | 13 | 20 |
| 13. பணிமனை | | | 13 | 26 |
| 14. புள்ளிவிபரம் | 2 | 5 | 18 | 31 |
| 15. வங்கியல்லா நிதிநிறுவனங்களின் மேற்பார்வை | 6 | 3 | 34 | 35 |
| 16. நலன்புரி | 1 | 1 | 22 | 24 |
| 17. பயிற்சி | 1 | 2 | 10 | 11 |
| 18. பாதுகாப்புப் பணிகள் | 3 | | 15 | 22 |
| 19. சட்டம் | 3 | 2 | 1 | 9 |
| 20. தகவல் (நூலகம் உட்பட) | 1 | | 28 | 31 |
| 21. நிதித் திணைக்களம் | 3 | 2 | 13 | 24 |
| 22. உள்நாட்டு தொழிற்பாடுகள் | 2 | 4 | 7 | 12 |
| 23. பன்னாட்டு தொழிற்பாடு | 14 | 8 | 11 | 13 |
| 24. கொடுப்பனவு தீர்ப்பனவு | 7 | 5 | 13 | 12 |
| 25. முகாமை அபிவிருத்தி நிலையம் | 1 | 1 | 3 | |
| **மொத்தம்** | 154 | 122 | 500 | 642 |

(அ) பிரதேச அலுவலகங்கள் உட்பட

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

குறுகியகால பயிற்சிகளுக்கு புறம்பாக மத்திய வங்கி புலமைப்பரிசில் திட்டத்தின் கீழ் பட்டப்பின் படிப்பு பயிற்சி நெறிகளை மேற்கொள்வதற்கு தகுதிபெற்ற அலுவலர்கள் தமது கற்கை நெறிகளை பிரபல்யம் பெற்ற வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களில் தொடங்குவதற்கு அனுமதிக்கப்பட்டனர். இதற்கேற்ப 05 அலுவலர்கள் பட்டப்பின்படிப்பு கற்கை நெறிகளுக்காக அனுப்பப் பட்டனர். இவர்களில் 04 அலுவலர்கள் பொருளியல், வர்த்தகம் ஆகிய துறைகளில் தமது பட்டப்பின் படிப்பு கற்கைநெறிகளை மேற்கொண்டிருந்த வேளையில் மற்றைய அலுவலர் தகவல் தொழில்நுட்பத் துறை நிகழ்ச்சித்திட்டத்தில் கல்வியைத் தொடர்ந்தார். இதற்கு மேலும் சனாதிபதி புலமைப்பரிசில் பெற்ற ஒரு அலுவலருக்கு தகவல் தொழில்நுட்பத்தில் பட்டப்பின்படிப்பு நிகழ்ச்சித்திட்டத்தினை தொடரு வதற்காக 2003 சனவரியில் பட்டப்பின்படிப்பு கற்கைநெறியினை மேற்கொள்வதற்கான விடுப்பு வழங்கப்பட்டது.

2003 காலப்பகுதியில் வங்கியின் சில திணைக்கங்களின் பயிற்சித் தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் சிறப்புப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களும் ஒழுங்கு செய்யப்பட்டன. வங்கி மேற்பார்வையின் ஆற்றல் இயலளவினை வலுப்படுத்தும் தேவையை முன்னிட்டு வங்கி மேற்பார்வைத் திணைக்களத்திலும், வங்கியல்லா நிதிநிறுவனங்கள் மேற்பார்வைத் திணைக்களத்திலும் கடமையாற்றும் அலுவலர்களின் நன்மையை முன்னிட்டு ஐக்கிய இராச்சியம், நிதியியல் பணிகள் மேலாண்மையின் உதவியுடன் ஒரு சிறப்பு பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் 2003 யூலையில் நடாத்தப்பட்டது. அதேநேர மொத்த தீர்ப்பனவு முறை, பத்திரங்களற்ற பிணையங்கள் தீர்ப்பனவு முறை என்பவற்றின் அமுலாக்கத்துடன் இந்த தொழில்நுட்பமானது இந்த அமைப்புக்களின் தொழிற்படும் ஆற்றல் இயலளவினையும், அமைப்பினையும் மாற்றியமைத்துள்ளது. ஆகவே இத்தகைய கொடுப்பனவு சீர்திருத்தங்களிலும், பிணையங்களின் தீர்ப்பனவு முறைமைகளிலும் ஈடுபட்டுள்ள அலுவலர்களுக்கு பயிற்சியளிப்பதன் மூலம் புதிதாக அபிவிருத்தியடைந்துள்ள இந்த துறையில் எழுந்துள்ள கேள்விகளுக்கும், சவால்களுக்கும் முகம்கொடுக்கக் கூடியதாகவிருக்கும். இந்தத் தேவையை எதிர்கொள்வதற்கு மத்திய வங்கி இந்த புதிதாக அபிவிருத்தியடைந்துள்ள துறை தொடர்பான வேலைகளில் நேரடியாக ஈடுபட்டுள்ளவர்களுக்கு அவர்களது அறிவாற்றலை உயர்த்துவதற்காக இந்தத் துறைகள் தொடர்பான பிரச்சனைகளுக்கு பரிகாரம் காணும் பொருட்டு வடிவமைக்கப்பட்டுள்ள கருத்தரங்குகளிலும், பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களிலும் பங்குபற்றுவதற்கு சந்தர்ப்பங்களை வழங்கியது.

பயிற்சியினைப் பெற்றுக்கொண்ட அலுவலர்களை கருத்தரங்குகளை நடாத்துவதற்கு அழைப்பதன் மூலம் வியாழக்கிழமைகளில்

அட்டவணைப்படுத்தப்பட்டிருக்கும் தொடர் கருத்தரங்குகளை பயிற்சித்திணைக்களம தொடர்ந்து நடாத்தியது. இது தாம் புதிதாகப் பெற்றுக்கொண்ட அறிவாற்றலை வங்கியில் உள்ள மற்றைய அலுவலர்களுக்கு தெரியப்படுத்துவதுடன் அவர்களுடைய அனுபவங்களை பகிர்ந்து கொள்வதற்குரிய முறையாகவும் விளங்குகிறது. இதற்கு மேலாக தத்தமது துறைகளில் பரந்த அனுபவம் பெற்ற 33 வெளிநாட்டு உள்நாட்டு தகைமை கொண்ட நிபுணர்கள் வரவழைக்கப்பட்டு அறிவு நிலையை விருத்தி செய்ததுடன் வங்கிக்கு தற்போதைக்கு கரிசனைக் குரியதாகவுள்ள தலைப்புக்களில் ஆய்வரங்குகளை நடாத்தியது. இக் கருத்தரங்குகளை நடாத்திய பிரதம பேச்சாளர்களில் பேராசிரியர் வில்லியம் எச்.பிரான்கன், பேராசிரியர் ஏ.ஈ. குட்காட் மற்றும் பேராசிரியர் சி. கிரிக்பட்ரிக் என்பவர்களும் அடங்குவர். பட்டப்பின்படிப்பை மேற்கொள்ளும் எதிர்பார்ப்புடனுள்ளவர்களின் நன்மைக்காக அவர்களில் ஆராய்வுக்கு உதவும் வகையில் ஆராய்ச்சி முறைகள் குறித்து சிறப்பு விரிவுரையொன்று ஏற்பாடு செய்யப்பட்டது. மனிதவள மதியுரையாளர் திரு. ஹேவாட் சூமன் அவர்களும் நிறைவேற்று அலுவலரின் பொதுசன உறவு பயிற்சி யுக்திகளும் பற்றிய தொடர் பயிற்சிகளை நடாத்தினார். வங்கியினால் நடைமுறைப் படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டிருக்கும் செயலாற்றுகை மதிப்பீட்டுத்திட்டம் சம்பந்தமான பல தொடர் நிகழ்ச்சிகளையும் அவர் நடாத்தினார். பெயர் பெற்ற நிறுவனங்களில் வங்கிக்கு தொடர்பான விடயத் துறைகளில் பயிற்சி நெறிகளில் கலந்துகொள்ளும் அலுவலர்களின் வேண்டுக்கோளுக்கிணங்க நிகழ்ச்சித் திட்டங்களுக்கு ஏற்படும் செலவினை வங்கியின் நிபந்தனைகளுக்கு அமைய மீளஅளிப்பதற்கு வங்கி தீர்மானம் எடுத்துள்ளது.

## நலன்புரி

2003 இல் நலன்புரித் திணைக்களம், மருத்துவ நன்மை மற்றும் நலத்துறை வசதிகளை வங்கி மருத்துவ நிலையத்தில் வழங்கல், அலுவலர் கடன் வசதிகள் மற்றும் ஏனைய வசதிகளினூடாக ஊழியர்களினதும் அவர்களில் தங்கியிருப்போரினதும் வாழ்க்கைத் தரங்களை முன்னேற்றுவதற்கு அவசியமான வசதிகளையும் வளங்களையும் தொடர்ந்தும் வழங்கியது.

சந்தை வட்டி வீதங்களிலேற்பட்ட குறைப்புடன், நலன்புரித் திணைக்களம் அலுவலர்களுக்கான வீடமைப்புக் கடன்கள் மற்றும் ஏனைய கடன்கள் மீதான வட்டி வீதங்களை சாதகமானளவு குறைப்பதற்கு அவசியமான அனுமதியைப் பெறுவதற்கான நடவடிக்கைகளைத் தொடங்கியது. மேலும் திணைக்களம் உண்மைச் சொத்துக்களின் பெறுமதிகளின் அதிகரிப்பு கட்டடவாக்கச் செலவினம் போன்றவற்றினைக் கருத்திற்கொண்டு வீடமைப்புக் கடன்களின் அளவினை உயர்த்துவதற்கு தேவையான அனுமதியைப் பெற்றுக்கொள்வதற்கு தமது கவனத்தைச் செலுத்தியது. மேலும் இத் திணைக்களமானது, வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம், நகர அபிவிருத்தி மேலாண்மைச்சபை போன்ற அரச வீடமைப்பு நிறுவனங்களின் ஊடாக அலுவலர்களுக்கு கூட்டாதிக்க உரிமையுள்ள வீட்டுத் தொகுதி அலகுகளைப் பெற்றுக் கொள்வதற்கான ஒழுங்குகளைச் செய்வதற்கு சாத்தியமான வழிவகைகள் குறித்து ஆராய நடவடிக்கை எடுத்துள்ளது.

ஊழியர்களினதும், ஓய்வூதியக்காரர்களினதும் அவர்களில் தங்கியிருப்போரினதும் மருத்துவச் செலவுகளை ஈடுசெய்வதற்கான திருத்தப்பட்ட மருத்துவ நன்மைத் திட்டத்தினை நிருவகித்தலுக்கு மேலதிகமாக இத்திணைக்களம், இருதயம், மூளை மற்றும் சிறுநீரக சிறப்பு அறுவைச் சிகிச்சைகளுக்கும், அத்துடன் புற்று நோய்க்கான சிகிச்சை மற்றும் அபூர்வமான, சுகப்படுத்தமுடியாத நோய்களுக்காக சி, டி மற்றும் ஈ போன்ற மருத்துவத் திட்டங்களின் கீழ் இந் நோய்களுக்கான உதவி தொகை செலுத்தும் திட்டத்தில் இணைந்து கொண்டுள்ள ஓய்வூதியக் காரர்களுக்கும் அவர்களது வாழ்க்கைத் துணைகளுக்கும் நிதி உதவிகளை வழங்குகிறது. வங்கியின் 1,467 ஓய்வூதியக் காரர்களில் 1173 ஓய்வூதியக்காரர்கள் (ஏறக்குறைய 80%) இத் திட்டத்தில் சேர்ந்துள்ளதுடன் 940 ஓய்வூதியக்காரர்களின் வாழ்க்கைத் துணைகளும் இத்தகைய வசதிகளை அனுபவிப்பதற்காகப் பதிவு செய்யப்பட்டுள்ளனர். மே மாதத்தில் சி, டி மற்றும் ஈ என்பவற்றிற்குக் கீழான வசதிகள் ஊழியர்களின் விதவைகளுக்கும் மனைவியை இழந்தவர்களுக்கும் உதவித் தொகைகளைச் செலுத்தும் திட்டத்தின்கீழ் விரிவுபடுத்தப்பட்டது. இதன் விளைவாக 106 விதவைகள் / மனைவியை இழந்தவர்கள் இந்த உதவுதொகையைச் செலுத்தும் திட்டத்தில் சேர்ந்துள்ளனர். 2003ஆம் ஆண்டில் ஊழியர்களும் ஓய்வூதியக்காரர்களும் உள்ளடங்களாக 17 நன்மை பெறுநர்களுக்கு உதவுதொகை மருத்தவத் திட்டத்தின்கீழ் சிறப்பு அறுவைச் சிகிச்சைக்கென ரூ. 5.6 மில்லியன் செலுத்தப்பட்டுள்ளது.

ஆய்விற்குரிய ஆண்டில் இத் திணைக்களம் ஒரு உள்ளக இணையத்தளம் ஒன்றினை ஆரம்பித்து ஊழியர்கள் வங்கியின் அனைத்து நலன்புரித் திட்டங்கள் பற்றிய தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கு வழிவகுத்துள்ளது. இத் திணைக்களம் தொடர்ந்தும் அலுவலர் சலுகைக் கடன் திட்டங்களின்கீழ் கடன்

விண்ணப்பங்களை செயன்முறைப்படுத்தவதற்காக புதிய தொழில் நுட்பத்தினைப் பயன்படுத்துகிறது.

ஊழியர்களுக்கான உணவக வசதிகளை அளிக்கும் வேளையில் இத் திணைக்களமானது பல்வேறு அலுவலர்சார் நிகழ்ச்சிகளுக்கும் மத்திய வங்கியால் ஒழுங்குபடுத்தப்படும் பன்னாட்டுக் கருத்தரங்குகளுக்கும் உணவளிக்கும் பணிகளையும் மேற்கொள்கிறது.

## மனிதவள அபிவிருத்தி

மனித மூலவளங்கள் அபிவிருத்தித் திணைக்களம் தமது தொழிற்பாடுகளை ஆட்சேர்ப்பு, பதவியில் அமர்த்தல், பதவி உயர்வுகள், செயலாற்று முகாமைத்துவம் மற்றும் தகுதி மதிப்பீடு என்பவற்றை தொடர்ந்தும் பெருமளவு நுட்பமான முறையில் மேற்கொண்டது.

### செயலாற்று முகாமைத்துவ முறை

இவ்வாண்டில் தனிப்பட்ட மற்றும் தொழில்சார் வெற்றியினையும் நிறுவனத்தின் உற்பத்தியாக்கத்தினையும் தூண்டும் செயலாற்றுகை சார்ந்த தொழில் கலாச் சாராமொன்றினை உருவாக்குவதற்கான புதியதொரு செயலாற்றுகை முகாமைத்தவ முறையினை வங்கியில் நடைமுறைப்படுத்துவதில் சிறப்புக் கவனம் செலுத்தப்பட்டது. இதன் பொருட்டு மனிதமூல வளங்கள் முகாமைத்துவ மதியுரையாளரொருவரின் பணிகள் 2003 மார்ச்சில் பெறப்பட்டன. இதற்கு மேலாக, சுவீடிஸ் மத்திய வங்கியிலிருந்து நடைமுறையிலிருக்கும் மனிதவளங்கள் பற்றிய கொள்கைகளைப் பற்றி ஆய்வு செய்து வங்கியிலுள்ள மனிதமூலவளக் கொள்கை களையும் நடைமுறைகளையும் மேம்படுத்துவதனை நோக்கமாகக் கொண்ட பொருத்தமான வழிவகைகளை பரிந்துரை செய்வதற்கென உதவி பெறப்பட்டது. இதே வேளையில் மனித மூலவள அபிவிருத்தித் திணைக்களத்தின் வேண்டுதலுக்கிணங்க இரண்டு மனிதமூலவள அபிவிருத்தி ஆலோசகர்கள் மத்திய வங்கிக்கு விஜயம் செய்து மனிதமூலவள செயற்பாடுகளை முன்னேற்றும் முகமாக மூத்த அலுவலர்களுடன் தொடர் பேச்சுவார்த்தைகளை நடத்தினர்.

புதிய செயலாற்று முகாமைத்துவ முறையின் அறிமுகத்துடன் மனிதமூலவள மதியுரையாளர் அலுவலர்களிடையே விழிப்புணர்வை உருவாக்கும் வகையில் தொடர் பயிற்சி நெறிகளை நடாத்தினார். புதிய செயலாற்று முகாமைத்துவமுறை மூன்று கட்டங்களாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதுடன் அது ஒரு தொடர்ச்சியான மீளாய்வு செயல் முறைக்குட்பட்டதாக இருக்கும். விளங்கியது. முதலாவது கட்டமாக செய்யும் வேலை பற்றிய விவரங்களின் பூர்த்தியும் மீளாய்வும், இரண்டாவதாக ஊழியர் களுக்கான செயலாற்று இலக்கினை நிர்ணயித்தல் மூன்றாவதாக ஊழியர்களின் செயலாற்றத்தினை அலுவலக உறுப்பினர்களுக்கும், மேற்பார்வையாளர்களுக்கும் இடையிலான கலந்துரையாடல்களின் ஊடாக மதிப்பிடல் என்பனவாகும். இந்த செயல்முறைகளை ஒருங்கிணைப் பதற்காக ஒவ்வொரு திணைக்களத்திற்கும் பிரதிநிதிகள் நியமிக்கப் பட்டுள்ளனர்.

### ஆட்சேர்ப்பு

இவ்வாண்டில், பொருளியில், புள்ளிவிபரவியல் கணக்கியல், முகாமைத்துவம், தகவல் தொழில்நுட்பம், சட்டம் போன்ற துறைகளுக்கென 38 உயர் அலுவலர்கள் ஆட்சேர்க்கப்பட்டனர். பாதுகாப்புப் பணிகளுக்கு புதிய பணிப்பாளர் ஒருவர் 2003 ஏப்பிரலில் ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்க்கப்பட்டார். வங்கியின் சில தொழிற்பாடுகளையும், பொறுப்புக்களையும் மேம்படுத்தும் முகமாக பொருளாதாரக் கொள்கை, வங்கித் தொழிலும் நிதியும், தகவல் தொழில் நுட்பம், ஊடகத்துறை மற்றும் சட்டம் போன்ற துறைகளில் மதியுரையாளர்களாகவும், ஆலோசகர்களாகவும் பணியாற்ற சில தொழில்சார் நிபுணர்களை ஆட்சேர்ப் பதற்கான நடவடிக்கையும் ஆரம்பிக்கப் பட்டது. தற போது இடம்பெற்றுவரும் நவீனமயப்படுத்தல் செயன்முறையுடன் நவீன மத்திய வங்கித் தொழிலின் அறைகூவல்களுக்கு ஈடுகொடுப்பதற்கு சில திணைக்களங்களை வலுப்படுத்துவதற்கான தேவையை வங்கி இனங்கண்டுள்ளது.

### பதவி உயர்வு

இவ்வாண்டில் மனிதமூலவள முகாமைத் துவத்தின் புதிய கொள்கையின் கீழ் பதவி உயர்வு தொடர்பான தேர்ந்தெடுக்கும் செயல்முறையினை விரிவு படுத்தியமைப்பதற்கு வங்கி தீர்மானித்தது. இதற்கிணங்க இத் திணைக்களமானது, மத்திய வங்கியின் உயர் பதவியல்லாத வகுப்பிலிருந்து உயர்தர வகுப்பு தரம் 1 இற்கு உயர்த்தவென 166 தகுதிவாய்ந்த அலுவலர்களை நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தி அவர்களின் செயலாற்றல், தகுதி என்பவற்றின் அடிப்படையில் 29 ஊழியர்களுக்கு பதவி உயர்வு வழங்கியது. இதே அடிப்படையில் 4 உயர்பதவியல்லாத வகுப்பு ஊழியர்கள் பதவி உயர்த்தப்பட்டு உயர் பதவி தரம் 1இல் உதவி நாணயக் கண்காணிப்பாளர்களாக நியமிக்கப்பட்டனர்.

## மனிதவள திட்டமிடல்

2003ஆம் ஆண்டில் 17 ஊழியர்கள் வங்கிப் பணியிலிருந்து ஓய்வு பெற்றதுடன் 5 ஊழியர்கள் தாமாகவே விலகிச் சென்றனர். 2003ஆம் ஆண்டின்

இறுதியளவில் வங்கிப்பணியில் 433 உயர்பதவி அலுவலர்களும், 623 உயர்பதவியல்லாத அலுவலர்களும் 134 சிற்றூழியர்களும் காணப்பட்டனர். ஊழியர்களின் கட்டாயம் மற்றும் விருப்பப்படி ஓய்வு பெறும் வயது அடிப்படையிலமைந்த கீழே தரப்பட்டுள்ள அட்டவணையின்படி அடுத்துவரும் ஏழு ஆண்டுக் காலப்பகுதியில் வங்கிப் பணியிலிருந்து கணிசமான எண்ணிக்கையான அலுவலர்கள் ஓய்வு பெறுவர். எனவே மனிதவளத் திட்டமிடல் மற்றும் தொழில் மதிப்பீட்டு செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கட்டாய ஓய்வுபெறும் வயதெல்லை மற்றும் விருப்பத்திற்குரிய ஓய் பெறும் வயதெல்லை

| வயது | 2004 | 2005 | 2006 | 2007 | 2008 | 2009 | 2010 |
|---|---|---|---|---|---|---|---|
| 55 | 44 | 37 | 59 | 63 | 62 | 66 | 62 |
| 56 | 28 | 44 | 37 | 59 | 63 | 62 | 66 |
| 57 | 18 | 28 | 44 | 37 | 59 | 63 | 62 |
| 58 | 9 | 18 | 28 | 44 | 37 | 59 | 63 |
| 59 | 11 | 9 | 18 | 28 | 44 | 37 | 59 |
| 60 | 11 | 11 | 9 | 18 | 28 | 44 | 37 |
| 55இற்குமேல் | 121 | 147 | 195 | 249 | 293 | 331 | 349 |

## ஆளுநர் கலந்து கொண்ட கூட்டங்கள்

2003ஆம் ஆண்டுப் பகுதியில் ஆளுநர் திரு.ஏ.எஸ். ஜயவர்த்தன பின்வரும் கூட்டங்களில் கலந்து கொண்டார்.

1. 2003 பெப்புருவரி 13 –14 வரை மணிலா, பிலிப்பைன்சில் நடைபெற்ற தென்கிழக்காசிய மத்திய வங்கிகளின் ஆளுநர்களின் 38ஆவது மாநாட்டிலும், தென்கிழக்காசிய மத்திய வங்கி ஆளுநர் சபையின் 22ஆவது கூட்டத்திலும் கலந்து கொண்டார்.
2. 2003 ஏப்பிரல் 8 –13 காலப்பகுதியில் வாசிங்டன், ஐக்கிய அமெரிக்க நாடுகளில் இடம்பெற்ற ஜீ.24, பன்னாட்டு நிதிய மாநாடு மற்றும் அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் கலந்து கொண்டார்.
3. 2003 யூன் 9 –10 வரை டோக்கியோ, யப்பானில் நடைபெற்ற இலங்கைக்கான புத்தாக்கத்திற்கும் அபிவிருத்திக்குமான டோக்கியோ மாநாட்டிலும் கலந்து கொண்டார்.
4. இந்தியாவில் பெங்களூரில் 2003 யூன் 16 – 17வரை இடம் பெற்ற ஆசிய தீர்ப்பனவு ஒன்றியத்தின் பணிப்பாளர் சபையின் 32 ஆவது கூட்டத்தில் கலந்து கொண்டார்.
5. இலண்டனில், 2003 யூன் 25 – 27 காலப்பகுதியில் இடம்பெற்ற 2003இன் வங்கித் தொழில் மற்றும் நிதியியல் பணிகள் கருத்தரங்கு நிகழ்ச்சியிலும் 2003 மத்திய வங்கி ஆளுநர்களின் கருத்தரங்கு நிகழ்விலும் கலந்து கொண்டார்.
6. சுவிற்சர்லாந்து, பாசிலில் 2003 யூன் 28 – 30 காலப் பகுதியில் இடம்பெற்ற பன்னாட்டு தீர்ப்பனவு களுக்கான வங்கியினது 73ஆவது ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் கலந்துகொண்டார்.
7. 2003 செத்தெம்பர் 15 – 23 வரையிலான காலப் பகுதியில் டுபாயில் நடைபெற்ற பன்னாட்டு நாணய நிதிய ஆளுநர் கூட்டத்தில் கலந்து கொண்டார்.
8. டாக்கா பங்காளதேஷில் 2003 திசெம்பர் 8 – 15 வரையில் நடைபெற்ற வரையறுக்கப்பட்ட இலங்கை வர்த்தக வங்கியின் பங்காளதேஷ் கிளை திறப்பு விழாவில் பங்குபற்றினார்.

## நியமனங்கள்

1. பின்வரும் நியமனங்கள் 2003 மார்ச்சு 16ஆம் நாளிலிருந்து மேற்கொள்ளப்பட்டன.

i. வங்கிமேற்பார்வைத் திணைக்களத்தின் துணைப் பணிப்பாளர் செல்வி ஜே. பி. ரி. டி. சில்வா வங்கி மேற்பார்வைத் திணைக்களத்தின் மேலதிகப் பணிப்பாள ராகவும் அதனைத் தொடர்ந்து வங்கி மேற்பார்வைத் திணைக்களத்தின் பதில் பணிப்பாளராகவும் 2003 ஏப்பிறல் 7ஆம் நாளிலிருந்து நியமிக்கப்பட்டார்.

ii. நாணயத் திணைக்களத்தின் துணைக் கண்காணிப்பாளர் திரு. எஸ். விஜேசிங்க நாணயத் திணைக்களத்தின் பதில் மேலதிகக் கண்காணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

iii. பொருளாதார ஆராய்ச்சித் திணைக் களத்தின் துணைப்பணிப்பாளர் முனைவர் பி. டபிள்யூ. ஆர்.பி. ஏ. யூ. ஹேரத் பொருளாதார ஆராய்ச்சித் திணைக் களத்தின் பதில் மேலதிகப் பணிப்பாள ராக நியமிக்கப்பட்டார்.

iv. பொருளாதார ஆராய்ச்சித் திணைக் களத்தின் துணைப்பணிப்பாளரும் பொதுப்படுகடன் திணைக் களத்தின் பதில் மேலதிகக் கண்காணிப் பாளருமான முனைவர் எச். என். தேநுவர பொருளாதார ஆராய்ச்சித் திணைக் களத்தின் பதில் மேலதிகப் பணிப் பாளராக நியமிக்கப்பட்டார்.

v. துணைச்செயலாளர் திரு. எஸ். சோமபாலா ஊழியர் சேமநிதியத் திணைக்களத்தின் பதில் மேலதிகக் கண்காணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

vi. தகவல் தொழில் நுட்பத் திணைக்களத்தின் துணைப் பணிப்பாளர் திரு. ஈ. ஏ. கெட்டியாராய்ச்சி நிதித் திணைக்களத்தின் பதில் மேலதிக முதன்மைக் கணக்காளராக நியமிக்கப்பட்டார்.

vii. மனிதமூலவளத் திணைக்களத்தின் துணைப் பணிப்பாளர் திரு. எஸ். எச். ஏ. எம்.அபேரத்ன மனித மூலவளத் திணைக்களத்தின் பதில் மேலதிகப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

viii. பணிமனைத் திணைக்களத்தின் துணைப் பணிப்பாளர் திரு. ஜீ. எல். அமரசேன பணிமனைத் திணைக்களத்தின் பதில் மேலதிகப் பணிப்பாளராகவும் அதனைத் தொடர்ந்து 2003 திசெம்பர் 01 ஆம் நாளன்று பணிமனைத் திணைக்களத்தின் பதில்பணிப்பாளராகவும் நியமிக்கப்பட்டார்.

ix. பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தின் துணைப் பணிப்பாளர் திருமதி சி. பிரேமரத்ன பொதுப்படுகடன் திணைக்களத்தின் பதில் மேலதிகக் கண்காணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

x. பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தின் துணைப்பணிப்பாளர் திரு. டபிள்யூ. எம். கருணாரத்ன பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தின் பதில் மேலதிகப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

xi. வங்கியல்லா நிதி நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களத்தின் துணைப் பணிப்பாளர் திரு. எச். எம். பி. ஹேரத் வங்கியல்லா நிதி நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களத்தின் பதில் மேலதிகப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

2. திரு. ஹோவாட் சூமன் 2003 மார்ச்சு 17ஆம் நாளிலிருந்து மனிதமூலவளத் திணைக்களத்தின் மதியுரையாளராக ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்பட்டார்.

3. பின்வரும் நியமனங்கள் 2003 ஏப்பிறல் 07ஆம் நாளிலிருந்து மேற்கொள்ளப்பட்டன.

i. வங்கி மேற்பார்வைத் திணைக்களத்தின் பணிப்பாளர் திருமதி. பி. பி. சிறிசேன பயிற்சித் திணைக்களத்தின் பணிப்பாளராகவும் முகாமை அபிவிருத்தி நிலையத்தின் பதில் பணிப்பாளராகவும் நியமிக்கப்பட்டார்.

ii. பயிற்சித் திணைக்களத்தின் பணிப்பாளரும் முகாமை அபிவிருத்தி நிலையத்தின் பதில் பணிப்பாளருமான திருமதி. சி. கே. நாணயக்கார தகவல் திணைக்களத்தின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

iii. தகவல் திணைக்களத்தின் பணிப்பாளர் திரு. ஜே. எம். ரி. பி. ஜயசுந்தர மத்திய வங்கியை வலுப்படுத்தும் செயற்றிட்டத்தின் மதியுரையாளராக நியமிக்கப்பட்டார்.

4. திரு. டபிள்யூ பி. பி. பர்னாந்து 2003 ஏப்பிறல் 15ஆம் நாளிலிருந்து வங்கியின் பாதுகாப்புப் பணிகள் திணைக்களத்தின் பணிப்பாளராக ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்பட்டார்.

5. திரு. ஜோர்ஜ் கிரகோராஸ் 2003 யூன் 13ஆம் நாளிலிருந்து வங்கி மேற்பார்வைத் திணைக்களத்தின் மதியுரையாளராக ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்பட்டார்.

6. செல்வி. சி. ஐ. பர்னாந்து 2003 ஒத்தோபர் 01 ஆம் நாளிலிருந்து வங்கி மேற்பார்வைத் திணைக்களத்தின் ஆலோசகராக ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்பட்டார்.

7. பின்வரும் நியமனங்கள் 2003 திசெம்பர் 1ஆம் நாளிலிருந்து மேற்கொள்ளப்பட்டன.

i. செலாவணிக் கட்டுப்பாட்டாளர் திரு. எச். ஏ. ஜீ. கெட்டியாராய்ச்சி மூத்த திணைக் களத் தலைவராக சிறப்புத் தரத்திற்குப் பதவி உயர்த்தப்பட்டு, மனித மூலவளங்கள், பயிற்சி, வங்கித் தொழில் கல்வி ஆய்வு நிலைம் போன்ற திணைக்களங்களின் பணிகள் ஒருங்கிணைப்பாளராக நியமிக்கப்பட்டார்.

ii. செயலாளர் திரு. டபிள்யூ. எஸ். எல். பர்னாந்து மூத்த திணைக்களத் தலைவராக சிறப்புத் தரத்திற்குப் பதவி உயர்த்தப்பட்டு, பணிமனைத் திணைக்களம் மற்றும் நலன்புரித் திணைக்களத்தினதும் ஒருங்கிணைப்பாளராக நியமிக்கப்பட்டார்.

8. பணிமனைத் திணைக்களத்தின் பணிப்பாளர் திரு. எல். வை. தர்மசேன மேலதிக செலாவணிக் கட்டுப்பாட்டாள ராக நியமிக்கப்பட்டார்.

## பதவி விலகல் மற்றும் ஓய்வுபெறல்

1. பிரிகேடியர் ஜி. அங்கம்மான, பாதுகாப்புப் பணிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் (ஒப்பந்தத்தில்) 2003 மார்ச்சு 31ஆம் நாள் தொடக்கம் வங்கிப் பணியிலிருந்து விலகிக் கொண்டார்.
2. திரு. எச். டி. திசேரா வங்கித் தொழில் கல்வி ஆய்வு நிலையத்தின் பதில் மேலதிகப் பணிப்பாளர் 2003 ஓகத்து 22 ஆம் நாள் தொடக்கம் வங்கிப் பணியிலிருந்து ஓய்வு பெற்றார்.
3. திரு. டி. போயாகொட, ஆளுநரின் உதவியாளர் 2003 திசெம்பர் 26ஆம் நாள் தொடக்கம் வங்கிப்பணியிலிருந்து ஓய்வுபெற்றார்.

## விடுவிப்பிலுள்ள அலுவலர்கள்

1. திரு.ஆர்.ஏ.ஜெயதிஸ்ஸ மாற்று நிறைவேற்றுப் பணிப்பாளராக பன்னாட்டு நாணய நிதியத்திற்கு.
2. திருமதி.எம்.ஏ.ஆர்.சி. கூறே நிதியமைச்சிற்கு இறைக்கொள்கையின் பணிப்பாளர் நாயகமாக.
3. முனைவர்.யூ.விதானபத்திரன கைத்தொழில் அமைச்சிற்குச் செயலாளராக.
4. திருமதி. சி. பிரேமரத்ன நிதியமைச்சிற்கு
5. செல்வி. கே. சரவணமுத்து நிதியமைச்சிற்கு
6. திரு.எம். ஜே. எஸ். அபேசிங்க நிதியமைச்சிற்கு.

5. திரு. எஸ். ஆர். ஆட்டிகல நிதியமைச்சிற்கு